2858

# T. N. L. A. Debates

## OFFICIAL REPORT

VOL: IX. No: 3

June 25th 1985

G

D
V211,31 N85
N85.9.3
136388

671/86

வெளியீடு 3-4-1986] [Issued 3-4-1986

2858

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜூன் 25, 1985 - தொகுதி IX எண் 3
Tuesday, the 25th June 1985 - Volume IX No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

D
V211,31 'N85
N85-9-3
136388
600 008.

## உள்ளடக்கம்

25—6—1985

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 415—463

2. தகவல் கோரல்—
ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் பணியாற்றும் துணைச் செவிலியர்கள் உண்ணாவிரதம் 464

3. கவன ஈர்ப்புகள்—
(அ) ஒவ்வொரு நாளும் ஆறு மணி நேரமே மின் சாரம் வழங்கப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு .. .. .. 464—469
(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதி பனைமரங் களில் அரிபுழு பரவியுள்ளது .. .. 469—470

4. வரவு–செலவுத் திட்டம் 1985–86 வாக்கெடுப்பு:
(அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்
(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் } 470—622

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 470—472, 596—621
திரு. ஏ. எஸ். ரவீந்திரன் .. .. 472—479
திரு. ப. ந. இராமச்சந்திரன் .. 480—486
திரு. பொன். முத்துராமலிங்கம் .. 486—499
திரு. கே. குப்புசாமி .. .. 499—510
திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 510—518
திரு. ஆ. பிரேம்குமார் .. .. 518—524
திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. 524—530

பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) .. .. 530—551

திரு. கு. சுப்பராயன் .. .. 551—561

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி .. .. 561—570

திரு. எஸ். என். இராமசாமி .. 570—572

திரு. மு. மாரிமுத்து .. .. 573—577

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் .. 577—580

திரு. மு. பாண்டுரங்கன் .. .. 580—586

திரு. டி. ஆர். வேங்கடராமன் .. 586—596

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 622


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூன் 25, செவ்வாய்க்கிழமை

ஆனி 11, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கணி"

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### சாத்தனூர் புனல் மின் உற்பத்தி நிலையம்

354—(*வினா எண் 1010) திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூரில் புனல் மின் உற்பத்தி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சாத்தனூர் அணையில் 20 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைக்க ரூ. 9.01 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டி மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் திட்டம் செயல்படுத்தப்படும்.

[1985 ஜூன் 25

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பயனாக உற்பத்தி செய்யப்போகும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு? அதனால், பயன் பெறக்கூடிய பகுதிகள் என்ன, என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 20 மெகாவாட் உற்பத்தித் திறனும் 3.3 கோடி யூனிட்டுகளும் இதன் மூலம் கிடைக்கும். இதனால், தமிழகம் முழுவதும் பலன் பெறும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி 4.2 கோடி யூனிட்டுகள் மின் உற்பத்திக்கான திட்டம் தயாரிக்கப்பட்டதாக அறியவருகிறேன். ஆகவே, அது 3.2 கோடியாகக் குறைக்கப்பட்டதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கிடைத்த தகவல் தவறானது.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 9 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டிலே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தியப் பேரரசுக்கு அனுப்பப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் தயாரித்து எப்பொழுது அனுப்பப்பட்டது? இதை விரைவுபடுத்துவதற்காக இந்த அரசு என்ன முயற்சி செய்யும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அனுப்பப்பட்டது. மத்திய அரசினால் சில விளக்கங்கள் கோரப்பட்டு, அதற்கான பதில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மைய அரசின் அங்கீகாரம் கிடைத்த பிறகு இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் எத்தனை புனல் மின் திட்டங்களுடைய பணிகள் நடைபெற்று வருகின்றன. சாத்தனூர் புனல் மின்திட்டத்தை 6ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளே முடிப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.



2858

1985 ஜூன் 25]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எத்தனை திட்டங்கள் என்பது பற்றிய விவரம் மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தின் பொழுது கிடைக்கும். 7 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மேற்கொள்ளப்படுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கிற பகுதி. அங்கு தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கு மின்சாரம் அவசியமாகத் தேவைப்படுகிற காரணத்தால் அந்தப் பகுதியில், நாகப்பட்டினத்தில் ஒரு அனல் மின் நிலையம் ஏற்படுத்துகின்ற செயற்குறிப்பு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரால் அரசுக்கு அனுப்பப்பட்டதா ? ஆமெனில், அதன் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே' தற்போது விவரங்கள் இல்லை.

### சூரிய ஒளியிலிருந்து மின் சக்தி

355 —(*வினா எண் 1600) திரு. டி. ஆர். வேங்கடரமணன், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. எஸ். இராசாராமன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளியில் தெரு விளக்குகளை இயக்கும் திட்டம் தமிழகத்தில் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) இதற்கு மூலதன செலவு எவ்வளவு ?

(இ) மின் வெட்டை கருத்தில் கொண்டு இத்திட்டம் எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சூரிய ஒளி மின்கல அமைப்பின்மூலம் 20 வாட் பல்பு கொண்ட ஒரு தெரு விளக்குக்கு ஆகும் மூலதனச் செலவு சுமார் 9,000.

(இ) இல்லை. ஏனெனில் இத்திட்டத்திற்கு ஆகும் செலவு மிக அதிகம். எனினும் மலைவாழ் பழங்குடி மக்களுள்ள 20 கிராமங்களுக்கு மத்திய அரசு வழங்கும் மானியத் தொகையுடன், சூரிய ஒளியில் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, இந்த சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி எடுப்பதற்கு மூலதனம் அதிகமாகத் தேவைப்படுவதால் பிற இடங்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு ஜப்பானில் 150 ரூபாய்க்கு தயாரிக்கும் "கால்குலேட்டருக்குக்கூட இந்த சூரிய ஒளியைப் பயன்படுத்துகிறார்கள். நமது அரசு ஜப்பானில் இருக்கக்கூடிய ஒரு கம்பெனியுடன் தொடர்பு கொண்டு மின் திட்டத்தை விரிவுபடுத்தப் போவதாகச் செய்திகள் வந்தன. அந்தத் திட்டம் என்னவாயிற்று? அதன்மூலம் செலவைக் குறைத்து, கட்டணத்தையும் குறைத்து, ட்ரான்மிஷன் லாஸ் என்று சொல்லக்கூடிய நஷ்டத்தையும் தவிர்க்கலாம். அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சூரிய ஒளியிலிருந்து பெறப்படும் மின்சக்தியை சிறு, சிறு கருவிகள் தயாரிக்கப் பயன்படுத்தலாம். ஆனால் பெரு மளவில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு வணிக ரீதியில் சாத்தியமாகுமா என்ற கேள்வி இன்றைக்கு உலகம் முழுவதும் எழுந்திருக்கிறது. பல்வேறு நாடுகள் இதுபற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றன. நம்முடைய நாட்டிலும் பல்வேறு நிறுவனங்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மின்சாரம் அருகி மின்சாரத் தேவை பெருகி வருகிறபோது அனல் மின் திட்டங்கள், அணு மின் திட்டங்கள், சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள், கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் தேவைப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சூரிய ஒளி மின் கலம் மூலமாக மின்சாரத்தைப் பெற்று, அதன் மூலமாக ஒரு தெரு விளக்கை எரியச் செய்ய சுமார் 9,000 ரூபாய் செலவு ஆகும் என்று சொன்னார்கள். அப்படியானால் தற்போது ஒரு தெருவிளக்குக்கு அனல் மின்சாரமாக இருந்தாலும், புனல் மின்சாரமாக இருந்தாலும், எவ்வளவு செலவாகிறது? ஒரு விளக்கு கம்பத்திற்கு என்று பார்க்கும் போது செலவு அதிகமாக இருந்தாலும் மொத்தமாகப் பார்க்கிற போது செலவு குறையலாம். அந்த முறையில் இதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சரியான விவரம் தற்போது இல்லை. இருந்தாலும் ஒரு தெரு விளக்கிற்கு 200 அல்லது 300 ரூபாய்க்குமேல் போகாது. ஆனால் சூரிய ஒளியின் மூலம் தயாரிக்கப்படுகிற மின் சாரத்திற்கு ஒரு தெரு விளக்கிற்கு 9,000 ரூபாய் ஆகிறது





என்கிறபோது மலைவாழ் பகுதிகளில் அது சிக்கனம்தான். ஏனென்றால் மலைக் காடுகளில் கம்பித் தொடர்களை இழுத்து காடுகளை அழித்து, ஒருசில குடிசைகளுக்கு மின்சாரம் அளிக்கும் செலவைப் பார்க்கிறபோது சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் தயாரித்து மலைவாழ் மக்களுக்கு தருவது சிக்கன மாக இருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்தை மலைவாழ் மக்கள் பகுதிகளுக்குப் பயன்படுத்தலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, எப்படி இருந்தாலும்கூட நாம் இனிமேல் இந்தத் துறையில்தான் கவனம் செலுத்தவேண்டி இருப்பதால் பிற வெளி நாடு களில் இந்தத் துறையில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக் கிறது என்பதைக் கண்டறிய அமைச்சர் அவர்களோ, மின் சாரத்துறை அதிகாரிகளோ போய் வந்திருக்கிறார்களா? இல்லை என்றால் இனிமேல் போக வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக பல்வேறு முயற்சிகள் நம்முடைய அரசிலும் இந்திய அரசிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது கலிபோர்னியா பகுதியில் நானே இத்திட்டத்தைப் பார்த்திருக்கிறேன். இருந் தாலும் இந்த முறையை அவர்கள் மேற்கொண்டு, வணிக ரீதியில் இதைக் கொண்டுவர காலதாமதம் ஆகும். என்ற போதிலும் பல்வேறு நிறுவனங்கள் இந்த முயற்சியில் ஈடு பட்டிருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சூரிய ஒளி மூலம் கிடைக்கும் மின்சாரம் குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுமா? ஒவ்வொரு வீடும் சூரிய ஒளி மூலம் தேவையான மின்சாரத்தைத் தயாரித்துக் கொள்ள தேவையான உபகரணங்கள் எல்லாம் வழங்கப் படுமா? பம்புசெட்டுகளுக்கு சூரிய வெப்பம் பயன்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வீடுகளிலே சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சக்தியைப் பெறும் முயற்சி பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருக் கிறது. பம்புசெட்டுகளைப் பொறுத்த வரையில் சோதனை அடிப்படையில் தஞ்சை மாவட்டத்தில் பத்து பம்பு செட்டு களுக்கு ஏற்பாடுசெய்து 40,000 ரூபாய் செலவில் மத்திய அரசு மானியத்தோடு இத்தகைய பம்புசெட்டுகளை நிறுவ ஏற்பாடு செய்து வருகிறோம். சிறு விவசாயிகள் அல்லது தாழ்த்தப்பட்ட விவசாயிகளாக இருந்தால் 4,000 ரூபாய்

கொடுத்தால் போதும். மற்ற விவசாயிகள் 5,000 ரூபாய் கொடுத்தால் போதும். மீதித் தொகையை மானியமாகத் தந்து அத்தகைய பம்புசெட்டுகளை இயக்க இந்த ஆண்டு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. கா. செ. பழனிச்சாமி : தலைவரவர்களே, அரிசி ஆலைகளுக்குத் தேவையான மின்சக்தியை அந்த ஆலைகளிலிருந்து கிடைக்கின்ற நெல் உமியிலிருந்து தயாரிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய திட்டம் ஏதும் இல்லை.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவை துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற வகையில் 5 ஹார்ஸ் பவர் உள்ள இயந்திரங்களை இயக்குகின்ற வகையில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து பயன்படுத்துவ்தற்காக ஒரு இயந்திரத்தை அமெரிக்காவில் 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் செலவில் மட்டுமே தயாரித்துக் கொடுக்கிறார்கள் என்ற தகவலைச் சொல்கிறார்கள். அந்த விவரங்கள் பற்றி துறை விசாரித்திருக்கின்றதா? இல்லை என்றால் அது பற்றி தொடர்பு கொண்டு விசாரித்து அதை இங்கே இருக்கின்ற விவசாயிகள் பயன்படுத்துகின்ற வகையில் இறக்குமதி செய்ய துறை முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்த விவரங்களை அரசுக்கு அனுப்பி வைத்தால் எந்த நடவடிக்கை எடுக்க இயலுமோ அந்த நடவடிக்கையை எடுக்க இயலும். இப்போது மெஸ்ஸர்ஸ் சென்ட்ரல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், சாஹிபாபாத் அவர்கள் 44 ஆயிரம் ரூபாய் செலவில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் எடுக்கின்ற பம்ப் செட்டுகளைத்தான் தயாரித்துத் தருகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரி அடிக்கடி பற்றாக்குறை ஏற்படுகின்றது. கோடை காலத்தில் 108 டிகிரி வெய்யில் அடிக்கின்றது. எனவே இதைப் பயன்படுத்தி மேல் நாடுகளில் அமைப்பது போன்று பெரிய அளவில் மின்சாரம் தயாரிக்கின்ற இயந்திரங்கள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரி பற்றாக்குறைக்கும், வெய்யில் 108 டிக்ரி அடிப்பதற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. ஒருவேளை நிலக்கரி பற்றும் குறை வேண்டுமானால் அதன்மூலம் ஏற்படலாம். இந்தியா பொன்ற நாடுகளில் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி பெரிய அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து மின் உற்பத்தியினைப் பெருக்கினால் நல்லது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டைக்கு அருகே இருக்கின்ற இரயில்வே ஸ்டேஷனில் சூரிய ஒளியில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்து அந்த இரயில்வே ஸ்டேஷனில் பயன்படுத்துவதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அது சரியா? அப்படி இருந்தால் மேலும் தமிழ்நாட்டில் அதுபோன்று பயன்படுத்தி இந்த உபயோகத்தை விஸ்தரிக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிக்னலை இயக்குகிக்ன்ற வகையில் அவ்வாறு பயன்படுத்துகின்ற செய்தியை நானும் பத்திரிகையில்தான் பார்த்தேன். பல்வேறு துறையினர் பல வழியிலும் பயன்படுத்திச் செய்கிறார்கள். காலையில் மாநிலச் செய்தியில் கூடச் சொன்னார்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சூரிய ஒளியிலிருந்து கிடைக்கின்ற வெப்பத்தைப் பயன்படுத்தி குளிப்பதற்கு நீர் சுட வைக்கின்ற வகையில் முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று. இப்படி ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய வகையில் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதிலே இதுவும் ஒன்று.

உருக்கு நிறுவனத்திடமிருந்து இரும்பு ஒதுக்கீடு.

356—(*வினா எண் 503) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ( SAIL ) நிறுவனம் வழங்கும் இரும்பு ஒதுக்கீட்டில் தென்னிந்திய வணிகர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதான புகார் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் குறையை களைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் (செயில்) நிறுவனம் வழங்கும் இரும்பு ஒதுக்கீட்டில் தென்னிந்திய வணிகர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதான புகார் எதுவும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோல் இந்தியா லிமிடெட், ஸ்டீல் இந்தியா லிமிடெட் போன்ற நிறுவனங்கள் சரியான அளவுக்கு தமிழ் நாட்டில் இருக்கின்ற தொழில் அமைப்புகளுக்கு இரும்பு, கோல் ஆகியவற்றைக் கொடுப்பதில்லை. 25 சதவீதத்திற்கு மேல் அவை கிடைக்காததன் காரணத்தால் தொழில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இப்போது ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட் என்று சொல்லக்கூடிய அமைப்பின் மூலம் ஆர். சி. தகடுகள், பர்னிச்சர் மேனுஃபேக்சரிங் கம்பெனிக்குக் கொடுக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் 750 தொழிற்சாலைகள் இருக்கின்றன. 50,000 தொழிலாளர்கள் இதை நம்பியிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் மட்டும் 250 ஃபர்னிச்சர் தொழிற்சாலைகள் இருக்கின்றன. 15 ஆயிரம் தொழிலாளர்கள் இதை நம்பிப் பிழைக்கிறார்கள். நம்முடைய ஒரு மாதத் தேவை கோவை மாவட்டத்திற்கு மட்டும் 1,500 டன் ஆகும். ஆனால் 25 சதவீதத்திற்கு மேல் அவை கொடுக்கப்படுவதில்லை. இது சம்பந்தமாக 23—7—1984-ல் நாடு தழுவிய கடை அடைப்பும், போராட்டங்களும் நடைபெற்றன. ஆகவே,

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இனியாவது இதுபோன்ற ஃபர்னிச்சர் தொழிற்சாலைகள் பாதிக்காத அளவில் அந்த ஸ்டீல் நிறுவனங்கள் 100 சதவீதம் கொடுக்காவிட்டாலும் 50 சதவீதமாவது கொடுப்பதற்குரிய முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பு ஒதுக்கீடு செய்வது இந்திய அரசு. கல்கத்தாவிலிருந்து அனுப்பப்படுகின்றது. இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் ஒதுக்கீட்டில் குறைவு என்பதில்லை. ஒதுக்கப்படுவது வந்து சேர்வதற்குரிய வசதி இல்லை. போதுமான அளவுக்கு வேகன்கள் இருப்பதில்லை. இன்னொன்று என்னவொன்றால் பெல்லார்ஷா, பெல்லம்பள்ளி ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள இருப்புப் பாதை இடர்பாடுகளாகும். டபுன்



லைன் அதாவது இருவழித்தடம் போட வேண்டும் என்ற முயற்சியினை மேற்கொண்டு அதற்கான வேலைகள் ஜூன், ஜூலை திங்கள்களில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே ஒதுக்கப்படுகின்ற இரும்பைக் கூட கொண்டுவர முடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தால்தான் இத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிகப்படியான வேகன்களை ஒதுக்கவேண்டும் என்று இந்திய அரசுக்கு நம்முடைய அரசு 27—4—85 அன்று கடிதம் எழுதியிருக்கின்றது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமான பிரச்னைகள் செயில் நிறுவனத்தின் அதிகாரிகள் மூலமாகவும், சிட்கோ சேர்மேனும், தமிழக அரசின் அமைச்சர்களும் மற்றும் தொழில் துறை அதிகாரிகளும், எல்லோரும் சேர்ந்து 27—4—1984-லேயும், அது போன்று 25—8—1984. லேயும் இது போன்று பல கலந்துரையாடல்களை நடத்தியிருக்கின்றனர். நம்முடைய அமைச்சர் பெருமக்களும் அவர்களை சந்தித்து பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒப்புக் கொண்ட அடிப்படையில் கூட அந்த செயில் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தரமறுக்கிறார்களே. அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல 55 வேகன்களுக்குத்தான் அலாட்மெண்ட் ஆகியிருக்கிறது. ஏற்கெனவே இதுபற்றி தொழில் துறை மானியத்திலும் நான் பேசியிருக்கிறேன். ஆகவே கூடுதலாக வேகன்களைப் பெற்று இந்தக் குறைபாட்டை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். 27—4—1985 அன்று கடிதம் இந்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 361 மற்றும் 362 மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னதாக எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

### பெண்களுக்கான தொழிற்பேட்டை.

361—(*வினா எண் 993) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கு என தனியாக தொழிற்பேட்டை துவங்கும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள நந்தம்பாக்கத்தில் பெண்களுக்கென ஒரு தனி மின்னணுத் தொழிற்பேட்டைத் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் அணு தொழிற்கூடம் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டு விரைவிலே ஆரம்பிக்கப்பட இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது குறித்து ஏற்கெனவே சென்ற ஆண்டு எஸ்டிமேட் கமிட்டியிலே கூட இது தொடங்கப்படும் என்று சொல்லியும் கூட, அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடப்பதாக தெரியவில்லை. அந்த நடவடிக்கைகள் எந்த சூழ் நிலையில் இருக்கின்றன? எப்பொழுது அது செயல்படத் தொடங்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு 12 தொழிற் கூடங்கள் கட்டுவதற்காக 19.2 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டு, 1985—86 வாக்கில் இதற்கான வேலைகள் முடிவு அடையக் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலில் அது 1986 ஆம் வருஷம் முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். செலவு மதிப்பீடு 19.2 லட்சம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே இன்றைக்கு பெண்களுடைய நிலைமை மிகவும் பரிதாபப் படக்கூடிய நிலையில்தான் இருந்து வருகிறது. பி.எட். பி.எ., எம். எஸ்.சி. என்றெல்லாம் படித்து விட்டு, வேலை இல்லாமல் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். மணமானவர்கள்கூட, அவர்கள் வரதட்சணைக் கொடுமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நேரத்தில் மத்திய அரசு மாநில அரசு ஆகிய இரண்டும் சேர்ந்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பெண்களுக்காக தனி தொழிற் பயிற்சிக் கல்வியை ஆரம்பித்து, அதன் மூலமாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பெண்களுக்குத் தனியாக தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் குறித்தது. பெண்களுக்கான வேலை வாய்ப்பு பற்றி தனிக் கேள்வி போட்டால் தனியாகப் பதில் கிடைக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை 1985-86—லே தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது போன்று பெண்களுக்கு வழங்கப்படும் வசதிகள், அந்தப் பெண்களின் பெயராலே ஒளிந்துகொண்டிருக்கிற சில தனி நபர்களுக்குப் போய்விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டது போன்ற பல பணிகளை அவர்களுக்காக நாம் செய்து தந்தாலும், இது போன்று பினாமியின்





பெயரால், பெண்களின் பெயரால் ஒளிந்து கொண்டு நடத்துபவர்களை கண்டு பிடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் தொழிற்பேட்டைகள் தொடங்க முன் வருவார்களேயானால், அவர்களுக்கு தனி தொழிற்பேட்டைகள் கட்டித் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது. பினாமிகள் ஒன்றிரண்டு வரத்தான் செய்யும். அதைக் கண்டு பிடிப்பதற்கு வாய்ப்பில்லை. அன்றியும் பெண்களை முன் நிறுத்தி மற்றவர்கள் பின்னால் மறைந்துக்கொண்டு, இது போன்ற பணிகளைச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். எத்தனையோ விவகாரங்களுக்காக அப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், பெண்கள் தொழில் துவங்க முன் வருவார்களேயானால், அவர்களுக்கு தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு தயாராக இருக்கிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கென்று தனியாக தொழிற்பேட்டை துவங்கினால், அங்கு தொழில் கற்றுத் தருவதற்கும், பயிற்சி தருவதற்கும் பெண்களாகவே இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை தொடங்கியவுடன் அது பற்றி சிந்திக்கப்படும்.

### பெட்ரோ கெமிக்கல் தொழில் மையம்.

362 - (*வினா எண். 1346) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணை த்தலைவர்): மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொதுத் துறையில் '' Petro Chemical Complex'' அமைக்க மைய அரசிடம் மாநில அரசு அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னைக்கு அருகில் மைய அரசுத் திட்டமாக பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் திட்டத்தை மத்திய அரசு நிறுவலாம் என்றும், அது குறித்து ஒரு விரிவான ஆய்வினை மைய அரசு மேற்கொள்ளலாம் எனவும் மாநில அரசு மத்திய அரசுக்கு 1984ஆம ஆண்டு செப்டம்பரில் பரிந்துரை செய்துள்ளது. இது குறித்து மைய அரசின் முடிவு இன்னும் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, இந்த பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ்ஸை முழுமையாக அரசுத் துறையில் செய்யவிருக்கிறதா ? அல்லது கூட்டுத் துறையில் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கூட்டுத் துறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டு வகையில் இதனைச் செய்யலாம் என்று தமிழக அரசு கருதுகிறது. இந்த பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்சில் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யவும், அவைகள் மூலமாக ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும் இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆகவே, கூட்டுத் துறையில் பல நிறுவனங்களோடு சேர்ந்து, தனியார் துறையில் சிலருக்கும் உரிமம் வழங்கி மத்திய அரசு மூலமாக அனுமதி பெற்று, இதனைத் தொடங்கலாம் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே இந்தத் தொழில் மையத்தில் தொழில் துவங்குவதற்கு வரப்பெற்றுள்ள எத்தனை தனியார் விண்ணப்பங்களை மாநில அரசு மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது ? அந்தப் பரிந்துரை எவ்வளவு நாட்களுக்கு முன்னால் செய்யப்பட்டது ? அதனை விரைவு படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தமிழக அரசு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ் நாட்டில் பெட்ரோ இரசாயனத் தொழில் இணையம் ஒன்றை நிறுவ வேண்டுமென்று 1970ஆம் ஆண்டிலேயே மைய அரசை அணுகியது. திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 10 ஆண்டுகள் ஆகலாமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டிற்கு 5 இலட்சம் உற்பத்தித் திறனுள்ள நாப்தா கிராக்கர் திட்டத்தை தமிழக அரசு உருவாக்கி இருக்கிறது. அதனை நாங்கள் செய்ய முன்வருவோம் என்று ஓரியண்ட் பேப்பர் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் கீழ்க்கண்ட மூன்று முக்கிய பெட்ரோ இரசாயன தொழிற்சாலைகளை தமிழ் நாட்டில் நிறுவ ஆர்வம் காட்டி விண்ணப்பித்துள்ளது. பி.வி.சி. ரெசின்—ஒரு இலட்சம் டன்கள் ; அக்ரிலோ நைட்ரைல் –25 ஆயிரம் டன்கள் ஆண்டுக்கு ; பாலிபுட்டாடின்—20 ஆயிரம் டன்கள் ஆண்டுக்கு. ஆக இந் நிறுவனம் ரூ. 300 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கூறிய மூன்று திட்டங்களையும் நிறுவ உத்தேசித்துள்ளது. அதற்கான பரிந்துரையை தமிழக அரசு மைய அரசை 1985ஆம் ஆண்டு அனுமதி கேட்டு அனுப்பி உள்ளது. அதுவல்லாமல், லினியர் ஆல்க்கைல் பென்சைன் தயாரிப்புத் திட்டத்தை ஸ்பிக் நிறுவனத்துடன் கூட்டுத் துறையில் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐசோ புரோபோலின் தயாரிப்புத் திட்டத்திற்காக திருவாளர்கள் ஹல்ஸ் என்னும் ஜெர்மனி நாட்டு நிறுவனத்திடமிருந்து வெளி நாட்டு தொழில் நுட்ப உதவி பெறுவதற்குரிய நடவடிக்கைகளை டிட்கோ மேற்கொண்டுள்ளது. போலியால்ஸ் தயாரிப்புத் திட்டத்தை திரு. சையது யூசுப் அவர்களுடன் கூட்டுத் துறையில் நிறுவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இந்த பெட்ரோ கெமிக்கல் காம்பளக்ஸ் திட்டத்தை ஏறத்தாழ 1979-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பல்வேறு முயற்சிகள் மூலமாக கேட்டு அது பெரிய அளவில் அமைக்கப்படவிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். துவங்கப்படவிருக்கிற இந்தத் திட்டத்திலே எவ்வளவு பேர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை உத்தேசமாகவாவது அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு தமிழகத்திலே உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலத்தில் கலையரங்கம்.

357—(*வினா எண் 974) திரு. செ. செம்மலை: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலத்தில் அரசு பொருட்காட்சியின் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 'கலையரங்கு' கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இப்படி அரசு பொருட்காட்சியின் மூலமாக கிடைத்து வருகிற வருமானத்தைக் கொண்டு, வேறு எந்த மாவட்டத்திலாவது இப்படிப்பட்ட கலை அரங்கம் கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படிப்பட்டத் திட்டம் அரசிடம் இருக்குமானால் இனிமேலாவது சேலத்தில் அரசு பொருட்காட்சியின் மூலமாக கிடைக்கிற வருமானத்தைக் கொண்டு புதியதாக கலை அரங்கத்தைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசு பொருட்காட்சிகளில் இருந்து கிடைக்கின்ற அந்த நிகர வருமானத்தைக் கொண்டு மாவட்ட தலை நகரங்களில் கலை அரங்குகளைக் கட்ட வேண்டுமென்ற கொள்கை முடிவை அரசு எடுத்திருக்கிறது. ஆனால், இந்த வருமானங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு, மாவட்ட தலைநகரங்களில் கலை அரங்குகள் கட்ட இயலாது. அதற்கு மேலேயும் அரசு நிதியிலிருந்து அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப் பெறவேண்டும். ஆகவே, கொள்கை அளவிலே இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டதும், முதலில் கோவை நகரில் ஒரு கலை அரங்கம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யலாம் என்று அனுமதி அளித்து, கடந்த ஆண்டு 15 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்யப் பெற்றிருக்கிறது. அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும் பொருட்காட்சி வருமானங்களைக் கொண்டு, தேவைப்படுகின்ற அரசு நிதி உதவியைக் கொண்டும், மத்திய அரசிடத்திலே—ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கேட்டிருக்கிறோம்—அப்படி கிடைக்கின்ற அந்த உதவியைக் கொண்டும் மாவட்ட தலைநகரங்களிலே இந்தக் கலை அரங்குகள் கட்டுகின்ற முயற்சி மேற் கொள்ளப்படும். சேலத்தைப் பொறுத்தவரை அங்கு ஏற்கெனவே ஒரு கலை அரங்கம் இருக்கிறது. இப்போது அங்கே கலை அரங்கம் கட்ட வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொருட்காட்சியின் மூலம், அரசுக்கும் நகராட்சிக்கும் வருமானம் வருகிறது என்பதைவிட, மக்களுக்கு பயனுள்ள பல விவரங்களை சொல்லுகின்ற ஒரு மிகச் சிறந்த சாதனமாக இந்த அரசு பொருட் காட்சிகள் அமைந்திருப்பதால் இப்போது ஒரு சில மாவட்டங்களில் அந்த பொருட் காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொருட் காட்சிகளை எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; தலைவர் அவர்களே. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இந்தப் பொருட்காட்சிகள் நடத்த வேண்டுமெனபது தான் அரசினுடைய திட்டம், அதிலே ஏறத்தாழ மிகப் பெரிய மாவட்டத் தலைநகரங்களாக விளங்குகின்ற தலைநகரங்களில் இப்போது நடத்தப்பட்டு வருகிறது. மேலும் சில நகரங்களில் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் சிறிய நகரங்கள் மாட்ட தலை நகரங்களாக இருந்தாலும், அங்கே நடத்துவது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மா.சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை நகரத்தில் அரசு மூலம் நடத்தப்பட்ட பொருட்காட்சியின் மூலம் நமக்குக் கிடைத்த நிகர வருமானம் என்ன என்பதையும், கோவை மாநகரத்திலே கலை அரங்கம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா என்பதையும் அறிய விரும்புகறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இங்கே சேலத்தைப் பற்றிய கேள்வி கேட்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், சேலத்தைப் பற்றிய விவரம் தான் என்னிடத்திலே இருக்கிறது. கோவையைப் பற்றிய முழு விவரம் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும், கோவை நகரம் என்று குறிப்பிடாமல், பொதுவாக இதுவரை 26 பொருட்காட்சிகளை அரசு நடத்தியிருக்கிறது. அதிலே எல்லாச் செலவுகளும் போக அரசு அங்கே அரங்குகளை அமைப்பதற்கு ஒதுக்குகின்ற நிதியை அரசுக்கு மீண்டும் செலுத்திவிட்டு, நிகர வருவாய் சுமார் 103 இலட்சம் கிடைத்திருக்கிறது என்ற கணக்கு என்னிடத்திலே இருக்கிறது. கோவையில் கலை அரங்கம் கட்டுவதற்கு உரிய இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டது. விரைவில் அங்கே கட்டிடப் பணிகள் தொடங்க இருக்கின்றன.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே. உலகிலே மிக அதிகமான அளவில் கலை நுணுக்கங்கள் கொண்ட பல அம்சங்களுக்கு தமிழ்நாடு பெயர் பெற்றிருக்கிறது. நம் நாட்டு மக்களும், வெளி நாட்டு மக்களும் அதைப் பார்த்து அனுபவித்து ரசிப்பதற்கு கலை நிகழ்ச்சிகள் அன்றாடம் தொடர்ந்து பல தேசங்களில் நடைபெறுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். உதாரணமாக, ஜப்பானில் தகாராசுகாரா என்னுமிடம் இந்த நிகழ்ச்சிக்குப் பெயர்போனது. அங்கே மதியம் 12 மணி முதல் நிகழ்ச்சிகள் நடைபெறுவதை நாங்கள் பார்த்தோம். அதைப் போல் அழகான தமிழகத்திலே நுணுக்கமுள்ள கலை அழகை எல்லோரும் ரசிப்பதற்கு, சென்னை தலைநகரத்திலே ஒரு மிகப் பெரிய கலை அரங்கம் கட்டி, அதன் மூலம் தம் நாட்டினுடைய கலையை வெளி நாட்டவரும், பெரிய அளவிலே தெரிந்து கொள்ளும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 25

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது கலையரங்கங்களைக் கட்டுகிற அந்தக் கேள்வியை ஒட்டியது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சென்னை நகரத்திலே அப்படி ஒரு கலையரங்கம் கட்டி, உலகத்திலே உள்ள நாடுகளின் தலைநகரங்களில், பெரிய நகரங்களில் நடப்பதைப் போன்று, சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கின்ற வகையில் தொடர்ந்து நம்முடைய கலை நிகழ்ச்சிகளை நடத்துவதைப்போன்று இங்கேயும் அரசு நடத்துமா என்று கேட்கிறார்கள். இது சுற்றுலாத் துறை பதிலளிக்க வேண்டிய கேள்வியென்று இருந்தாலும் தமிழகத்திலே கலைவாணர் அரங்கம், மியூசியம் தியேட்டர் ஆகிய அரங்கங்கள் இருக்கின்றன.

(முற்பகல் 9—30)

அந்த அரங்கங்களிலே இந்த நிகழ்ச்சிகள் நடத்தலாம் என்று இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப் போல சுற்றுலாப் பயணிகளுக்காக நம் நாட்டுக் கலை நிகழ்ச்சிகளைத் தினசரி நடத்துகின்ற ஒரு திட்டம் சுற்றுலாத் துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நான் அந்தத் துறைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினாலும், கொஞ்சம் அதிகமான தகவல்களைத் தர முடியும் என்ற அந்த உணர்வோடு இங்கே அளித்திருக்கிறேன். இதைத் தொடர்ந்து வேறு துணைக் கேள்விகள் வந்தால் இப்போது பதில் அளிக்க இயலாது.

## வால்பாறை காடுகள்

358 (*வினா எண் 1074) திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள காடுகள் அழிந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) அதனை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) : வால்பாறையில் காடுகள் ஏதும் அழிக்கப்படவில்லை.

திரு. வி. தங்கவேலு : தலைவர் அவர்களே, வால்பாறையில் காடுகளை வளர்ப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.



1985 ஜூன் 25]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, வால்பாறை என்பது மலைப்பகுதியாக விளங்குகிற இயற்கையான காடுகளைக் கொண்டு இருக்கிற ஒரு பகுதியாகும். ஆகவே காடுகளை புதிதாக வளர்ப்பது என்பது இப்போது அங்குள்ள பிரச்சினையல்ல. இருக்கிற காடுகளை அழிக்காமல் பாதுகாப்பது என்பது தான் நம் முன்னால் உள்ள பிரச்சினை. அதற்கான முயற்சிகள் அனைத்தையும் வால்பாறையைப் பொறுத்தவரையில் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. வி. தங்கவேலு : தலைவர் அவர்களே, வால்பாறையில் காடுகள் அழிந்துவருவதாகச் செய்திகள் எனக்குக் கிடைத்திருக்கிறது. இருந்தாலும் சென்ற ஆண்டு அங்கே காடுகளை வளர்க்க அரசு ஏதாவது செலவுகளைச் செய்திருக்கிறதா என்பதை அறிய நான் ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். வால்பாறையைப் பொறுத்தவரையில் அது மலைப்பகுதி. இயற்கைக் காடுகள் நிறைந்த பகுதி. அங்கே காடுகளை வளர்ப்பதற்கென்று தனியாகத் திட்டம் தீட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகக் காடுகள் வளர்க்கிற திட்டத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் அந்தத் திட்டம்பற்றித் தனியாக அவர்கள் கேள்வி கேட்டால் விவரங்கள் அனைத்தையும் சேகரித்துத் தரமுடியும்.

## ஆதிகேசவ பெருமாள் கோவில் நிலம்

359—(*வினா எண் 1223) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1924ஆம் ஆண்டு முதல் 1976-ம் ஆண்டு வரை மேற்கு மாம்பலம் ஆதிகேசவ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை, தற்போது அரசு புறம்போக்கு நிலமாக அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இந் நிலத்தை அறநிலையத் துறைக்குச் சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : மேற்கு மாம்பலம் ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குப் பட்டா வழங்கப்பட்ட காலி மனைகளை பிறர் தனது சொந்தப் பெயரில் பட்டா பெற மேல் முறையீடுகள் மற்றும் வழக்குகள் தொடர்ந்தபோது நடைபெற்ற விசாரணையில், இக் காலி மனைகளைப் பாதுகாக்க அப்போதைய அறங்காவலர்கள் தவறிவிட்டதால் அந்நிலங்கள் தனியார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளன. முந்தைய அறங்காவலர்கள் அவர்களுக்குப் பின் நியமிக்கப்பட்ட செயல் அலுவலர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்காத நிலையில், இந்தப் பொருள் குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. எனவே, அப்போது பொறுப்பில் இருந்த அவ்வறங்காவலர்களின் விவரங்கள் மற்றும் விலாசங்கள் பெற்றும், முந்தைய ஆவணங்களைப் பொறுப்பு ஏற்றும், திருக்கோயிலுக்கு ஏற்பட்ட இவ்விழப்பை அவர்களிடம் வசூலிக்க சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் மேற்படி நிலங்களை மீண்டும் கைப்பற்றுவதற்கு சட்டரீதியான ஆலோசனை பெற்று அறநிலையத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த இடம், ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடம் என்றும் அந்த நிலத்தை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்து இருப்பதாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்து இருக்கிற அந்த இடத்தை எடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா? இப்போது காலியாக இருக்கிற அந்த இடம் லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இடமாக இருக்கிறது. ஆகவே அதை விற்பதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த இடத்தை யாரும் விற்கவோ வாங்கவோ கூடாது என்ற வகையில் அரசு ஒரு அறிவிப்பைச் செய்து அந்தக் காலியிடத்தை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே தொடர்புகொண்டிருக்கிற ஆலயம் நீண்டகாலமாக நம்முடைய நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் இருக்கிற ஆலயமாக இருந்து வந்திருக்கிறது. அங்கே அறங்காவலர்கள் இருந்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட இடத்தைப்பற்றித் தகராறு எழுந்தபோது செட்டில்மென்ட் ஆபீசரிடத்திலே தனியார் ஒருவர் விண்ணப்பித்து அது தன்னுடைய பட்டா நிலம் என்றும் தனக்குச் சேர வேண்டிய நிலம் என்றும் கேட்டுள்ளார், அந்த ஆலயத்தின் சார்பிலே அதை மறுத்தோ அல்லது அந்த இடம் ஆலயத்திற்குச் சொந்தமானது என்று ஆவணங்களைக் காட்டியோ வாதடாத





சூழ்நிலையில் அந்த செட்டில்மெண்ட் ஆபீசர் தனியாருக்கு அதைப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார். அது நீண்டகாலமாக அப்படியே அவர்கள் அனுபவத்தில் இருந்து வந்ததற்குப்பிறகு, சமீபகாலத்தில்தான் அந்த ஆலயத்திற்கு நாம் நிர்வாக அதிகாரியை நியமித்து இருக்கிறோம். அதற்குப் பிறகுதான் அந்த தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. ஏன் முன்னாலே இருந்த அந்த அறங்காவலர்கள் ஒரு 20 ஆண்டுக்காலமாக இது நடைபெற்றிருக்கிறது— முறையாக ஆலயத்திற்கு உரிமையான அந்த நிலத்தை பெறுவதற்கும் ஆவணங்களைக் காட்டுவதற்கும் முன்வரவில்லை, தனியார் பட்டா வாங்குவதற்கு எப்படி அதை அனுமதித்தார்கள் என்கிற விவரங்களை எல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்படி தெரிவித்திருக்கிறோம். இப்போது தனியாருடைய பெயரில் பட்டா இருக்கிற காரணத்தால், அது அவருடைய நிலம் என்று சட்டப்படி ஆகிறது. அதை வைத்துக்கொண்டு விற்பனை செய்ய முயலக்கூடும். இருந்தாலும் நாம் ஆலயத்தின் சார்பிலே மேலும் சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்பதைத் தீவிரமாக பரிசீலித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணைகளைப் பிறப்பித்து இருக்கிறோம்.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, இதுபோல் ஆலய நிர்வாகத்தில் பல்வேறு இடங்களில் தமிழகம் முழுமைக்கும் ஆலயத்திற்குச் சொந்தமான இடங்களை தாசில்தார்களிடம் அந்த தனியார்கள் அவர்களோடு உடன்பட்டு, இப்படி ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை பட்டா செய்து வைத்திருக்கின்ற ஒரு சூழ்நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அவைகளை எல்லாம் பரிசீலனை செய்ய தனியாக ஒரு அதிகாரியை நியமித்து 70 ஆண்டுக் காலமாக இருக்கக் கூடிய அந்த தஸ்தாவேஜுகளை நாம் சரிபார்த்து, ஆலயத்திற்குச் சொந்தமான இடங்களை எல்லாம் தனியார்கள் பட்டா பெற்றிருந்தால், அது எந்தவகையில் பெறப்பட்டது, அப்படி பெறப்பட்டதற்கு ஏதாவது அடிப்படை நியாயமான காரணங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு நீண்டகால பிரச்சினையாக இருந்து வருகிறது. செட்டில்மென்ட் என்கிற பெயராலே இந்த நிலங்கள் எல்லாம் உரிமைப்படுத்தபடுகிறபோது, பட்டா வழங்கப்படுகிற போது, பெரும்பகுதியான நிலங்கள் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த நிகழ்விலே கூட 2 சென்ட் நிலத்தை மரகதம் அம்மாள் என்கிறவர் தனக்கு உரிமையானது என்று கேட்டு, அவர்கள் பெயருக்கு

பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். 61 சென்ட் நிலத்தைப் பொறுத்தவரைக்கும், அது குளமாக இருந்தது. ஆகவே அதிலே ஆலயத்திற்கு உரிமையில்லை என்று அவர்கள் ஆலயத்திற்கு பட்டா செய்துதர மறுத்து இருக்கிறார்கள். ஆகவே இப்படி தமிழ்நாடு முழுவதும் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் பட்டா செய்யப்பட்டு இருக்கின்றன. அப்படி பட்டா செய்யப்பட்டதற்குப் பிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால், அது அவர்களுக்கு உரிமையாக்கப்படுகிறது. மீண்டும் வழக்கு மன்றத்திற்கு போனாலும், அதிலே வெற்றி பெற முடியுமா என்கிற ஐயப்பாடுகளும், சட்டச் சிக்கல்களும், ஏற்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட முறைகேடாக யாராவது ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களை கையகப்படுத்திக் கொண்டிருந்தால், அல்லது செட்டில்மென்ட் செய்யப்பட்டு இருந்தாலும், அவைகள் எல்லாம் செல்லுபடி ஆகாது என்று நியாயமான ஆவணங்களைக் காட்டி நிரூபித்தால், அதை ரத்து செய்வதற்கான உரிமையைக் கொண்டாடுகின்ற வகையில் சட்டம் கொண்டு வர முடியுமா? அப்படிக் கொண்டு வந்தால், அந்தச் சட்டம் செல்லுபடியாக இருக்குமா என்பதைப் பற்றி நம்முடைய அரசின் சட்டத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, Patta cannot create or extinguish title because patta is not an evidence of title என்று சட்ட விதியிருக்கிறது. ஏன் என்றால், பட்டா கொடுப்பதன் காரணமாக மட்டும் ஒருவருடைய சொத்து மற்றவர்கள் பாத்தியதை ஆக முடியாது என்பதுதான் சட்ட விதி. அது மட்டுமல்லாமல், இந்தியன் லிமிட்டேசன் ஆக்ட் ஆர்ட்டிகிள் 96-ன் அடிப்படையில் ஒரு புதியதாக ஒரு டிரஸ்டி அல்லது எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டால், பழைய டிரஸ்டி அல்லது எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் செய்த தவறுகளின் மீது தொடர்ந்து 12 ஆண்டுகளுக்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்று சட்ட விதியைக்கூட வேறு ஒரு சந்தர்ப்பத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்ததை நினைவில் நிறுத்தி, அதன் அடிப்படையில் மிகவிரைவாக அந்த நடவடிக்கைகளை எடுத்து, இந்தக் கோவில் நிலங்களை மீண்டும் அரசு கைப்பற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, லிமிட்டேசன் ஆக்ட் என்று உரிமை வழங்குகின்ற அந்தச் சட்டத்தின்படி அந்த மைனர் மேஜராகி சில ஆண்டுகளுக்குள்ளே, அதற்குத் தாவாவாக அவர்கள் வாதிட்டால், அது செல்லுபடியாகாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் ஆலயங்களைப் பொறுத்த வரையில், நம்முடைய இந்த ஆலயங்களில் இருக்கின்ற மூலவர்கள் பெயரில், அந்தப் பட்டா வழங்கப்பட்டு இருக்கின்ற இந்த மூலவர்கள் என்றைக்குமே அறங்காவலர்களாலே பரிபாலிக்கப்படுகிறார்கள், நிர்வகிக்கப்படுகிறார்கள். எனவே என்றைக்குமே அவை மைனராக இருக்கிறவரின் சொத்து என்ற விதியின் கீழே நடவடிக்கை எடுக்க முடியுமா என்று சட்டத்துறை பரிசீலிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போன்று 12 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்தவர்கள் சரியாக செய்யவில்லையானால் அதற்கு மீண்டும் வழக்கு போடலாம் என்றும் அல்லது கைப்பற்றலாம் என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே பல வழக்குகளில் 12 ஆண்டுகளைத் தாண்டி இருக்கின்றன. ஆகவே, சிக்கல்கள் எழுகின்றன. எவ்வளவு காலம் ஆனாலும் முறை அற்ற, நியாயம் அற்ற, சட்டத்திற்கு புறம்பாக ஆலைய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இருந்தால் அது செல்லுபடியாகாது என்று செய்ய முடியுமா என்பதைத்தான் சட்டத் துறை பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.





(முற்பகல் 9-40)

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களுடைய தெய்வங்களை குழந்தைகள் போல் நினைத்துதான் அங்கே இருக்கின்ற அறங்காவலர்களையோ அல்லது நிர்வாக அதிகாரிகளையோ அதற்கு கார்டியனாக பாதுகாவலராக சட்டப்படி நியமித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த பாதுகாவலராக இருக்கின்ற நிர்வாக அதிகாரிகளோ அல்லது அந்த அறங்காவலர்களோ ஏதாவது அந்தக் கோவிலுக்குப் புறம்பாக காரியங்கள் செய்து இருந்தால் அது குழந்தைகளுக்கு எதிராக செய்த காரியமாக கருதிஅவர்களை உடனடியாக நீக்கலாம். அதுபோல அவர்கள் செய்கிற காரியங்களைத் தடுக்கலாம். ரதது செய்யலாம் என்ற அப்படிப்பட்ட சட்ட விதிகளை துல்லியமாக இயற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து இதிலே தீவிர கவனம் செலுத்தி கோவில் நிலங்களை கைப்பற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, இதே கருத்தைத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு டி. ஆர். வேங்கடரமணன் அவர்களும் தெரிவித்தார்கள். அது 12 ஆண்டுகளுக்குள் கண்டுபிடித்தால் அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கலாம் என்கிற அந்த விதியை தெரிவித்தார்கள். இப்போது 12 ஆண்டுகளுக்குள்ளே நாம் கண்டுபிடிக்கிறோமா என்பதுதான் பிரச்சினை. இப்போது கேள்வி கேட்கப்பட்டு இருக்கிற இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில் இந்த நிகழ்ச்சியே ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்து இருக்கிறது. ஆகவே, காலம கடந்து போன சூழ்நிலையில்

இன்றைக்கு நாம் இவைகளை எல்லாம் கண்டுபிடிக்க தொடங்கியிருக்கிறோம். அப்படி விவரங்கள் தெரிகிறபோது நடவடிக்கை எடுக்கலாம் என்றால் காலதாமதம் ஆகியிருக்கிறது. அப்படி காலதாமதம் ஆனாலும் நடவடிக்கை எடுக்க முடியுமா ? எடுத்தால் அது சட்டப்படி செல்லுபடியாகுமா ? ஆகவில்லை என்றால் செல்லுபடியாக்குவதற்குத்தான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வர முடியுமா என்பதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம்.

### டயர் உற்பத்தி.

360—(*வினா எண். 821)—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : திரு. எப். எம். இராசரத்தினம்; திரு ஏ. எஸ். ரவீந்திரன்; மற்றும் திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி ஆகும் ரப்பரை பயன்படுத்தி போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துத் துறையைச் சார்ந்த மட்டில் ஏறத்தாழ 6 ஆயிரத்துக்கு அதிகமான பேருந்துகள் இருக்கின்றன. ஒரு பேருந்துக்கு ஆண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் 20 டையர்களாவது தேவைப்படுகின்றன. இந்த நிலையிலே அரசாங்கமே சொந்தமாக ஒரு டையர் உற்பத்தி தொழிற்சாலை தொடங்குவது நியாயமானதும் முறையானதும் ஆகும். ஏன் என்றால் போக்குரவரத்துத் துறையைச் சார்ந்த மட்டில் நான் கேள்விப் பட்டதில் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வியைக் சுருக்கமாகக் கேட்க வேண்டும். அதன் பின் பகுதியில் இருப்பதை நீக்கவேண்டும் என்று உத்திரவிடுகிறேன். ஏன் என்றால் அதற்கு போக்குரவரத்துத்துறை அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியை போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்தில் தான் போட்டு இருந்தேன். நான் எந்தத் துறையில் கேள்வியைப் போட்டு இருக்கிறேன் என்பதை எடுத்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ரப்பர் என்று சேர்ந்ததால் செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவரிடத்தில் போய்விட்டது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய விதத்தில் இந்தத் தொழிற்சாலையை அரசு தொடங்க இப்போதாவது முன்னுரிமை தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்தில் கேட்டேன். இதற்கு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறார் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டிய சில வவிரங்களை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படியே போக்குவரத்துத்துறை அமைச்சரிடத்திலே கேட்டு இருந்தாலும், ' இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்ற உத்தேசம் உண்டா என்று தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தான் பதில் அளித்துக் கொண்டிருக்கிறோமே தவிர, ஏதோ அந்தத் தொழிற்சாலைகளில் ஏதோ நடைபெறுவதாகக் கேள்விப்படுகிற முறைகேடுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்திலே குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது இந்தக் கேள்விக்குத் தொடர்பானது அல்ல என்று மாண்புமிகு தலைவர் அவர்கள் எடுத்து விட்டார்கள். என்றாலும், உறுப்பினர் அவர்கள் மீண்டும் நம்முடைய அரசைக் குற்றம் சாட்டி, பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக இந்தக் கேள்வியினை அனுப்பி இருப்பதைப் போல் தெரிவித்திருக்கிற காரணத்தால், இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கிற கேள்வி, '' கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி ஆகும் ரப்பரைப் பயன்படுத்தி போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா '' என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்குப் பதில் அளித்திருக்கிறோம். போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்தாலும் இதே பதில்தான். நான் அளித்தாலும் இதே பதில் தான். காரணம், இந்த ரப்பரை உற்பத்தி செய்கின்ற பொறுப்பை வனத்துறை வைத்துக்கொண்டிருக்கிற

காரணத்தால், வனத்துறையின் சார்பில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் வேறு விவரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால், வேறு கேள்விகளை அதற்குரிய முறையிலே கேட்டால், அதற்கான அமைச்சர் பதில் அளிப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள கேள்விக் குறிப்பில், அமைச்சர் பெயரே குறிப்பிடப்படவில்லை. வெற்றாக இருக்கிறது. It is not the fault of office.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : தலைவர் அவர்களே, தயவு செய்து நான் ஒரு விளக்கம் சொல்கிறேன். என்னுடைய கேள்வியை எடுத்துப் பார்க்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தி ஆகிற ரப்பரைப் பற்றியோ.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அமைச்சர் என்று கேள்வியில் எழுதப்படவில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள், 1975 ஆம் ஆண்டில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த நேரத்தில் இப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி ஆகும் ரப்பரைப் பயன்படுத்திப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழில் ஸ்தாபனத்தை அமைப்பதற்கான 'ப்ராஜக்ட் ரிப்போர்ட்' கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்குத் தயார் பண்ணுவதற்கான குறிப்பை கொடுத்து, அவர்கள் அப்படிப்பட்ட ஒரு பிராஜக்ட் ரிப்போர்டைத் தயார் செய்து இன்டஸ்டிரீஸ் டிபார்ட்மென்ட்டிற்கு அனுப்பப்பட்டு, இன்டஸ்ட்டிரீஸ் டிபார்ட்மென்ட்டில் சென்ற 10 ஆண்டுக் காலமாக இன்னமும் முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அப்படி இந்த இன்டஸ்டிரீஸ் டிபார்ட்மென்ட்டிற்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் அனுப்பிய 'ப்ராஜக்ட் ரிப்போர்ட்டின்' மேல் தகுந்த நடவடிக்கை எடுத்து, முடிவு எடுத்து, அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே அரசு ரப்பர் தோட்டத்திலே கிடைக்கிற ரப்பரைக் கொண்டு தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியுமா என்று நீங்கள் கேட்டதனாலேதான் இந்தக் கேள்வியிலே இவ்வளவு பெரிய சிக்கல் வந்து இருக்கிறது. ஒரு டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியுமா என்று கேட்டு இருந்தால், அது எந்த அமைச்சரிடத்திலே செல்ல வேண்டுமோ அவரிடத்திலே



செல்லும். இங்கே மூலப் பொருள் கிடைப்பதைச் சுட்டிக் காட்டி, அந்த மூலப் பொருளை வைத்து தொழிற்சாலை ஆரம்பிக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, இது மூலப் பொருளை ஒட்டியது. மூலப் பொருளைத் தயாரித்துக் கொடுக்கின்ற பொறுப்பு வனத்துறைக்கு இருக்கிறது. ஆகவே, வனத்துறை அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வி வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஏதோ 'ப்ராஜக்ட் ரிப்போர்ட்' எல்லாம் அனுப்பி, அது ஏழு, எட்டு ஆண்டுகளாக பரிசீலனையில் இருக்கிறது என்ற விவரத்தை எல்லாம் இங்கே தெரிவிக்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவலிலேயிருந்து ஒரு டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமானால், ஒரு மிகப் பெரிய தொழிற்சாலையாக ஆரம்பிக்க வேண்டுமானால், 10 ஆயிரம் டன் ரப்பர் அதற்கு இருந்தால்தான், அது லாபகரமுடைய தொழிற்சாலையாக தொடங்கமுடியும். நம்முடைய ரப்பர்த் தோட்டத்திலே ஆண்டொன்றுக்கு 2,000 டன் ரப்பர்-இலிருந்து 2,500 டன் ரப்பர்தான் நாம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி பரிசீலித்த நேரத்தில், அது லாபகரமாக இயங்காது என்று முடிவெடுத்து, இரண்டு சக்கர டயர் தொழிற்சாலை—அந்த டயர்கள் தயாரிக்கின்ற அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கமுடியுமா என்று பரிசீலிக்கப் பெற்று, அதுவும் லாபகரமாக இயங்காது என்று முடிவு எடுத்த காரணத்தினாலே அது கைவிடப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்கள் தனியாகத் தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அதைப் பற்றி விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அதற்கென்று தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[முற்பகல் 9-50]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலேயிருந்து டயர் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை அமைக்கப்படக்கூடிய உத்தேசமில்லை என்று தெரிகிறது. நமது அரசு தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற ரப்பர் தரமானதாக இருப்பதால், டயர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான உத்தேசம் இல்லாவிட்டாலும், இரப்பரை அடிப்படையாகக் கொண்ட வேறு ஏதாவது தொழிற்சாலையை அமைக்கின்ற உத்தேசம் உள்ளதா? மேலும், அரசுக்குச் சொந்தமான இரப்பரை ஏலம் விடுகின்றபொழுது ஓப்பன் ஆக்ஷனில் விடுகிறார்கள். அதை பெரிய பெரிய லாட்டுகளாக ஏலம் விடுவதால் சிறிய தொழிற்சாலைகளை வைத்திருக்கின்றவர்கள் அதில் பங்குகொள்ள முடியாத நிலையிருக்கிறது. எனவே, அரசு இரப்பருக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலேயும், சிறு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கின்ற முறையிலேயும் சிறு சிறு லாட்டுகளாகப் பிரித்து ஏலம் விடப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த இரப்பரைப் பயன்படுத்தி எப்படிப்பட்ட தொழிற்சாலையைத் தொடங்கலாம் என்பது தொழில் துறை பரிசீலிக்க வேண்டிய ஒன்று. ஏற்கெனவே கிடைத்திருக்கின்ற தகவலிலிருந்து, அப்படிப் பரிசீலித்து இந்த இரப்பரை மட்டும் வைத்துக் கொண்டு தொழிற்சாலை தொடங்க முடியாது என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் சேரன் போக்குவரத்துக் கழகம் போன்றவர்கள் தனியாகவே இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரப்பர் தோட்டத்திலிருந்து அவர்கள் இரப்பர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே தெரிவித்ததைப் போன்று, இந்த இரப்பரை எப்படி ஏலம் விடுகிறார்கள் என்ற விவரம் தற்பொழுது என்னிடத்தில் இல்லை. அப்படிப் பெரிய பெரிய லாட்டுகளாக வைத்து பெரிய பெரிய வியாபாரிகள் மட்டுமே பங்கு கொள்ளுகின்ற வகையில் அந்த இரப்பர் ஏலம் நடந்தால், அதை மாற்றி சிறிய வியாபாரிகளும் அல்லது சிறிய தொழிற்சாலை அதிபர்களும் பங்கு பெறுகின்ற வகையில் அதை நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. செ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய வனத்துறை மூலம் கிடைக்கின்ற இரப்பரைக் கொண்டு டயர் தொழிற்சாலை நடத்துவதற்குத் தற்போது இயலாது என்பது அமைச்சருடைய பதிலிலிருந்து தெரிகிறது. ஆனால், இன்றைக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தனியார் துறையிலேயிருந்து டயர்களை வாங்குகிறோம். அதை மனதிற் கொண்டு, எதிர்காலத்திலேயாவது அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர்களை உற்பத்தி செய்வதற்கு நம்முடைய அரசுக்கு உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை விவரமாக எழுதி உங்களுக்கு அனுப்பினால், முறையாக பதிலளிக்க வேண்டிய அமைச்சர் தெளிவாகப் பதில் அளிக்க இயலும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் மாவட்டம் திருப்பத்தூரில் தனியார் ஒருவர் டயர் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டு அனுமதி பெற்றது உண்மையா? அது எந்நிலையிலுள்ளது? அவர் தொடங்காவிட்டால் அரசு தொடங்குவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியே, " கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு இரப்பர் தோட்டத்தில் உற்பத்தி ஆகும் ரப்பரை பயன்படுத்தி போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் உற்பத்திச்செய்யும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?" என்பது. இந்தக் கேள்விக்குப் பதில் அளித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினால் அதற்குரிய வகையில் கேள்வியைப் போட வேண்டும்.

### சென்னை அண்ணா சமாதி.

313—(* வினா எண் 1590)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை அண்ணா சமாதியை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1. வன விலங்குகளின் உருவ அமைப்புகள், சோலை, செயற்கைக் குன்று ஆகியவை புதுப்பிக்கப்படும்.

2. பேரறிஞர் அண்ணா நூலகம் அமைக்கப்படும்.

3. அண்ணா நினைவகத்திற்குச் செல்ல இருமருங்கிலும் உள்ள நடைபாதையின் மேல் நிழலுக்காக அமைந்துள்ள கொடிப் பந்தல் விரிவாக்கப்படும்.

4. அண்ணா நினைவகத்தைச் சுற்றிலும் உள்ள பழுதடைந்த கம்பி வேலியை அகற்றி விட்டு வலைக் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. அதனுள்ளே சவுக்கு மரங்களை வளர்த்து மரங்கள் செறிந்த வேலியை உருவாக்கவும், மரங்கள், பூச்செடிகள் நடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளை, அதாவது, நெசவாளர்களுக்காகத் துணிகளைச் சுமந்து கொண்டு விற்றது, விலைவாசிப் போராட்டம், சீன யுத்தத்தின் போது நேரு பெருமானின் யோசனையின் படிதான் உதவுவதாகச் சொன்னது, மற்றும் அவர்களுடைய முக்கியமான பேச்சுக்களை ஒலிபரப்புவது, அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளிக் காட்சியாகக் காண்பிப்பது, ஸ்லைடு அல்லது சினிமா போடுவது ஆகியவற்றிற்கு அந்தப் பகுதியில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 25

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்பொழுது அண்ணா சதுக்கத்தில் உள்ளே நுழைகின்றபொழுதே அண்ணா அவர்கள் பேசிய பேச்சுக்கள் அங்கே ஒலிபரப்பப்படுகின்றன. அவர்களின் குரலையே அங்கே கேட்கின்ற வகையிலே ஒலிபரப்புகின்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பக்கத்திலே இரண்டு கட்டிடங்கள் கட்டி, ஒன்று நூலகமாகவும்' மற்றொன்று நூல்களை எல்லாம் விற்பனை செய்கிற இடமாகவும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்கள், அறிஞர் அண்ணாவைப் பற்றிய நூல்கள் அங்கே வைக்கப்படும். அப்படிப்பட்ட நூல்களும் அண்ணா தொடர்பான மற்ற நினைவுப் பொருட்களும் வைக்க ஒரு இடம், விற்பனை செய்வதற்கு இன்னொரு இடம் பயன்படுத்தப்பட இருக்கிறது. ஆகவே, ஒலி, ஒளி காட்சியை அண்ணா சதுக்கத்திலே விரிவாக நடத்துவதற்கு இயலாது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலா பயணிகளை, அரசு சுற்றுலாப் பேருந்தில் அழைத்துச் செல்லும்போது, வள்ளுவர் கோட்டத்தையும், மகாபலிபுரத்தையும் காட்டுகிறார்கள். இனி வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை அண்ணா சமாதிக்கும் அழைத்துச் சென்று, அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாறை எடுத்துக் காட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளை அண்ணா சதுக்கத்திற்கு அழைத்துச் செல்வதாக அறிகிறேன். அப்படி இல்லையானால் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

ஏழாயிரம் பண்ணைக்கு குடிநீர் வழங்கல்

363—(*வினா எண் 985)—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசி தொகுதி ஏழாயிரம் பண்ணையில் குடிநீர் தட்டுப்பாடு அதிகமாக உள்ளதால், குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?



1985 ஜூன் 25]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். சிவகாசி தொகுதியிலுள்ள ஏழாயிரம் பண்ணை குடியிருப்புக்கு சுமார் ரூ. 4 இலட்சம் மதிப்பில் குடிநீர்த் திட்டம் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் செயலாக்கப்பட உள்ளது.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டம் ரூ. 4 இலட்சம் மதிப்பீட்டிலே தயாரிப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அங்கே 8,000 மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏராளமான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அங்கு நிறுவப்பெற்றிருக்கின்றன. இந்த ஆண்டிலே குடிநீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறபடியால் உடனடியாக இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே தொடங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்ய வைப்பதற்கு அரசு வாங்கி இருக்கும் விமானத்தைக் கொண்டு, குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதியில் செயற்கை மழை பெய்விக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதற்காகத்தான் இந்த விமானம் வாங்கப்பட்டிருக்கிறது. எங்கே கடுமையான வறட்சி நிலவுகிறதோ, எங்கே நீர் நிலைகளிலே நீர் இல்லையோ, நிலத்தடி நீரையும் எங்கே பயன்படுத்த முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறதோ, அத்தகைய பகுதிகளில் செயற்கை மழை பெய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளும். வருகிற ஜூன் 29 ஆம் தேதி வாக்கில், திண்டுக்கல் நகரத்திலே நிலவக்கூடிய கடுமையான வறட்சியைக் கருத்திலே கொண்டு, அந்தப் பகுதியிலே செயற்கை மழை பெய்விக்கிற முயற்சியை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

திரு. மு. பிச்சை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியில் 16 பஞ்சாயத்துக்களுக்கு, பூமிக்கடியிலே, நல்ல பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கிடைக்காத காரணத்தால் மொத்தனேந்தலிலிருந்து, வைகை ஆற்றிலிருந்து 10 பஞ்சாயத்துக்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும், மேதாலை கிராமத்திலே 6 பஞ்சாயத்துக்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் தண்ணீர் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அங்கே, இப்பொழுது மின் பற்றாக்குறை காரணமாக, தொடர்ச்

சியாக, 6 மணி நேரம், 10 மணி நேரம் மின்சாரம் இல்லாத காரணத்தால், மேநிலைத் தொட்டிகளுக்குத் தண்ணீர் ஏற்றி சரியான முறையிலே, தண்ணீர் விநியோகிக்க. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை ; சிவகாசி எங்கே இருக்கிறது? அருப்புக்கோட்டை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்திலே அதிகமான பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக சென்னை நகருக்குக் குடிதண்ணீர் வழங்குகின்ற பூண்டி ரிசர்வாயருக்கு அருகில் அந்தச் செயற்கை மழை பெய்விக்கின்ற பணியைத் தொடங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கருத்துப்படி அண்ணா மாவட்டம் மதுரைக்குப் பக்கத்திலே இருக்கிறது. அதனுடைய தலைநகரம் திண்டுக்கல்.

## தக்கலை ஊராட்சியில் கிணறுகளில் தூர் எடுத்தல்

364—(*வினா எண். 1262) திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நீரில்லாத கிணறுகளைத் தூர் எடுக்கவும், ஆழப்படுத்தவும், அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப் பணிகள் எப்போது துவங்கப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் நீரில்லாத கிணறுகளை ஆழப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு, அதற்காக வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 1,20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 24 கிணறுகளை ஆழப்படுத்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, 19 மதிப்பீடுகளுக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளார். '9' கிணறுகளை ஆழப்படுத்தும் வேலை துவக்கப்பட்டு '5' கிணறுகளை ஆழப்படுத்தும் பணி முடிக்கப் பட்டுள்ளது. மீதமுள்ள கிணறுகளை ஆழப்படுத்தும் பணி விரைவில் முடிக்கப்படும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[முற்பகல் 10-00]

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த ஒரு பகுதியிலும் கிணறுகள் தூர் வாரப்பட வில்லை ; தண்ணீர் பற்றாக்குறை தீர்க்கப்படவில்லை. இந்தக் குறைகளைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அரசு விளக்கம் கேட்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் பல பகுதிகளில் குறிப்பாக, தக்கலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்தின் உட்பகுதிக்குள் 'ரிக்ஸ்' கொண்டுபோய் குழாய்க் கிணறுகள் போட முடியாமல் இருக்கிறது. ஆகவே, இருக்கிற கிணறுகளை ஆழப் படுத்தினால் தான் கிராமங்களின் உட்பகுதிகளில் இருக்கிற மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். அதற்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற பணம், காணாது என்பதால் பல கிணறுகள் ஆழப்படுத்தப்படுவது விடப்பட்டிருக்கிறது என்று புகார் வந்திருக்கிறது. ஆகவே, அந்த மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்தவும், ரிக்ஸ் கொண்டுபோய் குழாய்க் கிணறுகள் போட்டுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, தக்கலை ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் 127 கைப்பம்பு செட்டுகளும் 20 மேல் நிலை நீர்த் தொட்டிகளும் 327 திறந்த கிணறுகளும் இருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தில் அடிப்படையில் கிணறுகளை ஆழப்படுத்த இப்போது ஒதுக்கபட்டிருக்கிற பணத்தை முழுமையாகச் செலவிட்ட பிறகு தேவை என்றால் அரசு மேலும் நிதி ஒதுக்கீடு செய்யும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் பொதுவாக அங்குள்ள கிணறுகள் எல்லாம் கிட்டத்தட்ட 100 அடி, 110 அடி ஆழத்தில் தோண்டப்பட்டாலும், 5 அடி தண்ணீர்தான் இருக்கிறது. வறட்சிக் காலத்தில் அந்தத் தண்ணீரும் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட கிணறுகளை மேற்கொண்டும் ஆழப்படுத்த வேண்டுமென்றால் வேலை

செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே, இப்படி பாதிக்கப்பட்ட இடங்களில் 'போர் வெல்ஸ்' அமைத்துக் கொடுத்து, தண்ணீர் கிடைக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசு ஆராய்ந்து முறையான நடவடிக்கை எடுக்கும்.

## ஆலந்தூருக்குக் குடிநீர் வழங்கல்.

365—(*வினா எண். 1806) திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் தொகுதி, ஆலந்தூர் நகரின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கான பாலாறு குடிநீர் திட்டம் தடைபட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை ?

(ஆ) இதைத் துரிதப்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாலாற்றை நீராதாரமாக கொண்ட ஆலந்தூர் பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. அந்த ஆண்டிலேயே திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பழைய சீவரம், வாலாஜாபாத் ஆகிய இரண்டு இடங்களில் திட்டத்தின் தலைமைப் பணியிடங்கள் அமைகின்றன. பழைய சீவரம் தலைமைப் பணியிடப் பணிகள் பழைய சீவரத்திலிருந்து தாம்பரம் அருகிலுள்ள நீரேற்று நிலையம் வரை குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டு சோதனை நீரேற்றுப்பணி மேற்கொள்ளப்பட்டது. அப்போது அநேக இடங்களில் நீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்களில் அதிக அளவு கசிவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் கசிவுகளை நிறுத்த மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. எனவே பழைய சீவரத்திலிருந்து 53 கிலோ மீட்டர் தொலைவிற்கு புதிதாக கல்நார் மற்றும் வார்ப்பு இரும்புக் குழாய்களைப் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. இதன் மூலம் பகுதி அளவு திட்டம் நிறைவேற்றப்பட்டது. தற்போது இத்திட்டத்தினால் பயன்பெறும் நகரங்களில் 155 குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வாலாசாபாத் தலைமைப் பணியிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடந்து வருகிறது. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்படி பணிகள் முடிவடையும் என



எதிர்பார்க்கப்படுகிறது. வாலாசாபாத் தலைமைப் பணியிடப் பணிகள் முடிந்தவுடன், ஆலந்தூர் நகரத்திற்கு வழங்கும் குடிநீர் அளவு மேலும் அதிகப்படுத்தப்படும்.

திரு. ம. ஆபிரகாம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று நீண்ட பல ஆண்டுகளாக ஆலந்தூர் நகருக்கும் பல்லவபுரம் நகருக்கும் பிற நகர்களுக்கும் குடிநீர் கொடுக்க வேண்டுமென்று இந்தத் திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் முழுமையாக இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆலந்தூர், பல்லவபுரம் நகர்களின் வீதிகளில் கூட குழாய்கள் சரிவர போடப்படவில்லை. ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக முழுமையாகச் செயல்படுத்தி, மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, டிசம்பர் மாதத்திற்குள்ளாக இந்தத் திட்டத்தை முடிக்க இருக்கிறோம். முடிவு பெற்றவுடன் அதிகமான தண்ணீர் கிடைக்க வசதி ஏற்படும்.

திரு. ம. ஆபிரகாம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக நீர் வழங்கும் பணி சரிவர நிறைவேற்றப்பட்டு நகராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை. இருந்தாலும் நகராட்சி மக்களிடம் உங்களுக்கு வீட்டுக்கு வீடு குழாய் கொடுக்கிறோம் என்று சொல்லி அதற்கான பணமும் வசூல் செய்திருக்கிறார்கள். எனவே அரசு இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, வீடுகளுக்கு குழாய் கனக்ஷன் மூலம் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, சில முறைகேடுகள் நடைபெற்றதாக தகவல் வந்து, நகராட்சி ஆணையர் கூட தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார். முறைகேடாக நியமிக்கப்பட்ட பிளம்பர்கள், ஆலந்தூரில் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு கொடுப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக வசூல் செய்த கட்டணத்தை நகராட்சி கருவூலத்தில் திருப்பிச் செலுத்துமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்சொன்ன அந்த ஆணைக்கு எதிராக சில பிளம்பர்கள் உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை தாக்கல் செய்தனர். இந்த வழக்கில் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புரையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் பல்லவபுரம் குடிநீர்த் திட்டத்தில் தாம்பரம் தொகுதியில் உள்ள பொழிச்சலூர் கிராமத்தை இந்த ஆண்டில் சேர்ப்பதாக உத்தேசம் இருக்கின்றதா ? அதனுடைய மதிப்பீடு என்ன? இந்த ஆண்டிலேயே அந்த மக்களினுடைய குறைகள் தீருகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 25

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, 1972—லே 173.32 இலட்சம் செலவில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. 1978-ல் திருத்திய மதிப்பீடு 216.66 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற வகையில் தனியான மதிப்பீடுகள் பற்றிய விவரங்கள் இல்லை. அவர் குறிப்பிடுகின்ற அந்த கிராமத்தையும் சேர்த்துக்கொள்வதற்கு அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 366, 367, 368, 369, 370 ஆகியவை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

## திருப்பூரில் பனியன் தொழிலுக்கான நூல் தயாரிப்பு

371—(*வினா எண் 344) திரு. கு. சுப்பராயன் மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பனியன் தொழிலிற்குகந்த ஹோசைரி நூல் தயாரிக்க கூட்டுறவு நூற்பாலை தொடங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

(இ) எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகருக்கு ஜீவநாடியாக விளங்குவது பனியன் தொழிற்சாலைகள்தான். அந்தத் தொழிற்சாலைகளுக்கு நூல் வழங்குவதற்குரிய கூட்டுறவு நூற்பாலை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அந்தத் தொழிலாளர்கள் கோரி வருகிறார்கள். அந்தக் கோரிக்கையை இனியாவது அரசு பரிசீலித்து நிலைமையின் தன்மையை உணர்ந்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 25]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 36 பனியன் நூல் தயாரிக்கும் நூற்பாலைகள் இருக்கின்றன. அவற்றில் நான்கு திருப்பூரில் இருக்கின்றன. அங்கே எவ்வளவு தேவையோ அது பூர்த்தி செய்யப்படுகின்றது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பனியன்களுக்குத் தேவையான நூல்கள் தயாரிக்கின்ற மில்கள் விலைகளை அதிகமாக ஏற்றுகின்ற காரணத்தால் அப்படி மார்க்கெட்டில் ஏற்படுகின்ற விலை ஏற்ற இறக்கத்தின் காரணத்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த வேலை இழப்பைத் தவிர்க்கின்ற முறையிலே தொழில் நெருக்கடி ஏற்படாமல் தவிர்க்கின்ற முறையில் உடனடியாக திருப்பூரிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை வைக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து அதுபற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் தயாரிக்கும் துணிகளுக்காகத் துவக்கப்பட்டன. கூட்டுறவுத் துறையில் பனியன் தொழிற்சாலை ஏற்படுத்துவது என்பது இதுவரையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த பனியன் தயாரிக்கும் நூல் அதிக விலையில் இருக்கின்றது என்று சொல்வார்களேயானால் அரசின் வசத்தில் 17 ஆலைகள் இருக்கின்றன, அவற்றிலே பனியன் தயாரிக்கும் நூலைத் தயாரித்து வினியோகிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் சொன்ன எண்ணிக்கையை விட எத்தனையோ மடங்கு அதிகமாக இருக்கின்றது. அவை மிகச் சிறிய தொழிற்சாலைகளாக அதாவது 3 பேர் இருந்து பணியாற்றக் கூடிய தொழிற்சாலைகள் என்ற நிலையில் கிட்டத்தட்ட 2000 தொழிற்சாலைகளுக்கு மேலாக இருக்கின்றன. எனவே கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கொடுக்க எப்படி இந்த அரசு கூட்டுறவுப் பஞ்சாலைகளை உண்டாக்கி இருக்கின்றதோ அதேபோல் இந்த மிகச் சிறிய பனியன் தயாரிக்கின்ற தொழிலைச் செய்கின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கும் அவர்களைக் கொண்டே கூட்டுறவு நூற்பாலைகளை ஆரம்பித்து பனியன் தயாரிப்பதற்கு எப்படிப்பட்ட தரமான நூல் தேவையோ அதைத் தயாரித்துக் கொடுக்க ஒரு புதிய முயற்சியை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 25

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டித் தொகுதியில் கூட்டுறவு முறையில் பனியன் தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவக்க இந்த அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் கூட அதற்குத் தேவையான பனியன் நூல்களைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். எனவே தேவையை உத்தேசித்து நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தயாரிக்கப்படுகின்ற பனியன்களுக்கும், மேற்கு வங்கத்தில் தயாரிக்கப்படுகின்ற பனியன்களுக்கும் வியாபாரப்போட்டி இருக்கின்றது. மேற்கு வங்கத்தில் தயாரிக்கப்படுகின்ற பனியன்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை. அதேபோன்று திருப்பூரில் தயாரிக்கப்படுகின்ற பனியன்களுக்கும் சேல்ஸ் டாக்ஸிலிருந்து விலக்கு அளிக்க நம்முடைய துறை முன்வருமா, அதற்குரிய வகையில் பரிந்துரை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியான வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பாப்பாரப்பட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

372—(*வினா எண் 1510)— திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் 50-க்கு மேற்பட்ட அருந்ததியர்களுக்கு கைத்தறி நெசவு பயிற்சி அளித்தும் இன்னும் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாப்பாரப்பட்டி தொகுதியில் அருந்ததியர்களுக்கு ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.



[1985 ஜூன் 25]

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய உரையின் போது கூட தமிழ்நாட்டிலே 10 கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கு அரசு அனுமதி தந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே என்னுடைய தொகுதியான பாப்பாரப்பட்டி தொகுதியும் ஒன்று. அங்கே அருந்ததியர்கள் 50-க்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கைத்தறி நெசவுப் பயிற்சி அளித்து, அந்தக் கூட்டுறவு சொசைட்டியை ஆரம்பிப்பதற்கு நமது அரசு எவ்வளவு தொகையை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் .

(முற்பகல் 10-10.)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுவரையில் 17 தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டு, பல்வேறு மாவட்டங்களில் நடைபெற, 82.38 லட்சம் ரூபாயை அரசு மானியமாக வழங்கியிருக்கிறது. அதனால் பயன் பெறும் ஆதித்திராவிடர்கள் 2257. பாப்பாரப்பட்டியில் துவக்க இருக்கிற தொழில் இயல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினால் அங்குள்ள அருந்ததியர்கள் பயன்பெறுவதற்காக 6·30 லட்சம் ரூபாயை செலவு செய்ய அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்ததியர்களுக்கு என்று அந்த கைத்தறி நெசவுப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இந்த தொழில் இயல் சங்கம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதில் அருந்ததியர்களுக்கு மட்டும் அல்லாமல் அங்கேயுள்ள ஆதித்திராவிடர்களையும் அதிலே சேர்த்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் அனுமதி அளிக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதித்திராவிடர்கள் என்ற பெயரின்கீழ்தான் அருந்ததியர்களும் வரும். நிச்சயமாக ஆதித்திராவிடர்கள் அதிலே அனுமதிக்கப்படுவார்கள்.

## பட்டு நூல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

373—(*வினா எண். 737) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பட்டு நூல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) எத்தனை சங்கங்கள் இயங்கி வருகின்றன ?

(இ) புதியதாக சங்கம் துவங்க அனுமதி கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : கும்பகோணத்தில் தஞ்சை மாவட்ட மல்பெரி சாகுபடியாளர் மற்றும் பட்டு நூற்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் ஒன்றும், மற்றும் சென்னியாவிடுதி பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்போர் தொழிற் கூட்டுறவு சங்கம் ஒன்றும் ஆகிய இரண்டு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(இ) புதியதாக சங்கம் துவங்க அனுமதி கேட்டு விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இல்லாத காரணத்தால், அங்கே பல தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், பலவிதமான தவறுகள் ஏற்படுகின்றன. ஆதலால் உடனடியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அந்தச் சங்கங்களிலே இடம் பெறச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற துணிகளை அரசு தள்ளுபடி விலையிலே விற்கிறபோது, அதற்கு மத்திய அரசு எவ்வளவு தொகை மானியம் அளிக்கிறது, மாநில அரசு எவ்வளவு மானியம் அளிக்கிறது என கேட்க விரும்புவதோடு, தஞ்சை மாவட்டத்தில் திருவோணத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பட்டு சொசைட்டியில் பல ஆண்டுகளாக, தள்ளுபடி செய்த மானியத் தொகை இன்னமும் வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கேள்வியில் இருப்பது பட்டு சாகுபடியாளர்கள் மற்றும் பட்டு நூற்போர் சம்பந்தப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கம், இதற்கு அரசாங்கம் எந்தவிதமான தள்ளுபடியும் தருவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் சென்னியாவிடுதியின் பட்டு நெசவாளர் சங்கத்திற்கு அந்தப் பகுதியில் எத்தனை ஏக்கர் நிலத்தில் பட்டு சாகுபடி செய்யப்படுகிறது. அந்த சங்கத்தினுடைய உற்பத்தி எவ்வளவு ? அது வெளி ஊர்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா? அங்கே பட்டு உற்பத்தி இப்போது குறைந்து விட்டது என்று சொல்கிறார்கள் ஆகவே அது மேலும் விரிவு படுத்தப் படுமா என்கிற தகவல்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, தஞ்சையில் மட்டும் ஏறக்குறைய 235 ஏக்கரில் முசுக்கொட்டை செடி சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு ஏறக்குறைய 9 ஆயிரம் கிலோ கிராம் பட்டு உற்பத்தி செய்யப்பட்டு இணையத்திற்குத் தரப்பட்டிருக்கிறது.

## தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய்

269—(*வினா எண். 647) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு எத்தனை டன் கெரசின் மத்திய அரசு ஒதுக்கியது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு 1985 ஜனவரி மாதத்திற்கு 41,850 டன்களும், பிப்ரவரி மாதத்திற்கு 40850 டன்களும், கோடைக் கால மாதங்களான மார்ச் முதல் ஜூன் வரையில் மாதம் ஒன்றுக்கு 37,070 டன்களும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. மழைக்கால மாதங்களான ஜூலை முதல் அக்டோபர் மாதங்களுக்கும், பனிக் காலமான நவம்பர் முதல் பிப்ரவரி 1986 வரை இனிதான் ஒதுக்கீடு செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் மண்ணெண்ணெய் அளவை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா ? சென்னையில் தாராளமாக கிடைக்கிற மண்

ணெண்ணெய் கிராமப் புறங்களில் சரியாக கிடைப்பதில்லை ஆகவே கிராமப் புறங்களில் கொடுக்கிற மண்ணெண்ணெய் அளவை அதிகரித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுமார் ஒரு கோடியே 18 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டியிருக்கிறது. நமக்கு மாதம் சுமார் 66 ஆயிரம் கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல சராசரியாக கடந்த மாதங்களில் சுமார் 37 ஆயிரம் டன்கள் அளவிற்குத் தான் நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே சுமார் 66 ஆயிரம் கிலோ லிட்டர் நமக்கு தேவையென்பதை மத்திய அரசுக்கு சுட்டிக் காட்டி, அதிக அளவு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி அளவு அதிகரிக்கப்படுகிறபோது வழங்கப்படுகிற அளவையும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயை விளக்கு எரிக்க பயன் படுத்தாமல், லாரி, ஜெனரேட்டர், பம்ப் செட்டுகள் முதலியவற்றை இயக்குவதற்கு மண்ணெண்ணெயையும் கலக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஸ்டவ்வை எரிப்பதற்கும் மண்ணெண்ணெயை பயன்படுத்துகிறார்கள். இந்த நிலையில் விளக்கு எரிப்பதற்கு மட்டும் பயன்படுகிற அளவில் செய்து, மற்ற உபயோகங்களுக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துவதற்கு தடை விதிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளுக்கு உரிய அளவு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். அதை எப்படி உபயோகிக்கிறார்கள் என்பதை குறைந்த அளவிற்கு வழங்கப்படுவதால் கண்காணிப்பதில்லை. அதனை உபயோகிப்பது வாங்கிச் செல்கிற குடும்பத்தினரைப் பொறுத்ததாகும்.

### நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்கள்

*270—(*வினா எண் 1639)* திரு. இரா. தாமரைக்கனி : திருமதி பா. வளர்மதி, மற்றும் சா. துரைசாமி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரேஷன் கடைகளில் அளவு குறையாமல் உணவுப் பொருள்களை வழங்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, தமிழ்நாடு எடையளவுச் சட்டம் 1958-ன்படி எடையளவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியாய விலைக் கடைகளை தனித்தனியாகவும் கூட்டாகவும் ஆய்வு செய்து குறைகள் காணப்பட்டால் நியாய விலைக் கடைப் பணியாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இது தவிர உணவுப் பொருள் வழங்கும் அலுவலர்கள் அவ்வப்பொழுது நியாய விலைக் கடைகளில் எடைகளைக் கண்காணித்து வருகின்றனர்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, எடை அளவைக் குறிப்பிட்டு உணவுப் பொருள்களை பாலித்தீன் பைகளில் அடைத்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா? ரேஷன் கடைகளில் இருப்புப் பட்டியல் போர்டு பொது மக்கள் பார்வைக்கு கட்டாயம் வைக்க அரசு உத்தரவிடுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஏற்கனவே பருப்பு வகைகள் போன்றவை பாலித்தீன் பைகளில் அடைத்துததான் விநியோகம் செய்யப்படுகின்றன. அரிசி போன்ற மற்ற அத்தியாவசியப் பண்டங்கள், உதிரியாகக் கொடுக்கப்பட வேண்டியவை மட்டும் அளந்து கொடுக்கப்படுகின்றன. விலைப் பட்டியல், இருப்புப் பட்டியல் ஒவ்வொரு கடையிலும் வைக்க வேண்டுமென்று ஏற்கனவே அரசு அறிவுரை வழங்கி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டபடி, இந்த மன்றத்தின் வாயிலாகவும், மீண்டும் இது போல் ஏற்கனவே அறிவுரை வழங்கியிருப்பதையொட்டி, எல்லாக்கடைகளிலும், விலைப்பட்டியல், இருப்புப்பட்டியலை வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-20)

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள், ஏழை எளியவர்களுக்காக கொண்டு வந்து இருக்கின்ற மிக உன்னதமான திட்டம் இந்த ரேசன் கடைகள் மற்றும் டி. யு. சி. எஸ். அங்காடிகளாகும். அந்த அங்காடிகளின் திட்டங்களைச் சிதைக்கின்ற வகையில் அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்கள் எதைக் கொடுத்தாலும் அளவைக் குறைத்துக் கொடுக்கின்ற காரணத்தால், அங்கே மிகப் பெரிய மோசடிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொன்னதைப்போல் அந்தப் பொருட்களை எல்லாம் பாலித்தீன் பைகளில் அது அரிசியாகட்டும், சர்க்கரையாகட்டும், அல்லது பாமாயில் ஆகட்டும் அடைத்துக் கொடுத்தால் நல்லது. அப்படிச் செய்கிற போது அந்தப் பொருட்களும் மக்களுக்கு ஒழுங்காக நேரடியாகப் போய்ச் சேரும். அதனால் ஏற்படுகின்ற அதிகமான செலவைக்கூட மக்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இப்படிச் செய்

வதால் அந்த ஊழியர்களை நாம் கட்டுப்படுத்த முடியும். அவர்கள் இப்போது பல தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே புரட்சித் தலைவர் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வந்த இந்தத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட அரசு இந்த முறையை மேற்கொள்ளுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குவதிலே ஏற்படுகிற சுமையை பொதுமக்கள் பகிர்ந்து கொள்வதில்லை. புரட்சித்தலைவர் தான், மாநில அரசு தான் பகிர்ந்து கொள்கிறது. அத்தியாவசியப் பண்டங்களை, அது அரிசியாக இருந்தாலும், மற்றப் பொருட்களாக இருந்தாலும் குறைந்த விலையில் கொடுப்பதாலே ஆண்டுக்கு சுமார் 100 கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏறபடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இதுபோன்ற எடைக்குறைவுகள் ஏற்படுவதை யொட்டி, சென்ற ஆண்டு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 617 நியாயவிலைக் கடைகளில் நடவடிக்கை எடுத்து பலபணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் கேட்டதற்கு பதில் சொன்னேன். பல அத்தியாவசியப் பண்டங்கள் ஏற்கனவே பாலித்தீன் பைகளில் அடைத்துத்தான் கொடுக்கப்படுகின்றன, ஆனால் எல்லாப் பொருள்களையும் வழங்குவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பொதுமக்களும் பல்வேறு அளவுகளிலே பொருட்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 1 கிலோ, அரை கிலோ, கால் கிலோ என்று லூசிலே கேட்கும் போது பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. எனவே இப்படிப் பல அளவுகளிலே பொருட்களை விற்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று, பல்வேறு பொருட்களை இப்போது பாலித்தீன்பைகளில் விற்பனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே எவற்றையெல்லாம் அப்படிச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். உதிரியாக விற்கவேண்டிய பொருட்களை உதிரியாகத்தான் விற்க முடியும். அப்படி விற்கிற போது, எடை குறையாமல் இருப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. சா. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் நிச்சயமாக பலன் தரும். உதிரியாகக் கொடுக்கின்ற பொருட்கள் சரியான முறையில் விநியோகிக்கப்படுகிறதா, அல்லது பொதுமக்கள் கேட்கின்ற பொருட்கள் எல்லாம் வழங்கப்படுகிறதா, அல்லது இந்த ரேஷன் கடைகளிலே டி. யு. சி. எஸ். அங்காடிகளிலே வேறு யாராவது பொருட்களைப் பெற்றுக் கொண்டு செல்கிறார்களா, என்பதை எல்லாம் கண்காணிக்க, அந்த ரேசன் கடையில் ஒரு புகார் புத்தகத்தை வைத்தால் மக்கள் அங்கே சென்று பொருட்களை



வாங்கும் போது, இன்ன பொருட்களைக் கேட்டோம், கொடுத்தார்கள், இன்ன பொருட்கள் கிடைக்கவில்லை, ' என்பதைப் போன்ற விவரங்களை எழுதி அதிலே போட்டால், அதை வைத்துக் கொண்டு அதன் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் எனவே இது முக்கியமான மக்கள் பிரச்சினை என்பதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு கடையிலும் உணவுத் துறை வாயிலாக புகார் புத்தகம் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு? தலைவர் அவர்களே ஏற்கனவே புகார் புத்தகங்களை வைத்திருக்கிறோம். அதிலே பொதுமக்கள் எழுதிவிட்டுச் சென்றால், பின்னால், அந்த வாடிக்கையாளர்கள் வரும்போது அவர்களிடத்திலே வேறுவிதமான முறையிலே நடந்துகொள்ளும் நிலை வரும் என்பதைக் கருதி அதைகூட இல்லாமல் செய்வதற்காக, இப்போது புகார்ப் பெட்டிகள் வைக்கப்பட்டு, யார் அதிலே எழுதி வைக்கிறார்கள் என்பதை அங்கே இருக்கிற பணியாளர்கள், அதிகாரிகள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்காகவும், அங்கே உள்ள பெட்டியிலே அவர்கள் போட்டுவிட்டுப் போக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வாரத்திற்கு ஒரு முறை அதிகாரிகள் வந்து அதைத் திறந்து எடுத்து, அதன் மீது நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். இதையும் தவிர, அந்தப் பகுதிகளிலே நுகர்வோர்களின் பாதுகாப்பிற்காக, நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் என்பதைப் போன்று அமைக்க அரசு ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேசன் கடைகளில் எடை அளவு குறைவாக வழங்கப்பட்டதன் காரணமாக ஓரிரு ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டு போடப்பட்ட வழக்குகள் எத்தனை? இந்த எடைக் குறைவைத் தடுப்பதற்காக மகளிர் நுகர்வோர் அமைப்பு ஒன்றை அரசு ஏற்படுத்தி, அவர்கள் ரேசன் கடையில் சென்று பரிசோதிக்க அரசு அனுமதி அளிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, 1982 ஆம் ஆண்டிலே சுமார் 617 நியாயவிலைக் கடைகளில் இதுபோன்ற எடைக்குறைவு தரக் குறைவு காரணமாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஏற்கனவே மகளிர் சங்கங்கள் அவர்களே தனியாக சங்கங்கள் அமைத்துக் கொண்டு அந்த அந்தப்பகுதிகளில் விழிப்புணர்ச்சிக் குழு என்ற வகையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சகோதரி என்ற காரணத்தினால் அவர்கள் இதுபோல் அந்த அந்தப் பகுதியில் குழுக்கள் அமைப்பதற்கு உதவியாக இருக்கலாம். அரசு அமைக்கிற விழிப்புணர்ச்சி குழுவிலும் அந்தப் அந்த பகுதியில் இருக்கிற தாய்மார்களையும் அதில் உறுப்பினர்களாகப் போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 999 வரை மாத வருமானம் இருப்பவர்களுக்கு ரேசன் கடைகளில் 20 கிலோ அரிசியுடன் ஒரு கிலோ அரிசி இனாமாக வழங்கப்படுகிறது. சில இடங்களில் சரியாக வழங்க வில்லை என்பதை அரசு அறியுமா? ஒரு கிலோ அரிசி இனாமாகப் போட தனி ரேஷன் அட்டை பெறவேண்டும் என்ற இந்த நடைமுறை எளிதாக்கப்படுமா? அடிக்கடி ரேஷன் கடைகளில் தவறு நடப்பதைக் கண்காணிக்க தனிப் படை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ரேஷன் கடைகளை கண்காணிப்பதற்கு காவல துறையினால், தனிப்படை இயங்கிக் கொண்டு இருக்கிறது. அதுபோல் புட் செல் அதிகாரிகள் போலீசில் இருப்பவர்கள்- சிவில் சப்ளைசில் தனியாக இதற்கு என்று ஒரு தாசில்தாரின் கீழ் விஜிலன்ஸ் கமிட்டி இருக்கிறது. அங்கே போய் அவர்கள் எல்லாம் செக் செய்கிறார்கள். நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இது தவிர அந்த அந்தப் பகுதிகளில் நான் ஏற்கனவே சொன்னது போல் அந்தத் துறையினுடைய அதிகாரிகளும் உரிய முறையில் ஆங்காங்கு சென்று நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேசன் கடைகளை கண்காணிக்க ஏற்கனவே அந்த வட்டாரத்தில் இருப்பவர்களை வைத்து ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ரேசன் கடைகளில் வழங்கப்படும் எண்ணை போன்ற பொருட்கள், பருப்பு போன்ற பொருட்களை அந்தந்த கடைகளில் அந்த ஊழியர்கள் எடைபோடும்பொழுது அதை அந்தக் குழுவுக்கு முன்னால் எடை போட்டு வழங்குவதற்கு அரசு முன்னுரிமை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்கிச் செல்கின்ற எல்லாப் பொருட்களையும் ஊழியர்கள் அந்த குழுவின் முன்னிலையில் தான் எடை போட்டு வியாபாரம் செய்ய வேண்டும் என்று சொன்னால் பிராக்டிக்கலாக நடைமுறையில் பல சிக்கல்கள் ஏறபடும். அதைச் செய்ய முடியாது எல்லோரும் இருந்து செய்ய முடியாது. ஆனால் அப்போதைக்கப்போது அவர்கள் சென்று அங்கே கண்காணிக்கிறார்கள். குறைபாடுகள் ஏறபடுகிறபோது அதை நிவர்த்தி செய்யவும் வழிமுறைகள் இருக்கின்றன.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளை மக்களுடைய நலன் கருதி சுமார் 500 ஜனத்தொகை இருக்கக்கூடிய கிராமங்களுக்கு ஒரு கடை வீதம் வைக்க அரசு முன்வருமா என அறிய ஆசைப்படுகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-ல் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்ற வகையில் அமல் செய்யப்படும்என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையில் தமிழகம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டு ஏற்கனவே இருந்த கடைகளின் அளவை விட 2500 கடைகள் அதிகம் ஆக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே ஆங்காங்கு பகுதி நேரப் பணியாளர்கள் போடுவது, அதற்குரிய சம்பளம், கடை வாடகை, இப்படி குறைந்த விலையில் மலிவு விலையில் அத்தியாவசிய பண்டங்கள் வழங்குகின்ற அந்த அடிப்படையில் 100 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆயிரம் குடும்ப அட்டைகள் என்ற வீதத்தில் இப்போது கடைகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதைக் குறைப்பதற்கு உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 270ல் நியாய விலைக் கடைகள் என்று இங்கே கூறியிருக்கிறார்கள். ஆகவே, நியாயவிலைக் கடை என்று ஒன்று இருக்கிறது என்றால் அநியாய விலைக் கடை என்று ஒன்றும் இருக்க வேண்டும். ஆகவே, அநியாய விலைக் கடை என்ற அந்த வியாபாரிகள் இன்றைய தினம் அந்தக் கடைகளில் இருக்கின்ற, விற்கின்ற அந்தப் பொருட்களின்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். பொதுக் கூட்டத்தில் பேசுவது போல் பேச வேண்டாம், மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகள் கேட்கவேண்டும்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியை ஒட்டித்தான் கேட்கிறேன். இது மற்ற வியாபாரிகளின் மனதை புண்படுத்துகின்ற வார்த்தையாக இருக்கிறது. நியாயவிலைக் கடைகளில், அநியாய விலைக் கடைகளில் விற்கின்ற பொருட்களின் விலையை விட விலை அதிகமாக இருப்பது அரசு அறியுமா, அதைக்குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடை என்று அரசு பெயர் வைத்ததாலே வியாபாரிகள் புண்படவில்லை. அதற்கு மாறாக, மாண்புமிகு உறுப்பினர் நியாய விலைக் கடை இருக்கிற காரணத்தால், வெளியே அநியாய விலைக் கடை இருக்கிறது என்று சொன்ன காரணத்தாலே தான் வியாபாரிகள் புண்படுவார்கள். இதிலே ஒன்றும் பெரிய பிரச்சினை கிடையாது,

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் தற்போது கொடுக்கக் கூடிய பொருள், 100 கிலோ கிராம் கொண்ட ஒரு மூட்டை சீனி

கொடுத்தார்களேயானால், அது 97 கிலோ தான் இருக்கிறது. அதே போல் பாமாயில் 20 கிலோ என்றால் 19 கிலோ தான் இருக்கிறது. இப்படி மூட்டைகளில் எடைக் குறைவு ஏற்படுவதனால், அதை வைத்து அங்கே இருக்கக்கூடிய ஊழியர்கள் தவறு செய்வதற்கு காரணமாக அமைகிறது. நான் கேட்டுக் கொள்வது நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருள் வழங்குகிறபோதே, எடை குறையாமல், எடை போட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் இப்போது இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற் போல், நியாயமான சம்பளம் இல்லை என்று குறை சொல்கிறார்கள். இப்போது இருக்கிற சம்பளம் ரூ. 175-லிருந்து குறைந்த பட்சமாக தவறு செய்யாமல் பாதுகாக்க, 350 ரூபாயாக உயர்த்துவதற்கு அராசங்கம் பரிசீலிக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பண்டங்களை எடுத்துச் செல்கிறபோது, டிரான்ஸ்போர்ட் ஆகிறபோது அதிலே எவ்வளவு குறைத்துக் கொள்ளலாம் என்ற வகையில், ஒரு சதவீதம் குறைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, 100 கிலோ என்றால் 99 கிலோகிராம் தான் போய்ச் சேரும் என்று கணக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அப்படியே எடுத்துச் செல்லாமல், எடை போட்டுத்தான் எடுத்துச் செல்கிறார்கள். டிஸ்டிரிப்யூஷன் செய்கிறபோது எவ்வளவு எடுத்துச் சென்றார்களோ, அதற்குத் தான் கணக்குக் காட்ட வேண்டும். மூட்டையின் அளவுக்கு கணக்கு காட்ட வேண்டியதில்லை. எடுத்துச் செல்ல வேண்டியதற்குத் தான் விநியோகம் செய்கிறபோது கணக்குக் காட்ட வேண்டும். இதில் பணியாளர்களுக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை. சம்பள உயர்வு பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது தான், 50 ரூபாய் அதிகரித்து வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், அவர்கள் பகுதி நேரப் பணியாளர்கள். ஆகவே, ரூ. 350, 450 என்று வழங்க முடியாது. அவர்கள் கிராமப்புறங்களிலே பகுதி நேர வேலையாகத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். சம்பளம் ஏற்கனவே 50 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கூறியபோது, 1,000 குடும்ப அட்டைகள் இருக்கின்ற ஒவ்வொரு இடத்திலேயும் தான் கடை வைப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கிராமங்களிலே ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கடை என்ற விதம் வருகின்றது. அப்படி 1,000 குடும்ப அட்டைகள் என்று பார்க்கிற போது, ஏறத்தாழ 4, 5 கிலோமீட்டர் தூரம் ஏழை விவசாயிகள் மாலை நேரத்திலே போவதில் கஷ்டமாக இருக்கிற காரணத்தினாலே, 500 குடும்ப அட்டைகள் இருக்கிற இடங்களில் வாரத்திற்கு இரண்டு மூன்று முறையாவது பிரித்து அங்கே கடைகள் நடத்துவதற்கு அனுமதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், விடுபட்ட குடும்ப அட்டைகள் எப்போது கொடுப்பார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, 1,000 குடும்ப அட்டைக்கு ஒரு கடை என்ற விதத்திலே சுமார் 100 கோடி ரூபாய் அதனாலே நஷ்டம் ஏற்படுகிறது. இன்னும் அதை 500 ஆக ஆக்கினால், அதை விட இன்னொரு மடங்கு அதிகம் செலவாகும் சூழ்நிலை இருக்கிறது. அதனால் ஒரு கிராமம் ஏற்கனவே இருக்கிற நியாய விலைக் கடையிலிருந்து 4, 5 கிலோ மீட்டர் அதிகமான தூரத்தில் இருக்குமானால், அந்த கிராமம் பெரிய கிராமமாக இருக்குமானால், அங்கே பகுதி நேரத்தில் வாரத்திற்கு ஒரு நாள் இரண்டு நாள் என்று பகுதி நேர வியாபாரம் செய்யப்படுகிறது. ஆனால் 500 குடும்ப அட்டைக்கு ஒரு கடை என்று பிரிக்கிற உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை. இப்போது தான் சமீபத்தில் 2,500 கடைகள் அதிகமாக்கப்பட்டு இருக்கின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளிலே கொண்டு போய்க் கொடுக்கப்படுகின்ற அந்தப் பொருள்கள் எல்லாம் குறைவாக இருக்கிறது என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், ஒரு கிலோ, இரண்டு கிலோ குறைவாக இருக்கலாம். அதற்கு விதிவிலக்கு உண்டு என்று சொன்னார்கள். ஆனால் 10 கிலோ, 15 கிலோ எடை குறைவாக இருக்கின்ற அளவுக்கு சில நியாய விலைக் கடைகளுக்குக் கொடுக்கிறார்கள். அதனால் தான் நாங்கள் அதைக் குறைத்துக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்று நியாய விலைக் கடையிலே பணி செய்யக் கூடியவர்கள் சொல்கிறார்கள். அங்கே கொடுக்கின்ற பொருட்கள் எத்தனை கிலோ என்பதைக் குறிப்பிட்டு, அவர்களிடத்திலே கணக்கைப் பெற்றுக் கொண்டு, அவர்களுக்குக் கொடுக்கும்படி அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்லுகின்றபொழுதே சொன்னேன். நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற பொருட்களின் அளவு என்ன என்பதைப் பார்த்து எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே, 20 கிலோ, 30 கிலோ என்று அள்ளிக்கொண்டு அதை அனுப்புவதற்கான சூழ்நிலை நிச்சயமாக இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. எடுத்து

வருகின்றபொழுது உதிர்ந்து போய்விடுகின்றது. கொட்டிப் போய் விடுகின்றது என்பதற்காக 1 சதவீதம் குறைத்துக் கொள்கிறார்கள். மீதம் இருப்பது எவ்வளவு என்பதை எடை போட்டுத் தான் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டு வருவதை எப்படி விநியோகம் செய்கிறார்கள், கொண்டு வந்த அளவு என்ன, விநியோகிக்கின்ற அளவு என்ன என்ற அந்த அளவிற்கு அது சரிபார்க்கப்படுகிறது.

திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள் ; அதாவது, ரேஷன் கடைகளில் எடைக் குறைவு என்ற விவரத்தைப் பற்றி. மக்கள் எனக்குக் கொடுத்த புகார்களின் பேரில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், நான்கைந்து கடைகளுக்குச் சென்று நானே நேரில் பரிசீலனை செய்திருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட கடையில் ஒரு கிலோவிற்கு 200 கிராம் எடை குறைவாக இருந்ததைக் கண்டுபிடித்தேன். அடுத்து, இலவச அரிசி கொடுக்கப்படுகின்ற விஷயத்தைப் பொறுத்த வரையில் ஒரு கிலோ கூட உண்மையாகக் கொடுக்கப்படாமல் முழுக்க முழுக்கப் பொய்க் கணக்குகளை எழுதி, அரிசி கொடுக்கப்பட்டதாக ரிக்கார்டுகளைத் தயாரித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட எடைக் குறைவு, பொய்யான இலவச அரிசி சப்ளை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்தும் கடுமையான நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. எனவே, இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், தவறு செய்கின்ற அந்தப் பணியாளர்களை, கடுமையான நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, 1984 ஆம் ஆண்டிலே மட்டும் சுமார் 617 கடைகளிலே சோதனை செய்யப்பட்டு, அங்கே தவறு நடந்தவைகள் சம்பந்தமாக, பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டும், பலபேர் சஸ்பென்ட் செய்யப்பட்டும், பலபேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டும் இருக்கிறார்கள். ஆகவே, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும், போலீஸ் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவைகளுக்கு அவ்வாறு எடுக்கப்பட்டு, கிரிமினல் நடவடிக்கை பதிவு செய்யப்பட்டு, ரிமாண்ட் செய்யப்பட்டு, வழக்குகள் தொடரப்பட வேண்டியிருந்தால் வழக்குகளையும் தொடர்கிறார்கள். அதிக அளவில் தொகை இருந்தால் ரெக்கவரி புரொசீடிங்ஸ் எடுக்கப்பட்டு பணமும் திரும்பப் பெறப்படுகிறது. இப்படிப் பல வகைகளிலேயும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டுதான் வருகின்றன.



20 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி வழங்குவது சம்பந்தமாக, தாமரைக்கனி அவர்கள் கூடச் சொன்னார்கள். 20 கிலோ அரிசி வாங்கினால் 1 கிலோ அரிசி இனாமாகக் கொடுக்கப்படும் என்று ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அங்கே கொடுத்ததாகப் பொய்க் கணக்கு எழுதுவதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். பொது மக்கள்தான் விழிப்போடு இருந்து, 20 கிலோ அரிசியை வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாமாக அளிக்கப்படுவதாக அரசு அறிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் அதைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உண்டு. அப்படிப் பொதுமக்கள் விழிப்போடு இருந்து அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நான் மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின் பொழுதேகூட சொல்லியிருக்கிறேன். இந்த 20 கிலோ அரிசி என்பதைக் கூட ஒரே தவணையில் வாங்கிக் கொண்டால்தான் உண்டு என்பது கூட அல்ல, 4 கிலோ, 5 கிலோ என்று வாங்கினால்கூட மாதம் முழுவதும் அந்த உயர்ந்தபட்ச அளவான 20 கிலோவைப் பெற்றுக் கொண்டால் ஒரு கிலோ அரிசி இனாமாகத் தரப்படுகிறது. எனவே, 20 கிலோ அரிசி வாங்குகின்ற எல்லோரும் ஒரு கிலோ அரிசியை இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மூலக் கேள்வி இதைப் பற்றியதாக இல்லையென்றாலும் கூட நான் சொல்லுகிறேன். பல ஆயிரம் டன்கள் ஒரு கிலோ என்ற அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது. மானியக் கோரிக்கை விவாதத்தின் பொழுதுகூட சுட்டிக் காட்டினேன். எனவே, இப்பொழுதும் பொதுமக்கள் விழிப்புணர்ச்சியோடு இருந்து, 20 கிலோ அரிசியை வாங்கியிருந்தால் ஒரு கிலோ அரிசியை இனாமாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதை நானும் கூறி, பொது மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் பணியாற்றும் துணைச் செவிலியர்கள் உண்ணாவிரதம்

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் பணியாற்றிக்கொண்டிருக்கிற துணைச் செவிலியர்கள் ஏறக்குறைய 3,000 பேர்கள் சென்னை கோட்டை முன்னால் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

## 3. கவன ஈர்ப்புகள்

### (அ) ஒவ்வொருநாளும் 6 மணி நேரமே மின்சாரம் வழங்கப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மா. மணிமாறன், ஆ. நடராசன், மு. இராசாங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

*(முற்பகல் 10-40)*

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''மின்சாரம் விவசாயத்திற்கு ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் வழங்கப்படுவதால், விவசாய வேலைகளை மேற்கொள்ளுவதில் ஏற்பட்டுள்ள சிரமம் மற்றும் மின்சார அழுத்தம் குறைவு காரணமாக தஞ்சை மாவட்டத்தில் மோட்டார்கள் புகைவதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:







அறிக்கை.

தமிழ் நாட்டில் தற்பொழுது சுமார் 10.25 இலட்சம் மின்சார பம்பு செட்டுகள் உள்ளன. அவற்றின் மொத்த உச்சத் தேவை 1,200 மெகாவாட்டுகள் ஆகும். தமிழக மின் கட்டமைப்பின் தற்போதைய மின் உற்பத்தி செயல்திறன் உச்சத் தேவை நேரங்களில் 1,700 மெகாவாட்டுகளாகவும், மற்ற நேரங்களில் 1,500 மெகாவாட்டுகளாகவும் உள்ளது. தமிழ் நாட்டில் அனைத்து மின்சார பம்பு செட்டுகளும் ஒரே நேரத்தில் இயங்குமானால் மின் கட்டமைப்பின் மொத்த உச்சத் தேவை 3000 மெகாவாட்டுகளாக இருக்கும். எனவே விவசாய பம்பு செட்டுகளின் மின் உச்சத் தேவை 24 மணி நேரமும் ஒரே சீராக இருக்கும் பொருட்டு, கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பம்பு செட்டுகள் சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்கு மின்சாரம் வழங்குவது வழக்கத்தில் உள்ளது. இம்முறை கோடை மாதங்களில் மிகவும் அவசியமானதாகிறது. ஏனெனில் நீர்ப்பாசனத்தோடு தொடர்புள்ள நீர் மின் தேக்கங்களிலிருந்து மின் உற்பத்தி இல்லாமல் போய் விடுவதால் இம்மாதங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. 1-3-1985 முதல் விவசாயப் பம்பு செட்டுகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, இரு பிரிவுகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் பகலில் 6 மணி நேரமும், மூன்றாவது பிரிவிற்கு இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. இப்பிரிவுகள் ஒவ்வொரு ஞாயிறு அன்றும் முறைமாறும். இவ்வாறு பிரிவு முறையில் மின்சாரம் வழங்கியும் தமிழக மின் கட்டமைப்பு முழுத் தேவையை ஏற்க இயலாததால், 1-3-1985-லிருந்து மின்சாரத்தை அதிக அளவு பயன்படுத்தும் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு அவற்றின் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 50 சதவிகிதம் மின் வெட்டும், மற்ற உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு அவற்றின் உச்சத் தேவையிலும், மின் சக்தியிலும் 40 சதவிகிதம் மின் வெட்டும் நடை முறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

2. தென் மேற்குப் பருவமழை வரும் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தொடங்கிய பின்னர், நீர் மின் தேக்கங்களில் நீரின் இருப்பு அபிவிருத்தி அடைவதைப் பொறுத்து, விவசாயப் பம்பு செட்டுகளுக்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பற்றி பரிசீலிக்க இயலும்.

குறைந்த மின் அழுத்தத்தினால் மின்சார மோட்டார்கள் பாதிக்கப்படுவது பற்றி:—தஞ்சை மாவட்டத்தில குறைந்த மின்அழுத்தத்தால் விவசாய பம்பு செட்டுகளின் மோட்டார்கள் எரிந்தன என்பது போன்ற எவ்விதத் தகவலும் வரவில்லை. குறிப்பிட்ட பம்பு

செட்டுகள் ஏதேனும் பாதிக்கப்பட்டிருக்குமானால், அதனை மின்சார வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப் பற்றி ஆய்வு செய்து சீர்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை மேட்டூர் தண்ணீரை நம்பித்தான் தஞ்சை விவசாயிகள் எல்லாம் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களும், அரசும் நன்றாக அறிந்திருக்கும். அரசு தன்னிறைவுத் திட்டத் திலே தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில் விவசாயி கள் தண்ணீர் இல்லாமல் சிரமப்படுவதைப் போக்குவதற்கு மின்சார அமைச்சர் தவிர வேறு யாரும் உதவி செய்கிற மாதிரி ஒருவருக்கும் தெரியவில்லை. பொதுப் பணித் துறை அமைச்சர் தண்ணீர் இல்லையென்று நேற்றே சொல்லி விட்டார்கள். ஆகவே, மின்சார அமைச்சர் ஏதாவது மின்சாரம் கொடுத்தாலொழிய நாங்கள் எல்லாம் தஞ்சையிலே விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே விவசாயத் தொழிலாளர் கள் இருக்கிறார்கள். விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே, விவசாயம் இல்லாத காரணத்தாலே, இன்றைக்கு அவர்கள் எல்லாம் பஞ்சைகளாகிக் கொண்டிருக்கிறார்கள், அந்த மாவட்ட மும் பஞ்சப் பிரதேசமாக ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இங்கே அறிக்கையிலே, உற்பத்தியினுடைய உச்ச கட்டம், இன்றைக்கு 1,700 மெகாவாட் என்றும், சில நேரங்களில் 1,500 மெகாவாட் இருப்பதாகவும் நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். எனவே, விவசாயத்திற்கு முழுமையாக தேவை 3,000 மெகா வாட் என்று சொன்னால், அதிலே நீங்கள் பாதியாவது குறைத்து, 10 மணி நேரம் கொடுப்பீர்களானால், 1,500 மெகாவாட் ஆகும். எனவே, 1,500-ஐ மனதிலே கொண்டு, இந்த 1,700 மெகாவாட் உற்பத்தியை கவனத்திலே கொண்டு, நீங்கள் 10 மணி நேரமாவது மின்சாரத்தைக் கொடுத்தால்தான் ஏதாவது கொஞ்சமாவது, நாற்றையாவது நடுகின்ற நிலைமை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

இன்னொன்றையும் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கத்தைச் சுருக்கி, கேள்வியாகக் கேளுங்கள்.





திரு. மா. மணிமாறன் : இப்பொழுது கேரளாவில் நல்ல மழை பொழிந்து கொண்டிருக்கிற காரணத்தால், அங்கே லிங்கா நதி, சுபா போன்ற அணைகளில் எல்லாம் நீர் நிரம்பி யிருக்கிற காரணத்தால், புனல் மின்சாரம் அதிகமாக உற்பத்தி யாகி, இன்றைக்கு கர்நாடக மாநிலம் 20 கோடி யூனிட்டைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அதை மனதிலே கொண்டு தமிழ்நாடு அரசு கேரளாவில் இருக்கிற உபரி மின் சாரத்தைப் பெற்று, தஞ்சை போன்ற விவசாயிகளுடைய வேதனையைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு, அந்தப் பகுதியிலே இருக்கிற புகைந்துபோன மோட்டார்கள் பற்றி அரசுக்குச் சொல்லப்படவில்லையென்று சொல்கிறார்கள். இன்றைக்கும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அப்படிப் புகைந்து போன மோட்டார் களைச் சரி செய்வதோடு மட்டுமல்லாமல், சரி செய்கின்ற பொறுப்பை அரசு ஏற்கும் என்று சொன்னால், பட்டியலை நாளைக்கே தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அது போன்ற மோட்டார்களைச் சீர் செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையை விட பெரிய அறிக்கையாக மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி அமைந்திருக்கிறது. தஞ்சை மாவட் டத்தைப் பொறுத்த வரையில் கூடுதலாக மின்சாரம் தருவதற் கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரை வில் முடிவெடுத்து அறிவிக்கப்படும்.

கேரளாவிலிருந்து மின்சாரம் பெறுவதைப் பொறுத்த வரையில், கேரள அரசுக்கு, அவர்களுடைய தேவைக்குப் போக, மீதி மின்சாரத்தை நமக்குத் தர வேண்டுமென்று ஏற்கனவே ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. கூடுதல் மின்சாரம் இருக்கு மானால் அதை நாம் பெறுவதற்குத் தகுதியும், அருகதையும் உள்ளவர்களாக இருக்கிறோம். அதுபற்றி நிச்சயமாக நட வடிக்கை எடுப்போம். 3,000 மெகாவாட் மொத்தத் தேவை. அதிலே 1,700 உற்பத்தி என்கிறபோது, பாதிக்குப் பாதி, எல்லா பம்ப் செட்டுகளுக்கும் தருவது என்பது இயலாது. ஏனென்றால், தொழில் துறை, இன்னும் மற்ற துறைகளுக்கெல்லாம் நாம் மின்சாரம் வழங்க வேண்டியிருப்பதால், உடனடியாக நாம் இப்பொழுது எதுவும் மேற்கொள்ள முடியாது.

தஞ்சை மாவட்டத்தில் குறைவழுத்தத்தினால் மோட் டார்கள் புகைந்து போகின்றன என்ற விவரம் அரசுக்கு ஒன்றும் வரவில்லையென்றுதான் நான் தெரிவித்தேன். மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியிலே என்ற விவரத்தைத் தருவார்களானால், அந்தப் பகுதியில் குறைவழுத்தத்தைச் சீர் செய்வதற்கு மின் வாரியம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே விவசாயிகள் 70 சதமானம் உள்ளனர். அவர்களுக்கு இரவில் மின்சாரம் கொடுப்பதால் பல துயரங்களுக்கு ஆளாகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஒரு நாளைக்கு இரண்டு பிரிவுகளாகப் பிரித்து மினசாரம் வழங்கினால், இரவில் தொழிலாளர்கள் கிடைக்காத நிலைமையும், மின்சார மோட்டார்கள் பழுதடைகின்ற நிலைமையும் ஏற்படுகின்றது. கவே, விவசாயிகள் நிலம் எல்லாம் காய்வதைத் தடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மேலும் விவர அறிக்கையிலே தொழிற்சாலைகளுக்கு 1-3-1985 முதல் மின் வெட்டு 50 சதமானம், 40 சதமானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள், குறிப்பாக, கோவை மாவட்டத்திலே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், லே ஆ..ப்பிலே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால், சம்பள இழப்பு ஏராளமாக ஏற்படுகிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசாங்கம் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் வெட்டைத் தளர்த்தி, தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கவும், விவசாயிகளுக்கு 3 பிரிவுகளாகத் தரப்படுவதை 2 பிரிவுகளாகத் தருவதும் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு நியதி. ஆனால், பருவமழையைப் பொறுத்துத்தான் நாம் முடிவை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னும் இந்த மாதம், ஜூலை மாதம், இதிலே எல்லாம் எந்த அளவுக்கு மழை பெய்கிறது என்பதைப் பார்த்து தளர்த்துகின்ற முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. மு. இராசாங்கம் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்காகத்தான் பெரும்பாலோர் மின்சார இணைப்புகள் பெற்றிருக்கிறார்கள். அதுவும் சாகுபடி ஆரம்பக் காலத்தில்தான் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். கடந்த ஒருசில ஆண்டுகளாக ஜூன் மாதம் முதல் 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டது. இந்த மாதம் 4-ந் தேதி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 20 மணி நேரம் மின்சாரம் வழங்க உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்று இந்த அவையில் அறிவித்தார்





கள். தமிழக அரசு அதைப் பரிசீலித்து 20 மணி நேரம் மின்சாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு' கும்பகோணம், திருவிடைமருதூர் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்களில் மின் இணைப்பு கேட்டு, தேங்கிக் கிடக்கும் மனுக்களைப் பரிசீலனை செய்து, உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, விரைவில் அரசு ஆவன செய்யும்.

## (ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதி பனைமரங்களில் அரிபுழு பரவியுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள வாழைக்குளம் தோப்பு, வேப்பங்குளம் தோப்பு, கரிசல் குளம் கண்மாய்களிலுள்ள சுமார் 1000-க்கும் மேற்பட்ட பனை மரங்களில் 'அரிபுழு' மரம் முழுவதும் பரவியுள்ளதால் பனை ஏறும் தொழிலாளிகள் பனை ஏறி தொழில் செய்ய முடியாமல் சிரமப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, பனை மரங்கள், கருப்புக் கம்பளிப் புழுக்களால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்புழுக்களை ஒழிக்க உடன் துரித நடவடிக்கையாக, மருந்து தெளித்தும் நெருப்பிட்டும் ஒழிக்கப்பட்டு வருகிறது. பி.எச்.சி. 10 சதம், 'என்டோசல்பான்' மற்றும் 'குயினல்பாஸ்' மருந்துகள் தாக்கப்பட்ட பகுதிகளில் தெளிக்கப்பட்டவுடன் கம்பளிப் புழுக்கள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளை ஒழிக்கும் வழிமுறைகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பனை மரங்களில் அரிபுழு வருவதற்குக் காரணம் பக்கத்தில் கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயில் கருவேலமரங்கள் இருக்கின்றன. அந்தக் கருவேல மரங்களிலிருந்துதான் அரிபுழு பனை மரங்களுக்கு வந்திருக்கின்றன. எனவே, வனத்துறைக்கு அறிவுரை கூறி கண்மாய்களில் கருவேல மரங்களை நடுவதைத் தடை செய்ய வேண்டும் அல்லது வனத்துறையே அரிபுழுவை கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, கண்மாய்களில் இருக்கிற கருவேல மரங்கள் மண் அரிப்பைத் தடுக்க வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒன்றை

வாழ வைக்க ஒன்றை அழிப்பது சரியல்ல. பனை மரங்களில் இருக்கிற புழுக்களை ஒழிக்க முறையான நடவடிக்கைகளை வேறு வகையில் மேற்கொள்ளலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, பனை மரங்கள் முழுவதிலும் இந்த அரிபுழு பரவி இருக்கிறது. சம்பந்தப்பட்ட பனை ஏறும் தொழிலாளர்களுக்கு அதைக் கட்டுப்படுத்த மருந்து கொடுத்தாலும் பனை மரங்களில் அந்த மருந்தைத் தெளிப்பதற்கு அவர்கள் ஒன்றும் 'சூப்பர்மென்' அல்ல, பறந்துபோய் மருந்து தெளிக்க. ஏணி வைத்து ஏற முடியாது. ஆகையால் ஹெலிகாப்டர் மூலம் பனை மரங்களில் ஏறியிருக்கிற அரிபுழுக்களைத் தடுக்க மருந்து தெளிக்கப்படுமா? குறிப்பாக கருப்புக்கட்டி சொசைட்டி ஒன்று மம்சாபுரத்தில் இருக்கிறது. பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் அங்கிருந்து 1,500 ரூபாய் கடனும் 500 ரூபாய் மானியமும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தொழிலைச் செய்ய முடியாத நிலையில் பாதிக்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதர்த்துறை அமைச்சரிடம் கன்சல்ட் பண்ணி அவர்கள் பெற்றிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிப்பது சரியாகப் பயனளிக்காது என்று தெரிந்துள்ளது. எனவே பயிர்களுக்கு அந்த வகையில் மருந்து தெளிப்பது கூட பயன் தராது, உரிய முறையில் மருந்து சென்று சேராது என்ற வகையில் கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிக்கும் முயற்சி இல்லை. பனை மரத்தில் ஏறக்கூடிய தொழிலாளர்கள் சூப்பர்மென்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மருந்து தெளிக்க அவர்கள் பனை மரம் ஏற பெற்றிருக்கிற பயிற்சியே போதுமானது. அந்த பயிற்சியை வைத்தே மருந்து தெளிக்க முடியும். இந்தப் புழுவினால் தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரண நடவடிக்கையை அரசு முறையாகப் பரிசீலிக்கும்.

## 4. வரவு-செலவுத் திட்டம் 1985-86-வாக்கெடுப்பு

### (அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 13. நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,80,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."





THIRU T. R. VENKATARAMANAN: Mr. Deputy Speaker, Sir, to discuss about the need to construct a building complex for housing all the Courts in Tenkasi at Kudiyiruppu Village near Courtalam, a site selected by the Tenkasi Bar and approved by the High Court, I move—

"That the allotment of Rs. 12,80,74,000 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100".

(முற்பகல் 10-50)

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்தில் ஓர் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,80,74,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,96,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் தற்போதுள்ள கிளைச் சிறைச்சாலைக்குப் பதிலாக புதிய கிளைச் சிறைச்சாலை அமைக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,96,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டுச் சிறைகளிலுள்ள கைதிகளுக்கு வழங்கப்படுகிற உணவின் தரத்தை உயர்த்தி அளவை அதிகரிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 14— சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,96,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்திருக்கின்ற இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது நமது அரசினுடைய கொள்கை விளக்கப் புத்தகங்கள் ** அச்சடிக்கப்பட்டு அவைக்குத் தரப் பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கூறவேண்டிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறினால் அவற்றைக் கேட்டு அதற்குப் பிறகு என்னுடைய பதிலைத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நீதித்துறை, சிறைச்சாலைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக நீதித்துறையைப் பொறுத்தமட்டில் ஒரு பழமொழி உண்டு. ஒன்றல்ல, இரண்டு உண்டு. "Justice delayed is justice denied என்பார்கள். அதுபோல் "justice hurried is justice buried" என்று சொல்வார்கள். ஆகவே இந்த இரண்டிற்கும் இடைப் பட்ட நிலையிலே நீதி நிர்வாகம் செயல்படுவதுதான் நலமாக இருக்கும். அரசிற்கு வருமானம் தருகின்ற துறைகளில் ஒன்றாக நீதித் துறையினை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த அளவுக்கு அரசு இந்த நீதித் துறையின் மீது அக்கறை செலுத்துவதாக நான் கருதவில்லை என்றுதான் மிக வருத்தத்தோடு குறிப்பிடுகிறேன். தன்னுடைய தொழிலை இன்றும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு வழக்கறிஞன் என்ற முறையில் இந்தத் துறையில் பேசுவதற்கு ஓரளவுக்கு அருகதை எனக்கு உண்டு என்ற காரணத்தால் இதை நான் குறிப்பிடுகிறேன்.

** 209-279 மற்றும் 280-295 ம் பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



தற்போது உயர் நீதிமன்றத்தை எடுத்துக் கொண்டால் 25 நீதிபதிகள் இருக்க வேண்டிய இடத்தில், அரசாங்க அறிவிப்பின் படியே பார்த்தாலும் 18 நீதிபதிகள்தான் இருக்கிறார்கள். எனவே அந்த உரிய எண்ணிக்கையின்படி அதனைப் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். இதே நிலை தான் மாவட்ட நீதிமன்றங்களிலும் இருக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் துணை நீதிபதிகள் மட்டத்தில் நீதிபதிகள் நியமனம் இருக்கின்றது. ஆனால் பெரும்பாலான நீதி மன்றங்களில் அந்த அடிஷனல் முன்சீப் இன்னும் நியமிக்கப்படாத நிலையில், அல்லது மாறுதல் செய்யப்பட்ட இடம் பூர்த்தி செய்யப்படாத நிலைமை இருந்து வருகின்றது.

உதாரணமாக, என்னுடைய தொகுதியினை எடுத்துக் கொள்ளலாம். திருவண்ணாமலையில் அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் என்ற பெயரில் நீதிமன்றம் துவக்கப்பட்டு அங்கே அந்த நீதிபதி மாற்றலாகிச் சென்று ஏறத்தாழ 3 ஆண்டுக்காலம் கடந்து விட்டது. ஆனால் இது வரையில் அந்தக் காலியிடத்தைப் பூர்த்தி செய்யவில்லை, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அந்த அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்களை ரத்து செய்து விட்டால் கூட பரவாயில்லை. அதையும் செய்யாத நிலையில் மக்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். நடை முறையில் இருப்பதைச் சொல்கிறேன். முதன்மை நீதிபதிக்கு ஒற்றைப்படை வரிசை எண் உள்ள வழக்குகளை ஒதுக்குகின்ற முறையிலும், அடிஷனல் முன்சீப்புக்கு இரட்டைப் படை எண்களை ஒதுக்குகின்ற முறையிலும், சமீபத்தில் மாவட்ட நீதிபதி உத்தரவு ஒன்று வந்திருக்கின்றது. அதன்படி இரட்டைப் படை வரிசை எண்ணுள்ள வழக்குகளை இருதரப்பு வழக்கறிஞர்களும் ஒத்துக் கொண்டாலன்றி, பிரின்சிபல் முன்சீப்பால் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்ற நிலை அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

அதிலே என்ன வேடிக்கை என்றால், எந்த ஒரு வழக்கிலேயும் இரட்டைப் படை எண் வரிசை வழக்கு என்றால், அதுவும் பணம் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அதிலே எழும் நியாயமான குறை, காலத்தை நீடிப்பது தான். ஆகவே என்ன செய்கிறார்கள்? அத்தகைய வழக்குகளிலே எதிர்த் தரப்பு வழக்கறிஞர்கள் சம்மதம் கொடுப்பதே இல்லை. ஆகவே இரட்டைப் படை எண் கொடுக்கப் பெற்ற ஒரே காரணத்திற்காக, அந்த வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. பணம் கொடுத்தவர்கள் பாடும், ஆஜராக இருக்கிற வழக்கறிஞர்கள் பாடும் மிகவும் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலையை மாற்று

வதற்காவது தயவுசெய்து அரசு உடனடியாக கூடுதல் நீதிபதிகளை நியமிக்க வேண்டியது அவசியம் என்பதோடு மட்டும் அல்ல அவசரமும் கூட என்றுதான் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, நீதிபதிகள் விஷயத்தில் இல்லாவிட்டாலும் கூட அரசு வழக்கறிஞர்கள் விஷயத்திலே நான் உறுதியாக கூற முடியும், அரசியல் கண்ணோட்டத்துடன் தான் அந்த நியமனங்கள் செய்யப்படுகின்றன என்று, ஆனால் அது 1967க்குப் பிறகு ஆரம்பித்து விட்ட ஒரு வியாதி என்றுதான் நான் கூற முடியும். எந்தத் துறையிலே வேண்டுமானாலும் அரசியல் கண்ணோட்டத்தோடு நியமனங்கள் இருக்கலாம். ஆனால் நீதித் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றைப் பொறுத்த மட்டிலாவது ஓரளவிற்கு திறமை, தகுதி, அனுபவம் ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் ஏற்படுத்தப்படாவிட்டால், இந்த நாட்டு மக்களின் நிலை என்னவாகுமோ என்று தான் நான் அச்சப்படுகிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஊரையும் சொல்ல ஆசைப்படவில்லை, பெயரையும் சொல்ல ஆசைப்படவில்லை. ஒரு நண்பர், எனக்கு மிகவும் வேண்டியவர், தற்போது குற்றவியல் துறையில் அடிஷனல் பப்ளிக் பிராசிக்கியூட்டராக இருக்கிறவர். அவரைப் பார்த்து மற்ற நண்பர்கள் வேடிக்கையாகச் சொல்லுவார்கள். நீ சாதாரண வழக்கறிஞராக இருந்தபோது செய்ய வேண்டிய காரியத்தை அரசு வழக்கறிஞராக ஆன பிறகு ........(குறுக்கீடு).

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அரசாங்கத்திற்காக வாதாடுகிற அரசு வழக்கறிஞர், அரசியல் சார்புடையவர்களாக இருப்பதில் தவறு இல்லை என்று தான் நான் கருதுகிறேன். அப்படி அரசாங்கம் அரசியல் கண்ணோட்டத்தின் அடிப்படையில் தான் எல்லா நியமனங்களையும் செய்து வருவதாகவும் நான் அறியவில்லை. அத்தோடு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் அரசியல் சார்புடையவர்களாக அல்லது காங்கிரசுக்கு அனுதாபிகளாக இருப்பவர்கள் அரசு வழக்கறிஞராக நியமிக்கப்படவில்லையா என்பதையும் ஒரு நியாய உள்ளத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரா என்று கேட்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள் என்றுதான் நான் கூற முடியும். முழுக்க முழுக்க அரசியல் கண்ணோட்டத்தோடு நியமனங்கள் செய்ய வேண்டாம் என்றுதான் நான் சொன்னேன். எல்லாத் தரப்பிலும், எல்லாக் கட்சியிலும்





திறமை வாய்ந்த, தகுதி வாய்ந்த, அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். எனவே அரசியல் கண்ணோட்டம் ஒன்றை மட்டும் வைத்து நியமனம் செய்யப்படக் கூடாது. தகுதி, திறமை, அனுபவம் எல்லாவற்றையும் கூட வைத்து பார்த்துத்தான் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று சொன்னேனே தவிர, அரசியல் சார்புடையவர்கள் நியமனம் செய்யப்படக் கூடாது என்று நான் சொல்லவில்லை.

அந்த நண்பர் சாதாரண வழக்கறிஞராக இருந்தபோது' குற்றவாளிகளுக்காக வழக்காடும்போது, அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு பதிலாக உள்ளே தள்ளி வந்தார். இப்போது அந்த நண்பர் அரசு வழக்கறிஞராக ஆன பிறகு குற்றவாளிகளை உள்ளே தள்ளுவதற்கு பதிலாக, வெளியே கொண்டு வருகிற நிலையில் வழக்குகளை நடத்துகிறார் என்று குறிப்பிடுவார்கள். எனவே நான் குறிப்பிடுவது, அரசியல் சார்பு ஒன்றை மட்டும் பார்க்காமல், தகுதி, திறமை, அனுபவம் ஆகியவற்றையும் சேர்த்து பார்த்துத்தான் அரசு வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டுமே தவிர, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிக்கக் கூடாது என்று நான் கூறவே இல்லை. எத்தனையோ திறமை உள்ளவர்கள், எவ்வளவோ திறமை படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நியமனம் செய்யுங்கள் என்று தான் கூறிக் கொள்கிறேன். அப்படி எல்லாத் திறமையும் உள்ளவர்கள் உங்கள் கட்சியில் இல்லை என்றால், மற்றக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுங்கள், அதன் மூலம் அரசுடைய நிலைமையை வழக்குகளைப் பொறுத்தமட்டில் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று தான் நான் கூற ஆசைப்படுகிறேன்.

அதிலே இன்னொரு முக்கியமான விஷயம். அரசு வழக்கறிஞர்களுக்காக விண்ணப்பங்கள் கோரும்போது, அந்த விண்ணப்பத்திலே அவர் வருமான வரி கட்டுகிறவரா என்று ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. அந்தக் கேள்வி நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஏன் என்றால், அந்தத் துறையிலே வருமான வரி கட்டுபவராக இருந்தால் ஓரளவிற்கு அனுபவம் உள்ளவர்கள், நிறைய வழக்குகளை நடத்தியவர் என்ற முறையிலே அனுபவம் கிடைத்திருக்கும் என்றுதான் அந்தக் கேள்வி கேட்கப்படுகிறது.

என்னுடைய அருமை நண்பர் அவர்களுக்குக் கூறுகிறேன், தயவு செய்து சமீப காலத்திலே ஏற்பட்ட நியமனங்களின் விண்ணப்பங்களை எடுத்துப் பாருங்கள், அதில் எத்தனை பேர் வருமான வரி கட்டியிருக்கிறார்கள், எத்தனை பேர்கள் அரசு வழக்கறிஞராக ஆன பிறகாவது வருமான வரி கட்டுகிறார்களா என்பது தெரியும். அதையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நண்பர் சின்னராஜ் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே தயவு செய்து இத்தகைய நியமனங்களில் தகுதி, திறமைக்கு முதலிடம் அளிக்கும்படி இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

அடுத்தபடியாக வழக்கறிஞர்களுக்கு போதுமான தங்குமிடம் கூட இல்லாத நிலை தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எந்த நீதிமன்றத்திற்குச் சென்றாலும் ஒடிந்த நாற்காலிகள் அல்லது ஆணி நீட்டிக் கொண்டிருக்கிற ஆசனங்கள் என்ற அளவில் தான் இருந்து கொண்டிருக்கின்றன. வருகிறவர்கள் வழக்கறிஞரின் கவுன் கிழிந்திருப்பதைப் பார்த்து, பாவம், இந்த வழக்கறிஞருக்கு கவுன் வாங்குவதற்குக் கூட முடியவில்லை என்ற அளவிற்கு கருதுகிறார்கள். அது உண்மையல்ல. முறைப்படி ஆசனங்கள் வழங்கப்படவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

அடுத்து நீதிமன்றக் கட்டிடங்களைப் பற்றி எடுத்துக் கொண்டாலும், போதுமான அளவில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு இந்த அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்று என்னால் திட்டவட்டமாகக் கூற முடியும். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களின் அனுமதியோடு 1982–83-ஆம் ஆண்டு காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் அவர்களுடைய ரிப்போர்ட்டிலிருந்து ஒரு பகுதியை வாசிக்க ஆசைப்படுகிறேன். பக்கம்-31ல் Construction of buildings for Civil and Criminal Courts, Medical College Campus at Palayamkottai—Total grant 30.00 lakhs Rs. Surrender Rs. 7.40 lakhs. Similarly, Construction of Court Buildings for chief Judicial Magistrate, II Class Magistrate and Sub-Divisional Magistrate Offices at Erode, Total Grant Rs. 31.00 lakhs, Surrender Rs. 26.61 lakhs. என்று கூறப்பட்டுள்ளது. இதைப் போல ஏராளமாக இருக்கின்றன. ஆகவே ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கூட இந்த அரசு முறையாக செலவிட தவறிவிட்டு, அந்த நிதியை திரும்பச் செலுத்தியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் நீதிமன்றங்கள் வாடகைக் கட்டிடங்களில் அமர்த்தப்பட்டு, தனியார்களுக்கு பெருவாரியான தொகை வாடகையாக செலுத்தப்படுகிறது. இந்த நிலையைப் போக்க வேண்டும். திருவண்ணாமலையை எடுத்துக், கொண்டால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவண்ணாமலையில் சார்பு நீதிமன்றம் வருவதற்கு காரணமாக இருந்தவர் அமைச்சர் அவர்கள் தான். அவர்களுக்கு நன்றி கூறும் இந்த





நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1972-73-ஆம் ஆண்டில் திருவண்ணாமலையில் நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்காக எட்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால் பின்னால் அது ரத்து செய்யப்பட்டு இன்று வரையில் புதிய வளாகம் கட்டப்படவில்லை. திருவண்ணாமலையைப் பொறுத்த வரையில் இடம் தேடி அலைய வேண்டாம். தற்போது இருக்கிற நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே ஏராளமாக இடம் இருக்கிறது. பொதுப் பணித் துறை அதிகாரிகள் வந்து சுண்ணாம்புக் கல்லால் கோடு மட்டும் போட்டு விட்டுச் சென்றார்கள். மழையில் அந்தக் கோடு அழிந்ததே தவிர, கட்டிடம் கட்டப்படவில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல பார் அசோசியேஷனிலும் போதுமான வசதிகள் இல்லாமல் இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். அதிலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீதிபதிகள் நியமனத்தைக் குறித்து நான் இங்கே கண்டிப்பாக குறிப்பிட்டே தீர வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிபதிகளுக்கு தொலை பேசியும், டேப் ரெக்கார்டரும் கொடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அந்த அறிவிப்பு அறிவிப்போடு நின்று விட்டது. இதனைக் குறிப்பிடும்போது ஒரு ஆங்கில பழமொழி தான் என்னுடைய நினைவுக்கு வருகிறது. A good Politician is one who is going on making promises after promises. அந்த நிலை இந்த அரசிடம் ஏற்பட்டு விடக் கூடாது. கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீதிபதிகளுக்கு ஓரளவிற்காவது ஊதிய உயர்வை அளிக்க வேண்டும். ஒரு நீதிமன்றத்திலே கிளார்க்காக பணியாற்றுபவர்கள் சம்பாதிப்பதை விட நீதிபதிகளின் சம்பளம் குறைவாக இருந்து விடக் கூடாது. நீதியின் தரம் தாழ்ந்து விடாமல் இருக்க வேண்டுமென்றால், நீதிமன்றங்களில் லஞ்ச இலாவண்யங்கள் தலைக் காட்டாமல் இருக்க வேண்டுமென்றால், நீதிபதிகளுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டியது அவசியம். அடுத்தபடியாக குறிப்பிட வேண்டுமென்றால் வழக்குகள் பைசல் ஆகாமல் இருப்பதற்குக் காரணம் அனுபவம் இல்லாதவர்களை நியமிப்பதுதான்.

பல்வேறு துறைகளிலே, ஸ்டேடிஸ்டிகல் டிபார்ட்மெண்ட், மற்றும் ஃபிஷரிஸ் டிபார்ட்மெண்ட் போன்றவற்றில், பணியாற்றுபவர்கள், பி.ஏ.பி.எல். . . . . . . . . . . . .

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது சரியாக இல்லை என்று கருதுகிறேன். அதாவது நீதித்துறையில் முறையாக நிர்வாகம் நடைபெறவேண்டும் என்றால், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்வது, அதனுடைய இம்ப்ளைட் மீனிங் வேறுவிதமாக இருப்பதால், அது தேவையில்லை என்று கருதுகிறேன். நீதிபதிகள் முறையாக நியாயம் வழங்க வேண்டும் என்றால், அவர்களுக்கு இந்தந்த சலுகைகளைச் செய்யவேண்டும் என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றி பல முறை இந்த அவையிலே துறையிலேயிருந்து நியமிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : நான் பேசும்போது, நீதிபதிகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றால், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்றுதான் சொன்னேனே தவிர, நீதிபதிகள் தவறு செய்கிறார்கள் என்று நான் குறிப்பிடவில்லை. இருந்தாலும், சில தவறுகள் செய்தாலும், அதைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. அனுபவம் மிக்கவர்கள், அல்லது பல்வேறு துறைகளில் பணியாற்றுபவர்கள், அவர்கள் சட்டப் படிப்பு பயின்றவர்கள் என்ற காரணத்தால், நீதிபதிகளாக நியமிப்பது தவறு. இதை மாண்புமிகு ராமானுஜம் அவர்கள் தன்னுடைய ஜட்ஜ்மென்டிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதுபோல் அனாவசியமாக வழக்குகளை நடத்திக்கொண்டு போவதையும் நான் இந்த நேரத்திலே சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். விவசாயிகள் மீது 1977-லே போடப்பட்ட வழக்குகள் இன்னும் தேங்கிக் கிடக்கின்றன. 123 பேர்கள் மீது வழக்கு போடப்பட்டு இன்று வரை இருக்கிறது. இந்த அரசு ஏழைகளின் பாலும், விவசாயிகளின் பாலும் அன்பும். அக்கறையும் கொண்ட அரசு. எனவே இத்தகைய வழக்குகளை வாபஸ் பெறுவதன் மூலம் நிச்சயமாக பைசலுக்கு வழி செய்ய முடியும்.

அதைப்போல நீதிமன்றக் கட்டணங்கள் செலுத்தும் முறையில், நீதிமன்றங்களில் முத்திரைத் தாள்கள் கிடைக்கவில்லை. அதைக் கோர்ட்டிலே விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கும்.





அடுத்து, தமிழிலே தீர்ப்பு சொல்வதைப் பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பல நீதிமன்றங்களில் தட்டெழுத்து இயந்திரங்களும், தமிழ் சுருக்கெழுத்தாளர்களும் கிடைக்கவில்லை. அவற்றைப் பூர்த்தி செய்ய அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தமிழிலே உரிமையியல் நடைமுறைக்கு ஒரு புத்தகத்தை அரசு வெளியிட்டு இருக்கிறது, சி.பி.சி. என்று. அதிலே ஏராளமான முரண்பாடுகளும், குறைபாடுகளும் இருக்கின்றன. நான் ஒன்றை மட்டும் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இங்கே நம்முடைய நாவலர் அவர்கள் இருக்கிறார்கள், பேராசிரியர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்கிறேன். ஈணின் என்றால் பொருள் என்ன? அந்த விளக்கத்தைப் பார்த்தால், சட்டச் சொல் அகராதியிலே, ஆட்சிச் சொல் அகராதியிலே ஈணின் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த அகராதியைப் புரட்டிப் பார்த்தால், மகப்பேறு இல்லம் என்று ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற வழக்குச் சொல் ஈணின் என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. இத்தகைய குறைபாடுகளை நீக்கினால், தமிழிலே தீர்ப்பு வருவதை செயல்படுத்த முடியும்.

அதே நேரத்தில் ஒரு சொல்லுக்கு பலவிதமான சொற்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அரசு வெளியிட்ட சி.பி.சி-யிலே அஃபிடவிட் என்பதற்கு பிரமாணப்பத்திரம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் தீர்ப்பு திரட்டைப் பார்த்தால், அதிலே ஆணை மொழி ஆவணம் என்றும், ஆட்சிச் சொல் அகராதியில் ஆணை உறுதி ஆவணம், ஆணை உறுதி வாக்குமூலம் என்றும், ஒரே சொல்லுக்கு பல் வேறுவிதமான சொற்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்ற முறைகள் இருக்கின்றன. எனவே, இவைகளை எல்லாம் போக்கி, சரியான தமிழ்ச் சொல்லை நீங்கள் எல்லா இடத்திலேயும் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு 20 உறுப்பினர்கள் தங்களுடைய பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே உறுப்பினர்கள் எல்லோரும் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு). நீங்கள் 18 நிமிடங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். உங்கள் கட்சியில் 3 பேர்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

*திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தைப் பாதுகாத்து நிற்கின்ற மூன்று துறைகளான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றில் ஒன்றான நீதித்துறை பற்றிய மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 12,80,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்து, இந்த மன்றத்திலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11–10)

பன்னெடுங் காலமாக வழக்குகள் தேங்கி இருக்கின்ற நிலையினை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசு கடந்த ஆண்டுகளில் நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள்.

நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று 1970-ஆம் ஆண்டு தமிழக அரசால் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தன் பரிந்துரையை 1973-ஆம் ஆண்டு அரசுக்குக் கொடுத்தது. அரசுக்குக் கொடுக்கப்பட்ட அந்த அறிக்கை ஏறத்தாழ 5 ஆண்டு காலம் கிடப்பில் போடப்பட்டது. 1977-ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 1983 லிருந்து சிவில் நீதி மன்றங்கள் 28 மன்றங்கள் உருவாக்க வேண்டும் என்று அரசுக்கு அந்தக் குழு பரிந்துரைத்ததில் 27 மன்றங்களை தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது.

அதேபோல் குற்றவியல் நீதிமன்றங்களில் 27 நீதி மன்றங்கள் உருவாக்க வேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்ததில் 19 நீதி மன்றங்களை தமிழக அரசு புதியதாக உருவாக்கியிருக்கிறது. இப்படி ஏழை எளிய மக்கள் நல்ல நீதியை தாமதம் இன்றி பெறவேண்டும் என்ற முறையில் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்களே 'Justice delayed means justice denied' என்ற அந்தக் கொள்கை உயர்த்தப்பட வேண்டும். அந்தக் கொள்கை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக நீதிகள் விரைந்து வழங்கப்பட வேண்டும் என்பதற்காக இப்படி பல நடவடிக்கைகளை எடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், சட்டத்துறை அமைச்சர் அவர்கலளையும் நான் பாராட்டி என் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.





அதேபோல் தமிழகத்தில் நாம் எல்லாம் இன்றைய தினம் பேசி வருகின்றோம், காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றோம், பாரதி நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றோம், திரு. வி. க. நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றோம், தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றோம், ஆனால் இப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன இந்த நாட்டின் பெண் அடிமை தீர்ந்தால்தான் மண் அடிமை தீரும் என்று சொன்ன அந்த வகையில் நீதி மன்றத் துறையில் பெண்களுக்கு நாம் முதலிடம் கொடுக்கிறோமா என்றால். இல்லை என்ற பதில் தான் இருந்து வந்தது. அதைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு தமிழகத்தினுடைய வரலாற்றில் சென்னை உயர்நீதி மன்றத்தில் முதல் முறையாக ஒரு பெண்ணை பப்ளிக் புராசிக்யூட்டர் ஆக (குற்றவியல் துறையில் அரசு வழக்கறிஞராக) இன்றைய தினம் நியமித்து இருக்கிறார்கள். அதை நான் இந்த நேரத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்று பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு, மட்டும் அல்லாது, ஏறத்தாழ அரசு இன்றைய தினம் ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடுகின்ற அந்த பாட்டாளி ஆலை தொழிலாளிகள், விவசாய மக்கள் நலன் பெற வேண்டும், எளிய முறையில் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக 416 சட்ட ஆலோசனைக் குழுக்களை வட்டங்களிலும், மாவட்டங்களிலும் அமைத்து இருக்கிறார்கள். அந்த நல்லத் திட்டத்தை நான் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் நீதி மன்றங்கள் ஒரு தலையாய நோக்கத்தை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்பதை மக்கள் மன்றத்தினுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த மன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு, ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மக்கள் நலன் கருதி நல்ல திட்டங்கள் எல்லாம் கொண்டு வருகிறார்கள். அரிசன மக்களுக்கு வீடு கட்டிச் கொடுக்கின்ற திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நிலங்கள் கையகப் படுத்தப்படுகின்றன. வீட்டு வசதி வாரியம் நிலங்களை கையகப் படுத்துகின்றன. குடிசைகள் இருக்கக்கூடாது, அத்தனையும் கோபுரங்களாக, மாட மாளிகைகளாக. நல்ல வீடுகளாக மாற வேண்டும் என்பதற்காக குடிசை மாற்றுவாரியம் நிலங்களை கையகப்படுத்துகின்றன. இப்படி அரசு, நிலங்களை கையகப் படுத்துகின்றபோது பணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று தடை ஆணை வாங்குகிறார்கள்.

இப்படிப்பட்ட நேரங்களில் அரசு கொண்டு வருகின்ற நல்ல திட்டங்கள் செயல்படுத்த முடியாமல் போகின்றன. இதன் காரணமாக சாதாரண மக்களுக்காக கொடுக்கின்ற நன்மைகள் எளிதில் சென்று சேர்வது இல்லை. இதை மனதிலே கொண்டு நீதித்துறை செயல்பட வேண்டும் என்பதை என்னுடைய பணிவான வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் சொல்லவேண்டுமேயானால், வர இருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல்களைக் குறித்து, இப்போதே மக்கள் மன்றத்தில், மக்களிடத்தில் பரவலாகப் பேசப்படுகின்ற செய்தி— அரசாங்கம் என்ன திட்டத்தை அறிவித்தால் என்ன? என்ன சட்டத்தைக் கொண்டு வந்தால் என்ன? இந்த அரசு, மக்கள் வாட்டம் போக்கிட, நாட்டம் கொண்டு என்ன திட்டங்களைக் கொண்டு வந்தாலும், உயர்நீதிமன்றம் அதைத் தடை செய்து விடும். நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தேர்தலே வராது — என்று ஒரு சில நாட்டு நலன் கருதாத அந்த விரோதிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை எல்லாம் நீதித் துறை தன்னுடைய கருத்திலே, கவனத்திலே கொண்டு, செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னொரு கருத்தையும் இந்த இடத்தில் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். தென் பகுதியிலே, தென் பாண்டிச் சீமையிலே இருக்கும் தமிழக தென் பகுதி மக்கள் சென்னைக்கு வந்து, நீதிமன்றத்திலே நீதி கேட்டு வழக்காடுவதற்கு வசதி அற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், 1972-லே இருந்த அரசு மதுரையிலே ஒரு உயர்நீதிமன்றம் வேண்டும் என்ற அந்தக் கொள்கையைப் பரிசீலித்தது. பரிசீலித்ததோடு அவர்கள் விட்டுவிட்டார்கள். மேல் நடவடிக்கையை அவர்கள் எடுக்கவில்லை. ஆனால், 1978-ஆம் ஆண்டு தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பதவி ஏற்ற பின்னால் தான், மத்திய அரசுக்கு அது குறித்துக் கடிதங்கள் எழுதப்பட்டன. எழுதப்பட்ட கடிதங்களின் அடிப்படையில், 1981-லே ஜஸ்வந்த் சிங் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழு உத்திரப்பிரதேசத்திற்குச் சென்று பார்வையிட்டது.

அதே போல், அந்தக் குழு தமிழகத்திற்கும் வரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் கடிதங்கள் மூலம் கேட்டுக் கொண்டார்கள். அப்படி ஒரு கமிஷன் 1983-ஆம் ஆண்டு மத்திய அரசால் நியமிக்கப்பட்டு, 1984-ஆம் ஆண்டு தமிழகத்திற்கு வந்து, நவம்பர் திங்களிலே ஆய்வு நடத்திச் சென்று இருக்கிறார்கள்.



அந்த அடிப்படையில் மதுரையில் ஒரு பெஞ்ச் அமைக்கலாம் என்ற ஒரு முடிவு வரும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நல்ல முடிவையும், மத்திய அரசுடனும், தலைமை நீதிமன்றத்தினுடனும் தமிழக அரசு தொடர்பு கொண்டு தென் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நலம் பெறுகின்ற வகையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒரு பிரிவை மதுரையிலே இயங்குவதற்கு அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று இந்த இனிய நேரத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதே போல் இன்னொரு கருத்தையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரவீந்திரன் அவர்களும் கோடிட்டுக் காட்டினார்கள். சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும். தேவையான அளவுக்கு நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை என்ற கருத்தையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த இடத்தில் ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறிட ஆசைப்படுகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கணக்குகளின்படி, 1982-ஆம் ஆண்டு தீர்ப்புச் சொல்லப்பட்ட வழக்குகள், மிஸலேனியஸ் வழக்குகள் என்று சொல்லப்படும் அந்த வழக்குகளுள் கூட உயர்நீதிமன்றத்தில் 45,508. நிலுவையில் உள்ள வழக்குகள் 78,700. 1983-ஆம் ஆண்டு தீர்ப்புச் சொல்லப்பட்ட வழக்குகள் 48,845. நிலுவையிலிருந்த வழக்குகள் 97,957. அதே போல் 1984-ம் ஆண்டு தீர்ப்புச் சொல்லப்பட்ட வழக்குகள் 48,257. நிலுவையிலுள்ள வழக்குகள் 1,18,130.

இப்படிப் பார்த்தோமேயானால், ஆண்டுதோறும் நிலுவையில் இருக்கின்ற வழக்குகள் கூடிக் கொண்டே செல்கின்றன. தீர்ப்புச் சொல்லப்படுகின்ற வழக்குகளின் விகிதாசாரத்தைப் பார்த்தால் 45 ஆயிரம், 48 ஆயிரம், 48 ஆயிரம் என்ற அளவிலே தான் இருக்கிறது.

இதை நான் எதற்காக இந்த மன்றத்திலே சொல்கிறேன் என்றால், நீதிபதிகள் பற்றாக்குறை இருப்பதை கோடிட்டு காட்டிடத்தான். தமிழக அரசு நல்ல நடவடிக்கை ஒன்றை எடுத்து இருக்கிறார்கள். அரசுத் துறையிலே இருக்கின்ற அந்த சிவில் ஜி.பி. என்று சொல்லப்படுகிற அரசு வழக்குரைஞர்கள் பற்றாக்குறை அதிகமாக இருந்தது. அதைப் போக்குகின்ற வகையில் சென்ற ஆண்டு, சட்ட அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து ஏறத்தாழ இங்கே சொன்னார்களே, மாற்று கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் " கட்சிக் கண்ணோட்டத்தோடு அரசு வழக்குரைஞர்களை நியமிக்கிறார்கள் என்று " அந்த அடிப்படையில் அல்லாது பல்வேறு பட்ட இயக்கங்களைச்

சேர்ந்தவர்களை "நானும் உயர்நீதிமன்றத்தில் பணி புரிந்தவன். ஆகவே, எனக்கு தெளிவாகத் தெரியும்." பல்வேறுபட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களை— அங்கே அரசு வழக்குரைஞர் களாக நியமித்து இருக்கிறார்கள்.

அதைப் பாராட்டுகிற இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளை யும் வைக்கிறேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் அண்மையில் மரியாதைக்குரிய மாண்புமிகு நீதிபதி திரு. ராமானுஜம் அவர்கள் ஓய்வு பெற்றதை அடுத்து, 7 நீதிபதிகள் இடங்கள் காலியாக இருக்கின்றன. இங்கே நியமிக்கப்பட வேண்டியவர்கள் 25 பேர். தற்போது 18 பேர் தான் பணியில் இருக்கின்றார்கள்.

அதை உயர்த்தித் தருவதற்கு இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். 25 நீதிபதிகளாக உள்ள இடத்தை 30 ஆக உயர்த்திக் தருவதற்கு உறுதி அளித்திருக்கிறார்கள். அதையும் செய்து, அந்த 30 பேர் இடத்தையும் நிரப்ப வேண்டும் என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த இடத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-20).

இன்னொரு கருத்தையும் இங்கே நான் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். லோயர் கோர்ட்டுகளிலே, அதாவது கீழ்க் கோர்ட்டுகளிலே நீதிபதிகளை நியமிக்கின்ற நேரத்தில், தமிழகத்தில் ஏறத்தாழ 17,000 வழக்குரைஞர்கள் பணியாற்றுகிறார்கள்; ஆனால் நீதிபதிகளை நியமிக்கின்ற நேரத்தில் தொழிலில் வழக்கறிஞர்களாக இருப்பவர்களை விட்டு விட்டு வேறு ஏதாவது பணியில், அயல் பணியில் இருப்பவர்களை நீதிபதிகளாக நியமிக்கிறார்கள். இதை மாற்றிட வேண்டுமென்று நான் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், a practising Advocate only knows the difficulties of the people தொழில் செய்த வழக்கறிஞர்கள்தான் பொதுமக்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது. எப்படி நடத்திட வேண்டும்., எப்படி நீதி இருக்க வேண்டும் என்பதை உணர்வார்கள். அந்தவகையில் அவர்கள் நீதிபதி இடத்தில் அமர்ந்தால் தகுந்த நீதி மக்களுக்கு வழங்கப் படும் என்பதைக் கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் இந்த இடத்தில் கூறிட ஆசைப் படுகின்றேன். இங்கே பாராட்டுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொன்னேன், பெண்ணடிமை தீர்ந்தால்தான் இந்த நாட்டின் மண்ணடிமை தீரும் என்று. உயர்நீதிமன்றத்தில் ஜி.பி.யாக ஒருபெண்மணிநியமிக்கப்பட்டிருக்கிறார். என்பது குறித்துமகிழ்ச்சி ஆனால் இதுவரையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் எந்தப் பெண்மணியும் நீதிபதியாக நியமிக்கப்பட வில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களைப் பெண்



களுக்காக, தாய்க் குலத்திற்காக எடுத்து இருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்களிலே அவர்களுக்காகச் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். குறிப்பாக இந்த அமைச்சரவையில்கூட இரண்டு அமைச்சர்களை தாய்க் குலத்திலேயிருந்து தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்கள் ஆட்சியிலேதான் இது நடக்க முடியும். ஆகவே, புரட்சித் தலைவரவர்கள் தலைமையிலே இருக்கின்ற இந்த அமைச்சரவை, மைய அரசுக்கும், தலைமை நீதிமன்றத்திற்கும் பரிந்துரை செய்து, இவர்கள் ஆட்சிக் காலத்திலேயாவது ஒரு பெண்மணியை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போல, இன்னொரு கருத்தையும் இங்கே கோடிட்டுக் காட்டிட ஆசைப்படுகின்றேன். நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்தில் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏறக்குறைய 3,000 வழக்குரைஞர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் 190 அறைகள்தான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குப் போதுமான இடமில்லை. ஒரு அறையில் ஏறக்குறைய 35 பேர்கள், வந்து போகக்கூட இடமில்லாத நிலையில் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் அங்கே பணியாற்றியவர்கள்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அங்கே பணியாற்றியவர்கள்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் அங்கே பணியாற்றியவர்கள் ; அவர்களெல்லாம் நன்றாக அறிவார்கள். உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் லாக்கர் என்று சொல்லப்படுகின்ற பெட்டியைப் பயன்படுத்துகிறார்கள். குருவிக்கூடு என்று கூறத்தக்க அளவிற்கு உள்ள அந்த லாக்கர்களில் வழக்குக் கட்டுகளையும், கோட்டுகளையும் வைத்து எடுத்துச் செல்கின்ற பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. உயர்நீதிமன்ற வளாகத்தில் நிறைய இடம் இருக்கிறது. எனவே, இந்தக் குறையைப் போக்குகின்ற விதத்தில் அந்த இடத்தில், ஏழை எளிய மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிற தூயவர்களுக்கு, தூய பணியில் ஈடுபட்டு இருக்கின்ற வழக்கறிஞர்களுக்கு, அறைகளைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த இனிய நேரத்தில் பணிவன் போடு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான பட்டுக்கோட்டையில் 1983-ஆம் ஆண்டில் சார்நீதிமன்றத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இதற்காகத் தமிழக அரசுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொண்டு, அதே நேரத்தில், அந்தப் பகுதியிலே உள்ள அந்த நீதிமன்றத்திற்கு, நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று அரசுக்கு ஒரு செயற்குறிப்புகூட அனுப்பப்பட்டிருக்கிறது. அதைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகம் பற்றிய இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. *பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறை நிர்வாகம், நீதி நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது அரசாங்கம் வைத்திருக்கின்ற கொள்கைக் குறிப்புகளை ஒட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்தினுடைய பரிசீலனைக்கு எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகின்ற குற்றங்கள் எல்லாம், தமிழகத்தைப் பொறுத்தமட்டில், வளர்ந்து வருகின்ற ஒரு நாட்டில், உருவாகின்ற குற்றங்கள் எல்லாம், சோஷியோ-எக்கனாமிக் கண்டிஷன்ஸ் என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள், சமூகப் பொருளாதாரக் குற்றங்கள் நிரம்ப இருக்கின்ற காரணத்தினாலே, இந்தக் குற்றங்களைச் செய்து சிறையிலே இருக்கின்றவர்கள் எல்லாம் தனிப்பட்ட முறையிலே குற்றவாளிகள் என்றாலும் கூட, இந்தச் சமூகப் பொருளாதார அடிப்படையிலே குற்றங்கள் இருப்பதற்கு அரசாங்கமும் தார்மீகமாகப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, ஒருவன் குற்றவாளி என்று தண்டனை பெற்று சிறையிலே இருக்கிறான் என்றால், அவன் சட்ட நியாயங்களின் அடிப்படையில் தண்டனை பெற்றிருக்கிறானே அல்லாமல், உள்ளபடியே தண்டனை பெற்ற அனைவரும் உண்மையான குற்றவாளிகள் தானா என்பது இன்றைக்கும் சமுதாயத்தின் மத்தியில் எழுப்பப்பட்டிருக்கிற கேள்விக்குறியாகும். இந்தக் கேள்விக் குறிக்கு விடை காண்பதற்கு நாட்டிலே உள்ள சட்டமன்றங்களும், நாடாளுமன்றமும், நீதித் துறையும் ஒருசேர உட்கார்ந்து ஆய்வு செய்து, முடிவெடுக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும்.

நான் இன்றைக்குச் சிறைத் துறைபற்றி பேசுகின்ற நேரத்திலே, அடிக்கடி பொறுப்பில்லாமல் சமுதாய வீதிகளிலே தவறுகளைச் செய்துவிட்டு, சிறைப் பறவைகளாக மீண்டும், மீண்டும் சிறைக்கு வருகின்ற அந்தச் சிறைப் பறவைகளைப் பற்றி நான் கருத்து கூற விரும்பவில்லை. மாறாக, சட்ட நியாயங்களின் அடிப்படையில் தண்டனை பெற்று, குற்றவாளிகளாகவும் இயற்கை நியதியின்படி குற்றத்தைச் செய்யாதவர்களாகவும் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிற அவர்களுக்காக நான் சில கருத்துக்களை அவர்கள் சார்பாக இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.



இந்திய நாட்டினுடைய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண ஐயர் அவர்கள் நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம் பொது மக்களுடைய விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்கள். அதற்குக் காரணம் என்ன? நீதிபதி தீர்ப்பளிக்கின்ற நேரத்தில், பெரும்பாலான மக்கள் ஒத்துக்கொள்ளக் கூடிய, நாட்டின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப அந்தத் தீர்ப்புகள் அமைய வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில்தான் கிருஷ்ண ஐயர் எல்லாத் தீர்ப்புகளும் பொதுமக்களுடைய விமர்சனத்திற்கு வைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல, சிறைக்குப் பின்னாலே இருக்கக்கூடிய சட்ட திட்டங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட நேரத்தில், நம்மையெல்லாம் அடிமைகளாக அடக்கி, ஒடுக்கி இருந்த காலத்தில் எழுதப்பட்ட, உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள். எனவே, இந்தச் சூழ்நிலையிலேதான் இன்றைக்குச் சிறைக் கைதிகள் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். சிறைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே, சிறைக் கைதிகளைப் பற்றி எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே, இந்தச் சிந்தனைகளோடு அரசு பார்க்க வேண்டுமென்று தான் சில உண்மைகளை எல்லாம் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பலமுறை சிறை சென்று வந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தாலே, சிறையிலே சிரித்துக் கொண்டே இருப்பவர்களும் உண்டு, சிறையிலே அழுது கொண்டே இருப்பவர்களும் உண்டு, சிறையிலே அழுது கொண்டும் சிரித்துக் கொண்டும் இருப்பவர்களும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சிறை வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், சிறையிலே இருக்கிற ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் இன்று விடுவிக்கப்படுகிறார்கள். என்ன வரைமுறையின் கீழ், என்ன முறைகளின் கீழ் விடுவிக்கப்படுகிறார்கள் என்பதிலேதான் இன்றைக்கு ஆளுங்கட்சிக்கும், எங்களைப் போன்று ஜனநாயகத்திலே உள்ள எதிர்க்கட்சிகளுக்கும் கருத்து மாறுபாடு இருக்கிறது. உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும், இந்த மாமன்றத்திலே பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது.

18—12—1978 அன்று ஏற்பட்ட நிலைமை காரணமாக இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் 433 (ஏ) என்ற ஷரத்து சேர்க்கப்பட்டதன் காரணமாக, அந்தத் தேதிக்குப் பின்னாலே, தண்டனை பெற்றவர்களெல்லாம் கழிவு நீங்கலாக 14 ஆண்டுக் காலம் சிறையிலே இருந்தால்தான் அரசினுடைய பரிசீலனைக்கு வரும் என்று அன்றைய தினம் தெரிவித்தார்கள். அதை மாற்ற வேண்டும். 433 (ஏ) என்கிற இந்தியக் குற்றவியல்

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1985 ஜுன் 25

நடைமுறைச் சட்டத்திலே உள்ள ஷரத்து மாற்றப்பட வேண்டுமென்கிற அடிப்படையில், இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கை இன்னும் முடிவடைந்ததாக, நாடாளுமன்றம் ஒத்துக்கொண்டதாக இல்லை. நாடாளுமன்றம் ஒத்துக்கொள்ளத்தக்க வகையில் இந்த அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை மட்டும் இந்த நேரத்திலே பிரதிநிதித்துவமே இல்லாத சிறைக் கைதிகளின் சார்பாக நான் அந்தக் கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்ற பதிலோடு மட்டும் அமைச்சர் இருந்துவிடாமல், அதற்குரிய நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாக இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

ஆனால் 18—12—1976-க்கு முன்னால் தண்டனை பெற்றவர்கள் எல்லாம் 10 ஆண்டு காலம், 9½ ஆண்டு காலத்தில் அறிவுரைக் குழுவிற்கு முன்னால் ஆஜர் செய்யப்பட்டு, அதன் பின்னால் அறிவுரைக் குழுவின் ஆலோசனைப்படி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது. ஆனால் விடுதலை செய்கிற போது ஒரேசீரான முறையை அரசு கடைபிடிக்கிறதா என்றால், இல்லை என்ற பொருளில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

என்னுடைய அருமைத் தோழர், தென்னார்க்காடு மாவட்டத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழக மாணவர் செயலாளராக இருந்தவர், மாசிலாமணி என்பவர் 1974-ஆம் ஆண்டு கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, நீதி மன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு, 1974-லிலிருந்து வேலூர் சிறையில் இருந்துகொண்டிருக்கிறார். பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் கடந்த 1984-ஆம் ஆண்டு இந்த அரிவுரைக் குழுவிற்கு முன்னால் ஆஜர் படுத்தப்படுகிறார். அறிவுரைக் குழு என்பது மாவட்ட அளவிலே இருக்கிற ஒரு அட்வைசரி போர்டு. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட அளவிலுள்ள காவல் துறை அதிகாரி, மாவட்ட அளவிலுள்ள சிறை அதிகாரி, அந்த பிராந்தியத்தில் உள்ள புரபேஷன் ஆபீசர் ஆகிய இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அந்த அறிவுரைக் குழுவிற்கு முன்னால் அருமைச் சகோதரர் மாசிலாமணி 26—9—1984-ல் ஆஜர் ஆகிறார்.



1985 ஜுன் 25] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

அதற்குப் பின்னாலே அந்த அறிவுரைக் குழு அவர் விடுதலை செய்யப்படலாம், அவரால் பின் விளைவு எதுவும் ஏற்படாது என்று பரிந்துரை செய்து, அது இந்த அரசுக்கு வருகிறது. இந்த அரசு 15—5—1985 அன்று அரசு ஆணை எண் 2015-ன்படி, விடுதலை செய்யலாம் என்று ஆலோசனைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டதை, ஆலோசனைக் குழுவின் அந்த பரிந்துரையை நிராகரித்து, மேலும் இரண்டு ஆண்டு சாலம் சிறையில் இருக்க வேண்டுமென்று ஆணையிடுகிறது. இதுதான் நடைமுறை, இதுதான் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற நார்ம்ஸ் என்று நீங்கள் உறுதியாக, இறுதியாகச் சொல்வீர்களானால், என்னுடைய வாதத்தை நான் திரும்பப் பெற்றுக்கொள்ள இந்த நேரத்தில் தயாராக இருக்கிறேன்.

ஆனால் இந்த முடிவுக்கு மாறாக பல்வேறு சிறைக் கைதிகள் அரசாங்கத்திற்கு ஆதரவாக, ஆளும் அரசியல் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்ற காரணத்தால், 5 ஆண்டு, 6 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்திருந்தாலும், விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கொலைக்குற்றம் சாட்டப்பட்டு, தண்டனை பெற்று, சிறையில் 5 ஆண்டு, 6 ஆண்டு காலம் இருந்தவர்கள் இந்த அரசாலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குரிய காரணத்தை இந்த அரசு நாட்டு மக்களுக்கும் இந்த மாமன்றத்திற்கும் பகிரங்கமாகத் தெரிவித்தாக வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்னும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு அந்த நண்பர் மாசிலாமணி அவர்களை 1982-ஆம் ஆண்டு வழக்கறிஞர் பெண்மணி மணந்து கொள்கிறார். இது ஒரு வினோத நிகழ்ச்சி. ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கிற கைதியை ஒரு பெண் வழக்கறிஞர் மனிதாபிமானத்தோடு மணந்திருக்கிறார். அதை உணர்ந்தாவது, அந்த மனிதாபிமான இரக்க உணர்வோடு அந்த நண்பர் மாசிலாமணி அவர்களை ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்குப் பின்னால் விடுதலை செய்திருக்க வேண்டும். ஆனால் விடுதலை செய்யவில்லை.

அதோடு மட்டுமல்லாமல், இன்னும் பல விவரங்களை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பாலகாந்தன் என்ற சிறைக் கைதி எண். 3531 என்பவர் வேலூர் சிறையிலே இருந்தார். அவர் ஒரு சினிமா டைரக்டர் புதல்வன் என்று எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. 5 ஆண்டு காலத்திலே அவர் இன்றைக்கு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். விடுதலை செய்யப்பட்ட அரசு ஆணை எண். 1857, தேதி 21—7—1982.

அதற்கு அடுத்து, இன்னொருவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் பெயர் துரைபாபு. அவர் ஒரு ஆயுள் தண்டனை கைதி. சிறை தண்டனைப் பெற்று, பின்னர் 7 ஆண்டுக் காலமாக தண்டனை குறைக்கப்பட்டு, அவரும் இன்றைக்கு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அவரை விடுதலை செய்த அரசு ஆணை எண் 89. அவரோடு 20 பேர்கள் ஒரே நாளில் பரோலில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அரசியல் காரணம் கூறப்படுகிறது. தேர்தல் காலத்தில் இவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டதற்கு அரசியல் காரணம் தான் என்று எனக்கு தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ராமு என்ற கைதி, அவருடைய எண் 7196. அவரும் வேலூர் சிறையிலே, ஆயுள் தண்டனை பெற்று இருந்தவர். ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த அவர் ஏற்கனவே ஒரு காவல் துறை அதிகாரியை, போலீஸ் கான்ஸ்டபிளைக் கொலை செய்துவிட்டு, அதற்காக ஆயுள் தண்டனைப் பெற்றவர்.

அட்வைசரி போர்டு என்று சொல்லப்படுகின்ற அந்த அறிவுரைக் குழு அவரை மீண்டும் இரண்டாண்டுக் காலத்திற்கு விடுதலை செய்யக்கூடாது என்று பரிந்துரை செய்தும்கூட அந்த அறிவுரைக் குழுவின் பரிந்துரையை நிராகரித்துவிட்டு உடனடியாக அதாவது பரிந்துரை செய்யப்பட்ட 45வது நாளில் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அடுத்தாற்போல வினோபா என்ற இன்னொரு கைதி, கைதி எண். 6420. அவர் 5 ஆண்டுக் காலம் சிறைத்தண்டனை பெற்றவர். ஏறத்தாழ 200 நாட்கள் அவர் சிறையிலேயிருந்து லீவின் மூலமாக அதாவது விடுப்பின் மூலமாக வெளியே இருந்திருக்கிறார். அவர் ஓராண்டுகூட சிறைவாசத்தில் இருக்கவில்லை. அவரை இந்த அரசு விடுதலை செய்திருக்கின்றது.

அதேபோல், முனியசாமி என்பவர், கைதி எண். 59481. 10 ஆண்டுக் காலம் கழிந்ததற்குப் பிறகு, பரிந்துரைக் குழு மேற்கொண்டும் இரண்டாண்டுக் காலம் தள்ளிவைக்க வேண்டும் என்று அறிவுரை கொடுத்திருந்தாலும்கூட உடனடியாக 8—4—1985 ஆம் நாளில் அவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவருவதன் மூலமாக ஒன்றை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.





சிறையிலே உள்ள கைதிகளைப் பொறுத்தவரையில், ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பற்றிய பிரச்சினை அறிவுரைக் குழுவிற்கு முன்னால் வந்ததற்குப் பிறகு அந்தப் பரிந்துரை வழங்குகின்ற குழுவின் அறிக்கையை இந்த அரசு ஏற்றுக் கொள்கின்றதா அல்லது நிராகரிக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏற்றுக்கொள்வது என்றால் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்கின்றது என்றால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அதேபோல், நிராகரிப்பது என்றால் ஒட்டுமொத்தமாக நிராகரித்தால் அதிலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அரசியல் கட்சி என்ற முறையில் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு அவர்களுடைய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு வேண்டியவர்கள் என்ற நிலைமை வந்தால் அதை ஏற்றுக் கொள்வதும் அதாவது சாதகமாக இருந்தால் ஏற்றுக் கொள்வதும், பாதகமாக இருந்தால் நிராகரிப்பதும் என்ற முறையில் இந்த அரசு பின்பற்றினால் ஒன்றை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

அருமைச் சகோதரர் திரு. மாசிலாமணி அவர்கள் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்று சென்றிருக்கிறார். ஏறத்தாழ 10 ஆண்டுக் காலம் கழிந்துவிட்டது. வழக்கறிஞர் பெண்மணி அவரை மணந்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையிலும்கூட ஒரு மனிதாபிமான அடிப்படையில் ஒரு இரக்க உணர்வுகூட இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்களுக்கு ஏற்படவில்லை என்கின்றபோது உள்ளபடியே நான் வெட்கப்படுகிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வழக்கறிஞராக இருந்தவர். அவருக்கு ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். வழக்கறிஞர்கள்தான் நீதிபதிகளாக வருகிறார்கள், அவ்வாறு நீதிபதிகளாக வந்ததற்குப் பிறகு வழக்கறிஞர்களாக இருந்தவர்கள் என்பதற்காக ஒரு பக்கத்திலே அவர்கள் வாதாடுவதில்லை. அவர்கள் நடுநிலைக்கு வந்துவிடுகிறார்கள். அதேபோன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் அமைச்சர்களாக வருகிறார்கள் என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் ஆட்சி சொந்தம் என்ற நிலையில் அமைச்சர்கள் வாதாடுவது என்ற நிலை இருந்தால் அது ஜனநாயகத்தில் வெட்கக் கேடான நிலை என்பதை வருத்தத்தோடு இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர், சகோதரர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் ஆதாரம் அற்ற முறையில் சிலவற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம்

இறுதியிலே நான் பதில் அளிக்க விரும்புகிறேன். அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் தென்னாற்காடு மாவட்ட மாணவர் பிரிவைச் சேர்ந்த திரு. மாசிலாமணி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாணவராக இருந்த பாலசுந்தரம் அவர்களை 10 பேர்களுடன் சேர்ந்து கொண்டு வீச்சரிவாள், வெட்டுக் கொடுவாள், மடக்குக் கத்தி ஆகியவற்றைக் கொண்டு துரத்தித் துரத்தி பல இடங்களில் குத்திக் கொன்று விட்ட அந்தக் கொடிய செயலிலிருந்து முன் கூட்டியே அவருக்கு ஏன் நீங்கள் சலுகை காட்டக்கூடாது என்ற தோரணையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது உகந்த தல்ல.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் மாசிலாமணியை ஒரு கண்ணோட்டத்தோடும், மற்றவர்களை மற்ற கண்ணோட்டத் தோடும் பார்க்கின்ற அணுகுமுறையைக் கொண்டதாக இல்லை. பல நேரங்களில் அட்வைசரி போர்டு பரிந்துரை செய்திருந்தாலும் அதையெல்லாம் அப்படியே அரசு ஏற்றுக்கொள்கின்றது என்ப தல்ல. எல்லாக் காலகட்டத்திலும் அவற்றை ஏற்றுக் கொள்வது இல்லை. காரணம் அந்த ஆலோசனைகளைப் பார்த்து பின்னர் ஆணையிடுவது அரசுதான். ஏற்கெனவே உச்சநீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கின்றது. 'several factors are taken into account before a prisoner is released prematurely' என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரையில் மாசிலாமணி பிரச்சினையைப் பொறுத்த வரையில் வெட்கப்பட வேண்டாமா, வேதனைப்பட வேண் டாமா என்று மாண்புமிகு சகோதரர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசினார்கள்.

(முற்பகல் 11-40).

வழக்கமாக அவர் அப்படிப் பேச மாட்டார். அவரே பேசி விட்டார் என்பதற்காக நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறேன். என்னிடம் வழக்கமாக பலர் வருவது உண்டு. மாசிலாமணி அவர்களுடைய இல்லக்கிழத்தியார்—வழக்குரைஞர் அம்மையார் அவர்களும் என்னிடம் வந்து, பரோல் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். புலவர் கோவிந் தன் அவர்களும், பாபு ஜனார்த்தனன் அவர்களும் கூட வருவது உண்டு. திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் தற்போது இங்கே இல்லை. அவர்களும் வந்து பல முறை பரோல் பெற்றுச் சென்றிருக்கிறார்கள்—ஆனால் ஒரு முறை ஏனோ தெரியவில்லை எனக்கு, அவர்கள் சார்ந்திருக்கின்ற பத்திரிகையில்—என்னிடம் பரோல் பெட்டிஷனைக் கொண்டு வந்து கொடுத்தார்கள், 4 நாள் 5 நாள் ஆகியிருக்கும், உடனே பத்திரிகையில் மாசிலாமணிக்கு பரோல் கொடுக்கக் கூடாது என உத்தரவு இடப்படுகிறது என்று முன்கூட்டியே போட்டு விட்டார்





கள். That is blackmailing. நான் அதைக்கூடக் குறிப்பிட்டு மாசிலாமணி அவர்களிடமே எடுத்துச் சொன் னேன். பரோல் கொடுத்து விட்டோம். 20 நாள் பரோல் கொடுத்த பிறகு, பரோல் கொடுத்த தகவல் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லையோ என்று கருதுகிறேன். 3 நாட்கள் கழித்து 2 பத்திரிகைகளில் அப்படி செய்தி வருகிறது. ஒவ்வொரு முறையும் இப்படி அரசை மிரட்டி பரோல் வாங்குவது அல்லது அரசை மிரட்டி முன் விடுதலை வாங்குவது என்ற அணுகு முறையை மாசிலாமணி அவர்கள் மேற்கொள்ளுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை; அவர்களுடைய இல்லக்கிழத்தியார் அவர்கள் மேற்கொள்ளுகிறார்கள் என்றும் சொல்லவில்லை! ஆனால் உள் நோக்கத்தோடு அதை ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்கி செயல்படுவது உகந்தது இல்லை என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

அது மட்டும் அல்ல. பரோலைப் பற்றி பேசினார்கள். பரோ லைப் பொறுத்தவரையில் மாசிலாமணி அவர்களுக்கு ஒட்டு மொத்தமாக கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய பரோலே 120 நாட்கள்தான் விதிக்கு உட்பட்டு. ஆனால் அவருடைய மனைவி திருமணம் ஆன பிறகு மகப்பேற்றில் உள்ள நிலையில் சந்தித்த போது என்று பலமுறை பரோல் வாங்கியதில் ஒட்டு மொத்தமாக இந்த அரசு அவர்களுக்கு கொடுத்திருக்கின்ற பரோல் 295 நாட்கள் ஆகும். என்னிடத்திலே நேரிடையாக மாசிலாமணி அவர்களும் அவருடைய மனைவியாரும் வந்து, பத்திரிகையில் அப்படி செய்தி வந்ததைப் பற்றி, ஏதேதோ காரணத்திற்காக யாரோ எழுதி விட்டார்கள், வருத்தப்படுகிறோம் என்றுகூட சொல்லியிருக்கிறார்கள்.

மாசிலாமணி அவர்களையும் அவருடைய மனைவியாரையும் நீங்களே அழைத்துக் கேட்கலாம். அது மட்டும் அல்லாது அரசு அட்வைசரி போர்டினுடைய முடிவுக்கு மாறாக ஒரு முடிவை வழங்கி விட்டது என்று கூறுவதும் உகந்தது அல்ல. அட்வைசரி போர்டிலே விதவிதமான கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

The report on the recommendations of the advisory Board with the different views expressed by the members thereto is sent to the I.G. of Prisons—

என்ற வகையில் ஐ. ஜி. ஆப் பிரிசன் அவர்கள் அந்தக் குற்றத் தன்மையைப் பார்த்து, இது ஒரு கொடுமையான கொலையாக இருப்பதால் the gravity of the offence is too profound and deep—அவர் இதுகாறும் சிறையில் கழித்த காலம் 9 ஆண்டு 6 மாதம் 21 நாட்கள், இன்னும் கழிக்க வேண்டிய காலம் 6 ஆண்டு காலம் 10 மாதம் 25 நாட்கள் என்று இருக்கின்ற காரணத்தினாலும் ஈராண்டுகள் கழித்து அதைப் பரிந்துரை செய்வதுதான் நல்லது

[திரு. சி. பொன்னைய] [1985 ஜூன் 25

என்று தெரிவித்தார்கள். ஐ. ஜி. அவர்களின் பரிந்துரைகளை வழக்கமாக அரசு ஏற்கின்றது. அந்த அடிப்படையில்தான் ஆணை இடப்பட்டதே ஒழிய வேறு உள் நோக்கம் எதுவும் இல்லை என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பத்தாண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்றுவிட்ட ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து, அதற்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னாலே, அதுவும் தண்டனையும் வழங்கியதற்குப் பின்னாலே, அப்பொழுது நடைபெற்ற அந்தக் கொலை எப்படி, எந்தச் சூழ்நிலையில் நடைபெற்றது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களோ அந்தக் கருத்தை ஒரு காரணமாக இப்பொழுதும் சொல்லுகிறார்கள் என்றால் நீதிமன்றத்திலே தண்டனை கொடுக்கப்பட்டதற்குப் பின்னாலும்கூட, இந்த அரசு ஒரு தண்டனையைக் கொடுக்குமோ என்ற சந்தேகம் எழுகிறது.

ஏனென்றால் சுற்றிச் சுற்றி வந்து கொடுவாளால், அரிவாளால் வெட்டினார்கள் என்று அமைச்சர் சொல்வது, அந்த விவரங்களைப் பற்றித் தெரிந்திருப்பவர்களுக்கு, அன்றைக்கு அமைச்சராக இருந்து, அந்த இளைஞரோடு பழகியவர்களுக்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகளைத் தெரிந்தவர்களுக்கு, அமைச்சர் சொல்கின்ற இந்த விவரங்கள் உண்மைக்கு மாறானது அல்லது முழுவதும் உண்மையல்லாதது என்பது தெரியும். அந்தச் சம்பவத்தை எண்ணிப் பார்க்கின்றபோது, தற்காப்புக்காகத்தான், தன்னுடைய அறையிலே இருக்கிறபோது, தன்னை வெட்ட வந்த 4 பேர்களை வெட்டியபோது அதிலே ஒருவன் இறந்து போனான் என்று சொல்லப்படுகின்ற அந்தச் செய்தி ஒரு அமைச்சராலேயே இப்படிப் பேசப்படுமானால் அந்தச் செய்தியைப் பற்றி அமைச்சர் மறு தண்டனை அளிக்கின்ற அளவுக்கு அதிலே ஏதோ ஒரு நியாயம் இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக, ஏற்கெனவே எப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த அக்கிரமம் நடைபெற்றது என்பதை எண்ணிப் பார்த்துத்தான் மறுபடியும் அவர்களுக்கு சலுகை அளிக்கலாமா என்று பரிசீலனை செய்யவே 2 ஆண்டுக்காலம் வேண்டும் என்று ஐ. ஜி. அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொல்வது, இந்த அரசாங்கம் நீதி மன்றத்திற்கு மேல் ஒரு நீதிமன்றமாக தன்னை ஆக்கிக் கொள்ளுகிற ஒரு நிலையில் இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு நினைவூட்டி, அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு மனப்போக்குக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்ற வருத்தத்திலே தான் முத்துராமலிங்கம் அவர்கள் இங்கு அந்தக் கருத்தைப் பேச நேரிட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஜூன் 25]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கூறியதை என்னுடைய சொந்தக் கருத்தாக கூறவில்லை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறியது அவர்களின் சொந்தக் கருத்தாக இருக்கலாம். நான் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒட்டி, தீர்ப்பிலே இருப்பதைத் தான் கூறினேன். அந்த அடிப்படையில் Premature release is given to a person afer several factors are takn in to account என்று நான் மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களுக்குச் சொன்னேன்.
The gravity of the offence is one of the factors taken into account. எந்தெந்த அணுகுமுறைகளை மேற்கொள்ளவேண்டுமென்பதற்கு நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு இருக்கிறது. அதை ஒட்டித்தான் மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னேனே தவிர, மற்றல்ல.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதைவிடக் கொடுமையான அக்கிரமங்களைச் செய்துவிட்டு, இதைவிட எளிதாக சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் வந்திருக்கிறார்கள் என்ற விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதோ என்று நான் ஐயுறுகிறேன். மிகப்பெரிய கொடுமை செய்தவர்கள் எல்லாம் வெளியே உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. பொன்முத்துராமலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொன்னார்கள். எங்களுடைய பேராசிரியர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்ட காரணத்தால் மீண்டும் அந்தக் கருத்திற்கு நான் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும்கூட ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மாசிலாமணி ஆயுள் தண்டனையைப் பெற்றிருக்கிறார்கள். கொலையிலே மாசிலாமணிக்குத் தொடர்பு உண்டு என்று கருதித்தான் நீதிபதி தண்டனை வழங்கி இருக்கிறார்கள். இதை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவார்கள். எனவே கொலைவாள் தூக்கி, வெட்டறுவாள் எடுத்து சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள் என்று கிராவிட்டி ஆப் தி அபன்ஸ், அந்தக் குற்றத்தினுடைய கொடூரத்தை இப்போது சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றுதான் கருதுகிறேன். கொலை செய்பவர்கள் அனைவரும் கொடுவாளுடனும், கட்டாரியுடனும்தான் செல்வார்கள். எனவே அதைப்பற்றி சொல்லவேண்டிய அவசியமில்லை என்றுதான் கருதுகிறேன். இருந்தாலும்கூட அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கத்தினுடைய ஒரு பகுதியாக, சிறைச்சாலையிலுள்ள ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களுக்கு நாங்கள் அறிவுரை அனுப்புகிறோம். அவர்கள் கூடாது என்று கருதுகிற காரணத்தாலே, இரண்டு ஆண்டுகள் தள்ளிவைக்க வேண்டுமென்று கருதுகிற காரணத்தாலே, அவர்கள் பரிந்துரையை அரசு என்றைக்கும் நிரா

கரித்தது இல்லை ; ஏற்றுக்கொண்டு இரண்டு ஆண்டுகள் தள்ளி வைத்திருக்கிறோம் என்று சொல்வது எந்த வகையிலே பொருத்தம்?

அட்வைசரி கமிட்டி என்று மாவட்ட அளவிலே ஏற்பாடு செய்து விட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் அதனை ஏற்பாடு செய்து, அதனுடைய பரிந்துரை அடிப்படையில் முடிவுகள் எடுக்க வேண்டுமென்று முறைகளை வகுத்து விட்டு, அதற்குப் பின்னாலே அந்த முறைகளைத் தவிர்த்து, ஐ.ஜி.ஆப் பிரிசன்ஸ் என்ற அரசாங்கத்தின் உயர் அதிகாரிக்கு அனுப்பி, அவர் சென்னையில் இருந்து கொண்டு முடிவு எடுப்பதை வைத்துக் கொண்டு அரசாங்கம் நிராகரிக்குமேயானால் அது நல்ல முடிவாக இருக்க முடியாது. நியாயத்தின்பால் எடுக்கப்பட்ட முடிவாக இருக்காது. அந்த முடிவை ஜஸ்டிபை பண்ண முடியாது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 9½ ஆண்டுகாலம்தான் ஆகிறது. இன்னும் அவர்கள் கழிக்க வேண்டிய ஆண்டுகள் ஐந்தாறு ஆண்டுகள் என்று தெரிவித்தார்கள். நான் மீண்டும் அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு 9½ ஆண்டுகளுக்குள்ளாக, ஆயுள் தண்டனை கிடைத்தவர்களை இந்த அரசு விடுதலை செய்திருக்கிறதா இல்லையா என்பதை மட்டும் இந்த மன்றத்திற்குத் தெளிவாக்க வேண்டும். நான் ஏற்கனவே பல கைதிகளுடைய எண்ணோடு, அரசாங்கத்தின் ஆணைகளோடு திரும்பத் திரும்ப இந்த மன்றத்தில் சொன்னேன். பலபேர்கள் 5 ஆண்டுக் காலம், 6 ஆண்டுக்காலம், 7 ஆண்டுக்காலம், 10 ஆண்டுக் காலம் என்று தண்டனை குறைப்பு பெற்று இன்றைக்கு விடுதலையாகி இருக்கிறார்கள். அவர்களுடைய பட்டியலை எல்லாம் நான் ஏற்கனவே படித்திருக்கிறேன். எனவே அரசாங்கத்திற்கு இந்த நேரத்திலே தெரிவிப்பது எல்லாம், ஒரே மாதிரியான முறைகளை இந்த ஆயுள் கைதிகளைப் பொறுத்தவரையில் விடுவிப்பதில் பின்பற்ற வேண்டும். இங்கொன்றும், அங்கொன்றுமாக மாறுபட்ட வகையில் முடிவெடுத்து நிலைமைகள் சீராக்காமல் சீரழிவு செய்ய வேண்டாமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் சகோதரர் மாசிலாமணி வழக்கைப் பொறுத்தவரையில் இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மீண்டும் வலிறுத்தி கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து விடுமுறையைப் பொறுத்தவரையில் சிறைக்கைதிகளுக்கு ஒழுங்காக விடுமுறைகள் வழங்குவதில்லை. அரசாங்கம் சில வழிமுறைகளை வகுத்து; இன்னின்ன முறைகளில் கைதிகளுக்கு விடுமுறைகளை வழங்கலாமென்று செய்திருக்கிறது.





இருந்தாலும் கூட, சிறைகளில் இருக்கிற கண்காணிப்பாளர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்கள் ஆதரவாளர்களுக்கு விடுமுறை வழங்குவதும், அவர்களை எதிர்த்து அல்லது முறையாக சிறையில் நடைமுறைகள் இருக்க வேண்டுமென்று சொல்பவர்களுக்கு விடுமுறை வழங்காமலும் இருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக மதுரையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். மணி என்பவர் அவருடைய கைதி எண் 538. அந்த 538, மணி என்பவர் தன்னுடைய வயதான தாயார் உடல் நலமில்லாமல் இருக்கிறார் என்று விண்ணப்பம் செய்கிறார். அதற்கான மருத்துவச் சான்றிதழும் பெற்று அனுப்பியிருக்கிறார். ஆனால் அவருக்கு என்ன உத்தரவு வருகிறது? அவருடைய சிறைவாச நடத்தை திருப்தியாக இல்லாததால், நாங்கள் நிராகரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். திருப்தி என்ற வார்த்தை எந்த வரையறைக்கு உட்பட்டது? அந்தச் சிறைக் கண்காணிப்பாளருடைய விருப்பத்திற்கு உட்பட்டதா? அல்லது அவர் வேண்டுவதை எல்லாம் செய்தவர்தான் திருப்திக்கு உட்பட்டவரா? அல்லது வேண்டியதைச் செய்யாத சிறைக் கைதி திருப்திக்கு அப்பாற்பட்டவரா? இதற்கெல்லாம் ஒரு இலக்கணம் இல்லை. எனவே அந்த மணி என்பவர் வருத்தத்தோடு ஒரு கடிதம் எழுதுகிறார் தன்னுடைய வீட்டுக்கு. நான் வயதான தாயாரைப் பார்க்கவேண்டும், ஆனால் சிறையில் நான் எந்தப் பழக்கமும் இல்லாதவன், எந்த ஒரு சிறு சாதாரணப் பழக்கமும் இல்லாதவன். சிறையில் கொடுக்கக்கூடிய ரேசன் ஒழுங்காகக் கொடுக்கப்படவேண்டும், அரசாங்கம் அறிவித்திருக்கிற சலுகைகள் ஒழுங்காக வழங்கப்படவேண்டும் என்று சொல்லியதற்காக என்னுடைய விடுமுறையை இன்றைக்கு ரத்து செய்திருக்கிறார்கள், எனவே இதை அருள்கூர்ந்து நீங்கள் கவனிக்கவேண்டும் என்று அவர்கள் வீட்டுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே இந்த விடுமுறையைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட நடைமுறைகள் எல்லாம் சிறையிலே பின்பற்றப்படுகின்றன என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11–50)

இன்னொன்று, சிறையிலே வழக்கு போடுகின்ற சம்பவம் நான் திருச்சி சம்பவத்தைப் பற்றிக் கூட ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசினேன். திருச்சியிலே 4 ஆயிரம் தி.மு. கழகத் தொண்டர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். நீதித்துறை நிர்வாகத்தைப் பற்றிப் பேசும்போது, அதனுடைய நிர்வாகத்தைச் சீரமைத்து, காலதாமதத்தை எப்படி எல்லாம் குறைப்பது என்று யோசித்துக் கொண்டு இருக்கிற நீங்கள், 4 ஆயிரம் தி.மு. கழகத் தொண்டர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறீர்கள். 4 ஆயிரம் தி.மு. கழகத் தொண்டர்கள் மீது வழக்கு போட்டிருக்கிற நீங்கள் இதை எப்படி நீதிமன்றத்திற்குக்

[திரு. பொன்முத்துராமலிங்கம்] [1985 ஜூன் 25

கொண்டு வர இருக்கிறீர்கள், எப்படியெல்லாம் விசாரிக்க இருக்கிறீர்கள், எவ்வளவு காலமாகும்? இவ்வளவையும் நீங்கள் செய்தாலும் கூட, அவர்கள் உண்மையிலே தவறு களைச் செய்தவர்களா என்றால் இல்லை. எனவே நீங்கள் காலத்தைக் குறைக்க வேண்டும், நீதி சாதாரண மனிதனுக்கு எளிதிலே கிட்டவேண்டும் என்று எண்ணுகின்ற நினைப்பு உங்களுக்கு இருந்தால், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல் லாம் நீங்கள் தவிர்க்கவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைக்காக சென்னை சிறையில் வாடிய தி.மு. கழகத் தொண்டர்களை நீதிமன்றத் திற்கு அழைத்து வந்து ரிமாண்ட் எக்ஸ்டன்சன், காவல் நீடிப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால் நீதிபதியே இந்தச் சிறைச்சாலைக்குச் சென்று, காவல் நீட்டிப்பு செய்வது என்பது எந்த வகையில் பொருத்தமான ஒன்று? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழக்கறிஞர். சிறைக் கட்டுப் பாட்டிலேயிருந்தபோது, அந்த இடைப்பட்ட காலத்திலே, சிறையிலே என்ன நடந்தது? நீதிக்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக என்ன நடந்தது என்பதை நீதிமன்றத்திலே தன்னிச்சையாக, சுதந்திரமாகச் சொல்ல முடியும் என்பதற் காகத்தான், 14 நாட்கள் அல்லது 15 நாட்கள் கழித்து, நீதி மன்றத்திற்கு அவர்கள் கொண்டுவரப்படவேண்டும். ஆனால் இந்த முறையை மாற்றி, சிறையிலே வைத்து அவர்களுக்கு ரிமான்ட் எக்ஸ்டன்சன் கொடுப்பது என்பது எந்த வகையிலே தன்னிச்சையாக அவர்கள் தங்களுடைய கருத்துக்களை நீதிபதிகளிடம் சொல்ல முடியும்? எனவே இவற்றை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். நீதிமன்றங்கள் தன்னிச்சையாக, சுதந்திரமாக நடைபோடவேண்டும். அதற்கு அரசாங்கம் ஆதரவாக இருக்கவேண்டும். அரசாங்கம்கூட சில வழக்குகளிலே நீதிமன்றங்களுடைய தீர்ப்புகளை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே நீதிமன்றம் தன்னிச்சையாக, சுதந்திரமாக செயல்பட்டால்தான் இந்த நாட்டிலே ஜனநாயகம் தழைக்கும், ஜனநாயகம் உயிரோடு இருக்கும். அப்படியில்லாமல், சுதந்திரமாக செயல்படவேண்டிய நீதி மன்றத்தில் அரசாங்கத்தினுடைய தலையீடு இருந்தால், நிச்சயமாக ஜனநாயகம் செயலற்றுப் போகும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீதி நிர்வாகத்தைப்பொறுத்தவரையில், இன்றைக்கு மதுவிலக்கை விசாரிப்பதற்காக ஒரு முதல் வகுப்பு நீதி மன்றத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த நீதிமன்றத்தைச் சுற்றி ஏறக்குறைய 70 மைல் தொலைவிலிருந்து அந்தக் குற்றத்திற்காக அவர்கள் இங்கே வரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இன்னும் பல இடங்களில் குற்றவியல் நீதிபதிகள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். இதனால் எவ்வளவு காலதாமதம்? நீதி கிட்டவில்லை என்ற கருத்து, இந்த



1985 ஜூன் 25] [திரு. பொன்முத்துராமலிங்கம்]

ஆட்சியிலே வலுப்படுகிறதேயல்லாமல், முல்லா போன்ற வர்கள், நரசிம்மன் போன்றவர்கள் சிறை சீர்திருத்தத்தைப் பற்றிச் சொல்லியிருக்கின்ற அடிப்படையிலே நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படுகின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் கூறமுடியும். எனவே நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இன்னும்கூட, ஏ.ஜி. அவர்கள் சில குறை பாடுகளை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 1982–83 ஆம் ஆண்டினுடைய கம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இன்டியா அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார்கள். Construction of buildings for Civil and Criminal Courts-Medical College Campus at Palayamkottai-Total Grant Rs. 30.00 lakhs—Surrender Rs. 7.40 lakhs.

அதேபோல் construction of court buildings for Chief Judicial Magistrate and Sub-Divisional Magistrate Courts at Erode—Total grant Rs.31 lakhs; Surrender 26.6 lakhs. அதேபோல் ஈரோட்டில் உள்ள ஒரு கட்டிடத்திற்கு ரூபாய் 12.54 லட்சம் ஒதுக்கப்பட்டது. அதில் சரண்டர் செய்யப் பட்டது 12.54 லட்ச ரூபாய். அதேபோல் ஈரோட்டில் இன் னொரு கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 12.54 லட்ச ரூபாய். அதில் திரும்ப சரண்டர் செய்தது ரூ. 12.54 லட்சம். எனவே ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் சரண்டர் செய்யப் பட்டதாக 1982–83 ஆம் ஆண்டு Comptroller and Auditor General of India's ரிப்போட்டில் 32-வது பக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே அரசால் ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் இன்றைக்கு செலவிடாமல் திரும்ப சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. என்ன நடந்து கொண்டு இருக்கிறது? இதை யார் மேற்பார்வை செய்து கொண்டு இருக்கிறார்கள்? அரசாங்கத்திற்கு இதை எல்லாம் நிர்வ கிக்க அக்கறை இருக்கிறதா என்பதை அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கும் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது என்னு டைய கருத்துக்களை இந்த அவையின் முன் எடுத்துவைக்க விரும்பு கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நெறி களுக்கு ஏற்ப சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற சாதாரண மக்களுக்கு சமநீதி வழங்குகின்ற வகையில் செயல்படுகின்ற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசுதான் என்பதை நான் முதற்கண் கோடிட்டுக் காட்ட விழைகிறேன். ஆனால் இதை அமல் ஆக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களிடம் குறிப்பாக உயர்நீதி மன்றத்திடம் இருந்தாலும், சமுதாயத்தில் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் நீதிமன்றங்கள் செயற்படுவதற்கு மாண்பு

மிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசு கடந்த 8 ஆண்டு காலத்தில் ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட வரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு பொன்முத்துராமலிங்கம் அவர்கள் இந்த, அரசின் நடவடிக்கைகளின் ஒரு பக்கத்தை மட்டும் எடுத்துக் காட்டினார்கள். எனவே அவர் விட்டுச்சென்ற மறுபக்கத்தை நான் அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் நினைவுபடுத்த வ்ரும்புகிறேன். அது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

1977-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பொறுப்பு ஏற்ற பிறகு நீதித்துறைக்கு சுதந்திரமாகச் செயல்படுகிற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மனச்சாட்சி இருப்பவர்கள் யாரும் மறுக்க முடியாது. நீதித் துறைக்கு மதிப்பினையும், நீதித் துறை வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு என்பதை நான் ஏற்கனவே சொன்னேன். இதற்கு சான்றாக அவையினுடைய கவனத்திற்கு சில புள்ளி விவரங்களை எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

1977-க்கு முன்னால் தமிழகத்தில் இருந்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை 396. 1977-க்குப்பின் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்கு பின் இன்று தமிழகத்தில் இருக்கிற நீதி மன்றங்களின் எண்ணிக்கை 591. 1972–லிருந்து 1977 வரை நீதிமன்றங்களுக்கு கட்டிடங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 77 லட்ச ரூபாய். ஆனால் 1980-லிருந்து 1985 வரை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசால் ஒதுக்கப்பட்ட தொகை கிட்டத்தட்ட 500 லட்ச ரூபாய் ஆகும். ஒரு காலத்தில் தொலை பேசி இல்லாமல் துயர் பட்டுக் கொண்டு இருந்த நீதிபதிகளுக்கு அந்தத் தொல்லையைப் போக்குகின்ற வகையில் அவர்களுடைய அலுவலகத்திலும் வீட்டிலும் இன்று 119 தொலைபேசிகள் வைக்கப் பட்டு இருக்கின்றன. அலுவலர்கள் இல்லை என்ற குறையைப் போக்குகின்ற வகையில் சிவில் துறையில் 146 அலுவலக உதவியாளர்களும், கிரிமினல் துறையில் 343 அலுவலக உதவியாளர்களும் இன்று நீதிமன்றங்களுக்குத் தமிழக அரசால் நியமிக்கப் பட்டு இருக்கிறார்கள்.

அதோடு மட்டும் அல்ல, சென்னையில் இருக்கிற கீழ் நிலையில் உள்ள நீதிமன்றங்களைச் சேர்ந்த நடுவர்கள் பஸ்ஸில் செல்லும்போது சாதாரண மக்களோடு சேர்ந்து அவர்களும் செல்ல வேண்டிய அவல நிலையை மாற்றுகின்ற முறையில் சென்னையிலே 6 இலட்சம் ரூபாயில் 3 மினி பஸ்கள் அவர்களுக்கென்று தனியாக ஏற்பாடு செய்திருப்பது புரட்சித் தலைவர் அவர்கள் அரசு.





ஒரு காலத்தில் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்ஸ் 600 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த நிலையை மாற்றி அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 750 ரூபாய் கொடுத்த அரசு இந்த அரசு என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

பப்ளிக் பிராசிக்யூட்டர்ஸ் ரீட்டெயினர் ஃபீ (Retainer Fee) 400 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்த அரசு இந்த அரசு. அதுமட்டுமல்ல. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்திற்காக அவர்களுடைய இன்னல்களைப் போக்குகின்ற வகையில் நான்கு தனிக் கோர்ட்டுகளை—நீதிமன்றங்களை தமிழகத்திலே அமைத்த அரசு இந்த அரசு.

பி. சி. ஆர்., என்று சொல்லக்கூடிய, 'புரொட்டக்ஷன் ஆஃப் சிவில் ரைட்ஸ்'—ஆதி திராவிட பழங்குடி மக்களின் சிவில் உரிமையினைப் பாதுகாக்கக்கூடிய வகையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலே, தனி நீதிமன்றங்கள் இன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவதை நான் இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதுமட்டுமல்ல. எஸன்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டங்கள் குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு 6 தனி நீதிமன்றங்கள் தமிழகத்திலே ஏற்படுத்தப் பட்டு இருக்கின்றன. நம்முடைய நண்பர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் புரொஹிபிஷன் கேஸ்களைப் பற்றிக் கூடச் சொன்னார்கள்.

இங்கே நாட்டிலே இருக்கிற ஏராளமான வழக்குகள் மதுவிலக்கு சம்பந்தப்பட்டவையாக இருந்தாலும் அதிலே இருக்கிற சாதாரண வழக்குகளை, அதனுடைய தன்மையினை ஆராய்ந்து அதை எல்லாம் வாபஸ் வாங்குகிற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்று நான் எடுத்துச் சொல்லியாகவேண்டும்.

மதுவிலக்கு சம்பந்தப்பட்ட 18 ஆயிரம் வழக்குகளில் வாபஸ் வாங்குகிற வழக்குகள், சாதாரண தன்மை உடையவை—சாதாரண மனிதன் சமுதாயத்தில் அறியாமல், தெரியாமல் செய்துவிட்ட தவறுக்காக உள்ளே அடைத்து வைத்து, அவனை சித்திரவதை செய்யக் கூடாது என்ற உயரிய நோக்கத்தில் 18 ஆயிரம் சிறு வழக்குகளில் 12 ஆயிரம் வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதிலே ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் அல்ல. தமிழகத்திலே இருக்கிற அத்தனை கட்சியைச் சேர்ந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டவர்கள் 12 ஆயிரம் பேராக இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு சிறையிலே வாடுகிற கைதிகளைப் பற்றி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அருமை நண்பர் முத்துராமலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில நேரங்களில், சில குற்றங்களுக்காக அண்டர்டிரயல்ஸ் என்று சொல்வார்களே—சார்ஜ் ஷிட் போடாமல், விசாரணை ஏதும் இல்லாமல் ஜெயிலிலே அடைத்து வைக்கப்படுகின்ற கைதிகளுடைய நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக—சில நேரங்களிலே தவறு நடந்துவிட வாய்ப்புண்டு; அவற்றை எல்லாம் களைவதற்கு அந்த அன்டர்டிரயல்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை, அவர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை ஆராய்ந்து, தகுதியானவற்றை வாபஸ் வாங்கி அவர்களை விடுதலை செய்வதற்காக குழு ஒன்று சென்னைக்கு அப்பாலே இருக்கிற ஊர்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலும் சென்னையிலே போலீஸ் கமிஷனர் தலைமையிலேயும் செயல்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகுதியான வழக்குகளில் அன்டர்டிரயல்ஸ் என்று சொல்லப்படுகிற குற்றவாளிகள் விடுவிக்கப்படுகிறார்கள். அந்த நிலையை ஏற்படுத்தியதும் புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு நன்மைகளையும் செய்த புரட்சித் தலைவர் அரசு, தகாத குற்றச்சாட்டுக்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே வைக்கப்பட்டபோது தனக்கு எதிராக தானே ஒரு கமிஷனை நியமித்து தான் நிரபராதி என்று நிரூபித்த அரசுதான் புரட்சித் தலைவர் அரசு.

அதே நேரத்தில் கமிஷன் நியமித்து, இங்கே ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு குற்றவாளிகள் என்று சொன்ன பிறகும் அந்தத் தீர்ப்புக்கு அடி பணிய மறுத்து, கால் கடுக்க டெல்லிக்குக் காவடி எடுத்து அந்தத் தீர்ப்பினை அமல்படுத்தக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தவர்களும் இங்கே இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேங்கிக் கிடக்கிற வழக்குகள் குறைவாக இருந்தாலும், அந்த வழக்குகளும் ஆண்டாண்டுக்காலமாக இங்கே பைசல் ஆகாமல் தேங்கிக் கிடக்கிற நிலைமையை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். அதற்கு இந்த மாநில அரசு மட்டும் காரணமில்லை என்பதை உணர்ந்து ஆகவேண்டும்;





மத்திய அரசுக்கும் அதிலே கடப்பாடு உண்டு. தமிழ் நாட்டு உயர்நீதிமன்ற நீதிபதிகளுடைய எண்ணிக்கை 25. ஆனால் இங்கே இருப்பவர்களோ 18 பேர்கள் தான். ஆக, இன்னும் 7 பேர்கள் நிரப்பப்பட வேண்டிய சூழ்நிலையில் பல்வேறு வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இதைத் தமிழக அரசு மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் இன்னும் அந்தப் பதவிகள் நிரப்பப்படவில்லை. எனவே, எஞ்சியுள்ள உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகள் 7ஐயும் விரைவிலே நிரப்புவதற்கு மாநில அரசு மீண்டும் மீண்டும் தளராத முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று நிரப்பப்படாமல் இருக்கின்ற கூடுதல் குற்றவியல் நீதிபதிகள் பதவிகளையும், அரசு சிவில் வழக்கறிஞர்கள் பதவிகளையும் மாநில அரசு விரைவிலே நிரப்பி, தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை விரைவிலே பைசல் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றுள்ள சூழ்நிலையில் மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் 3,500 ரூபாய்தான். ஆனால் சீஃப் ஜஸ்டிஸ்-க்கு 4,000 ரூபாய் சம்பளம். This is a constitutional obligation. Does it come under the purview of the State? It is a constitutional obligation of the Central Government. அந்த வகையில் இங்கேயுள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கூட 3,000 ரூபாய், 4,000 ரூபாய் என்று சாதாரணமாகச் சம்பளம் வாங்குகின்றபொழுது, நீதியை நிலைநிறுத்தக் கூடிய, சுதந்திரமாகப் பணியாற்றி நீதிமன்றத்திற்கு மரியாதை ஏற்படுத்தித் தரக் கூடிய உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம். The State Government must impress upon the Central Government for taking steps to enhance the salary of the High Court Judges.

அது மட்டுமல்ல, இன்றைக்கு, சிவில் வழக்கு மன்றங்களில், 5,000 ரூபாய் வரையில் முன்சீப் கோர்ட்டுகளில் போடலாம், அதற்கு மேல் போனால் சப் கோர்ட்டுகளில் போட வேண்டுமென்று இருந்த நிலைமையை மாற்றி 15,000 ரூபாய் வரையில் முன்சீப் கோர்ட்டுகளில் வழக்கு தொடரலாம் என்ற நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் ஸ்மால் காஸ் என்று வருகின்றபொழுது 500 ரூபாய் வரையில்தான் அவர்களுக்கு அதிகார வரம்பு இருக்கிறது. 500 ரூபாய்க்கு மேல் ஸ்மால் காஸ் வந்தால் முன்சீப் கோர்ட்டில் போட முடியாது. அதற்கு மேல் அப்பீல் என்றால் ஹைகோர்ட்டிற்குத்தான் செல்ல

வேண்டும். எனவே, இந்த 500 ரூபாய் என்ற வரம்பை அதிகப்படுத்த வேண்டும். ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷனை அதிகப் படுத்தியிருப்பதைப் போல, இந்த 500 ரூபாய் என்பதையும் அதிகப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு சிவில் வழக்கிலே பிராமிசரி நோட் அல்லது தொகைக்காக ஒரிஜினல் சைடிலே தாக்கல் செய்கின்றபொழுது, 10,000 ரூபாய் வரையிலே ஒரு ஸ்லாப் ; 20,000 ரூபாய் வரையிலே ஒரு ஸ்லாப் ; இப்படி இலட்சம் ரூபாய் வரையிலே ஸ்லாப் என்று ஸ்லாப் சிஸ்டம் உயர்நீதி மன்றத்தில் ஒரிஜினல் சைடிலே இருக்கிறது. ஆனால் கீழ்க் கோர்ட்டிலே 100க்கு ஏழரை ரூபாய் மவுண்ட் கட்டணம் என்று இருக்கிறது. இந்த டிஸ்கிரிமினேஷனுக்குக் காரணம் என்ன என்று புரியவில்லை. ஆகவே, மாநில அரசு ரேஷனலைஸ் செய்ய வேண்டும். உயர் நீதிமன்ற ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷனுக்கும் சபார்டினேட் கோர்ட்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நீக்குகின்ற வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வழக்கறிஞர்களின் கட்டணம் குறித்துச் சொல்ல வேண்டுமென்றால், ஆண்டு பலவற்றிற்கு முன்னால் கொண்டு வரப்பட்ட அட்வகேட் பீஸ் ஆக்டில் ஒரு டைட்டில் சொத்து மதிப்புள்ளதை வழக்கறிஞர் தாக்கல் செய்தால் அவருக்கு அனு மதிக்கப்பட்ட தொகை 100 ரூபாய்தான். பல ஆண்டுகளுக்கு முன்னால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தின்படி 100 ரூபாய் எவ்வளவு பெரிய வழக்கறிஞர்களாக இருந்தாலும் இது அவர்களைக் கட்டுப்படுத்தி விடுகிறது. ஆனால் இப்பொழுது காலம் மாறியிருக்கிறது ; நாணயத்தின் மதிப்பு குறைந்து இருக்கிறது. எனவே, மிக மிகக் குறைவாக உள்ள தொகையை, வழக்கறிஞர்களுக்கான கட்டணத்தை உயர்த்தி மாநில அரசு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று நான் மாண்பு மிகு சட்ட அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அட்வகேட் அண்ட் கிளார்க் என்று எடுத்துக் கொண்டோமென்றால், தமிழகத்திலே உள்ள வழக் கறிஞர்கள், அவர்களுக்குக் கீழே பணியாற்றுகின்ற கிளார்க்குகள் ஆகியவர்கள் பணியிலேயிருந்து ஓய்வு பெறுகின்றபொழுது உதவித் தொகை தர வேண்டுமென்ற நோக்கத்திற்காக, கேரளா மாநிலத் தில் உள்ள சட்டத்தின் அடிப்படையிலே, இங்கேயும் சட்டம் கொண்டு வர இருப்பதாக அண்மையில் மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். நான் இதைப் பாராட்டு கிறேன். இது காலங் கடந்த ஒன்று என்றாலும் கூட, உரிய காலத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, இந்தச் சமு தாயம் காப்பாற்றப்பட வேண்டுமென்று நான் சட்ட அமைச்ச ரவர்களைக் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இலவச சட்ட உதவியைப் பற்றி நான் ஒன்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலேதான் இந்த இலவச சட்ட உதவி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்று பல்வேறு மாநிலத்தவர்களும் பாராட்டுகிறார்கள். இது கூட கான்ஸ்டிட்யூஷனல் ஆப்ளி கேஷன்தான். அரசியல் சட்டத்தில் ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி வழங்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக் கிறது. இதன் அடிப்படையிலே, 1977 ஆம் ஆண்டிலிருந்து இங்கே மிகவும் பிரபலமான ஓய்வுபெற்ற நீதிபதிகளின் கீழ் தமிழ்நாட்டில் சட்ட உதவிக் குழு செயல்பட்டு வருகிறது.

(பிற்பகல் 12-10)

இந்தச் சட்ட உதவிக் குழு செயல்பட ஆரம்பித்தவுடன் 1977–81 வரை 46,000 மனுக்கள் இங்கே வந்தன ; 1982-ல் 46,000 மனுக்கள் வந்தன ; 1983ல் 61,000 மனுக்கள் வந்தன ; 1984-ல் 62,000 மனுக்கள் வந்தன. இதிலே அவர்களுக்கு சட்ட உதவி கொடுத்த வகையில் 16,000 வழக்கு களில், 13,000 வழக்குகள் அவர்கள் எடுத்துக் கொண்ட வழக்குகளுக்கு ஆதரவாக முடிந்து இருக்கின்றன என்பதை நான் பெருமையோடு கூறுகிறேன். பாராட்டுகிறேன். ஆனால், இந்த 13,000 வழக்குகள் போக எஞ்சியிருக்கிற வழக்கு களிலே சாதாரண இடைப்பட்டுள்ள ஏழை எளிய மக்களுக்கு ரெவின்யூ கோர்ட்டுகளில் சரியான நீதி கிடைக்காத நிலைமை இருக்கிறது. காரணம், தாசில்தாரிடம் உள்ள ரெக்கார்டு ஆப் டெனன்சியை எடுத்துக் கொண்டோமானால், அங்கே பணக்கார நிலச்சுவந்தார்களுக்கு எதிராக சாதாரண ஆட்கள் இலவச சட்ட உதவி வழக்கறிஞர் உதவியின்றி வாதாடுவது என்பது பெரிய கஷ்டமாக இருக்கிறது.

அதேமாதிரி, Fair Rent Act, Cultivating Tenants Protection Act for which RDOs and Tahsildars are Judicial Officers and in such cases கூட வழக்கறிஞர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த இலவச சட்ட உதவி பெறுகிற ஏராளமான ஏழை, எளிய மக்களுக்கு இந்த ரெவின்யூ கோர்ட்டிலே வழக்கறிஞர்கள் அப்பியர் ஆக முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு உண்மையான உதவி கிடைக்கவில்லையென்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, இந்த ஏழை, எளியவர் களுக்கு லீகல் எய்ட் உண்மையிலேயே வெற்றி பெற வேண்டு மானால், அந்த ரெவின்யூ வழக்குமன்றங்களிலே வழக்கறிஞர்கள் ஆஜராகி அந்த ஏழைகளுக்கு உதவுகிற சூழ்நிலையை நம்முடைய அரசு ஏற்படுத்தியாக வேண்டும். அதற்கு பாறாக Section 30 of the Advocates Act which is a Central Act தடையாக

இருக்கிறது. எப்படி இருக்கிறது என்றால், செக்ஷன் 30 ஆப் தி அட்வகேட்ஸ் ஆக்ட், ஒரு வழக்கறிஞரை குறிப்பிட்ட வழக்கிலே ஆஜராகாமல் தடுக்கிற பிரிவு. Unless Section 30 of the Advocates Act is amended it cannot be achieved. அதை அமெண்ட் செய்தாலொழிய வழக்கறிஞர்கள் ரெவின்யூ கோர்ட்டில் ஆஜராக முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே, மைய அரசினை வற்புறுத்தி—இந்த மாநில அரசு பல்வேறு சூழ்நிலையிலே சொல்லியிருக்கிறது, இதை அமெண்ட் செய்ய வேண்டுமென்று. இதற்கு முன்னாலிருந்த சட்ட அமைச்சர் இதற்கு ஒரு பில் கூட கொண்டு வந்தார்கள்.

THIRU T. R. VENKATARAMANAN: There is a ruling of the Court that lawyers alone should be permitted to appear in such cases. There are two rulings of the Punjab High Court as well as Delhi High Court, by which they are prohibited or barred from appearing before Tribunals as lawyers under Section 30 of the Act. My Hon. Friend wanted that the Section 30 of the Act should be amended by the Central Government, which is not correct in view of the two decisions of the Punjab and Delhi High Courts.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தியாவிலே இருக்கிற பல்வேறு நீதிமன்றங்கள் பல்வேறு மாறுபட்ட, கான்ட்ரடிக்டரி ஜட்ஜ்மென்ட்களை பல்வேறு வழக்குகளிலே கொடுத்திருக்கின்றன. Unless Section 30 is specifically amended, you cannot appear. பல்வேறு உயர்நீதிமன்றங்களிலே இருக்கிற தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் வேண்டுமானால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நடைமுறையில் இந்த 30-வது பிரிவு திருத்தப்பட்டாலொழிய வழக்கறிஞர்கள் அங்கே ரெவின்யூ கோர்ட்டில் அப்பியர் ஆக முடியாத நிலை இருந்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மையானால், தாராளமாக ரெவின்யூ கோர்ட்டிலே வழக்கறிஞர்கள், தாசில்தார் முன்னாலே ஆஜராகலாம், ஆர். டி. ஓ. முன்னாலே அப்பியர் ஆகலாம். இதெல்லாம் முடியாமல் இருப்பதற்குக் காரணம் Section 30 of the Advocates Act is not so far amended. அதற்கு மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்து, மைய அரசை இம்பிரஸ் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே, இந்தியன் எக்ஸ்பிரஸிலே இதுபற்றிய ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. There has been a greater awareness of the Legal Aid Services to the poor offered by the Tamil Nadu State Legal Aid and Advisory Board. The impact of the Board's Services have been significant in the areas of assistance to Undertrials and convict prisoners என்று



இந்தியன் எக்ஸ்பிரஸிலே, இந்த லீகல் எய்டைப் பற்றி சிறப்பாகப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இது முழுமையாக வெற்றி அடைவதற்கு இந்த செக்ஷன் 30-ஐத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மைய அரசை மீண்டும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இன்டகிரேஷனல் ஜுடிஷியரி. இதை அரசு அமுல்படுத்துவதற்கு ஆவலாக இருந்தாலும் இடையிலேயிருந்த உயர்நீதிமன்றத் தடை அதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆனால், இன்று இருக்கிற நடைமுறை வழக்கறிஞர்கள் 11 பேர்களை ஜுடிஷியல் ஆபீசர்களாக நியமித்தால், வழக்கறிஞர்கள் அல்லாத, நீதித் துறையிலே இருக்கிற அலுவலர்கள் 9 பேர்களை நியமிக்க வேண்டுமென்று ரூல் ஒன்று இருக்கிறது. இதைத்தான் மாநில அரசு 5 : 1 என்று கொண்டுவர முயற்சி எடுத்தது. அதற்குத் தடை வாங்கிவிட்ட காரணத்தால் அந்த முயற்சி கைகூடவில்லை. இப்போது இருக்கிற நடைமுறையில் எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஒருவர் சொன்னார், நீதித் துறையிலே இருக்கிற பலர் அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மென்டிலிருந்தும், ஃபிஷரீஸ் டிபார்ட்மென்டிலிருந்தும் மற்ற துறைகளிலிருந்தும் வந்தவர்கள்; ஆகவே நீதித் துறையின் குவாலிட்டி குறைந்து விட்டது என்று. இந்த விகிதத்தை 11 : 9 என்று மாற்றாமல் இதே நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தால் எதிர்காலத்தில் தீர்ப்பின் தன்மை மிகவும் குறைந்துவிடும். ஆகவே, இந்த விகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று, குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே தொழில் செய்து, திறமை பெற்ற வழக்கறிஞர்களை நீதிபதிகளாக நியமிக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்குள்ள கோட்டாவைக் குறைக்க வேண்டும். அந்த வகையில் விகிதத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹைகோர்ட் பெஞ்ச் அமைப்பது பற்றி சொன்னார்கள். இங்கே மாநிலத்தின் தலைநகரில் தவிர உயர்நீதி மன்றத்தின் ஆயம் அல்லது பெஞ்ச் ஒன்றை மதுரையில் அமைக்க வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆர்ட்டிகிள் 246-ன்படி அதற்கு யூனியன் பரிந்துரை வேண்டும்; ஜனாதிபதியின் அங்கீகாரம் வேண்டும். 1972-ல் இருந்தே தென் மாநில லிட்டிகன்ட்ஸ் நன்மையைக் கருதி மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னால் இருந்த அரசு வற்புறுத்திய தன் காரணமாக அதற்குப் பின்னால் வந்த இந்த மாண்புமிகு

புரட்சித் தலைவர் அரசும் வற்புறுத்தி வருகிறது. அதன் காரணமாக 1983 ஆம் ஆண்டு ஜஸ்வந்த் சிங் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்தக் கமிஷன் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்று அந்த அறிக்கை கிடைக்கும் என்ற ஏக்கம் தமிழகத்தின் தென் பகுதி மக்களுக்கு நிறைய இருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நண்பர் திரு. ரவீந்திரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பப்ளிக்பிராசிகியூட்டர், கவர்ன்மென்ட் பிளீடர் அப்பாயின்ட்மென்டுகளில் இந்த அரசு பாகுபாடு காட்டுகிறது, ஒரே சீராகப் பார்க்கவில்லை என்ற கருத்தை ஒரு குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

வட மாநிலங்களில் இருக்கிற நிலைமையை அவர்கள் பார்க்க வேண்டும். பீகார் மாநிலத்தின் ரெகுலர் ஹைகோர்ட் பாட்னாவில் இருக்கிறது. ஆனால் 305 கிலோமீட்டர் தூரத்தில் அதனுடைய பெஞ்ச் ஒன்று ராஞ்சியில் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தின் ரெகுலர் ஹைகோர்ட் ஜபல்பூரில் இருக்கிறது. ஆனால் 425 கிலோமீட்டர் தூரத்தில் அதனுடைய பெஞ்ச் ஒன்று இந்தூரில் இருக்கிறது. இராஜஸ்தானின் ரெகுலர் ஹைகோர்ட் ஜோத்பூரில் இருக்கிறது. அதனுடைய பெஞ்ச் ஒன்று 325 கிலோமீட்டர் தூரத்திலிருக்கிற ஜெய்ப்பூரில் இருக்கிறது. உத்தரப்பிரதேசத்தின் ரெகுலர் ஹைகோர்ட் அலகாபாத்தில் இருக்கிறது. அதனுடைய பெஞ்ச் 250 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற லக்னோவில் இருக்கிறது. இன்னொரு பெஞ்சும் லக்னோவில் அமைக்கப்பட முயற்சி நடக்கிறது. இது பாகுபாடு இல்லையா ? நீண்டகாலமாக இந்த பெஞ்சுகள் வடமாநிலங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் சென்னையிலிருந்து 300 மைல் தூரத்தில் இருக்கிற மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பெஞ்ச் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டால் 10 ஆண்டுக் காலமாக அது தள்ளி வைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு கமிஷன் போட்டார்கள். கமிஷன் ரிப்போர்ட் பின்னாலே வரும். எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. மதுரைக்கு பெஞ்ச் என்று வரும் என்ற ஏக்கத்தோடு தென் மாவட்ட மக்கள், குறிப்பாக மதுரை மாவட்ட மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அரசின் பார்வை எப்பக்கம் திரும்பும் என்று தெரியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். எனவே இங்கே இருக்கிற பிரதான எதிர்க்கட்சி நண்பர்கள் அங்கே இருக்கிற ஆளும் கட்சி நிர்வாகத்திடம் பேசி, அமைச்சர்களிடம் எடுத்துச் சொல்லி, மதுரையிலே



ஒரு ஹைகோர்ட் பெஞ்சை அமைக்க ஆணை பெறவேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்றை தென் மாநில மக்கள் நன்மையைக் கருதி சென்னையில் அமைக்க ஆணை பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே இருந்த மத்திய சட்ட அமைச்சரும் சில நீதிபதிகளும் சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்றை சென்னையில் அமைக்க ஆதரவாக இருந்தார்கள். ஆனால் அண்மையில் சட்ட அமைச்சரும் சுப்ரீம் கோர்ட் சீப் ஜஸ்டிசும் அதற்கு மாறான சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு சுப்ரீம் கோர்ட் மட்டும் இருந்தால் போதும், இன்னொரு கோர்ட் அல்லது பெஞ்ச் அமைக்கப்பட்டால் அதனுடைய சீர்மை கெட்டுவிடும் ; லிட்டிகன்ட் பப்ளிக் வேண்டுகோள் உகந்ததல்ல என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–20)

அதைப்போன்று என்னுடைய அருமை நண்பர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்த அவையிலே பலமுறை கேள்வி போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற உயர்நீதிமன்றங்களின் பெயர்கள் அந்தந்த மாநில மொழியிலேயே இருக்க வேண்டும். கேரளாவில் அவ்வாறு இருக்கின்றது ; ஆந்திரப் பிரதேசத்தில்—ஆந்திர பிரதேச ஹைகோர்ட்—அவ்வாறு இருக்கின்றது. கர்நாடகாவில் கர்நாடகா ஹைக்கோர்ட் என்றெல்லாம் இருக்கின்றது. ஆனால் இங்கே மட்டும் பிரிட்டிஷ்காரர்கள் விட்டுச் சென்ற அதே நிலையில் மெட்ராஸ் ஹைகோர்ட் என்று இருக்கின்றது. எனவே இந்த மாநிலத்தின் மொழியான தமிழ் மொழியின் அடிப்படையில் தமிழ்நாடு என்று சிறப்பிக்கின்ற வகையில் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று இங்கே இருக்கின்ற ஹைகோர்ட்டிற்குப் பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட கோரிக்கையை மத்திய அரசு செயல்படுத்துவதற்கு மாநில அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய ஊரில், இப்போது பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்ற பெயர் வந்ததற்குப் பிறகு பழனி ஒரு ரெவின்யூ டிவிஷனாக மாறி இருக்கின்றது. அங்கே இப்போது செக்கன்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும், முன்சீப் கோர்ட்டும் மட்டுமே இருக்கின்றன. எனவே அங்கே ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசு தாய்க் குலத்திற்கு என்று பல முறைகளிலே நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற அரசு என்று சொல்லப்படுகின்றது. எனவே இந்த அரசு அது சம்பந்தமாக மேலும் சில சட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே குற்றவியல் சட்டத்திருத்தம் 1983 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதிலே சில கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். அதிலே மிக முக்கியமாகக் கொண்டு வரவேண்டிய ஒரு திருத்தம் இருக்கின்றது. எனவே அதைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது கஸ்டோடியன் ரேப் என்ற ஒரு பிரச்சினை இருக்கின்றது. அதாவது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பெண்களைக் கற்பழித்தல் அல்லது உடல் உறவு கொள்பவர்களின் பட்டியல் அதில் சேர்க்கப்படாமல் விடுபட்டு இருக்கின்றது. பொருளாதார ஆதிக்கத்தைப் பயன்படுத்தி அத்தகைய குற்றத்தைச் செய்பவர்கள் பற்றியும் அதிலே சேர்க்கப்படாமல் உள்ளது.

உதாரணமாக, நிலப்பிரபுக்கள், ஆலை முதலாளிகள், கான்ட்ராக்டர்கள் போன்றவர்கள் பொருளாதார ஆதிக்கத்தைப் பயன்படுத்தி தங்களிடம் பணிபுரிகின்ற பெண்களுடன் உடல் உறவு ஏற்படுத்திக் கொள்வது போன்ற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களை இன்று குற்றவாளிகள் பட்டியலிலிருந்து விடுவிப்பதற்கான ஏற்பாடு இருக்கின்றது. ஆகவே கஸ்டோடியன் ரேப் செய்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு வசதி உள்ளவர்களாக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கக்கூடிய முறையில் சட்டத் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே இன்னொரு பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் குற்றம் பற்றி வெளியிடப்படக்கூடிய செய்திகளைப் பொறுத்தவரையில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணத்தால் என்ன ஏற்படுகின்றது என்றால், குற்றம் செய்தவர்களின் பெயர் கூட வெளியிடப்படுவது தடுக்கப்படுவதால் குற்றவாளிக்குச் சாதகமாக அது அமையக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. சட்டக் கமிஷன் இப்படி ஒரு பரிந்துரையைச் செய்யவில்லை. ஆகவே இப்படிப்பட்ட குற்றவாளிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பெயரை வெளியிடுவதற்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும். அந்த முறையில் உள்ள சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதேபோன்று கற்பழிப்பு சம்பந்தமான விசாரணைகளை தனிமையில் நடத்தக்கூடிய நிலைமை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் பாடுபடும் ஸ்தாபனங்கள் மற்றும் பெண் பத்திரிகையாளர்கள் போன்றவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் சம்மதத்தின் பேரில் அந்த நடவடிக்கைகளைக் காண அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். கற்பழிப்புக் குற்றங்களைப் பொறுத்தவரையில் பல முக்கியமான சிபாரிசுகளைச் சட்டக் கமிஷன் செய்திருக்கின்றது. அதாவது கற்பழிக்கப்பட்ட பெண்களை விசாரிக்கின்றபோது அந்தப் பெண்களிடத்தில் அப்போது குற்றம் செய்தவர்கள் தவிர, கடந்த காலத்தில் உள்ள உடல் உறவுகள் பற்றி கேள்விகளை எழுப்புவதற்கு தடை செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த முறையிலும் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் ரீசனபிள் சஸ்பிஷன் என்ற ஒரு முறை இருக்கின்றது. இதுசம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். அதாவது வரதட்சணைக் கொடுமையால் சிலர் கொலை செய்யப்படுகிறார்கள். அப்படி கொலை செய்யப்படக் கூடியவர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்தப்படக் கூடிய நேரத்தில், அந்த விசாரணையில் 7 ஆண்டுகளுக்குள் தற்கொலை செய்து கொண்டாலோ அல்லது சந்தேகமான சூழ்நிலையிலே இறந்திருந்தாலோ, அம்மரணம் குறித்து கடுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் எப்படிப்பட்ட முறையிலே அந்த விசாரணையை நடத்த வேண்டும் என்று சட்டக் கமிஷன் சில கெய்ட்லைன்ஸ்களை கொடுத்திருக்கிறது. அந்த முறையிலே சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இப்படிப்பட்ட விஷயங்களிலே வழக்கு ஒன்றில், டெல்லி மாவட்ட நீதிபதி ஒருவர் கூட வரதட்சிணைக் கொடுமையால் செத்தவர்கள் சம்பந்தமான தீர்ப்பு கொடுக்கக் கூடிய நேரத்தில் மாதர் சங்கத்தினுடைய உதவியையும் இப்படிப்பட்ட விஷயங்களில் நாட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் சங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், காவல் துறை இன்று அதைப் பயன்படுத்திக் கொள்வதே இல்லை. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூன் 25

அதேபோல வரதட்சிணை தடுப்புச் சட்டம் 1984-லே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், பெண் வீட்டார்கள் அளிக்கும் அன்பளிப்புகளைப் பொறுத்த அளவிலே, அதற்கு ஒரு உச்ச வரம்பு விதித்து, அதற்குத் தகுந்த அளவிலே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். அப்படி ஒரு சட்டத் திருத்தம் இல்லாததன் காரணமாகத்தான் பல பிரச்சினைகள் இதிலே ஏற்படுகின்றன. ஆகவே அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு இப்படி ஏதாவது செய்தாக வேண்டும். இப்படியெல்லாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததன் விளைவாகத்தான் 6 மாத கர்ப்பிணியான ஒரு பெண் அவளுடைய கணவன் வீட்டில் தீக் காயங்களினால் மரணம் அடைந்ததாக சமீபத்தில் கூட வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. தொடரப்பட்ட அந்த வழக்கில், குழந்தையின் பிறப்பை ஒட்டி ஸ்கூட்டர் ஒன்று அளித்தாக வேண்டும் என்று பெண் வீட்டார்களை கேட்டதன் விளைவாக இம்மரணம் நேரிட்டதாக டெல்லி கோர்ட்டிலே வழக்கு நடைபெற்று வருகிறது. ஆகவே திருமணமாகி 7 வருஷம், 8 வருஷத்திற்குப் பிறகும் கூட, பெண்கள் வரதட்சிணை போன்ற கொடுமைக்கு உட்படுத்தப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த வரதட்சிணை சட்டத்தின் முக்கிய பலவீனம் என்னவென்றால், அந்தச் சட்டத்தின் விதிகளை அமல்படுத்துவதற்கு தேவையான நிர்வாக இயந்திரங்களை, இதற்கென தனியாக ஏற்பாடு செய்யத் தவறி இருப்பதுதான். ஆகவே வரதட்சிணை தடுப்பு அதிகாரிகளைத் தனியாக நியமித்து, அவர்களுக்கு உதவ சமூக பணிகளை மேற்கொண்டவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவையும் ஏற்படுத்தி, பிறகு அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கான வகையில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு விஷயம். குடும்ப நீதிமன்ற சட்டங்கள் 1984-லே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே இன்று அப்படிப்பட்ட நீதிமன்றங்களை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு முக்கியமான பிரச்னை. இன்று குமரி மாவட்டத்தில் கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களுக்கு சொத்து உரிமையில் சமத்துவம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. திருவிதாங்கூர் ராஜ்யத்திலே உருவாக்கப்பட்ட அந்தச் சட்டத்தின் 22 வது பிரிவின்படி பெற்றோர்கள் சொத்தில் ஆண்களுக்குக் கொடுத்ததில் ¼ பங்கு அல்லது ரூபாய் 5 ஆயிரம், இவற்றில் எதன் மதிப்பு குறைவோ அது என்ற வகையில் பெண்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.



1985 ஜூன் 25] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அது எவ்வளவு பாரபட்சமான சட்டம் என்பதைப் பற்றி நான் பிரத்தியேகமாக விவரிக்கத் தேவையில்லை. ஆகவே 1916-லே திருவிதாங்கூர் ராஜ்யத்திலே உருவாக்கப்பட்ட அந்தச் சட்டம் இன்று காலாவதியான ஒரு சட்டம் என்ற வகையில் கொண்டு வந்து, அந்த கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களுக்கு சொத்தில் சம உரிமை இருக்கிறது என்ற வகையில் திருவிதாங்கூர் கிறிஸ்துவ சொத்து வாரிசு உரிமைச் சட்டத்தின் 22-வது பிரிவினைத் திருத்தம் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன். இப்படி இத்தனை திருத்தங்களையும் செய்வதற்குத் தனியாக இந்தத் தமிழக சட்ட மன்றத்திலே தீர்மானங்களைப் போட்டு, அதை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்ற முறையிலே கொண்டு வந்தாலும் கூட, மத்திய அரசை இது குறித்து வலியுறுத்துவதற்கு நாங்கள் எல்லோரும் ஒத்துழைக்கத் தயார். அந்த வகையிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி இன்று உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள். அரசு கூட அதிலே ஒரு பார்ட்டியாகச் சேர்த்து இம்பிளீட் பண்ணி போடப்பட்டிருக்கிற அந்த வழக்கைத் துரிதமாக தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

இன்னொரு விஷயம் என்ன என்றால், இந்த பிகமி என்பது பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய பிரச்னையாக அமைந்திருக்கிறது. அதைத் தடுக்க கூடிய முறையிலே எல்லா திருமணங்களையும் இன்றைக்குக் கட்டாயம் ரெஜிஸ்டர் பண்ணுகிற அளவில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கல்யாணங்களைக் கட்டாயமாக ரெஜிஸ்டர் பண்ண வேண்டுமென்ற நிலைமை இல்லை. அந்தச் சமுதாயத்தில் 'போலிகமி சிஸ்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்துகிற முறையிலே சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு காமன் சிவில் கோட் இன்றைக்கு ஏற்படுத்துவதற்காக மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்னொரு விஷயத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். 1984-ம் ஆண்டு மே மாதத்தில் ஒரு ஜனநாயக மாதர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஹோம் செகரட்டரி அவர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர்கள் ஒரு கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அதாவது 'அப்ஸீன் போஸ்ட்டர்ஸ்'ஸைத் தடுக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஹோம் செகரட்டரியோடு 'லா செகரட்டரி' அவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் 'பிலிம் போஸ்டர்ஸை சென்சார்' பண்ணுவதற்காக தமிழக அரசு சட்டம் தயாரித்து அதை மத்திய அரசினுடைய அங்கீகாரத்திற்காக அனுப்பியிருக்கிறது என்று தெரிவித்தார். இன்னும் மத்திய அரசு அப்படிப் பட்ட சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கவில்லை என்று தெரிகிறது. இன்றைக்கு அந்தச் சட்டம் மற்ற மாநிலங்களில் நிறைவேற்றப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அந்தச் சட்டத்தை இந்த மாநிலத்திலே நிறைவேற்றுகிற முறையிலே மத்திய அரசினுடைய ஒப்புதலை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சில இலாக்காக்களில் பெண் தொழிலாளர்கள் பொறுத்தவரையில், உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், காவல் துறையில் பெண் வார்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 7½ ரூபாய் சம்பளம்தான் தரப்படுகிறது. கைதிகளைக் கொண்டு போனால் பஸ் கட்டணத்தைக் கூட இந்தச் சம்பளத்திலிருந்துதான் செலுத்துகிற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றக்கூடிய வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வருவாய்த் துறை கட்டுப்பாட்டிலிருந்த 119 சிறைச் சாலைகளை சிறைத் துறையின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனுடைய நல்ல நோக்கத்தை நான் வரவேற்கிறேன். அந்தக் கைதிகளை நல்ல முறையில் ரிபார்ம் பண்ணவேண்டுமென்ற முறையில் தான் அவை கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால் அந்த முறையில் நல்ல நடவடிக்கைகள் சிறைகளில் இல்லை. பல இடங்களில் திருட்டு, ஊழல்களை எதிர்க்கக்கூடிய கைதிகளை இன்றைக்கு உதைக்கிறார்கள். கொலை செய்திருக்கிற நிலையைக் கூட பார்க்க முடிகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கோயம்புத்தூர் சிறையில் சந்திரன் என்ற தொழிலாளி இப்படி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவர்களுடைய சொந்தக்காரர்கள் போய் பிணத்தைக் கேட்ட நேரத்தில் அது கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு பல சிறைச்சாலைகளில் ஊழல்கள் நடந்து கொண்டிருப்பதாகத்





தெரிகிறது. இது சம்பந்தமாக ஜூனியர் விகடன் 27—2—1985 இதழில் பக்கம் 20, 21, 22-ல் உள்ள விவரத்தை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஜெயிலில் நடக்கிற கொலை, கொள்ளை என்பது அந்த ஆண்டவனுக்கே பொறுக்காது. எங்களைப் போன்ற கைதிகளுக்கு திரும்பத் திரும்ப வெளியே சொல்ல முடியாது. சிறைச்சாலை மானியக் கோரிக்கை வருகிறபோது சில எம்.எல்.ஏ. க்களுக்கு அனுப்பி அதை சட்டசபையில் பேசியிருக்கிறார்கள். இதற்காக நான் பல சித்ரவதைகளை அனுபவித்து விட்டேன். ஒரு தடவை என்னை நிர்வாணமாகவே நிற்கவைத்து.... என்று சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சட்ட சபையில் இருக்கிற எம்.எல்.ஏ. க்களுக்கு சில தகவல்களை கொடுத்ததன் காரணமாக சட்டசபையில் அவை பேசப்பட்டதற்காக இன்றைக்கு சிறைச் சாலைகளில் கைதிகள் சித்ரவதைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். கடைசியாக அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ''என்னை நக்சலைட் என்று பட்டம் சூட்டி தனியாக அடைத்து வைத்தார்கள்'' என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இப்படிப்பட்ட நிலைமையை நாம் நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது. இதற்குக் காரணம் என்ன? மதுரைச் சிறையில் நடந்த சில தகாத நடவடிக்கைகளில் அடிஷனல் சூப்பிரன்டென்ட்டென்ட் அவர்கள் ஈடுபட்டதை அவர்கள் வெளியிலே கொண்டு வந்தார்கள் என்பதுதான்.

அதுமட்டுமல்லாமல், இது சம்பந்தமாக அவர்கள் ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி திரு. பி. என். பகவதி அவர்களுக்கும், உயர்நீதி மன்றத்தினுடைய நீதிபதி திரு. சத்தியதேவ் அவர்களுக்கும் அனுப்பியதுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. இதிலே ஒரு விஷயம் என்னவென்றால், மதுரைச் சிறையில் அன்று மே 1982-ல் அடிஷனல் சூப்பிரன்டென்ட்டென்ட் ஆப் ஜெயில் அவர்கள் பல கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து கொடுக்கப்பட்ட, குறைந்த கொட்டேஷனை திருத்தி, அதற்குப் பிறகு, அஹமத் கோ-ஆப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ் என்ற ஸ்தாபனத்திலிருந்து அதிகமான விலைக்கு பொருட்களை வாங்கி, 22 ஆயிரம் ரூபாய் அவர்கள் கொள்ளை அடித்ததாகச் சொல்லப்படுகிறது.

அதேபோன்று, அங்கேயுள்ள பிளேட்டுகளைத் திருடி, 7 ஆயிரம் ரூபாய்க்கு அவர்கள் விற்றதாகவும், அதைக் கொண்டு போகக்கூடிய நேரத்தில் மதுரையில் உள்ள காவல் துறையினர் பிடித்து, பி-2 போலீஸ் ஸ்டேஷனிலே கிரைம் நெம்பர் 1593/82 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவர் தஞ்சாவூரிலே 2 லட்சம் பெறுமானமுள்ள வீட்டைக் கட்டியிருக்கிறார் என்றும், இப்படிப்பட்ட கொள்ளைகளிலே அன்றைய தினம் இருந்த டி.ஐ.ஜி. க்கும் பங்கு உண்டு என்றும் சொல்லப்படுகிறது. நான் என்ன சொல்கிறேன்

என்றால், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நிச்சயமாக நாம் தடுத்தாக வேண்டும். இப்படிப்பட்ட உணவுப் பொருட்களை, மற்றும் துணி போன்ற பொருட்களை திருடிக் கொண்டு செல்வதன் காரணமாக பல சிறைகளிலே துப்பாக்கிப் பிரயோகம் கூட நடந்திருக்கிறது. குறிப்பாக மதுரை, திருச்சி போன்ற இடங்களில். ஆகவே, இந்தக் கைதிகளுக்குக் கொடுக்கக்கூடிய பொருட்களை திருடக்கூடிய நிலைமையை நாம் நிச்சயமாக அனுமதிக்கக்கூடாது.

அதைப் போன்று நீண்ட காலமாக் ரிமாண்டிலே கைதிகளை வைத்திருக்கக்கூடிய நிலைமையையும் நாம் மாற்ற வேண்டும். இன்றைக்குக் கூட இந்து பத்திரிகையில் ஒரு செய்தி சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது. இன்று கிரிமினல் கேஸ்களைப் பொறுத்த வரைக்கும், சார்ஜ் ஷீட் கொடுப்பதற்கு 2 வருட காலமும், அதற்கு மேலும் ஆகிறது. ஆகவே, இப்படி நீண்ட காலமாக அவர்களை ரிமாண்டிலே பிரிசனர்களாக வைத்து, அதன் காரணமாக அவர்களுக்கு மெண்டல் டிஸ்ஆர்டர் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நீதிபதி இஸ்மாயில் கமிஷனுடைய ரெக்கமன்டேஷன்கள் என்ன ஆயிற்று? முல்லா கமிஷன் ரெக்கமன்டேஷன் என்ன ஆயிற்று? 1978 ஆம் ஆண்டு போடப்பட்ட ஜெயில் ரீபார்ம்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், 211 ரெக்கமன்டேஷன்கள் கொடுக்கப்பட்டன. 81 ரெக்கமன்டேஷன்கள் சம்பந்தமாக உத்தரவுகள் போடப்பட்டு இருக்கின்றன, அதிலே அமுலுக்கு வந்தது 29. இப்படி ரிபார்ம்ஸ் கமிட்டிகள் போட்டு, அவர்களுடைய முடிவுகள் வந்ததற்குப் பிறகும், இதிலே சுணக்க நிலை ஏற்படுவதன் காரணமாக கைதிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தக்கூடிய நிலைமைகள் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, இதை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

அடுத்து, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த மாநிலத்தில் உள்ள அனைத்து எம்.எல்.ஏ.க்களும், ஜெயில் விசிட்டர்களாக அனுமதிக்கப்பட்டு இருந்தார்கள். ஆனால் இந்த அரசு என்ன காரணத்தாலோ தற்போது அந்த அனுமதியை கொடுக்கவில்லை. ஆகவே மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் ஜெயிலுக்கு சென்று, அந்தக் கைதிகளுடைய பிரச்சனைகளைத் தெரிந்து கொள்வதற்கும், இது சம்பந்தமாக அமைச்சருக்கோ அல்லது ஐ.ஜி.க்கோ அந்தக் குறைபாடுகளைச் சொல்வதற்கான வாய்ப்பு இன்றைக்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு மறுக்கப்படுகிறது. எனவே, இதை மாற்றி, எல்லா எம்.எல்.ஏ.களும் சிறைச்சாலைகளுக்குச் சென்று, ஜெயில் விசிட்டர்களாகச் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் வார்டர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வேலை நேரம், அவர்களுடைய வீட்டு வசதி ஆகியவை எல்லாம் இன்றைக்கு மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கோயம்புத்தூர் சென்ட்ரல் ஜெயிலிலே உள்ள வார்டர்களின் வீட்டு வசதி சம்பந்தமாக சென்ற 7 ஆண்டு காலமாக இந்தச் சட்டமன்றத்திலே பேசப்பட்டது. ஆனால், இன்னும் அதற்கு ஒரு நல்ல நிலைமை ஏற்படவில்லை. இன்னும் அதைப்போல லைப் பிரிசனர்கள் ரிலீஸ் சம்பந்தமாக சில கருத்துக்கள் பேசப்பட்டன. இது சம்பந்தமாக திட்டவட்டமான முடிவுகளை நாம் எடுக்க வேண்டும். 10 அல்லது 12 வருடம் இருந்தால் அவர்களை வெளியில் விட வேண்டும் என்ற நிலைமைகள் ஏற்பட வேண்டும். எல்லோருக்கும் ஒரு முடிவாக இருக்க வேண்டும். அதில் பாராபட்சம் கூடாது.

(பிற்பகல் 12-40)

அதேபோல் இன்று கைதிகள் படிப்பதற்கு கொடுக்கப்படுகின்ற பத்திரிகையில் ஒரு சில பத்திரிகைகள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றன. குறையாக சொல்லவில்லை, இப்போது ''அண்ணா'' பத்திரிகையை நீங்கள் அனுமதிக்கிறீர்கள், அதேபோல் மற்ற கட்சிப் பத்திரிகைகளையும் ஏன் அனுமதிக்கக் கூடாது?

அதேபோல் அந்த கைதிகளைப் பொறுத்த வரையில் நாட்டில் நடக்கக்கூடிய விஷயங்களை தெரிந்து கொள்கின்ற முறையில் பல்வேறு கருத்துக்களை அவர்கள் தெரிந்து கொள்ளுகின்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்று இந்த கைதிகளைப் பொறுத்தவரையில் வேலைக்கு வேஜஸ் சில மாநிலங்களில் கொடுக்கப்படுகிறது. அது போன்ற முறை இன்று ஒரு சிறையில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று கொள்கைகுறிப்பில் பார்த்தேன். இதை எல்லா இடங்களிலும் கொண்டு வருகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இன்று உயர்நீதிமன்றத்தில் உள்ள கேஸ்களைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய நிலையைப் பார்க்கும்போது இன்று இருக்கக்கூடிய நீதிபதிகள் காணாது என்றுதான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால், 1982 ஆம் ஆண்டில் 696 கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த வருடத்தில் டிஸ்போஸ் செய்யப்பட்ட வழக்குகள் 378. 1983-ல்

707 கேஸ் அட்மிட் செய்யப்பட்டிருக்கிறது. அதில் டிஸ்போஸ் செய்யப்பட்டவை 583. 1984-ல் அட்மிட் செய்யப்பட்டவை 918 கேஸ்கள். அதில் டிஸ்போஸ் செய்யப்பட்டவை 352 கேஸ்கள் ஆகும்.

இன்று ரிட் பெட்டிஷனைப் பொறுத்தவரையில், நாம் உடனடியாக சில முடிவுகளை எதிர்நோக்கி விமோசனத்திற்காக நீதிமன்றங்களுக்குப் போகிறோம், ரிட்பெட்டிஷன் போடுகிறோம். ரிட் பெட்டிஷன் சம்பந்தமாக அங்கே என்ன நடக்கிறது என்றால் 5 வருட காலமாக அந்த ரிட் பெட்டிஷனை டிஸ்போஸ் செய்யாமல் அது ஒரு முடிவுக்கு வராமல் இன்று ஒரு தொழிற்சாலையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்த கேஸ் ரெஃபர் செய்யவில்லை என்றால் ரெஃபர் செய்ய வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திற்குச் சென்றால் அங்கே 5 வருட காலம் முடித்துதான் அதை ரெஃபர் செய்யவேண்டுமா ? வேண்டாமா ? என்ற முடிவு கிடைக்கிறது. இதனால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒரு வருடத்தில் அட்மிட் செய்யப்படுகிற ரிட் பெட்டிஷனின் எண்ணிக்கையை நாம் பார்க்கும்போது ஒவ்வொரு வருடத்திலும் 3-ல் ஒரு பங்குதான் டிஸ்போஸ் செய்யப்படுகிறது. ஆகவே, இன்று நீதிபதிகளுடைய எண்ணிக்கை போதாது. அதிகமாக நியமனம் செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். இப்போது இருக்கக்கூடிய நீதிபதிகளில் 5 நீதிபதிகள் பதவிகள் இன்று வேகண்டாக இருக்கின்றன என்று தெரிகிறது. அதை யாவது உடனடியாக பில் அப் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் இண்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் 3 மாத காலமாக வேகண்டாக இருக்கிறது. அதையும் பில்அப் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதனை மனிதனாக வாழ வழி செய்வது தான் சட்டம். தமிழகத்தில் சட்டம் ஒரு நல்ல கட்டுப்பாட்டோடு இருப்பதால்தான் நீதி நிர்வாகம் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. நீதி நிர்வாகத்தில் அதிகார குறுக்கீடு இல்லாமல், அதிகார தலையீடு இல்லாமல் காவல் தெய்வமாய் சிறந்த நிர்வாகம் புரிந்து வருகிறது எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள் அரசு. திறமையானவர்களை எளிதில் கண்டுகொள்ளக்கூடிய புரட்சித் தலைவர் அந்த பொன்னிறத் தலைவர் அவர்கள் மாண்புமிகு திரு பொன்னையனையே இதற்கும் நியமித்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளைக் காப்பதிலும் சிறந்த முறையில் நீதித்துறையையும், சிறைத் துறையையும் பார்த்து வருகிறார்கள் என்பதை பாராட்டி இந்த மானியத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.





திண்டுக்கல் நகரில் மாவட்ட நீதிமன்றம் அமைத்து அதற்கான கட்டிடங்களை கொடுத்து திறப்பு விழாவும் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல் 11 இலட்சம் ரூபாய் செலவில் அட்வகேட் சேம்பர் என்ற அளவில் அதைக் கட்டுவதற்கு ஆவன செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு எனது பாராட்டுதலையும் வாழ்த்துதலையும் எனது தொகுதி மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஃப்ரீ லீகல் எய்டு—சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் நல்ல முறையில் இந்த நீதிமன்றங்களை அணுக வேண்டும் என்ற முறையில் நல்லமுறையில் செயல்படுகின்ற இந்த அரசுக்கு நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் கூறுவது போன்று சிறைத் துறையில் அடிகளும், உதைகளும் இருக்கின்றன என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன், கல்கத்தாவில் அங்கு பத்திரிகை நிருபர்கள் எல்லாம் சிறையைச் சென்று பார்க்கக் கூடாது, அவர்கள் சென்று பார்க்க முடியாத சூழ்நிலையில் அதற்கு ஒரு ஸ்டே வாங்கிய அரசு அங்கே இருக்கிறது. இதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட அரசு அல்ல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு. யாரும் எதையும் சொல்லலாம், நல்லதை எதையும் எடுத்துச்சொல்லக் கூடிய அரசுதான் இந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு என்பதையும் இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

வழக்குமன்றங்களிலே இன்று வழக்குகள் சிவில் மன்றங்களிலே கொடுக்க வேண்டுமானால், அதற்கு மவுண்ட் தொகையாக ஏறத்தாழ ஏழரை பர்சன்ட் செலுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. புரோநோட்டைப் பொறுத்த மட்டில் அந்த ஏழரை சதவீதம் ஆனது அங்கே கடன் கொடுத்தவர்களுக்கு ஒரு பெரிய தொகையாக இருக்காது. ஆனால் அதே சமயத்தில் Property Application என்று சொல்கிறார்களே, அந்தச் சமயங்களிலே, அவர்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் சம்பந்தப்பட்ட வழக்கினை அங்கே கொடுக்கிறார்கள் என்றால், அதற்காக அவர்கள் ஏறத்தாழ 7,500 ரூபாயை அங்கே கட்டவேண்டி இருக்கிறது.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1985 ஜூன் 25

அதுவும் அல்லாமல், வழக்கறிஞர்களுக்கு கட்டணத்தையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே Court-fee குறைக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய ஒட்டன்சத்திரம் குப்புசாமி அவர்கள் கூறியது போல, to avoid the descrimination policy in the High Court அங்கு சிலாப் சிஸ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிலாப் சிஸ்டத்தை இங்கேயும் ஏற்படுத்த வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோல் கோயில் நிலத் தகராறுகள் அதிகமாக இருக்கின்றன. குத்தகை நிலச் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அங்குள்ள வழக்குகள் எல்லாம் முடிக்கப்படாமல் நீண்ட காலமாக இருந்து கொண்டு இருக்கின்றன.

ஆகவே, அப்படிப்பட்ட கோயில் நிலங்களில் உள்ள அந்த வழக்குகளை விரைவிலே முடிப்பதற்கு தனி டிரிப்யூனல் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். டாக்குமென்ட் ரைட்டர்கள், அதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லாதவர்கள் அந்தப் பத்திரங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சட்டங்கள் தெரிகிறதோ, இல்லையோ, அவர்கள் எதை நினைக்கிறார்களோ, அதை எல்லாம் ஒரு கட்டமாக, ஒரு இடத்திலே ஒரு கண்டிஷனாகவே போட்டு எழுதி விடுகிறார்கள். அந்தச் சூழ்நிலையின் காரணமாக, பல வழக்குகள் எழுத்தர்களின் காரணமாக, தோல்வி அடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே, அப்படிப்பட்ட டாக்குமென்ட் ரைட்டர்களை அவாய்ட் செய்து, அதற்குப் பதிலாக, வழக்கறிஞர்களே அந்தப் பத்திரங்களை எழுதுவதற்குரிய முறைகளைக் கொண்டுவந்து, அதற்காக அந்த வழக்கறிஞர்களுடைய 'பேனல்' ஒன்றை ஏற்படுத்தி, அவர்கள் தகுதிக்கு தகுந்தவாறு, அவர்களுடைய திறமைக்குத் தகுந்தவாறு, அவர்களுக்கு எந்த அளவுக்கு 'பாரிலே' அனுபவம் இருக்குமோ. அதற்குத் தகுந்தாற்போல், அவர்களை வரிசைப்படுத்தி அவர்களே பத்திரங்களை எழுதக்கூடிய அளவுக்குத் திட்டத்தினை ஏற்படுத்த வேண்டும்.



1985 ஜூன் 25] [திரு. ஆ. பிரேம்குமார்]

புரொஹிபிஷன் ஆக்ட் என்று ஒரு ஆக்ட் இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். வரவேற்கப்படக்கூடிய சட்டம் ஆகும். ஆனால், அதே நேரத்தில் அதை பஸ்ட் கிளாஸ் கோர்ட்டிலே தான் ஏற்க வேண்டும் என்று உள்ளது. திண்டுக்கல் நகரிலே ஜே.எஃப். சி. எம். என்ற ஒரு ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஜே. எஃப். சி. எம். கோர்ட்டிலே உள்ளவர்களுக்கு, அங்கு பெயில் மூவ் பண்ணுவது என்று சொல்லப்படும் ஜாமீன் முறைகளுக்கு, அவர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, அவர்கள் எஸ். டி. எம். கோர்ட்டுக்கு தான் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. அதைப் பொறுத்த மட்டில், எஸ். டி. எம். கோர்ட்டைப் பொறுத்த வரையில், ஏறத்தாழ 26 போலீஸ் ஸ்டேஷன்கள் அதன் கட்டுப்பாட்டுக்குள்ளே அடங்கியவை.

எனவே, ஏற்கெனவே, வேலைப் பளு அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையில் அப்படிப்பட்ட அந்த பெயில் மூவ் பண்ணக்கூடிய அதிகாரத்தையும் முதல் வகுப்பு நீதிபதிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

'இல்லீகல் அராக்' என்று அந்தச் சட்டத்திலே போலீசார் கைது செய்யக்கூடிய நேரத்திலே அங்கே சாம்பிள் எடுக்க வேண்டும் என்பதற்கு எந்தவிதமான வரையறையும், கட்டுக் கோப்பும் கொண்ட சட்டமானது இல்லை. No specific rules. no specific act and no specific action is prescribed for taking samples.

இரண்டு பாட்டில்களை வைத்து சிலர் எடுக்கிறார்கள். சிலர் மூன்று பாட்டில்களில் எடுக்கிறார்கள். அதற்கான தனிப்பட்ட முறையிலே ஒரு செக்ஷனை ஏற்படுத்தி, ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, Motor Accident Claims Tribunal என்று இருக்கிறது. அதில் விபத்தில் இறந்தவர்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கக்கூடிய அளவிலே அது செயல்பட்டு வருகிறது. அங்கே இருக்கக்கூடிய, விசாரணை செய்யக்கூடிய நீதிபதிகள் சப்-கோர்ட்டு நீதிபதிகளாக இருக்கிறார்கள். ஆனால் சப்-கோர்ட்டு நீதிபதிகளாக இருப்பவர்கள் பத்து ஆண்டுகள் அனுபவம் இருந்தால் தான் வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்ற முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே, சப்-ஜட்ஜாக இருக்கக்கூடியவர்கள் முன்சீபாக இருந்து, ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் அனுபவம் பெற்று வந்திருக்கக்கூடிய காரணத்தாலே அவர்களை அதை விசாரிக்கச் செய்யலாம் என்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல கருத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சிவில் வழக்குகளில் அந்த 'டெனன்சி, கோர்ட்டிலே' கேஸ்களை விசாரிப்பதற்கு தாசில்தாரை வைத்து இருக்கிறார்கள். தாசில்தார்கள் பலருக்கு அந்த டெனன்சி ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ்-ஐப் பற்றி தெரியாமல் இருக்கிறது. மேலும் சில செல்வச் சீமான்கள், அந்தத் தாசில்தார்களிடம் தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி, ஒரு வழக்கினை குத்தகைச் சட்டம் என்று போட்டு விடுகிறார்கள்.

அதை வைத்து சி. பி. சி. யில் செக்ஷன் 10 என்று சொல்கிறார்கள்; லிஸ்பென்டன்ஸ் என்று. அதை வைத்து ஏற்கெனவே ஒரே சார்புடைய ஒரு வழக்கானது இரு மன்றங்களிலே இருக்கக் கூடாது என்ற கருத்திலே அடுத்தவர்கள் சொல்லக்கூடிய வழக்கு முறையீடானது தடுக்கப்பட்டு விடுகிறது. ஆகவே, டெனன்சி கோர்ட்டை, ஒன்று முன்சீப் கோர்ட்டுக்கு மாற்ற வேண்டும் அல்லது அப்படிப்பட்ட வரைமுறையை தகுந்த கோர்ட்டுகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்தையும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—50)

பிரைவேட் கம்ப்ளெயின்டுகள் இருக்கின்றன. தனிப்பட்ட புகார்களை குற்றவியல் சைடிலே கொடுக்கின்ற நேரத்திலே புராசஸ் செய்வதை போலீஸ் ஸ்டேஷன் மூலம் செய்யச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லும்பொழுது அவர்கள் புராசஸைக் கொடுக்காமல் விட்டு விடுகிறார்கள்; சிலர் வாங்க மறுத்து விடுகிறார்கள். எப்படி சிவில் நீதிமன்றத்திலே இருக்கிறதோ அதைப்போல ஒன்று போலீஸ் மூலம் சார்பு செய்யப்பட வேண்டும், மற்றொன்று போஸ்ட் மூலம் செய்யப்பட வேண்டும் என்ற அந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வழக்கறிஞர்கள் தொழில் புனிதமான தொழில். அவர்கள் கேன்வாஸ் செய்யக்கூடாது என்று அட்வகேட் ஆக்டிலே இருக்கிறது. ஆனால் அதையும் மீறி டவுட்டுகள், புரோக்கர்கள் என்று வைத்து, அதனுடைய புனிதத் தன்மையையே கெடுத்து வருகின்றார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டு பிடித்து அவர்களைக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





தமிழக அரசு அன்டச்சபிலிட்டி ஆக்ட், சிவில் புரொடக்ஷன் ரைட் ஆகியவற்றை வைத்திருக்கிறது. அது வரவேற்கக் கூடியதுதான். சமுதாயத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட, அரிசன மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய சட்டம் அது. ஆனால், சில செல்வச் சீமான்கள், தங்களுக்குக் கீழே உள்ள அரிசன மக்களை வைத்து தங்களுக்கு வேண்டாதவர்களைப் பழிவாங்கக்கூடிய எண்ணத்தில் உள்ளவர்கள், இந்த ஜாதியின் பெயரைச் சொன்னாலே குற்றம் என்ற முறையிலே வழக்கு போட்டு விடச் செய்கிறார்கள். பர்டன் ஆப் ப்ரூபும் அந்த அக்யூஸ்ட்மேல்தான் இருக்கிறது. இதற்கு கம்பல்சரி இம்பிரிசன்மெண்ட் என்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிரைமாபேசி கேஸ் என்று உடனடியாக எடுக்காமல், ஒரு குழுவை அமைத்து, உண்மையிலேயே இப்படிப்பட்ட சமுதாயக் கேடுகள் நடந்திருக்கிறதா, எந்த ஜாதியின் பெயரையாவது சொல்லித் திட்டி இருக்கிறார்களா என்று விசாரித்து, அதற்குப் பிறகு அந்தச் சட்டத்தை வழிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடல்ட்ரேஷன் ஆக்ட் என்று இருக்கிறது. அதிலேயும் கம்பல்சரி இம்பிரிசன்மெண்ட் இருக்கிறது. பாலிலே தண்ணீரைக் கலந்தால் அதற்கு 6 மாதங்கள், 1,000 ரூபாய் என்று தண்டனை தருகிறார்கள். அதைப்போல உயிர் காக்கும் மருந்துகளில் கலப்படம் செய்தால் அதற்கும் 6 மாதங்கள், 1000 ரூபாய் என்று இருக்கிறது. பாலிலே தண்ணீரைக் கலந்தால் அது நோஹார்ம்; ஆனால் இந்த உயிர் காக்கும் மருந்துகளில் கலப்படம் செய்கின்ற நேரத்தில் அதனால் உயிரே பறிக்கப்படும் சூழ்நிலை இருப்பதால் அதற்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரத்திற்கு மாவட்ட நீதிமன்றம் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சீப் ஜுடீஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வரவேண்டியிருக்கிறது. அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். டி. எம். கோர்ட்டானது 26 போலீஸ் ஸ்டேஷன்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதைப் பிரித்து மற்றொரு எஸ். டி. எம். கோர்ட்டை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லேபர் கோர்ட் இல்லை; அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டைரக்டர் ஆப் ப்ராசிகியூஷன் என்று வைப்பது குறித்து ஆய்வில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அதையும் விரைவில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரத்தில் மொபைல் கோர்ட் ஒன்று அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற நல்ல கருத்தையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. பி. பி., அடிஷனல், பி.பி.-க்களுக்கு போன் மற்றும் பியூன் வசதியை அரசு செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கனவே, வழக்கறிஞர் நலச் சட்டம் என்று கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு வயது ஆக ஆகத்தான் வருமானம் பெருகுகிறது. அந்த நேரத்தில் அவர்கள் இடையிலே இறக்க நேரிடுகின்ற சமயத்தில் அவர்களுடைய குடும்பம் நடுத்தெருவிலே நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. இவைகளையெல்லாம் நினைவிற்கொண்டு, அந்த வழக்கறிஞர்கள் நலச் சட்டத்தை விரைவில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்போலவே, அங்கேயுள்ள குமாஸ்தாக்களுக்கும் இப்படிப்பட்ட சட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோர்ட்டிலே கொடுக்கின்ற வக்காலத்து, மெமோ ஆஃப் அப்பீயரன்ஸ் ஆகியவற்றுக்கு கோர்ட் பீஸ் ஸ்டாம்ப் வாங்குகிறோம். அதை அதிகப்படுத்தி, அதன் மூலம் வருகின்ற வருமானத்தை வைத்து, நல்ல விதியை ஏற்படுத்தி அதன் மூலம் வழக்கறிஞர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் கூறியதைப்போன்று மதுரையிலே ஹைகோர்ட் பெஞ்ச் அமைக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்திருக்கிறது; அதை விரைவில் கொண்டு வருவதற்கு மத்திய அரசிடம் என்னென்ன முறையில் சொல்ல வேண்டுமோ அந்தந்த முறையில் சொல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

* திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் மற்றும் தமிழ் நாடு சிறைத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேச அனுமதித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஜனதா கட்சியின் சார்பாக எனது கருத்துக்களை எடுத்து வைக்கிறேன். முதலாவதாக, நீதிபதிகள் நிரப்பப்படாமல் இருப்பதாக அரசு அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.





சென்னை உயர்நீதிமன்றத்திலே 25 நீதிபதிகள் இருப்பதற்குப் பதிலாக 18 நீதிபதிகள்தான் இருப்பதாக அரசு அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இப்படி நீதிபதிகள் நிரப்பப்படாமல் இருந்தால் வழக்குகள் எப்பொழுது முடிவடையும்? காலமெல்லாம் வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. கோர்ட்டுகளிலே பல்லாயிரக்கணக்கான வழக்குகள் தீர்த்து வைக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. சென்னை ஹைகோர்ட்டிலே 49,000 வழக்குகள் என்று மொத்தத்திலே போடப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அதே போல், மாவட்டத்திலே இலட்சக்கணக்கான வழக்குகள் இன்றைக்குத் தமிழ்நாடு பூராவும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இந்த வழக்குகள் எல்லாம் தீர்த்து வைக்கப்பட எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று தெரியவில்லை. உதாரணமாக சிவில் கேஸைப் பொறுத்தவரையில், அவனுடைய மகன்தான் அந்த வழக்கைப் போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அட்வகேட்டுகளை பார்த்து கேஸ்களைக் கொடுக்கும்போது, இன்னும் மூன்று வருஷம் சென்றால்தான் அந்த கேஸை எடுப்பார்கள் என்று சொல்கின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அப்படி இருந்தால் நீதித் துறை இந்த நாட்டிலே எப்படி நியாயமாகச் செயல்பட முடியும் என்பது என்னுடைய கேள்வி.

அதுபோல் கீழ்க் கோர்ட்டுகளில் எல்லாம் பல விசாரணைகள் தாமதப்படுத்தப்படுகின்றன. சிவில் கோர்ட்டில் ராமசாமி, கருப்பன் என்று வழக்கு போட்டு அவன் ஆஜராகா விட்டால், எக்ஸ் பார்ட்டி தீர்ப்பு வரும். ஆஜராகி இருந்தால், இன்னொரு நாள் அதற்கு வாய்தா, இப்படியெல்லாம் போடப்படுகிறது. இந்த வாய்தாவை விசாரிக்கும்போது இரண்டு பக்கம் சாட்சிகள் இருந்தால், சாட்சிகளை விசாரிக்கும்போது, 4 சாட்சிகள் இருந்தால், 4 பேர்களை ஒரே நாளில் விசாரிப்பதில்லை. ஒருவரை விசாரிக்க ஒரு நாள்; 15 நாள் சென்று இன்னொருவர். இப்படி 4 பேர்களை விசாரிக்க 2 மாதம் அலைய வேண்டியிருக்கிறது. அவர்கள் விசாரித்து முடிவதற்குள் காலம் கடந்து கொண்டேயிருக்கிறது. இப்படி ஆண்டுக் கணக்கிலே கீழ்க் கோர்ட்டுகளில் சிவில் வழக்குகள் நடைபெறுவதையெல்லாம் இந்த அரசு சீர் செய்து, என்ன, என்ன சூழ்நிலைகளில் இவ்வாறு நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்து, நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல 15-7-1983 அன்று சென்னை உயர்நீதி மன்றத்திலே ஒரு வழக்கு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்கள் மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் துணைச் செவிலியர்கள் இந்த அரசுமீது வழக்கு போட்டு, அப்பொழுது நீதிபதி அவர்களே, அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லி, 2 மாதத்திலே பஞ்சாயத்திலே வேலையில் அமர்த்தச் சொன்னதாகவும்,

ஆனால் இரண்டு வருஷமாகியும் அரசு அந்த உறுதிமொழியைக் காப்பாற்றாத காரணத்தாலே இன்று சென்னை கோட்டைக்கு முன்பாக ஏறத்தாழ 3,000 மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் துணைச் செவிலியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அரசினுடைய உறுதி மொழியை அரசே காப்பாற்றாவிட்டால் தனிப்பட்ட சாதாரணக் குடிமகன் எப்படி அதைக் காப்பாற்ற முடியும் என்பதுதான் கேள்வி.

அதே போல், காமராஜர் மாவட்டத் தலைநகர் விருதுநகர். அந்த விருதுநகரிலே மாவட்டத் தலைமை நீதிபதி இன்னும் வந்து சேரவில்லை. அந்த மாவட்டமானது 15—3—1985-ல் பிரிக்கப்பட்டு முறையாக எல்லா தலைமை அலுவலகங்களும் வந்து சேர்ந்து விட்டன. ஆனால் மாவட்ட தலைமை நீதிமன்றம் இன்னும் வந்து சேராமல் இருக்கிறது. மேஜை, நாற்காலிகள் செய்யவில்லை, டான்சியிலிருந்து வாங்க வேண்டும், அல்லது வாடகை இடம் கிடைக்கவில்லையென்று சொல்லி தாமதப்படுத்துகிறார்கள். இருக்கின்றவற்றை வைத்து, எப்படி 15—3—1985 அன்று முதல்வர் உத்தரவிட்டவுடனே மாவட்ட ஆட்சியாளர் வந்து சேர்ந்தாரோ, அதைப் போல இருக்கிற வசதிகளை வைத்து, மாவட்ட நீதிமன்றத்தை உடனடியாக விருதுநகருக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, மாவட்டத் தலைநகராக இருக்கிற விருதுநகரில் ரூ. 250, ரூ. 500 கைமாற்று பெற்றிருந்தால் கூட, அதனுடைய கேஸ்கள் சாத்தூருக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. அதையாவது மாற்றி, சிவில் கோர்ட்டை, உடனடியாக விருதுநகரில் நிறுவ அமைச்சர் அவர்கள் ஆவன செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல், பல வழக்குகளிலே குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதும் அப்பாவிகள் தண்டனைக்குள்ளாவதுமான செய்திகள் எல்லாம் எங்களுக்கு வருகின்றன. பட்டப் பகலில் நடந்த கொலைகளில் கூட குற்றவாளிகள் விடுதலை பெறுகிறார்கள் என்றால், அவர்கள் எப்படி விடுதலை பெறுகிறார்கள், எங்கு சரியில்ல என்பதைப் பார்த்து, எந்த முறையிலே நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பார்த்து, குற்றவாளிகள் தப்பிக்காதபடி அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நீதித் துறை அலுவலர்கள் இலஞ்சம் வாங்குவதை உடனடியாகப் பிடித்து வழக்கு போடுகின்ற சட்டத்தை ரத்து செய்து இருக்கிறார்கள். பொதுமக்களுக்குரிய சட்டம், இவர்களும் பொதுமக்கள்தான் என்ற முறையிலே, அந்தச் சட்டத்தைத் திரும்பக் கொண்டு வர வேண்டும். அவர்களை



உடனடியாகப் பிடித்து வழக்கு போடுவதற்குக் காவல் துறையினருக்கு அதிகாரம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1—00)

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் அரசியல் நிகழ்ச்சிகள் சம்பந்தமான போராட்டங்கள் காரணமாக சிறைக்குச் செல்லும்போது, அவர்களுக்குத் தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 30,000 பேர் அல்லது 40,000 பேர் அரசியல் போராட்டக் காலங்களில் சிறை செல்லும் போது இட நெருக்கடி ஏற்படுகிறது. ஏறத்தாழ 17,000 பேர் தான் மாநிலம் முழுவதும் உள்ள சிறைகளில் இருக்க இடமிருக்கிறது. இந்த நிலையில் அரசியல் போராட்ட வாதிகளை பெருமளவில் கொண்டுபோய் அடைப்பதால் அவர்களையும் கஷ்டப்படுத்தி, நீங்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் 3 அல்லது 4 சிறைச்சாலைகளை அரசியல் போராட்ட கைதிகளுக்காக ஒதுக்கி வைக்கலாம். அவர்களுக்கு திறந்த வெளிச் சிறைச்சாலைகள் கூட போதுமானது. ஏனென்றால் அவர்கள் எல்லாம் சிறைக்கு வரவேண்டுமென்றுதான் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள், அதனால் தப்பி ஓடமாட்டார்கள். ஆகவே, மாநிலம் முழுவதற்குமாக 3 அல்லது 4 திறந்த வெளிச் சிறைச்சாலைகளை அரசியல் போராட்ட கைதிகளுக்கு என்று அமைக்கலாம். அப்படி அமைப்பது நல்லது என்கிற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறை அதிகாரிகள், சிறையில் இருக்கிற வார்டன், மற்றவர்களுக்கெல்லாம் காவல் துறையில் அதே தரத்தில் இருப்பவர்களை விட சம்பளம் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்ற ஒரு குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. காவல்துறையில் இருப்பவர்களைவிட அவர்கள் அதிகமாக கஷ்டப்படுகிறார்கள். சிறைச்சாலையில் கைதிகள் போலவே அவர்களும் இருக்கிறார்கள். ஆகையால் சிறைச்சாலைகளில் பணியாற்றுகின்றவர்களுக்கும் காவல் துறையில் கொடுக்கப்படுவதைப்போன்ற சம்பளத்தைக் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போன்று காவல் துறையினர் வழக்கு சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கோர்ட்டுகளுக்கு அழைத்துச் செல்கிறார்கள். கைதிகள் ஏதாவது நோய் ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும் என்றால் கான்ஸ்டபிள்கள் வர மறுக்கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. அதுபற்றி பல செய்திகள் வருகின்றன. காவல் துறையினரும் சிறைச்சாலை நிர்வாகத்தில் இருக்கின்றவர்களுக்கு உதவியாக இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 ஜூன் 25

சிறையில் உணவு நல்லமுறையில் கொடுக்கப்படவில்லை கொடுக்கப்படுகின்ற உணவு மிகவும் மோசமாக இருக்கிறது. அநேகமாக அரசியல்வாதிகள் எல்லோரும் அதைப் பார்த்திருப்போம். முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அரசியல் வாதிகளை கைது செய்து சிறையில் அடைப்பது வழக்கமாக இருக்கிறது. அதனால் எல்லோருக்கும் தெரியும். சிறைச்சாலையில் ஏ-வகுப்பு கைதிகளுக்கு கூட நல்ல தரமான உணவு அளிக்கப்படுவதில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாகவே சொல்ல விரும்புகிறேன். அனைவருக்கும் நல்ல தரமான உணவு அளிக்க வேண்டும்.

அதைப்போன்று கைது செய்யப்பட்டு, கைதிகளாக அழைத்துச் செல்லப்படுகிறவர்களுக்கு அளிக்கப்படுகிற படி மிகவும் குறைவாக இருக்கிறது. இது ஆங்கிலேயர்கள் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இப்போதும் அதே படி தான் இருக்கிறது. இப்போது இருக்கிற விலைவாசிக்கு ஏற்றபடி அந்த படி இல்லை. கொடுக்கப்படுகின்ற படியை வாங்கி சாப்பிடுகின்ற வகையில் இல்லை. அதே படியைத்தான் அரசியல்வாதிகள் கைதிகளாகச் செல்லும்போதும் சாப்பிட வேண்டியிருக்கிறது. அது போதவில்லை, சில நேரங்களில் நாங்களே ஏற்பாடு செய்து கொள்கிறோம். ஆனால் கைதிகள் எல்லாம் பட்டினியாகவே சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. 40 வருஷங்களுக்கு முன்னால் நிர்ணயித்த இந்த படியை தற்போதுள்ள விலைவாசிக்கு ஏற்ற முறையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை 10 வருஷ காலத்திற்குப் பின்னர் அட்வைசரி போர்டுக்கு அனுப்பி, அவர்களுடைய நடத்தைப்பற்றி பரிசீலித்து, விடுதலை செய்ய வேண்டும். ஏனென்றால் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் நீண்டகாலம் சிறையிலேயே இருந்து, சுய நினைவு பெற்று எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். திருந்தி, நல்ல முறையில் வாழ வேண்டுமென்று அவர்கள் விரும்புகிற காரணத்தால் 10 வருஷம் ஆனதும் நீங்கள் போர்டுக்கு அனுப்பி, பரிசீலிக்க வேண்டும். அந்த கைதிகள் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் குற்றவாளிகளைத் திருத்த முடியும். அது அல்லாமல் அவர்கள் சிறைச்சாலையில் நடைபெறும் கஷ்டங்களைப் பார்த்து, பார்த்து பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வெளியே வரக்கூடாது. ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை 10 வருஷத்தில் பட்டதாரியாகக்கூட ஆக்கலாம். அந்த முறையிலே அவர்களை நல்லவர்களாக வல்லவர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 25] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளுக்கு ஐ.ஜி-யை நியமிக்கும்போது போலீஸ் டிபார்ட்மெண்டிலிருந்து நியமிக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். சிறைச்சாலை நிர்வாகத்தில் இருக்கிற சூப்பரின்டென்ட், மற்றவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து. ஐ.ஜி. உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன்.

மற்றபடி சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இலங்கைத் தமிழர்களுக்காகப் போராட்டம் நடத்தியபோது சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். நான் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கு சென்று பார்க்கும் வாய்ப்பு இருந்தது. அங்கே அதிகாரிகளும் மற்றவர்களும் நல்லமுறையில் நடத்தியதாகச் சொன்னார்கள்.

அவ்வாறு பாளையங்கோட்டைச் சிறையினைப் பொறுத்தவரையில் கைதிகளையும் மற்றவர்களையும் நல்ல முறையில் நடத்தியதாகச் சொன்னார்கள். ஆனால் மதுரையைப் பொறுத்வரையில் அங்குள்ள சிறையில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டதாகவும், பல கொடுமைகள் செய்யப்பட்டதாகவும் ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் கூடச் சொன்னார்கள். ஆனால் சிலர் இவற்றைப் பற்றி வெளியே சொல்ல பயப்படுகிறார்கள். அதுபற்றிச் சொன்னால் பல தொல்லைகள் வரும் என்று பயப்படுகிறார்கள். மதுரைச் சிறையைப் பொறுத்தவரையில் அங்கேயுள்ள மேலதிகாரிகளும், சூப்பிரின்டென்டெண்ட் போன்றவர்களும் சரியாக நிர்வகிக்காத காரணத்தால் பல சிரமங்கள் இருக்கின்றன. எனவே இவற்றை எல்லாம் சரிபார்க்கின்ற நிலையில் கைதிகளைத் தனியாக விசாரித்து என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுக்கவேண்டும்.

அடுத்து பார்வையாளர்களைப் பொறுத்தவரையில் ஒருசில நடைமுறைகளை வைத்திருக்கிறார்கள். அதாவது பார்வையாளர்களைச் சந்திக்கச் செல்கிறபோது கைதிகள், கைதி உடையிலேதான் வந்து அவர்களைப் பார்க்க வேண்டும் என்று இருக்கின்றது. குற்றவாளியின் மனைவியோ அல்லது பெண் குற்றவாளியாக இருந்தால் கணவனோ அல்லது மகனோ அல்லது தாய் தந்தையர்களோ சென்று பார்க்கும்போது அவரவர்களுடைய உடையில் வராமல் கைதி உடையில் வந்தால் அவர்களுடைய மனம் புண்படும் என்பதை எண்ணி அவரவர்களுடைய உடையில் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்று என்னவென்றால் பார்க்கச் செல்பவர்கள் சுவர்களுக்கும் கம்பிகளுக்கும் இந்தப் பக்கத்திலிருந்துகொண்டு அதாவது சற்று தூரத்திலே இருந்துதான் பார்க்கவேண்டும் என்ற வகையில் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் பார்க்கவேண்டும் என்ற வகையில் இருக்

கின்றது. அது ஒரு பெரிய ஜபர்தஸ்து என்ற வகையில் செய்யப்படுகின்றது மேலும் பார்வையாளர்கள் பார்க்கச் சென்றால், மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் காத்திருக்க வேண்டி இருக்கின்றது. அதற்குப் பிறகுதான் பார்க்க முடிகிறது. இந்த முறையினை மாற்றி உரிய வகையில் பார்ப்பதற்கு நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த வகையில் பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல பிரச்சினைகளை இந்த நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் பற்றிச் சொல்ல வேண்டும் என்று இருந்தாலும் கூட அரசு தக்க முறையில் கவனித்து வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமனியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் என்ற மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றம் மட்டும் அல்லாது இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கின்ற பாராளுமன்றமும் மற்றும் சட்டமன்றங்களும் ஒரே குரலில் ஏகோபித்து நீதித்துறையைப் பற்றிச் சொல்லி வருகின்ற குற்றச்சாட்டு என்னவென்றால் வழக்குகள் பைசல் ஆகாமல் நீதி மன்றங்களில் கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது என்பதுதான். பலரும்இந்தக் குறையினைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இந்த குற்றசாட்டும் குறையும், இன்று நேற்று ஏற்பட்டதல்ல நீதித் துறையினைப் பொறுத்த வரையில் இப்படி வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்பதைப் பொறுத்தவரையில் 1887 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி பல்வேறு வகைகளில் மாநில அரசுகளும், மைய அரசும் இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற வகையில் அது பற்றிய ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்ற வகையில் அதற்கான ஆய்வுக் குழுக்களை சட்டக் கமிஷன்களை அமைத்து ஆலோசனைகளைக் கேட்டிருக்கின்றது. அவ்வாறு அந்தக் குழுக்கள் சமர்ப்பித்த ஆலோசனைகளின்படி அரசாங்கம் அவற்றை நடைமுறைப்படுத்தினாலும் கூட இன்னும் முழுமையாக இந்தக் குறையைப் பொது மக்கள் சொல்வதிலிருந்தும் சட்டசபையாளர்கள் சொல்வதிலிருந்தும் நீதித்துறை தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத நிலைமையில்தான் இருக்கின்றது.



**1924** ஆம் ஆண்டு கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் நீதிபதி திரு. ராம்கின் அவர்களை வைத்து குழு அமைக்கப்பட்டு வழக்குகளை விரைவாகப் பைசல் செய்வதற்காக அவர்களால் பல்வேறு வகையான ஆலோசனைகள் சொல்லப்பட்டன. 1949 ஆம் ஆண்டில் நீதிபதி திரு. எஸ். ஆர். தாஸ் அவர்கள் தலைமையில் குழு அமைத்தார்கள். 1967 ஆம் ஆண்டில் மைய அரசு ஒரு குழுவை அமைத்தது 1969-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதி திரு. இதயதுல்லா அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள். 1949-ஆம் ஆண்டு மேற்கு வங்காள மாநில அரசு ஹாரிஸ் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 1950-ஆம் ஆண்டு உத்திரப் பிரதேசத்தில் திரு. கே. என். வான்சு தலைமையில் விரைவாக வழக்குகளைத் தீர்ப்பதற்காகக் குழு அமைத்தார்கள்.

இப்படி பல்வேறு கால கட்டங்களில் மாநில அரசுகளும் மைய அரசும் பல்வேறு குழுக்களை அமைத்தாலும், அவற்றின் ஆலோசனைகளைப் பெற்று நடைமுறைப்படுத்தினாலும் கால தாமதத்தைத் தவிர்க்க முடியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள், சட்டக் கமிஷன் குறிப்பிட்ட ஆலோசனைகளை ஏற்று, புதிதாக ஏற்படுத்த வேண்டிய 29 நீதிமன்றங்களில் 28 நீதிமன்றங்களை நாம் திறந்து விட்டோம், இன்னும் ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி பல்வேறு வகைகளில் அந்தக் குழுக்களினுடைய ஆலோசனைகளை நீதித் துறையில் அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுத்தினாலும்கூட இத்தனை வருடங்களுக்குப் பிறகும்கூட வழக்குகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன, பைசல் ஆகாமல் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டிலிருந்து நீதித் துறை தப்பிக்க முடியாத சூழ்நிலைதான் இருக்கின்றது.

இந்தியா முழுவதும் இருக்கின்ற உயர்நீதிமன்றங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பைசல் ஆகாமல் இருக்கின்றன என்ற சூழ்நிலையிலே இந்தியத் துணைக் கண்டத்திலேயே 1981-ஆம் ஆண்டில் விரைவாக வழக்குகளைப் பைசல் செய்கின்ற உயர்நீதிமன்றம் சென்னை நீதிமன்றம் என்ற பெயரை நாம் பெற்றோம் 1982-ஆம் ஆண்டு இந்தியத் துணைக் கண்டத்தில். இரண்டாவது இடத்தைப் பெற்று பெருமையைப் பெற்றோம். என்றாலும் கூட 1984-ஆம் ஆண்டு இறுதியில் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளபடி ஒரு இலட்சத்து 15 ஆயிரம் வழக்குகள் இன்னும் பைசல் ஆகாமல் சென்னை உயர் நீதிமன்றத்தில் இருக்கின்றன என்று சொன்னால் எத்தனையோ ஆலோசனைகளைக் கூற அமைக்கப்பட்ட குழுக்கள் சொன்னாலும்கூட நீதித்துறையினைச் சீர்படுத்துகின்ற வகையில்,

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1985 ஜூன் 25

(பிற்பகல் 1-10)

செம்மைப்படுத்துகின்ற வகையில் உரிய ஆலோசனைகளைச் அக்குழுக்கள், சட்டக் கமிஷன்கள் முழுமையாக சொல்வதற்குரிய வாய்ப்பு அவற்றுக்கு இல்லாத சூழ்நிலைதான் இருக்கின்றது. இதற்கு மிக முக்கியமான காரணம் சமுதாய விஞ்ஞானி களும், பத்திரிகையாளர்களும், சட்டசபையாளர்களும் நீதித் துறையினுடைய நடவடிக்கைகள் என்ன என்பதைக் கூட, நீதித் துறையினுடைய சுதந்திரம் என்கிற பெயரால் அவைகளில் ஆய்ந்து உணர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதைத்தான் இந்தியத்துணை கண்டத்தினுடைய தலை சிறந்த வழக்கறிஞர் மாதவமேனன் சொல்கிற போது, ''நீதித்துறையின் சுதந்திரம் என்கிற பெயரால், பத்திரிகையாளர்களும் சட்டசபையாளர்களும், சமுதாய விஞ்ஞானிகளும், நீதிமன்றத்தில் நடைபெறுகிற பல்வேறு நடை முறை சிக்கல்களை, நீதிமன்றத்தின் தீர்ப்புகளை, கிருஷ்ணய்யர் சொல்லியதைப் போல விமர்சிக்கிற வாய்ப்பு இல்லாத காரணத் தினால் பல்வேறு நடவடிக்கைகளை எல்லாம் சீர்திருத்த ஆலோசனைகளையெல்லாம் சொல்ல முடியாதசூழ்நிலை இருக் கிறது. இதனால் நீதிமன்றங்கள் அவைகளின் வரம்பை மீறுகிற போது அதைக் சுட்டிக் காட்டுக்கிற, அதற்கான உரிமை சட்ட சபையாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், சமுதாய விஞ் ஞானிகளுக்கும் வேண்டும். அவை இல்லாததன் காரணமாக பல்வேறு வகையில் நாம் பல்வேறு வகையான ஆலோசனைகளைச் சொல்லியும்கூட, இன்னும் அந்தக் குற்றச்சாட்டுகளை நீதித் துறை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது என்பதை மிகத் தெளி வாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

The use or abuse of Contempt Power and the notion of Judicial independence have scared social scientist, the Press and Parliamentarians from fully investigating the working of the Courts and identifying the problems that confront Law Reform. Though the Judiciary has consistently been denied any role in law making it has indeed declared new laws, abrogated old laws and extended existing laws and this power of the Judiciary is isolated from public scrutiry. என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மிகத் தெளிவுடன் கடந்த ஆண்டிலே சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். இதை நீதித் துறையைச் சார்ந்த பல்வேறு வகையினரும்கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். முன்னால் நீதிபதி யாகவும் இந்திய துணைக் கண்டத்தினுடைய துணை ஜனாதிபதி யாகவும் இருந்த இதயதுல்லா அவர்கள் கூறுகிறபோது, The Vice-President Mr. Hidayathullah has cautioned the Judiciary against taking over the freedom of Legislature and the Executive. He has disapproved the idea of reforming Society through



1985 ஜூன் 25] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

Courts judgment and said measures to reform Society should come from the Legislature wing of the Government என்றார்கள். அந்த வகையிலே பல்வேறு வகையிலே நீதிமன்றம் சம்பந்தமான பிரச்னைகள் இருந்தாலும் அவைகளை நாம் விமர்சிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக இவை களுக்கெல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்தால்தான் சில உறுப்படியான சீர்திருத்தங்களைச் முடியும் என்ற கருத்தை நானும் உணர்கிறேன்.

சமீபத்திலே நடைபெறவிருக்கிற மாநில சட்ட அமைச்சர்கள் மாநாட்டை மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்ட இருக்கிறார் கள், உண்மையிலேயே ஊமையாகி, நீதிமன்றத்திலே தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளால் வேதனைக்குள்ளான இலட்சக்கணக் கான பொது மக்கள், குரல் கொடுக்க முடியாத ஊமைகளாகி இருக்கிறார்கள். அந்த ஊமைகளுடைய பிரதிநிதியாக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அங்கு சென்று அந்த சட்ட அமைச்சர்கள் மாநாட்டிலே குரல் கொடுத்து, அதன் மூலம் அரசியலமைப்புச் சட்டத்திலே பல்வேறு பிரிவுகளை மாற்றுவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசாங்க அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களை தண்டிக்க அமைச்சர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் தவறு செய்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் தவறு செய்தால், அவர்களைக் கண்டிக்க மக்கள் இருக்கிறார்கள். ஆனால் நீதிமன்றத்திலே இருப்பவர்கள் தவறு செய்தால் அவர்களைக் கண்டிக்க இந்த நாட்டிலே நாதி இல்லை என்கிற ஒரு கொடுமையான சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). கேட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட பதில் சொல்லலாம். இம்பீச்மெண்ட் என்ற ஒரு முறை அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்கிறது என்று. நாடு சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆகியும்கூட, இந்த இந்தியத் திருநாட்டில் எந்த நீதிபதியாவது—பாராளுமன்றத்தில்—இம்பீச்மெண்ட் என்ற முறையில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறார்களா என்றால் நிச்சயமாகக் கிடையாது. இந்தக் கொடுமையை நாம் களைந்தாக வேண்டும். நீதிபதியின் தீர்ப்பு தவறு என்று இன்னொரு நீதிபதி சொன்னாலும், தவறாக தீர்ப்பு சொன்ன நீதிபதிக்கு தண்டனை ஏதும் உண்டா? இல்லையே.

இந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப் பெறாமல் இருக்கிற அல்லது திருத்தக்கூடாத ஒன்றா என்று கேட்டால், எத்தனையோ முறை அரசியல் அமைப்புச் சட்டத்தில், இந்த நாட்டு மக்களுக்காக அவர்களின் நலம் பேண, காக்க, திருத்தங்கள் செய் திருக்கிறோம். எத்தனையோ முறை அந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாம் திருத்துவதோடு மட்டும் அல்ல அரசிய

[திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1985 ஜுன் 25

லமைப்புச் சட்டத்திற்கு உச்ச நீதிமன்றமே பல்வேறு வகையான பல்வேறு காலகட்டங்களிலே சொன்னதை மாற்றி விளக்கம் வியாக்கியானங்களை கொடுத்திருக்கிறது. ஏ. கே. கோபாலன் கேஸில் அதன் ஒரு பிரிவை அடிப்படை உரிமைச் சட்டத்திற்கு இன்னொரு பிரிவுடன் இணைத்துச் சொல்லக் கூடாது, வியாக்யானம் செய்யக்கூடாது. இணைத்துப் பேசக்கூடாது என்று சொன்ன உச்ச நீதிமன்றம், 10 ஆண்டுகளுக்குப் பிறகு இணைத்து போட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அரசியலமைப்புச் சட்டத்தையே திருத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லை என்று சொன்ன உச்ச நீதிமன்றம், 5 ஆண்டுக் காலத்திலே பேசிக் ஸ்டிரக்ச்சரை டெஸ்ட்ராய் செய்யாமல் அடிப்படை மன்றங்கள் செய்யாமல் திருத்தலாம் என்று சொன்னது. என்னென்ன அந்த அரசியல் அமைப்பில் பேசிக் ஸ்டிரக்ச்சர் என்பதை இதுநாள் வரையில் அந்த உச்ச நீதி மன்றம் சொல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ஆக, அதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கி நமது இந்திய திருநாட்டினுடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்த மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் போர்க் குரல் கொடுக்க வேண்டும். பல்வேறு இடங்களில் பிரான்ஸ் போன்ற நாடுகளில், இத்தாலியில், நைஜீரியாவில், அந்த நீதிமன்றத்தைக் கண்டிப்பதற்கு, அந்த நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு சூப்பீரியர் கவுன்சில் என்ற அமைப்பு மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது.

அரசாங்கத்திலே தவறு என்றால் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டை வைக்கிறார்கள். அதேபோல இங்கே உள்ள சட்டசபை உறுப்பினர்கள் தவறு செய்தால், 5 ஆண்டுகளுக்குப் பின்பு மக்களை சந்திக்கிறபோது அதற்கான தீர்ப்பை மக்களிடம் பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பல்வேறு வகையிலே, அவைகள் நாட்டிலே நீதி மன்றங்கள் சரியாக நடைபெறுகிறதா முறையாக நடைபெறுகிறதா, என்று செக் செய்வதற்கு, கண்காணிப்பதற்கு சூப்பீரியர் கவுன்சில் என்று பிரான்ஸ் நாட்டிலே இருப்பதைப் போல, நைஜீரியாவிலே இருப்பதைப் போல, இத்தாலியில் இருப்பதைப் போல, அந்த கண்காணிக்கும் நடைமுறை நடவடிக்கைகளை நாம் உருவாக்க வேண்டும்.

இத்தாலி, பிரான்ஸ் நாடுகளில் இந்தமுறை மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது. In case the Superior Council finds a Judge guilty it may proceed against him with the disciplinary action like censure, Transfer downgrading, retirement, dismissal. ஆகவே இதை நீதி மன்றத்தை கண்காணிக்கின்ற வழிவகை செய்கிற வகையிலே இந்திய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு கூட்டப்படுகிற சட்ட அமைச்சர்களுடைய மாநாட்டிலே



1985 ஜுன் 25] [திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன்]

தயவுசெய்து நமது சட்ட அமைச்சர் அவர்கள் குரல் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு இந்தக் கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல பல்வேறு விஷயங்கள். குறிப்பாக உச்சநீதி மன்றத்தின் பிரிவை தென்னக மாநிலங்களில் தமிழகத்தில் ஒரு இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை 10, 15 ஆண்டுகளாக இருக்கிறது நீதித் துறையில் நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்றால் பொதுமக்களிடம் ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் தாங்கிக் கொள்வது அரசியல்வாதிகள். அரசாங்கம் தாங்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலை. பல்வேறு கால கட்டங்களில் இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டும் கூட, மாண்புமிகு சிவசங்கர் அவர்கள் சட்ட அமைச்சராக இருந்த போது இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்ட நேரத்தில், இப்படிப்பட்ட கோரிக்கை உச்ச நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதியிடமிருந்து வரவில்லை. அதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 130-ன் படி அவர்கள்தான் கோரிக்கையை வைக்கவேண்டுமென்று ஒரு பதிலை பார்லிமெண்டிலே தெரிவித்திருக்கிறார்கள்.

பல்வேறு கட்டங்களில் தொடரப்படுகிற வழக்குகள் தென் மாநிலங்களில் உச்ச நீதிமன்றத்தின் பிரிவு இருக்க வேண்டுமென்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது. 1973 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மொத்த வழக்குகள் 2307; தென்மாநிலங்களிலிருந்து 800 வழக்குகள். 1974 ஆம் ஆண்டு 2459 வழக்குகள் தொடரப்பட்டதிலே தென் மாநிலங்களிலிருந்து 798 வழக்குகள். 1975 ஆம் ஆண்டு 2,466 வழக்குகள் தொடரப்பட்டதிலே 748 வழக்குகள் தென்மாநிலங்களிலிருந்து; 1976 ஆம் ஆண்டு 2507 வழக்குகள் தொடரப்பட்டதிலே தென் மாநிலங்களிலிருந்து 910 வழக்குகள். 1977 ஆம் ஆண்டு 3430 வழக்குகள் தொடரப்பட்டதிலே 1059 வழக்குகள் தென் மாநிலங்களிலிருந்து; 1978 ஆம் ஆண்டு 3093 வழக்குகள் தொடரப்பட்டதிலே 739 வழக்குகள் தென் மாநிலங்களிலிருந்து தொடரப்பட்டவை.

ஆகவே உச்ச நீதிமன்றத்திலே தொடரப்படுகிற வழக்குகளில் 28 சதவீதத்திலிருந்து 36 சதவீதம் வரை தென் மாலநிங்களிலிருந்து என்ற சூழ்நிலை இருந்தும்கூட, இந்த நாட்டு மக்களுடைய நன்மதிப்பை பெற்று, இந்த நாட்டுமக்களுக்காக பணியாற்ற வேண்டிய அரசாங்கத்தில் இருக்கிற மாண்புமிகு மையஅரசின் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அரசியலமைப்பு சட்டத்தினுடைய 130-வது பிரிவின்படி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அதை பரிந்துரை செய்யவேண்டும். அப்புறம் தான் நாங்கள் அதை பரிசீலிக்கவேண்டும்; உச்சநீதிமன்றத்தின் நீதிபதியிடம் சொல்லி இந்திய நாட்டின் ஜனாதிபதியின் ஒப்பு

தலைப் பெற்ற பிறகுதான் உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைக்க முடியுமென்று இந்த நாட்டினுடைய அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்குமானால் அந்தப் பிரிவு நிச்சயமாக திருத்தப்பட வேண்டிய ஒரு பிரிவு. எத்தனையோ நல்வாழ்வுத் திட்டங்களுக்காக, இந்த மாநிலத்தில் பல்வேறு பிரச்னைகளுக்காக நாம் அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்தியிருக்கிற போது, அவைகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக திருத்த வேண்டுமென்று போர்க் குரலை சட்ட அமைச்சர்களுடைய மாநாட்டிலே எழுப்ப வேண்டு மென்கிற கருத்தைத் அழுத்தமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல பல்வேறு வகையிலே நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியதைப்போல நீதித் துறையிலே இருக்கிற பல்வேறு விஷயங்களை, நிர்வாகத்தில் இருக்கிறவைகளை நாம் சட்டமன்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும், சமுதாய விஞ்ஞானிகளும் புரிந்துகொள்ள முடியாமலும், விமர்சிக்காத காரணத்தாலும்தான் எத்தனையோ சட்டக் கமிஷன்களை அமைத்தாலும், எத்தனையோ வழக்குகளை ஆராய்வதற்கும், முடிப்பதற்கும் நாம் குழுக்களை நியமித்தாலும் இன்னும் வழக்குகள் தேங்கிக் கிடக்கிற நிலைமையைத் தான் பார்க்கிறோம். முதலிடத்திலே இருக்கிறோம் என்று சொல்கிற நம் நீதிமன்றத்திலேயே ஒரு இலட்சத்து 15 ஆயிரம் வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்றால், 10-வது இடத்தில், 17-வது இடத்தில் இருக்கிற மற்ற மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களின் நிலைமை பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே நாம் சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தான் பல்வேறு வகையிலே இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்களின் அறிக்கைகளைக் கூட செயல் படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. நாட்டிலே வழக்குகள் தேங்கிக் கொண்டிருக்கிற சூழநிலை இருக்கிறது. இந்த நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற சிவில் நீதிமன்றங்களின் கோடை விடுமுறையை அரசாங்கம் உடனே ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டிற்கு 365 நாட்கள். நீதிமன்ற விடுமுறை நாட்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும் சனிக்கிழமை 52 நாட்கள்; ஞாயிற்றுக் கிழமை 52 நாட்கள்; சம்மர் வெகேஷன் 45 நாட்கள்; பண்டிகை நாட்கள் தசரா விடுமுறை 10 நாட்கள் ; தேசிய விடுமுறை 25 நாட்கள்; அதிகாரிகளுக்கும், நீதிபதிகளுக்கும் இருக்கிற சி. எல். விடுப்பு 12 நாட்கள். ஈ.எல். என்று இருக்கிற விடுப்பு 4 நாட்கள். ஆகவே 365 நாட்களில் 202 நாட்கள் நீதிமன்றங்கள் பூட்டப்பட்டிருக்கின்றன என்றால் இந்த நாட்டு மக்களுக்கு எப்படி நீதி வழங்க முடியும். எப்படி நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவில் தீர்த்து ஏழைஎளியவர்களுக்கு சமுதாய நீதி வழங்க முடியும்.





பிரிட்டிஷார் ஆண்டு கொண்டிருக்கிறபோது இங்கிலாந்து நாட்டின் நீதிபதிகள் இங்கே பணியாற்றினார்கள். அவர்களுக்கு கோடை விடுமுறை விடப்பட்டது. தாங்கள் பிறந்த நாட்டிற்கு கப்பலில் போவதற்கு 15 நாட்கள், திரும்ப வருவதற்கு 15 நாட்கள் என்பதற்காக பிரிட்டிஷார் ஆண்ட போது அந்த விடுமுறைகள் விடப்பட்டன. பிரிட்டிஷரரையே நாம் தூக்கி எறிந்து விட்ட பிறகு பிரிட்டிஷார் வைத்திருந்த முறையையே நாம் வைத்துக்கொண்டிருப்போமானால் எத்தனை சட்டக் கமிஷன்களைப் போட்டாலும், அவைகள் நிச்சயமாக தேங்கியிருக்கிற வழக்குகளைத் இந்த நாட்டில் தீர்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

அதுபோல் கொடுக்கப்பட்டு இருக்கிற இந்தக் கொள்கைக் குறிப்பிலே 1982ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத்திலே பைசலாகாமல் இருந்தது 18 ஆயிரம் ரிட் மனுக்கள் இருந்தன என்றும். 1983 ஆம் ஆண்டு பைசலாகாமல் இருந்தது இருந்த ரிட் மனுக்கள் 24 ஆயிரம் என்றும், 1984 ஆம் ஆண்டு ஏறக்குறைய 30 ஆயிரம் ரிட் மனுக்கள் பைசலாகாமல் இருக்கின்றன என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. இதிலே அருள் கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே ஏறக்குறைய மூன்றிலே ஒரு பங்கு வழக்குகள் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்டவை. ஒரு இன்கிரிமென்ட் அரசு ஊழியர்களுக்கு கொடுப்பதிலே காலதாமதம் என்றால் ரிட், ஒரு டிரான்ஸ்பர் என்றால் ரிட் பதவிப் ப்ரமோசனிலே பேனல் தயார் பண்ணுவதிலே, தயார் பண்ணிக் கொண்டு இருக்கும்போதே ரிட், என்று இப்படி அரசு ஊழியர்களுடைய வழக்குகள் உயர்நீதிமன்றத்திலே பெரும் அளவில் ஆக்கிரமித்துக் கொள்கிற போது, பொதுமக்களின் பிரச்சனைகள் அங்கே தீர்க்கப்படுவதில்லை. எனவே இதைச் சரி செய்வதற்கும், நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற வகையில் அரசு ஊழியர்களுடைய பிரச்சனைகளை, அவர்களுடைய பணி சம்பந்தபட்ட பிரச்சனைகளை விசாரிப்பதற்கு அட்மினிஸ்ட்ரேடிவ் டிரிமியூனல் என்று தனியாக ஒரு நீதிமன்றத்தை அமைத்து, அவர்கள் கோரிக்கை எதுவாக இருந்தாலும், அதைத் தீர்ப்பதற்கு நாம் வழிவகை செய்யவேண்டும்.

அதுபோல், மிகப் பெரிய ஒரு கொடுமையாக இருப்பது, இதிலே வழக்கு பைசலாவதில், அரசாங்கத்தை மட்டும் குற்றம் சொல்கிற காட்சியைத் தான் நாம் பார்க்கிறோம். அதிலே நீதிபதிகளுக்கும் பங்கு இருக்கிறது. வழக்கறிஞர்களுக்கும் பங்கு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சட்டத்தினுடைய பல்வேறு பிரிவுகளில் நீதிபதிகளுக்குக் கொடுத்திருக்கிற டிஸ்கிரிசன் பவரை (இஷ்ட அதிகாரங்கள்) நாம் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து, மாநில அளவிலே இருக்கிற சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, அந்த நீதிபதிகளுக்கு இருக்கிற சில டிஸ்

கிரிசன் பவரை நாம் குறைப்பது என்பது வழக்கறிஞர்களுக்கும் நலம் பயக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் நலம் பயக்கும் என்பதை அரசு அருள் கூர்ந்து எண்ணிப்பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுடைய பண வரம்பை, அதிகார வரம்பை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு 15 ஆயிரம் என்று உயர்த்தி வழக்குகளை எளிதிலே, ஆங்காங்கு இருக்கிற இடங்களிலே தீர்ப்பதற்கு வழி வகை செய்திருக்கிறார்கள். அதேசமயத்தில் ஸ்மால் காஸ் கோர்ட்டினுடைய பண வரம்பு 500 ரூபாயிலிருந்து நாம் உயர்த்தத் தவறிவிட்டோம்.

அதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், உயர்நீதிமன்றம் கீழே இருக்கிற நீதிபதிகளுக்கு உத்தரவு போடுகிறது. ஒரு மாதத்திற்கு 18 ஒரிஜினல் சூட்களை நீங்கள் விசாரிக்கவேண்டும். அதிலே பிராமிசரி நோட் வழக்குகளைத்தான் கீழே இருக்கிற நீதிபதிகள் தீர்க்கிறார்கள். 2 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றவர், 3 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றவர்கள், இடையே நடைபெறும் வழக்குகள் இந்த புரோ நோட் எழுதிக் கொடுத்துவிட்டாலே,—நெகோசியபில்இன்ஸ்டுருமென்ட் ஆக்ட் மிகத் தெளிவாக இருக்கிறது—கையெழுத்துப் போட்டு விட்டாலே, வாங்கியதாக அர்த்தம் என்று பல்வேறு வகைகளிலே, இந்த எவிடன்ஸ் ஆக்ட்லே இருந்து இருக்கிறது. இருந்தாலும் கூட இந்த வழக்குகள் கீழே இருக்கிற நீதிமன்றங்களில் அந்தக் கட்சிக்காரர்களாலே, சொல்லப்போனால், வழக்கறிஞர்களாலே இழுத்தடிக்கப்படுகிறது இதிலே இருக்கிற சில சிக்கல்கள் இதற்குக் காரணம் என்றாலும் கூட, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் ஏன் என்றால் அவர்கள் வழக்கறிஞர் தொழில் நடத்தியவர்கள், பிராமிசரி நோட்டிலே 2 ஆயிரம் ரூபாய் பாக்கியை வசூலிக்க ஒரிஜினல் சைட்டிலே சூட் போட்டுவிட்டு, 2 வருடம் வாய்தா இழுப்பதற்காக, டிஸ்மிசல் பார் டிபால்ட் என்று விட்டுவிடுவார்கள். அப்படி விட்டுவிட்ட ஒரு மாதம் பொறுத்து, உடம்புக்கு சௌகரியம் இல்லை. மீண்டும் அந்த வழக்கை விசாரிக்கவேண்டும் என்கிறபோது, அந்த வழக்கைஇழுத்தடிக்கிற சாட்சியும், நீதிபதிகள் மாதம் 18 வழக்குகளைத் தீர்த்தால் போதும் என்று குறியீட்டை உயர்நீதிமன்றம் வைத்திருக்கிறபோது, 14 பிராமிசரி நோட் கேஸ்களை தீர்த்துவிட்டு, 2 சொத்துசம்பந்தமாக கேஸ்களை தீர்த்தால்கூட போதும் என்கிற முறை கீழ் நீதிமன்ற நீதிபதிகளிடம் இருக்கிறது. டிஸ்மிசுக்கு விடலாம், திரும்பியும் விசாரிக்கலாம் என்று அந்த கோர்ட்டிலே போடலாம். ஆனால் ஸ்மால் காஸ் கோர்ட்டிலே டிஸ்மிஸ் பார் டிபால்டுக்கு விட்டுவிட்டால், உயர் நீதிமன்றத்திற்குத்தான் அப்பீல் செய்து வரவேண்டும்.





இப்படி வெக்சேசியசாக வீணாக தேவையில்லாமல் வழக்குகளை இருக்கின்ற ஒரு காட்சியை நாம் குறைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். இதை நானாகக் கூடச் சொல்லவில்லை, 30—4—1981-ஆம் ஆண்டு, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், சிறப்பாக தொழில் நடத்தியவர்கள் என்ற அடிப்படையில் அந்தக் கஷ்டங்களை உணர்ந்து இந்த மன்றத்திலே ஒரு உறுதி மொழியைக் கொடுத்தார்கள். இந்த நேரத்தில் நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. 1981-ஆம் ஆண்டு இந்த நாட்டிலே இருக்கின்ற வழக்குகள் பைசல் செய்யப்படவேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதிலே கூட அந்தக் கோப்புகளை, துறையிலே இருக்கிற சிலர் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். 1981-ஆம் ஆண்டு இந்த மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய இந்த மன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான கோப்புகள், உருவாக்கப்பட்டும் அந்தக் கோப்புகள் எங்கே நின்று இருக்கின்றன, யார் இதற்குக் காரணம்? எந்த அதிகாரிகள் இத்தனை ஆண்டுக்காலமாக அதை நிறுத்திவைத்து இருகிறார்கள்? அதற்கு காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து அவர்கள் மீது நீங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான் முன்பு நான் குறிப்பிட்டதைப் போல, 1974-ஆம் ஆண்டு சி. பி. சி. அமென்ட்மென்ட் வந்து, அதிலே வழக்கு விசாரணைகளில் வாய்தா கொடுப்பதைக் குறைக்க வேண்டும் என்கிற விதியிருந்தாலும்—நான் அதற்காகத்தான் சொன்னேன்—நீதிபதிகளுக்கு இந்த டிஸ்கிரிசன் பவர் என்பதை வாய்தா கொடுப்பதிலாவது நீங்கள் அவர்களுக்குக் குறைத்தாக வேண்டும் காலக் கெடுவே இல்லாமல் வாய்தா போய்விட்ட ஒரு கொடுமையான சூழ்நிலை இருக்கிறது இரண்டு வாய்தாக்களுக்கு மேல் ஒரு வழக்கில் கொடுக்கக்கூடாது என்று சட்டவிதியைத் திருத்த வேண்டும். முதல் வாய்தா அன்றே, பிரதிவாதிகள் ஸ்டேட்மென்ட்டை போட வேண்டுமென்று விதியை நாம் திருத்த வேண்டும். ஒரு ஒரிஜனல் சூட் நெம்பராகிறபோது சம்மன் அந்த பிரதிவாதிக்குப் போய்ச் சேர்ந்து மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் முதல் வாய்தா அந்த வழக்கில் ஏற்படுகிறது. அந்த 3 மாதத்திற்குள் 2 ஆயிரம் கடன் வாங்கியவருக்கு, எதிர் வியாக்கியத்தை எழுதிபோட, முடியாது என்கிற சூழ்நிலையில் அல்ல அந்தக் காலக்கெடுவை 2 வாய்தாக்களுக்கு மேல், ஒரிஜனல் சூட்டிலே ஸ்டேட்மென்டை போட கொடுக்கக்கூடாது, அப்படி மீறிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், யார் வாய்தா கேட்கிறார்களோ, அவர்கள் 100 ரூபாயை எதிர் தரப்புக்குக் கொடுக்க வேண்டும். இவைகள் எல்லாம்

விதிகளிலே இருக்கின்றன இருந்தாலும் தமிழ்நாட்டிலே இருக்கிற சப் ஆர்டினேட் ஜுடிசியரிலே யாருமே இதை அமுல் படுத்தவில்லை என்பதை நான் தைரியமாகச் சொல்லக் கடமைபட்டு இருக்கிறேன். அதை நாம் கொண்டு வர வேண்டும். இதை எல்லாம் விட இளம் வழக்கறிஞர்களுக்கு உதவுகின்ற வாய்ப்பு ஏற்படும். எத்தனை வாய்தாக்கள் வேண்டுமானாலும் நீதிபதிகளிடம் வாங்கலாம் என்ற தைரியத்தில் இன்று அந்தத் தொழிலில் ஒரு ஆக்கிரமிப்பு இருக்கிறது. ஒரு சிறந்த வழக்கறிஞர் கேஸ்களை நடத்த வேண்டும் என்று சொன்னால் அவர் அந்த கோர்ட்டில் வாதாடிக்கொண்டு இருக்கிறார். இந்த கோர்ட்டில் வாதாடிக்கோண்டிருக்கிறார் எனவே வாய்தா வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. 2 வாய்தாக்களுக்கு மேல் இல்லை என்று சட்ட விதிகளைத் திருத்தாவிட்டால் இந்தத் தொழிலில் உள்ள ஒரு சில சீனியர் வக்கீல்கள் வாய்தாக்களை வாங்கிக்கொண்டே இருப்பார்கள். ஒரு சில பெரிய வக்கீல்கள் தங்களுடைய ஜுனியர்களை வழக்கு நடத்த விடாமல் அவர்களுடைய ஆதிக்கம் பெரும் அளவில் இருக்கிறது. இந்தத் தொழிலில் ஏக போக உரிமை கொண்டாடி கொண்டு இருக்கின்ற அந்த ஒரு சிலரை ஒழிப்பதற்கும் அதுபோல இளம் வழக்கறிஞர்களை ஊக்குவிப்பதற்கும் இது சிறந்த சாதனமாக இருக்கும்.

அதே போல் குத்தகை சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரேம் குமார் அவர்களும் மற்ற மாமன்றத்து உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள், மற்ற எல்லா காரணங்களையும்விட பல முறை இந்த மாமன்றதில் சொல்லியிருக்கிறோம் 40 ரூபாய் வாடகை வாங்குகிற வீட்டுக்கூட் வாடகையை வசூலிப்பதற்குகூட Not less than a District Munsif Cadre ஒரு டிஸ்ட்ரிக்ட் முனிசிப் தகுதிக்கு குறையாத ஒரு நீதிபதி தான் வழக்கை விசாரிக் வேண்டும் என்றி இந்த நாட்டில் சட்டத்தைப் போட்டு வைத்துக் கொண்டு 5 லட்ச ரூபாய், 10 லட்ட் ரூபாய் மதிப்புள்ள நிலங்களை குத்தகை உரிமை தருவதை தாசில்தாருக்குக் கொடுப்பது நியாயமானதாகத் தெரியவில்லை ஆனால் 5 லட்ச ரூபாய் நிலத்திற்கு குத்தகை உருவாக்கியிருக்கிறானே குத்தகை உருவாக்கி கொடுத்தவனுக்கு அந்த. நிலத்தில் உரிமை இருக்கிறதா என்ற டைட்டிலை டிசைடு பண்ண உரிமை நிர்ணயம் செய்ய வேண்டிய நிலைமை வருகிறது. அங்கே தாசில்தார் கோர்ட்டில் முடியாத ஒரு சூழ்நிலை. அவர் குத்தகைதாரரா இல்லையா என்று சொல்லுகிற உரிமையை தாசில்தார் இடத்தில் கொடுத்து விடுகிறோம்.

பிராமிசரி நோட்டில் கோர்ட்டில் கடன்காரனைபோட்டு டிகிரி செய்து வசூலுக்கு போனால் கடன்காரன் ஒரு பினாமி குத்தகையை பினாமியாக ஏற்பாடு செய்துவிட்டு தாசில்தார் அவர்களிடத்தில் மனு போடுகிறான். அங்கே இந்த சிவில் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை அமல் செய்ய முடியவில்லை.



ஒரு அண்ணன் தம்பி பாகப் பிரிவினையான வழக்கு 10 ஆண்டு காலம் நடந்து வெற்றி அடைந்து பாகம் இருக்கிறது என்று சொன்னால் அந்த குடும்பத்தினுடைய தலைவன் to get over the Judgement உடனே ஒரு குத்தகையை உற்பத்தி செய்துவிட்டு தாசில்தார் அலுவலகத்தில் ஒரு விண்ணப்பம் போட்டு விடுகிறான். ஒரு டைட்டிசூட்டில் 10 ஆண்டு காலம் போராடி வெற்றி பெற்ற பிறகு அந்த நிலத்தைப் போய் அனுபவிக்லாம் என்றால் போகின்ற பொழுதே டெனன்சி ஆக்ட்டை கிரியேட் செய்து விடுகிறான். இதில் இருக்கிற நிலைமை என்ன என்பதை நாம் புள்ளி விவரத் துறையை விட்டு ஆராயச் சொல்லலாம். தாசில்தார் அலுவலகத்தில் இருக்கிற ஒவ்வொரு குத்தகை வழக்கு தொடர்பாக அதே சொத்து மேல் குறைந்த பட்சம் 2 சிவில் வழக்குகள் அங்கே டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட்டில் இருக்கும். அங்கே டெனன்சி போட்டு விடுகிறான். அந்த டெனன்சியில் எதிரி இங்கே எபாசஷ்னில் வைத்து இன்ஜெங்ஷன் வேண்டும் என்று சொல்வான். ஆகவே, தயவுசெய்து இதை சிவில் நீதி மன்றத்திற்கு கொண்டு வந்து விட்டால் இப்படி ஏமாற்றுவதற்கும், இழுக்கடிப்பதற்கும் குத்தகை உரிமை என்ற வழக்கும் பாகவியா கியானம் என்றவழக்கும் அதே கோர்ட்டில் இருக்குமானால் சி.பி. சி. விதியின்படி கூட்டு விசாரணை வைக்க முடியும். ஒட்டு மொத்தமாக பிரச்சினையை நீதி மன்றத்தில் முடிக்க முடியும்.

ஆகவே, இந்த Cultivating Tenant's Protection Act படி வசூலிக்கின்ற உரிமையை சிவில் நீதி மன்றங்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் அதேபோல் சிவில் புரசீஜர் கோடை திருத்த வேண்டும்.

Order XV Rule 3......

திரு டி. ஆர். வேங்கடரமணன் ; மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொண்டு அவர்கள் சொன்ன கருத்தோடு ஒத்தகருத்தாக அந்த செக்ஷன் 16( ) bar of Civil Jurisdiction என்ற ஒரு செக்ஷன் இருக்கிறது. அதை சட்டத்திலிருந்து எடுக்க வேண்டும் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, Order 39 Rule 3 மிக தெளிவாக சிவில் வழக்குகளிலும் எக்ஸ் பார்ட்டியாக இன்ஜெங்ஷன் கொடுத்தால் ஒருமாத காலத்திற்குள் அந்த இன்ஜெங்ஷன் பெட்டிஷனை நீதிபதிகள் முடிவு செய்து ஆக வேண்டும் என்று பார்லிமென்டில் சட்டம் இயற்றப்பட்டு இருக்கிறது. நாங்கள் ஒரு கேள்வியாக இதை போடுகிறோம். இந்த பதிலை உயர்நீதிமன்றத்திலிருந்து வரவழைத்துக்

கொடுத்தால் இந்த நாட்டுக்கு நீதி மன்றங்கள் எப்படி எல்லாம் செயல்படுகிறன்றன என்று தெரியும். சட்டங்களைப் போடுகிறநாம் அந்தச் சட்டத்தை நீதிமன்றங்கள் அமல்படுத்துகின்றனவா என்று கேட்கிற உரிமை நிச்சயமாக இந்த மாமன்றத்திற்கு இருக்கிறது என்ற தைரியத்தில் சொல்கிறேன். அந்த ஆர்டர் 39 ரூல் 3ஏல் சொல்லியிருக்கிற ஒரு மாத காலத்திற்குள் அந்த பெட்டிஷன்களை கீழே இருக்கிற சபார்டினேட் கோர்ட்டுகளில் அதை பைசல் செய்வது கிடையாது. ஊரில் ஒரு இன்ஜெங்ஷன் கொடுத்து விட்டு 2 கிரிமினல் கேஸ்களை உருவாக்கத் தான் அந்தச் சட்டம் பயன்படுகிறதே ஒழிய, முறையாக இந்த விதி சொல்லுகிறபடி எக்ஸ் பார்ட்டியாக இன்ஜெங்ஷன் கொடுத்து பெட்டிஷனை ஒருமாத காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்கிற அந்த நியதியை அவர்கள் பின்பற்றினால் கூட போதும், பல வழக்குகளை நாம் இறுதி செய்ய முடியும்.

அதேபோல் மோட்டார் வாகன விபத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறபோது அதற்கு கோர்ட் பீஸ் கட்ட வேண்டும் என்று விதி இருக்கிறது. அதை வலியுறுத்துவதற்கு ஒரு விண்ணப்பம் போடலாம் என்றாலும் கூட அந்த விண்ணப்பத்திற்கு கூட நீதிபதிகள் ஒரு ஆண்டு காலத்திற்கு வாய்தாக்களை போடுகிறார்கள். ஆகவே, ஒட்டு மொத்தமாக சி. பி. சி. ஆர்டர் 20 ரூல் 12-ல் இருப்பது போல் 100 ரூபாய் கட்டி வழக்கைப் போட்டால் போதும் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்கச் சொல்கிறார்களோ அதிலே நீதிமன்ற கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்ற வகையில் சட்ட விதிகளை திருத்த வேண்டும்.

அதேபோல, இந்த மோட்டார் வாகன விபத்துக்களிலே இருக்கின்ற வழக்குகளை விசாரிப்பதிலே ஒரு விதியை மாநில அரசு போட்டிருக்கிறது. அதை நாம் தயவுசெய்து திருத்த வேண்டும். பத்தாண்டு அனுபவத்திற்குக் குறையாத ஒரு சப் ஜட்ஜ் விசாரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். திண்டுக்கல்லிலே இருக்கின்ற சப் ஜட்ஜ் கோர்ட்டிலே போடுகிறார்கள். அந்த நீதிபதி மாறியவுடனே அங்கே 7 ஆண்டுகள் முடிந்து இன்னொரு நீ பதி வருகிறார். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் பத்தாண்டு காலம் அனுபவம் உள்ளவர் இருக்கிறார். அவருக்குமாற்றினார்கள். இப்பொழுது புதிதாக சப் ஜெட்ஜ்யாக போடப்பட்டவர்12 ஆண்டுக் காலம். அனுபவம் உள்ளவர். ஆகவே டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கோர்ட்டிலேயிருந்து திரும்ப அந்தக் கட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையை மாற்றி, ஒரு சப் ஜட்ஜ் கேடரிலே இருப்பவர் விசாரிக்கலாம் என்ற அளவிற்கு அந்த விதியைத் திருத்தம் செய்ய வேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலையில் தொடர்ந்து பேசுங்கள். பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



(மாலை 4-00)

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சபார்டினேட் ஜூடிசியரிக்கும், மற்றைய நீதிமன்றங்களுக்கும் கொடுத்திருக்கின்ற 'டிஸ்கிரிஷனரி' இஷ்ட அதிகாரம் என்பதைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் நாம்சட்டமன்றக்களிலும், நாடாளுமன்றத்திலும் சட்டங்களைப்போட்டால் தான் பொது மக்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நீதியை விரைவுபடுத்த முடியும் என்று சொல்லி, காலையிலே முடித்தேன். இந்தக் கருத்தைச் சொல்வது, பெரும்பான்மையான பொது மக்கள் எதிர்பார்ப்பது மட்டுமல்ல; உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி மாண்புமிகு பகவதி அவர்கள் 1982 ஆம் ஆண்டு பஜன்லால் வர்சஸ் ஸ்டேட் ஆப் பஞ்சாப் என்ற அந்த வழக்கிலே தீர்ப்பு சொல்லுகிறபோது, 'டிஸ்கிரிஷனரி' என்று வருகிறபோது, நீதிபதிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த அதிகாரத்தை. சட்டசபையாளர்களும், பாராளுமன்றத்தைச் சார்ந்தவர்களும் கட்டுப்படுத்த வேண்டும், 'டிஸ்கிரிஷனரி'க்கு இன்னின்ன கைட்லைன்ஸ் என்பதை சட்டசபைகளும், நாடாளுமன்றமும் வரையறுத்துக் கொடுக்க வேண்டும்.

இந்த டிஸ்கிரிஷனுக்கு நீதிபதிகள் உச்சக்கட்டமான ஒரு எல்லையைக் கடப்பதால், அந்த டிஸ்கிரிஷன் பவரைக குறைக்க வேண்டுமென்பதை உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி மாண்புமிகு பகவதி அவர்கள் அந்த வழக்கிலே தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இந்த வகையிலே நான் முன்பே குறிப்பிட்டேன்— சபார்டினேட் ஜூடீசுவரி வழக்குகளில் வாய்தா கொடுக்கின்ற கொடுமையைப் பார்க்கின்றபோது, அது இந்த நாட்டிலே இலட்சக்கணக்கான பேர்களை உண்மையிலேயே சொல்லொணா துன்பத்திற்கு ஆட்கொண்டிருக்கிறது.

அதேபோல, சில வகை வழக்குகளில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தாக வேண்டுமென்று சட்டத்தை இயற்றுகிறபோது, விதிகளைப் போடுகிறபோது நாம் அவைகளைச் செய்தாக வேண்டும். குறிப்பாக, திருமண விவாகரத்து வழக்குகளில், விவாகரத்து கோரி 25 வயதிலே உள்ளவர்கள் வழக்கு போட்டால், அப்பீல் என்ற நிலையில் அவருக்கு 35 வயதாகிறபோதுதான் விவாக ரத்து கொடுக்கலாமா, வேண்டாமா என்று முடிவெடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவைகள் எல்லாம் வழக்கு தொடர்ந்து 6 மாத காலத்திற்குள் அல்லது ஒரு வருட காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும்.

அதேபோல், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலும் கூட வழக்குகள் நீதிமன்றங்களிலே 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் என்று காத்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை வாய்தா கொடுப்பதால் இருக்கிறது. இவைகளையெல்லாம் மாண்புமிகு நீதிபதி பகவதி அவர்கள் கூறுவதுபோல், இந்த நீதிபதிகள் அவர்கள் இஷ்டத்திற்கு வாய்தா கொடுப்பது அல்லது வழக்கறிஞர்களின் வசதிக்கு ஏற்ப வாய்தா கொடுப்பது என்ற சூழ்நிலையை சட்டத்தின் மூலமும், விதிகளைத் திருத்துவதன் மூலமும் கட்டுப்படுத்த வேண்டும். பல்வேறு வகையான ஆலோசனைகளை நீதித் துறைக்கு வழக்குகளை விரைவிலே பைசல் செய்வதற்கு சொல்லியிருந்தாலும்கூட, மிக முக்கியமான கைட்-லைன்சுகளை நீதிமன்றங்கள் கடைப்பிடித்தாக வேண்டும். இப்படி நான் சொல்லும்போது, நீதித்துறையை நான் விமர்சனம் செய்கிறேன் என்பதல்ல. சட்டக் கமிஷன் சொன்னவைகளையும், பல்வேறு நீதித் துறையைச் சார்ந்தவர்கள் சொன்னவைகளையும் தான் சொல்கிறேன். அப்படியே விமர்சிப்பது என்றாலும்கூட, அரசியல்வாதிகள் சொன்னதை தான் நீதிபதிகள் 10 ஆண்டுகளுக்குப் பின் சொல்வதைப் பார்க்கின்றோம். 1970 ஆம் ஆண்டு தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாட் அவர்கள் இந்திய துணைக் கண்டத்திலே நீதி மன்றத்தைப் பார்த்து என்னென்ன கருத்துக்களைச் சொன்னார்களோ, அதற்காக அந்த தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரி பாட் அவர்களை நீதிமன்றத்தின் கூண்டிலே நிறுத்தி, உச்ச நீதிமன்றம் குற்றம் சாட்டியது. ஆனால் அதே வார்த்தைகளை நீதித் துறையிலே இருக்கின்ற நீதிபதி அவர்கள் பொது நிகழ்ச்சியிலே சொல்லுகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அந்த வகையிலேதான் நான் சொல்கிறேன்.

நீதிமன்றத்தின் தீர்ப்புகள் குறைந்த அளவிலே எழுத வேண்டும் 200, 300 பக்கங்களில் தீர்ப்பு எழுதும்நிலையை மாற்றவேண்டும். பிரான்சு நாட்டிலே ஒரு விதியே வைத்திருக்கிறார்கள். பிரான்சு நாட்டு உச்சமன்றத்தின் தீர்ப்பு 4 பக்கங்களில் இருக்க வேண்டுமாம். இதுவிதி. இது 17 ஆண்டுகளாக அந்த நாட்டிலே இருந்து வருகிறது. 4 பக்கங்களில் தீர்ப்பு இருக்கிறது என்பதற்காக, சுப்ரீம் கோர்டிலே நீதி கிடைக்கவில்லை, தவறு நடந்துவிட்டது என்று யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை; அங்குள்ள மக்கள் கிளர்ந்து எழவுமில்லை. அந்த வகையில் நாம் இங்கே செய்ய வேண்டும். அதேபோல், சிவில் நீதிமன்றங்களிலே பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வரயிருக்கின்ற நாம், கிரிமினல் நீதிமன்றங்களிலும் பல்வேறு வகையான சீர்திருத்தங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத் திருத்தத்தின் மூலமும், விதிமுறைகளை மாற்றுவதன் மூலமும் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.





அடுத்து, பெயிலபிள் அபன்சன்ஸ்—சிறு சிறு வழக்குகளிலே கூட இரண்டு பேர்கள் ஜாமீன் கொடுத்தால்தான் அவர்களை விடவேண்டுமென்ற விதி இருக்கிறது. மிகச் சாதாரண வழக்குகளிலே கூட. ஒரு ஏழை எளிய குற்றவாளியைக் கொண்டுபோய் நீதிமன்றத்திலே நிறுத்தினால் அதற்குப் போடப்படுகிற குற்றத் தொகை 25 அல்லது 30 ரூபாயாக இருக்கலாம். அதற்கு அவன் —அந்த வழக்கு விசாரிக்கப்படுகிற வரையில் வெளியே வரவேண்டுமென்றால் —2 பேர் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்ற விதியிருக்கிறது. அப்படிப்பட்ட வழக்குகளிலே அவரவர்கள் சொந்த பாண்டிலேயே குற்றவாளிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். 304-ஏ செக்ஷன் கீழ் ஒரு லாரி டிரைவர் 10 பேர்களை அடித்துவிட்டுப் போனால்கூட போலீஸ் ஸ்டேஷனிலேயே பெயிலிலே போய் விடலாம். ஆனால் சந்தேக கேஸிலோ அல்லது சிறு சிறு வழக்குகளிலோ பிடிக்கப்பட்டவர்கள் வெளியே வரவேண்டுமானால் 2 பேர் ஜாமீன் கொடுக்க பிடித்துக் கொண்டுபோய் ஆக வேண்டும், ஊரிலேயிருந்து அவர்களைக் கூட்டிக் கொண்டுபோய் அவர்களுக்கு என்ன என்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமோ அந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். ஆகவே அந்தக் குறைகளைக் களைவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுந்து, கிரிமினல் நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில் முதல் தகவல் அறிக்கை வந்தவுடன் குற்றவாளி கைது செய்யப்பட்டு ஜாமீனிலே விடப்படாத நிலை இருக்கிறது. பல்வேறு வழக்குகளிலே, பால் கலப்பட வழக்குகளிலே கெமிக்கல் டெஸ்ட் விவரம் வருவதற்கு 7, 8 மாதங்கள் ஆகின்றன, அதுவரையிலே வழக்குத் தொடரமுடியாத நிலை இருக்கிறது. இருந்தாலும் அந்தக் குற்றவாளி 10, 15 நாட்களுக்கு ஒரு முறை நீதிமன்றத்திற்கு வர வேண்டுமென்று இருக்கிறது. அந்த முறையை மாற்றி சார்ஜ் ஷிட் போட்ட பிறகு குற்றவாகளி நீதிமன்றத்திற்கு வந்தால் போதும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். தேவையில்லாமல் கிரிமினல் நீதிமன்றங்களிலே கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு இது பயன்படும். எப்.ஐ.ஆர். போட்டு அந்த வழக்கிலே சார்ஜ் ஷிட் போட்டு வழக்கை நடத்துவதற்கு நீதிமன்றம் தயாராக இருக்கிறபோது தான் குற்றவாளி நீதிமன்றத்திற்கு வரவேண்டும், இடையிலே உள்ள 7, 8 மாத காலத்திலே தினசரியோ அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறையோ வரத் தேவையில்லை என்ற கருத்தை உணர்ந்து அந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டும்.

அடுத்து. சி. ஆர். பி. சி. 13-வது பிரிவின்படி 'High Court is empowered to appoint Special Magistrate' என்றநிலை இருப்பதால் நீதிமன்றத்திலே குற்றவாளிகள் தாங்களே குற்றத்தை ஒத்துக் கொள்கிறார்கள் என்றால் அதற்காகக்கூட நீதிபதி முன்னாலே

அதற்கான அத்தாட்சி கொடுக்கவேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே கிரிமினல் நீதிமன்றங்களிலே இருக்கிற ஒரு சில அதிகாரிகளையே ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமித்து ரிமாண்ட் வழங்குகிற பணியை குற்றவாளி குற்றத்தை ஒத்துக் கொள்கிறபோது செய்கிற பணியைச் செய்து முடிக்கிற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதைப்போலவே குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு பப்ளிக் பிராசிகியூட்டர்கள், அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர்கள் எல்லாம் நியமித்து இருக்கிறோம். இப்போது நீதிமன்றத்திற்கு அப்படி ஒருவர் என்று நியமித்து இருக்கிறோம். வழக்குகளைத் தெளிவாக நடத்துகிற வாய்ப்பும், திறமையான வழக்கறிஞர்களுக்கு வாய்ப்பும் இல்லாத காரணத்தால் ஒரே ஒருவரை நியமித்துவிடுவதால் நீதிமன்றங்களிலே வழக்குகள் குவிந்துவிடுகிற நேரத்திலே ஒரு வழக்கறிஞர் நடத்த அடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு நீதிமன்றத்திலும் பேனல் ஆப் பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ் என்றும், பேனல் ஆப் ஆடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ் என்றும் நியமித்து வழக்குகளை யார் திறம்பட நடத்துகிறார்களோ, யார் சிறப்பாக அரசுக்காக நடத்துகிறார்களோ அவர்களிடம் அரசாங்கத்தின் தரப்பிலே மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது காவல் துறை அதிகாரியோ வழக்குகளை ஒபபடைத்தால் கிரிமினல் நீதிமன்றங்களிலே வழக்குகளை விரைவாக நடத்த முடியும்.

நான் காலையிலே குறிப்பிட்டதைப் போன்று உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியும், துணை ஜனாதிபதியுமாக இருந்த திரு. இதயதுல்லா அவர்கள் குறிப்பிட்டதைப்போல நிர்வாகத் துறையிலும் சட்டமியற்றுகிற துறையிலும் நீதிமன்றங்கள் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் பிரான்ஸ் நாட்டில் இருப்பதைப்போல் நீதிமன்றங்களைக் கண்காணிக்க நீதிபதிகள் அளிக்கிற தீர்ப்புக்களைக் கண்காணிக்க சுபிரியர் கவுன்சில் ஒன்று அமைக்கப்படவேண்டும். அதற்கு நான் ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே முகவை மாவட்டத்திலே ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப் தமிழிலே தீர்ப்பு எழுதிவிட்டார் என்ற குற்றத்திற்காக அந்தத் தீர்ப்பின்மீது அப்பீல் வந்தபோது கோர்ட் தனது தீர்ப்புகளை தமிழிலே எழுதலாம் என்று இந்தச் சட்டமன்றம் சட்டம் செய்யவில்லை. ஆகவே. தமிழிலே எழுதிய தீர்ப்புச் செல்லாது என்று கூறிவிட்டார்கள், கோர்ட்டின் ஆட்சிமொழியாக, நிர்வாக மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்று சட்டம்இயற்றவில்லை. ஆகவே சட்டம்இல்லாமல் தமிழிலே எழுதியதீர்ப்பு தவறுஎன்று சொல்லிஅந்த ஒரேகாரணத்திற்காக அப்பீல் நீதிமன்றம் அதை ரத்து செய்தது. ஆனால் உத்திரபிரதேசத்திலே உயர்நீதிமன்றம் சம்ஸ்கிருதத்தில் ஜட்ஜ்மெண்ட் 2 மாதங்களுக்கு முன்னாலே எழுதியிருக்கிறார்கள். சமஸ்





கிருதம் கோர்ட் மொழி என்று எந்தச் சட்டத்திலும் கிடையாது. ஆகவே, பிரான்ஸ்,நைஜீரியா, இத்தாலி ஆகிய நாடுகளிலே இருப்பதைப்போன்று சுபிரியர் கவுன்சில் என்ற அமைப்பின் மூலம் ஜூடிஷியரியைக் கண்காணிக்கமுடியும். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

(மாலை 4-10)

தென்காசியைச் சேர்ந்த அருமைச் சகோதரர் வேங்கடரமணன் அவர்கள் சார்ந்திருக்கிற தொகுதியிலேகூட வழக்கறிஞர்கள் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அங்கேயிருக்கிற நீதி துறை அதிகாரியைப் பற்றி, அதைத் தொடர்ந்து அவர் திண்டுக்கல்லுக்கு மாற்றப்படுகிறார். திண்டுக்கல்லிலே இருக்கிற வழக்கறிஞர்கள் இரண்டு மாதத்திலே மிகப்பெரிய ஒரு போராட்டத்தை நடத்தினார்கள்.

அதற்குப் பிறகு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால், இப்படி அங்கே பணியாற்றுகிற வழக்கறிஞர்கள், பொதுமக்கள், நீதித் துறை அதிகாரியைப் பற்றி தீர்மானமே வடித்துக் கொடுத்துச் சொன்னால்கூட, அதற்கு எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன ? அவர் தவறு செய்திருக்கிராரா, இல்லையா என்பது வேறு விவகாரம். ஒருவேளை தவறு செய்திருந்தால், இப்படிப்பட்ட ஒரு சுப்பீரிய கவுன்கில் இருக்குமானால் நீதிபதி எப்போழுது இப்படி பார் கவுன்சிலாலோ, பொதுமக்களாலோ குற்றம் சாட்டப்படுகிற நேரங்களில், எத்தனைத் தீர்ப்புக்களைச் சொல்லி இருக்கிறாரோ, அத்தனை தீர்ப்புகளையும் அலசி ஆராய்ந்து தவறுகளைச் செய்திருக்கிறாரா, இன்னின்ன தவறுகளைச் செய்திருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது.

நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வழக்கறிஞர்கள் சங்கம் தென்காசியிலும், திண்டுக்கலிலும், மிகப்பெரிய வீரம் செறிந்த போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்திற்குப் பிறகு மாறுதல் செய்கிற நிலைமைதான் இருந்தது. அவர்கள் நடத்திய பேராட்டங்கள், அவர்கள் சொன்ன கருத்துக்கள் சரியா, அல்லது நீதிபதி சொன்ன கருத்து சரியா என்பதற்கு அந்தக் கால கட்டங்களில் அவர் அளித்த தீர்ப்பை, உயர்நீதிமன்றம் முழுமையாக விமர்சித்து, அல்லது கணக்கெடுத்துப் பார்த்து, அவற்றிலே யார் சொல்வது நியாயம் என்பதை எண்ணிப் பார்ப்பீர்களானால், அந்த விவரம் இதுவரையிலே எனக்கும் தெரியவில்லை. இவற்றையெல்லாம் போக்க வேண்டும். அங்கங்கே நீதித் துறையிலே நடைபெறுகிற ஒரு சில தவறுகள் களையப்பட வேண்டுமென்றால் நிச்சயமாக நான் எற்கனவே குறிப்பிட்டதைப் போல், இந்த நீதித் துறை நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்ற ஒரு வாய்ப்

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1985 ஜுன் 25

பினை உருவாக்குகின்றவகையில் சுப்பீரியர் கவுன்சில் என்று மற்ற நாடுகளில் இருப்பதைப்போல் இங்கே ஏற்படுத்த சமீபத்திலே நடைபெற இருக்கிற, மாண்புமிகு பாரதப் பிரதமர் கூட்டி இருக்கிற, மாநிலசட்ட அமைச்சர்களுடைய மாநாட்டில் இந்தக் கருத்தினையும் உச்ச நீதி மன்றப்பிரிவை இந்த நாட்டில் இருக்கின்ற பகுதியிலே அமைக்கின்ற உரிமை பாராளுமன்றத்திற்கும் இந்த நாட்டினுடைய ஜனாதிபதிக்கும் இருக்க வேண்டும். அவர்கள்தான் இனிஷியேட் செய்ய வேண்டும். தொடங்க வேண்டுமே ஒழிய, உச்ச நீதிமன்ற நீதிபதி சொன்னால்தான் என்று சொல்வது நியாயமாக, சரியாக இருக்காது. அதைக் கூட நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் சிவசங்கர் பார்லிமெண்டிலே சொல்லுகிற பொழுது கூட Quoting Art. 130 of the Constitution, the Law Minister said the Supreme Court shall sit in Delhi or in such other place or places, as the Chief Justice of India may, with the provai of the President from time o time appoint'' and added that no proposal in this connection had been received from the Chief Justice of India என்று சொல்லியிருக்கிறார்கள். தென் மாநிலத்திலே உச்ச நீதி மன்றம் ஏற்படுத்த வேண்டுமென்பது தென் மாநில மக்களுடைய கோரிக்கை; தென் மாநிலங்களிலே எல்லா அரசுகளுடைய கோரிக்கை; காலையிலே கூட அந்தப் புள்ளிவிவரங்களைச் சொன்னேன். உச்ச நீதிமன்றத்தில் ஏற்படுகிற வழக்குகளில் 36 சதவீதம் வழக்குகள் தென் மாநிலங்களின் வழக்குகள். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இங்கே இருக்க வேண்டுமென்று சொன்னால்கூட, அதற்குக் கருத்துரு அனுப்புகின்ற பொறுப்பு உச்ச நீதிமன்ற நீதிபதியிடம் இருக்கிறது அரசியல் சட்டத்தின் 130-வது பிரிவின்படி. நடைபெற இருக்கிற மாநாட்டில் அரசியல் சட்டத்தின் 130-வது பிரிவைச் திருத்த வேண்டுமென்ற வகையிலே சொல்லவேண்டும்.

அதேபோல பல்வேறு வகையிலும் நீதித் துறையிலே நாம் சட்டம் இயற்றுவதிலே தலையிடக் கூடாது. வரவேற்கிறோம்; தலை வணங்கி ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். நீதித் துறையில் நிர்வாகத் துறை தலையிடக்கூடாது. வாழ்த்துகிறோம், தலை வணங்கி அதை எற்றுக் கொள்கிறோம். ஆனால் நீதித் துறை நிர்வாகத் துறையிலும், அதே போல் நீதித் துறை சட்டம் இயற்றுகிற துறையிலும், அரசாங்கத்தினுடைய கொள்கை வகுக்கின்ற திட்டங்களிலும் தலையிடுகிறபொழுது நாம் அவைகளைத் தவறு என்று சொல்லவில்லையென்றாலுங்கூட நமக்கு இருக்கிற உரிமையை, நிலை நாட்டுகிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதைத்தான் நான் முன்பே குறிப்பிட்டேன். 1970ஆம் ஆண்டு திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாட் சொன்னார்கள். அவர் சொன்னது தவறு என்று உச்ச நீதிமன்றம் அவருக்கு தண்டம்போட்டார்கள். In 1970, the Supreme Court had held Mr. Em. S. guilty of contempt of Court for saying that the Judges were guided and



1985 ஜுன் 25] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

dominated by class hatrad, class interest and class prejudices instinctively favouring the rich againts the poor. தோழர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் சொன்னது தவறு என்று இந்த நாட்டினுடைய நீதிமன்றம் சொன்னது. ஆனால், 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் தேதி இந்தோ ஜெர்மன்ட்றத் புறவுக் கழகத்திலே பேசிய சின்னப்பா ரெட்டி உச்ச நீதிமன்றத்திலே நீதிபதியாக இருந்து கொண்டு சொல்லியிருக்கிறார்கள்

On January 1983, at the Indo-German Seminar he accused the Indian Judiciary of being over-ready to uphold the rights of the owners of the properties. இ. எம். எஸ். நம்பூதிரிபாட், அரசியல்வாதி, சொன்னால் தவறு. நீதிபதிகள் சொன்னால் நியாயம்.

1983ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலே என்ன சொன்னார்கள்? அரசு சம்பந்தப்பட்ட வழக்குகள் வருகின்றபொழுது அரசு சமூகநலத் திட்டங்களை நிறைவேற்றுகிறபொழுது, அவை வருகின்றபொழுது, அரசாங்கத்தையும் கேட்டுக்கொண்டு ஒரு முடிவைச் சொல்லுங்கள். ஆரம்பக் கட்டத்திலே சொல்வீர்களானால், சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே எங்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. நீதிபதிகளே, நீங்கள் உதவ வேண்டுமென்றுதான் கேட்டார்கள். நான் வேதனையோடு சொல்கி இங்கே இருக்கிற பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நீதிமன்றத்தை அவமதித்தார் புரட்சித் தலைவர் என்றார்கள். புரட்சித் தலைவர்மீது வழக்கே தொடர்ந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு சொன்னபோது நீதிமன்றத்தை அவமதிக்கிறார் என்று சொன்னார்கள். ஆனால் பாலகிருஷ்ண பிள்ளை வழக்கிலே கேரள ஹைக்கோர்ட்டின் தீர்ப்பு பற்றி வி. ஆர். கிருஷ்ண ஐயர் சொல்கிறார், அவசரமான தீர்ப்பு என்று. இப்படிப்பட்ட ஒரு கருத்தை கேரள உயர் நீதிமன்றம் ஆரம்ப நிலையிலேயே சொல்லியிருக்க வேண்டியதில்லை என்று கிருஷ்ண ஐயர் சொல்கிறார். இப்படி வி. ஆர். கிருஷ்ண ஐயர் சொன்னது அவமதிப்பதாக இல்லை. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னது அவமதிப்பதாக இருக்கிறது என்கிறார்கள். இது என்ன நியாயம்?

இந்த மன்றத்திலே சொல்லும்போது கூட சொன்னார்கள். சமுதாய நலன் கருதி எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளிலே இந்த மூன்று துறைகளும் ஒன்றையொன்று என்குரோச் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். நீதித் துறையிலே நிர்வாகத் துறை தலையிடக் கூடாது. அதைப்போன்று சட்டமியற்றும் துறையிலே நீதித் துறை தலையிடக்கூடாது. நான் அதை . ஒப்புக் கொள்கிறேன். ஆனால் சமீபத்தில் உச்ச நீதிமன்றத்திலே அரசாங்கத்திற்கு கொள்கை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அகில இந்திய அடிப்

படையிலே வைத்தியக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் தேர்வு நடத்த வேண்டுமென்று கொள்கை வகுத்துக் கொடுக்கிறது இந்த நாட்டின் சுப்ரீம் கோர்ட்.

அது மட்டுமல்ல. சூப்பர் ஸ்பெஷாலிட்டி கோர்ஸ் முழுவதையும் 50 இடங்கள் என்றால், அந்த 50 இடங்களையும் நிரப்ப அகில இந்திய அடிப்படையில்தான் தேர்வு நடத்த வேண்டும், அகில இந்திய அடிப்படையில் தான் நியமிக்க வேண்டும் என்று கொள்கை வகுத்துக் கொடுக்கிறார்கள். பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்திலே கூட இந்தியன் மெடிக்கல் கவுன்சிலுக்கு என்ட்ரன்ஸ் டெஸ்ட் நடத்தும் உரிமையைக் கொடுக்கவில்லை. 1977-ல் கல்வி மாநிலப் பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு எடுக்கப்பட்டாலும் மத்திய அரசு கல்வி சம்பந்தமாக எந்தவிதமான சட்டத்தையும் இயற்றவில்லை. இருந்தாலும் அகில இந்திய அடிப்படையில் தேர்வு நடத்த வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் சொல்கிறது. இப்படி எல்லாம் கொள்கை வகுத்துக் கொடுக்கிறார்கள். இங்கே வைத்தியக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாக வழக்கு வருகிற போது நீதி வகுத்துக் கொடுக்க யார் இருக்கிறார்கள் இந்த நாட்டிலே?

நீதி மன்றத்திலே இப்படி ஒரு கொள்கை வகுத்துக் கொடுக்கிறார்கள். இப்படி கொள்கை வகுத்துக் கொடுக்கிற உச்ச நீதி மன்றத்திலே கர்நாடக மாநில அரசு ஒரு வழக்குத் தொடுத்திருக்கிறார்கள் கல்வி போன்றவைகளில் வேலை வாய்ப்பில் மாணவர்களைச் சேர்ப்பது ஜாதி அடிப்படை யிலா அல்லது வருமானத்தின் அடிப்படையிலா என்பது பற்றி ஆலோசனை சொல்லுங்கள் என்று உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு ரெஃபரன்ஸ் அனுப்பியிருக்கிறார்கள் கர்நாடக மாநிலத்தில் இருந்து. கர்நாடக மாநில அரசு இதற்கு ஒரு வழி காட்டுங்கள் என்று உச்ச நீதிமன்றத்தைக் கேட்டிருக்கிறது. அதற்கு இரண்டு ஆண்டு காலம் கழித்து 242 பக்கத்திற்கு ஒரு தீர்ப்பை எழுதி, கடைசியில் சொல்லியிருக்கிறார்கள் இதை நாங்கள் சொல்ல மாட்டோம், அரசாங்கத்திற்கு கொள்கை வகுத்துக் கொடுப்பது எங்கள் வேலை இல்லை என்று. அரசாங்கம் இதை ஒத்துக் கொள்ள வேண்டும். அதேமாதிரி அரசாங்கக் கொள்கையிலும் நீதித்துறை தலையிடக் கூடாது. சட்டம் இயற்றும் துறை நீதித் துறையில் தலையிடக் கூடாது, நீதித் துறை சட்டம் இயற்றும் துறையில் தலையிடக் கூடாது. அந்த வகையிலே தான் நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட கருத்துக்களை மாநில அரசில் இருப்பவர்கள் சொல்லலாம், நாம் சொல்லலாம். ஆனால் மாநில அரசால் அதற்கு சட்டம் போட முடியாது. மத்திய அரசில் இருப்பவர்கள்தான் அதைச் செய்ய முடியும். உச்ச நீதிமன்றமும் மற்ற



நீதிமன்றங்களும் அரசாங்கத்திற்குக் கொள்கை வகுத்துக் கொடுக்கக்கூடிய அளவுக்கு தன்னுடைய வரம்பை மீறிச் செல்லக் கூடாது என்ற கட்டுப்பாட்டை விதிக்க நம்மால் முடியாது. பாராளுமன்றம்தான் அதைச் செய்ய முடியும். விரைவில் நடைபெற இருக்கும் சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள் உரிமைகள் பாதிக்கப்படுகின்ற வகையில் நீதி மன்றங்களில் அவர்களுக்கு எதிராக ஏற்படுகின்ற இன்னல்களை எடுத்துக் கூறுகின்ற வகையில் நம்முடைய மாநில சட்ட அமைச்சர் அவர்கள் அந்த மக்கள் சார்பிலே குரல் எழுப்ப வேண்டுமென்று சொல்லி, பல்வேறு வகைகளிலே மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக விளங்குகின்ற தமிழக அரசு சட்டக் கமிஷன் என்னென்ன காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அத்தனையும் இந்த அரசு செய்திருக்கிறது; அதை இந்தக் கொள்கைக் குறிப்பின் மூலம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

(மாலை 4-20).

*திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்ட அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

முதலிலே தமிழ் நாடு சிறைச்சாலை நிர்வாகம் பற்றி பரிசீலிக்கத் துவங்குகிற நேரத்தில் நம்முடைய கொள்கைக் குறிப்பிலே குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலையைத் தடுத்து நிறுத்தி நன்கு செயல்படுவதற்குரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்தி அவர்களின் புதுவாழ்வுக்கு வழி வகுப்பதே நோக்கம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதைப் படிக்கின்றபோது உண்மையிலேயே மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது. ஆனால் நடைமுறை அனுபவத்திலே நாம் கண்டு வருகின்ற உண்மை என்ன என்பதைப் பரிசீலிக்கிற போதுதான் வேதனையாக இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே முன்வைத்திருக்கின்ற விஷயம் உண்மையிலேயே வரவேற்கவேண்டிய விஷயம்தான். ஆனால், தமிழகத்தில் இருக்கக் கூடிய சிறைச்சாலைகளின் நிர்வாகம் சீர்திருத்தச் சாலைகளாக இருக்கின்றனவா என்றால் இல்லை. குற்றங்களைச் செய்யத் தூண்டுகின்ற குற்றங்களின் சர்வகலாசாலைகளாகத்தான் தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

சிறை ஒரு புலிவாய் என்று சொன்னார்கள். அந்த சிறைச்சாலைக்கு உள்ளே சென்று வருகிறவர்கள் திருந்தி வந்ததாக அநேகமாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடும் சமூகக் கண்ணோட்டத்தோடும் பரிசீலிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சரவை மீது ஒரு களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. எதிர்க்கட்சி என்ற எரிச்சல் நிலையிலே இருந்து விமர்சிக்க நான் விரும்பவில்லை. நடைமுறையில் இருக்கின்ற பல்வேறு அடிப்படையான ஆதாரபூர்வமான விவரங்களின் அடிப்படையிலிருந்துதான் இந்த விமர்சனத்தை முன்வைக்க விரும்புகிறேன்.

மனிதத் தன்மையைப் பற்றி மிக உயர்வாகச் சொல்லிய மகான்களுக்கு மதிப்பும், மரியாதைகளும் செய்யப்படும். ஆனால் மனிதத் தன்மையற்று நடந்து கொண்டிருக்கின்ற சிறை அதிகாரிகளுக்குப் பிரமோஷன் கொடுக்கப்படும். மனிதத் தன்மையற்ற முறையில் நடந்து கொண்ட சிறை அதிகாரிகளை விசாரணைக் கமிஷன் குற்றவாளியாக அரசு முன்பு கொண்டு வந்து நிறுத்தினால் அவர் தண்டிக்கப்பட மாட்டார். இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் இலக்கணம் என்ன தெரியுமா ? குற்றம் புரிந்திருக்கிறார் என்று சுட்டிக் காட்டப்பட்டால் அவருடைய தலையிலே மகுடம் சூட்டுவதுதான். இது முறைதானா? தயவு செய்து சிந்தித்துப்பாருங்கள். சிறைக்குச் செல்வது என்பது நாளை எந்தக் கட்சியினருக்கும் வரலாம். எந்தக் கட்சியினரும் சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் நேரலாம். எனவே, இத்தகைய நடைமுறைகளை மாற்ற வேண்டும் என்று வேதனையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் சிறைச்சாலை அனுபவங்களைப் பற்றி ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனமாக இதைக் கேட்டு அவ்வாறு கவனமாகக் கேட்கப்பட்ட விஷயங்களின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி என்னுடைய விஷயத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். தமிழ்நாட்டிலே உள்ள வேலூர் சிறைச்சாலையில் அனேகமாகக் கடந்த ஓராண்டுக் காலமாகப் புகைந்து கொண்டே இருக்கிறது. சிறைச்சாலைகளிலேயே வேலூர் சிறைச்சாலை ஒரு சித்திரவதை முகாமாக இன்றைக்கு மாற்றப்பட்டுவிட்டது. வேலூர் சிறைச்சாலையில் அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட வேண்டிய அவசியம் என்ன ? பல்வேறு அலுவல்களுக்கிடையே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முனைப்போடு இதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.





குற்றவாளிகள் ஒருபோதும் தப்பிக்கக் கூடாது. நீங்கள் கொள்கைக் குறிப்பில் சொல்கிறீர்கள் பரம்பரைக் குற்றவாளிகள் பற்றி அதாவது குற்றத்தைச் செய்வதையே இயல்பாகக் கொண்டிருக்கின்ற குற்றவாளிகள் பற்றி அவர்கள் யார் தெரியுமா ? ஜெயில் நிர்வாகிகள் தான். சிறைச்சாலையின் நிர்வாக அதிகாரிகள் தான் பரம்பரைக் குற்றங்களைப் புரிகின்ற குற்றவாளிகளாக இன்றைக்குக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட வேண்டியவர்களே தவிர வேறு ஃபேக்சுவல் ப்ரிசனர்ஸ் இல்லை என்பதை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான ஆதாரங்களை வைக்க முன் விரும்புகிறேன்.

வேலூர் சிறைச்சாலையிலே என்ன நடந்தது? ஒரு மரண தண்டனைக் கைதி வேலூர் சிறைச்சாலையில் இருக்கின்ற கண்காணிப்பாளரின் ஊழல் நடவடிக்கைகளை எதிர்த்து ஹைக்கோர்ட்டிலே ஒரு ரிட் மனு தாக்கல் செய்து விட்டார். அவ ரிட் மனு தாக்கல் செய்தவுடன் என்ன நடந்தது 38 ஆண்டு கால விடுதலைக்குப் பின்னரும் மனித நேயத்தைப் பற்றிப் பெரிதாகப் பீற்றிப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் தான், மனிதர்களுக்குத் தேவையான சட்டங்களை புத்தகப் புழுக்களாகப் படித்துத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கின்ற இதே நேரத்தில் தான் ஊழலுக்கு எதிராக ஹைக்கோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்த ஒரு தண்டனைக் கைதி ஈவு, இரக்கமற்ற நிலையில் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்ற நிலைமை வேலூர் சிறையில் நடந்தது. நடந்து கொண்டிருக்கின்றது. அந்த மரண தண்டனைக் கைதி என்ன தவறு செய்துவிட்டார்? அவர் செய்த ஒரே தவறு என்ன தெரியுமா ? அங்கே இருக்கக் கூடிய கைதிகளுக்கு வழங்குகின்ற உணவைப் பெருச்சாளிகள் தின்றுவிட்டால் கூட பெருச்சாளிகள் தானே என்று விட்டுவிட்டுப் போகலாம். ஆனால் மனித உருப்பெற்ற சிறைப் பெருச்சாளிகள் அங்கே தின்றுகொண்டிருக்கின்றன.

பாரதி சொன்னானே, 'கோயில் பூசை செய்வோன் சிலையைக்கொண்டு விற்றல் போலும்' என்று, அதைப்போல கோயிலில் பூசை செய்பவரே சிலையைக் கடத்தி விற்றது போல, யார் கைதிகளுக்கு உணவு அளித்து காப்பாற்ற வேண்டுமோ அவனே தன்னுடைய மூக்கை சோற்றுக்குள் நுழைத்துக்கொண்டு, பூராவும் உறிஞ்சி அத்தகைய சம்பவத்திற்கு எதிராக ரிட் மனு தாக்கல் செய்த ஒரு கைதியின் மீது சிறைக்குள்ளே தடியடி நடக்கிறது. இந்த ரிட் பிரச்னை எழுந்ததால் அன்றைய கண்காணிப்பாளர் திரு. ராமநாதன் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதற்குப் பின்னர், நம்முடைய அரசு என்ன செய்கிறது என்றால், ஒரு சிறப்பு போனஸ் பரிசு தருகிறது. யாருக்கு? ஊழலில் ஈடுபட்ட இரண்டு பேர்களில்

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜூன் 25

ஒருவருக்கு. ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். அந்த உணவுத் துறையில் ஊழல் புரிந்த சப் ஜெயிலர், டெபுட்டி ஜெயிலர் ராமச்சந்திரனுக்கு வெறும் டிரான்ஸ்பர் மட்டும்தான்.

ஏன் டிரான்ஸ்பர் மட்டும்? புதுக்கோட்டைக்கு டிரான்ஸ்பர் செய்வது பெரிய தண்டனையா? இது தண்டனை அல்ல. டிரான்ஸ்பர். சரியான தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் அது வழங்கப்படாமல் இருப்பது, இந்த மாநில அரசு நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி, அவர்களுடைய உணர்வுக்கும் நோக்கத்திற்கும் அது களங்கம் பயப்பது அல்லவா. ஆனால் அவர்களுடைய உணர்வைக் களங்கப்படுத்தியுள்ளதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா? அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்க வேண்டும். மனித தன்மையற்று, நியாயத்திற்கும், நேர்மைக்கும் உரிமைக்குமாகப் போராடிய கைதிகளின் மீது கொடிய வகையில் தாக்குதலை நடத்திய அந்த அதிகாரிகள் தண்டிக்கப்படாமல் விட்டு வைக்கப்படக் கூடாது. இவ்வளவு நிலைமைக்குப் பிறகும் அந்த வேலூர் சிறையில் இப்படிப்பட்ட கொடுமைகள் தொடர்ந்து நடந்தே வருகிறது. அதற்கு என்ன காரணம்? ஒரு அதிகாரி போனால் இன்னொரு அதிகாரி அந்த இடத்திற்கு வருகிறார். அந்தக் கண்காணிப்பாளர் போய் இன்னொரு கண்காணிப்பாளர் வந்தார். இன்னொரு டெபுடி ஜெயிலர் வந்தார். வந்தவுடன் என்ன நடந்தது? பழி தீர்க்கும் படலம் துவங்கி விட்டது.

சிறை என்பது ஒரு தனி சாம்ராஜ்யம், அந்த சாம்ராஜ்யத்திற்குள்ளே யாருமே நுழைய முடியாது. அங்கே என்ன நடக்கிறது என்று அவர்களுக்குத்தான் தெரியும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ எனக்குத் தெரியவில்லை. இன்றைக்கும் அங்கே கண்காணிப்பாளர் என்னவென்று அழைக்கப்படுகிறார் தெரியுமா? இவ்வளவு பெருமக்களையும் படங்களாக இங்கே வைத்திருக்கிற பேரவையின் மண்டபத்திற்குள் நான் சொல்கிறேன், பல்வேறு தர்மநெறியுள்ள தத்துவங்களைக் கொடுத்த பாரத மண் என்று சொல்லுகிறோம், ஆனால் அங்கு கண்காணிப்பாளர் எப்படி அழைக்கப்படுகிறார் என்றால், 'துரை' என்று சொல்லப்படுகிழார் யார் துரை? கண்காணிப்பாளர் துரையா பிரிட்டிஷ்காரனை நம்முடைய நாட்டை விட்டுப் விரட்டியதற்கு பின்னரும், பிரிட்டிஷ்காரனுடைய கொத்தடிமை புத்தி இன்னமும் அங்கே அதிகாரிகளால் வளர்க்கப்படுகிறதே. ஏன்? என்ன காரணம்? துரை என்றுதான் அவர் அழைக்கப்பட வேண்டுமா? தான் ஒரு இந்தியன் என்பது அவருக்குத் தெரியாதா? கைதி துரை என்று அழைக்கும்போது, அப்படிச் சொல்லக்கூடாது.



1985 ஜூன் 25] [திரு. கு. சுப்பராயன்]

என்னை துரை என்று அழைக்காதே. இது ஒரு சுதந்திர நாடு, நான் ஒரு இந்தியன், என்னை வேண்டுமானால் ஐயா என்று அழை என்று சொல்லியிருக்கக் கூடாதா? 'சொன்னார்களா? சொல்ல மாட்டார்கள். என்ன காரணம்? அந்த அதிகார உடுப்பை போட்டுக் கொண்டாலே மனிதாபிமானமற்ற முறையில் அடித்து நொறுக்கத் தூண்டுமே. இந்த முறை மாற்றப் பட வேண்டுமா, இல்லையா? மாற்றப்பட வேண்டும். குறைந்த பட்சம் அந்த துரை என்ற வார்த்தையாவது அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் சற்றுக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பழி வாங்கும் படலம் எப்படி நடந்தது தெரியுமா அதிகாரிகள் திட்டம் போட்டார்கள். அதிகாரிகள் தன்னுடைய அதிகார ஜாதியைப் பழி வாங்கியவனை பழி வாங்க திட்டம் போட்டே வேலை செய்தார்கள்? அதுவும் அவன் ஒரு தண்டனைக் கைதி என்ற முறையில் என்ன செய்தார்கள். வஞ்சம் தீர்க்க, பழி வாங்குவதற்கான வேலைகளை எல்லாம் ஆரம்பித்தார்கள். எவ்வளவோ கொடுமைகளைச் செய்தார்கள். அதனுடைய தொடர்பாகத்தான் இப்போது அங்கே அதை எதிர்த்து ஒரு குருஷேத்திர யுத்தமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கைதிகள் அவைகளை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த அடக்குமுறையை எதிர்த்துப் போராடினார்கள். ஆனால், எதுவும் ஓயவில்லை. ஏன்? கரைப்பார் கரைக்காமல் எப்படி அடக்குமுறை ஓயும்? யார் கரைக்க வேண்டுமோ, அவர்கள் கேளாதவர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கேட்க வேண்டும் என்றுதான், அவர்களுடைய குரல் சற்று தங்களுடைய காதிலே விழச் செய்ய வேண்டும் என்றுதான் இந்த மானியக் கோரிக்கை முன்பாக இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பரிதாபத்திற்குரிய நிராயுதபாணியான அந்தக் கைதிகளின் கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும். அவர்களின் கோரிக்கைகள் என்ன என்பதை நேரிடையாகக் கேட்டு ஆராய்ந்து, அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏன் இன்னமும் அங்கே கொடுமைகள் தொடர்கின்றன? இவ்வளவுக்கும் பின்னர் நியாயம் கோருவதில் முனைப்பாக இருந்த 6 தண்டனைக் கைதிகளைப் பொறுக்கி எடுத்து, அவர்களை நிர்வாணப் படுத்தி கடுமையான தாக்குதல் தொடுத்து. அதிலும் குறிப்பாக ஹைகோர்ட்டிலே ரிட் மனு தாக்கல் செய்த அந்தக் கைதியின் முன் பல் இரண்டும் உடைந்து போகிற அளவுக்கு கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளனர். இன்றைக்கு சென்னை மத்திய சிறையிலே அந்தக் கைதி அடைக்கப்பட்டிருக்கிறான்.

(மாலை 4-30)

அதற்கு யார் காரணம்? நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் ஆளும்கட்சி என்ற முறையிலே எதிர்க்கட்சிகளை மாச்சரியத்தோடு பார்க்க வேண்டாம், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் ஒரு காலத்தில் சிறையில் அடிபட்டார்கள் என்ற காரணத்திற்காக உரிய அதிகாரிகள் மீது அவர்கள் எதைச் சொன்னாலும் தவறு என்ற முடிவிற்கு வரக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடிபட்ட காலத்திலே எந்த அதிகாரி என்பதல்ல பிரச்னை. எந்த அதிகாரிகளும் ஜெயில் மேனுவலுக்கு விரோதமாக, சட்டநடை முறைகளுக்கு விரோதமாக நடப்பார்களானால் நடவடிக்கை எடுங்கள் நீதிமன்றத்தைப் பற்றியெல்லாம் நமக்குத் தக்கபடி, வசதிப்படி, தேவையானபடி பேசி பிரயோஜனமில்லை. அப்படி ஒரு குற்றம் சுமத்தப்படுகிற போது அந்தக் குற்றவாளி மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் விடலாமா? நடவடிக்கை எடுக்காவிட்டால் குற்றம் நியதியாகிப் போய் விடுகிறது. குற்றம் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. அதிகாரிகள் குற்றம் புரிவது ஒப்புக்கொள்ளக்கூடிய செயலாக இன்றைக்கு வளர்க்கப்பட்டு விடுகிறது. அத்தகைய முறை மாற்றப்பட வேண்டும். எனவே அத்தகைய புகாருக்குரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதனுடைய உச்சக்கட்டமாக 28—7—1984 ஆம் தேதியன்று நடந்தது. அந்தக் கைதிகள் அமைதியாகவே இருந்தார்கள். அமைதியாக இருந்த கைதிகள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு என்ன வழி? நாயைச் சுட வேண்டுமென்றால்கூட அந்த நாய்க்கு வெறிபிடித்து விட்டது என்று சொல்லித் தானே சுட வேண்டும். காரணம் கற்பிக்க வேண்டாமா? என்ன செய்தார்கள்? பின்னால் திடீரென்று தொகுப்புச் சாவியைக் காணவில்லை என்றார்கள். சாவியைக் காணோம். யார் எடுத்திருப்பார்கள்? கைதிகள் தான் எடுத்திருப்பார்கள். ஆகவே எல்லோரையும் இழுத்துப் போட்டு அடி. ஏனென்றால் சாவியைக் காணவில்லை என்றால் இவர்கள் தான் திருடியிருப்பார்கள் என்று காரணம் சுமத்தி அடித்தார்களே, அந்த அதிகாரிகள் மனிதர்கள் தானா? அந்த அதிகாரிகளை அடிக்க அனுமதித்தது யார்? தனிப்பட்ட எந்த நபர் அடிபட்டான் என்பதல்ல. இருதயமுள்ள ஒவ்வொரு மனிதரும் சிந்திக்க வேண்டிய விஷயம். அந்தச் சிறைக் காம்பவுண்டிற்குள் காரைக்கும், கல்லுக்கும் நாக்கு வாய் இருந்தால், சித்திரவதைக் கதைகளை கதையாகச் சொல்லி இருக்கும். அவ்வளவு கொடுமைகள் நடைபெறுகின்றன. அவற்றை எல்லாம் இப்படி ஏதோ தப்பித் தவறி வெளியிட்டு எழுதினால்—யாரோ மாண்புமிகு உறுப்பினர் கூட காலையில் குறிப்பிட்டார்கள்—என்ன நடக்கும்? இன்றைக்கு நான் பேசுகிறேன். வேலூர் சிறையில் மீண்டும் கைதி





கள் மீது மிக விரைவில் ஒரு யுத்தம் தொடங்கப்படும். போன மானியத்தை, அதற்கு முந்தைய மானியத்தைப் பாருங்கள். தொடர்ந்து இது குறித்துப் பேசுவது என்பது நடந்து வருகிறது. ஊதுகிற சங்கை ஊதுவோம், விடிகிற போது விடியட்டும் என்ற நிலையில் எதிர்க்கட்சியினர்கள் குறைகளைச் சொல்கிறார்கள். ஆனால் விடிவதே இல்லை. இத்தகைய நடைமுறைகள் தடுக்கப்படுவதில்லை. இது சரியல்ல.

அதற்குப் பிறகு என்ன செய்தார்கள்? பூட்டாத பூட்டுக்கள் என்ற சினிமா காண்பிக்கப்படும் என்று கைதிகளுக்குச் சொல்லி, எல்லோரையும் ஒரு இடத்திற்கு வரவழைத்து உட்கார வைத்துவிட்டு சினிமா காட்டவில்லை. ரொம்பவும் காலதாமதம் ஆயிற்று, அதற்குப் பிறகு சினிமா இல்லை, எல்லோரும் கலைந்து போகலாம் என்று சொன்னவுடன், கைதிகள் இயல்பாக முணுமுணுத்து ஆத்திரத்துடன் வெளியேறுவது இயல்பு. அப்படி யாராவது செய்தால் அதைக் காரணம் காட்டி கைதிகளை மண்டையைக் கிழிக்கலாம் என்பது அவர்களுடைய திட்டம். இந்தத் திட்டத்தைப் போட்டுக் கொடுத்து விட்டு புத்திசாலி உயர்மட்ட அதிகாரி போய் விட்டார். எப்படியோ விவரம் தெரிந்து கைதிகள் முணுமுணுக்காமல் அமைதியாகக் கலைந்து போனார்கள். அதனால் அவர்கள் தலை தப்பியது. அங்கே முணுமுணுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அவர்கள் கலாட்டா செய்தார்கள், ஆகவே இத்தகைய தடியடி சம்பவம் நடந்தது என்று ஒரு விவர அறிக்கை விவரமாக சட்டமன்றத்திலே வைக்கப்பட்டு விடும். பிரச்னை அதோடு மூடப்பட்டு விடும். நல்லவேளை அப்படி நடக்காமல் கைதிகள் தப்பித்தார்கள். ஆகவே இத்தகைய சம்பவங்கள் நடந்திருப்பது வேலூர் சிறைக்குள்.

அடுத்து கைதிகளுடைய குறைபாடுகளைக் கேட்க மனுக்களைப் பெறுவதற்காக புகார்ப் பெட்டி வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிலே என்ன நடக்கிறது? அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். வேலூர் சிறையில், சேலம் ஜெயில் கறுப்புக் குல்லா கைதி மாதிரி, அந்த அதிகாரிகள் அந்த மரப்பெட்டியில் போடுகிற மகஜர்களைத் திருடிவிடுகிறார்கள். அபேஸ் பண்ணி அப்புறப்படுத்தி விடுவார்கள். அது உரிய பக்கம் வந்து சேராது. அதிலே அவர்களுக்கு ஒரு ஆத்ம திருப்தி. இதையெல்லாம் யார் செக்கப் பண்ணுவது? கைதி கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கிறபோது நியாயம் கோர முடியுமா? ஆகவே அந்தப் பெட்டி என்பது நடைமுறையில் வெறும் கண் துடைப்புதான். கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. புகார் மனு பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்று. அந்தப் புகார் மனுப் பெட்டியில் எவ்வளவு புகார்கள் வந்திருக்கின்றன? எவ்வளவு புகார்கள் பரிசீலிக்கப்பட்டன? எவ்வளவு புகார்கள் எந்தெந்த அதிகாரிகள் மீது வந்தன? என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

[திரு. கு. சுப்பராயன்] [1985 ஜூன் 25

இருக்கின்றன என்கிற விவரங்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. அதிகார கூர்க்காக்கள் சிறைக்கு அப்பால் எதையும் நகரவிடமாட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் தான் இன்றைக்கு சிறையிலே இருக்கிறார்கள். ஆகவே இத்தகைய சம்பவங்கள் அங்கே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

இதனுடைய உச்சகட்டமாக 144 கைதிகள் இலவச சட்ட உதவி என்ற அடிப்படையில் கையெழுத்திட்டு, இப்படித் தடியடி நடந்திருக்கிறது. சட்ட விரோதமாக நடந்திருக்கிறது. சிறைவிதிகள் வழங்கிய உரிமைகள் கூட எங்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை எல்லாம் மனுவாகக் கொடுத்து, வட ஆர்க்காடு மாவட்ட நீதிபதிக்கு, இலவச சட்ட வழக்கறிஞர் மூலமாக அனுப்பி வைக்கிறார்கள். அந்த மனுவை வாங்கிக் கொண்ட அந்த நீதிபதி என்ன செய்தார் தெரியுமா? நேராக அந்த மனுவைத் திருப்பி குற்றவாளிக்கே அனுப்பிவிட்டார். நல்ல நடவடிக்கை. அந்த நீதிபதி என்ன செய்தார்? யார் மீது குற்றம் சுமத்தி, அந்த 144 கைதிகள் கையெழுத்துப்போட்டு அனுப்பினார்களோ, அந்தக் குற்றம் புரிந்த சிறை அதிகாரிக்கே அது திரும்பி வந்து, பாரா உஷார், கைதிகள் உன் மீது புகார் சொல்கிறார்கள், எனவே நீ உஷாராக இருந்து கொள் என்று சொல்லி அனுப்புகிறார்கள். எப்படி இந்த நீதிபதி? நீதிக்குக் கல்லறை எழுப்புகிற நடவடிக்கை அல்லவா? நீதியை மக்களிடமிருந்து பிரித்து வைக்கிற வேலையல்லவா? ஒடுக்கப்பட்டவர்களும், பாவப்பட்ட மக்களும், நீதித்துறையைச் சந்தேகிக்காத அளவிற்கு நடந்து கொள்ளவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்கறிஞர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் நீதிக்கு, நீதி தேவனுடைய அறையிலேயே கல்லறை எழுப்புகிற திருப்பணிகளைச் சிலர் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களும் போற்றிப் புகழப்பட்டுத்தான் வருகிறார்கள். ஏன் என்றால், நீதியின் பேனா முனை யாருக்கு வளையும்? நம்பூதிரிபாடு சொன்னதாகச் சொன்னார்களே அது உண்மைதான். பண வலு உள்ளவர்களுக்கு மட்டுமே நீதி வளையுமே தவிர, பாவப்பட்டவர்களுக்கு ஒரு போதும் வளையாது. எனவே அதற்கு வேறு சில விஷயங்கள் சமூகத்தில் நடக்க வேண்டும். ஆகவே இத்தகைய நிலைமைக்கு வட ஆர்க்காடு மாவட்ட நீதிபதி துணை போய் இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில பல முக்கியமான விஷயங்கள் இங்கே சொல்லப்பட்டு இருக்கின்றன. ஒரே ஒரு உதாரணம். அண்ணா தி.மு.க. ஒரு தலைப்பட்சமான ஆட்சியல்ல, முன்னுதாரணமான ஆட்சி என்று பரவலாக ஆளும் கட்சி நண்பர்கள் பேசிக் கொள்கிறார்கள். அவர்கள் பேசிக் கொள்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நீங்கள் சிறைச்சாலைக்கு சில பத்திரி





1985 ஜூன் 25] [திரு. கு. சுப்பராயன்]

கைகளை அனுப்பிக்கொண்டு இருக்கிறீர்கள். எந்தப் பத்திரிகை அனுப்பிக்கொண்டு இருக்கிறீர்கள்? அண்ணா பத்திரிகை அப்படி என்ன, அண்ணா பத்திரிகை, பாவங்களை சிந்தனைகளைச் சுரக்கச்செய்கிற அற்புதமான களஞ்சியமா, அர்த்த புஷ்டியுள்ள அவதார புருஷர்களின் அருளுரைகளை அறிவுரைகளை எல்லாம் தாங்கி வருகிறதா? அது என்ன அண்ணா பத்திரிகையை மட்டும்தான் சிறைக்குக் கொடுக்க வேண்டுமா? அண்ணா பத்திரிகை கொடுத்தால் எல்லாக் கைதிகளும் திருந்தி விடுவார்களா? இந்த அரசு ஜனசக்தியை வாங்கக்கூடாதா? தீக்கதிர் வாங்கக்கூடாதா? முரசொலியை வாங்கக்கூடாதா? ஏன் தடுக்கிறீர்கள்? ஆளும் கட்சி என்ற நிலையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆப்டர் ஆல் இந்த சின்ன விஷயத்தில், நீங்கள் எவ்வளவு அதிகார துஷ்பிரயோகம் செய்கிறீர்கள், இது நியாயம் தானா? இது முறைதானா? ஆகவே, சட்ட அமைச்சரின் கவனத்திற்கு இது வந்திருக்காது என்ற நம்பிக்கையோடு நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இனி மேலாவது எல்லாத் தரப்பு பத்திரிகைகளும், அந்தச் சிறைச்சாலைகளுக்குச் செல்வதற்கு உரிய வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து முறை. இது என்ன பஞ்சாயத்து முறை? இந்தப் பஞ்சாயத்து முறையால் ஏதாவது பிரயோஜனம் உண்டா? பஞ்சாயத்து முறை என்பது குரங்கு கையில் ஆப்பத்தைக் கொடுத்துப் பங்கு போட்டுக் கொடுக்கச் சொன்ன மாதிரி, அதிகாரிகளை நம்பி, இந்தப் பஞ்சாயத்து முறை இருக்கிறது. இது முறையல்ல. அதிகாரிகள் நினைத்தால் அவர்கள் நபர்களை மாற்றிக்கொள்வார்கள். தொழிற்சாலையில் ஒரு ஸ்ட்ரைக் நடக்கிறபோது, அந்த ஸ்ட்ரைக்கை உடைப்பதற்கு— மரத்தை உடைக்கிறபோது, மரத்தில் இருந்து காம்பை எடுக்கிற மாதிரி— தொழிலாளி வர்க்கத்தை உடைப்பதற்கு, தொழிற்சாலைகளில் உள்ள சில கருங்காலிகளைப் பிடித்து, செய்வார்கள். அதைப்போல சிறைச்சாலைகளில் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள், பிரிட்டிஷாருடைய ட்ரெயினிங் பாருங்கள். அதனால், அந்தச் சிறையில் உள்ள அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? பிரித்தாளும் சூழ்ச்சி. அந்தப்பிரித்தாளும் சூழ்ச்சியிலே தமிழ்நாட்டு சிறை அதிகாரிகள் படு ஜோர், ரொம்ப அருமை. என்ன பண்ணுகிறார்கள்? பரோல் லீவா? யார் என் காலில் வந்து விழுபவன், அவனுக்குத்தான் சலுகைகள். இதனால் என்ன நடக்கிறது? கைதிகளைப் பிரித்து காரியம் பண்ணுவது நடக்கிறது. மரத்தை உடைப்பதற்கு உளி வைக்க ஒரு ஓட்டை வேண்டும் பாருங்கள். அந்த மாதிரி அவர்களுடைய ஒற்றுமையைக் குலைப்பதற்கு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள் அந்த அதிகாரிகள். இந்த ஆட்சியைக் களங்கப்படுத்துகிறார்கள். இதையாவது நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எங்களுக்காக வேண்டாம், எதிர்க்கட்சிகளுக்காக வேண்டாம். உங்கள் ஆட்சியினுடைய நிர்வாகத்

திலே ஒரு வடுவை குற்றம் புரிகிற அதிகாரிகள் ஏற்படுத்துகிறார்கள். இதையாவது நீங்கள் மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4-40)

அடுத்து, சிறை விதிகள் பிரிட்டிஷ்காரன் காலத்தில் உருவாக்கியது. நம்முடைய சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூட மிகவும் ஆவேசமாகக் கூறினார்கள், பிரிட்டிஷ்காரன் போட்ட நடைமுறை மாற்றப்பட வேண்டுமென்று. அது எல்லா இடங்களிலும் எல்லாத் துறைகளிலும் பொருத்தப்பட வேண்டும். ஒரு இடத்தில் அல்ல; அனைத்து மட்டத்திலும் அந்த முறை பொருத்தப்பட வேண்டும். 100, 120 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட அந்த விதிகள் தான் இன்னும் பொருந்துகிறது. பல்வேறு சிறைத் துறை கமிஷன்களின் சிபாரிசின் அடிப்படையில் அந்த விதிகளை முற்றாக மாற்றி அமைக்க அரசு உறுதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அதேபோல் ஆயுள், தண்டனைக் கைதிகளைப் பற்றி சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய தன்மையை, அவசியத்தைக் கருதி வலியுறுத்த விரும்புகிறேன். 10 ஆண்டு காலம் என்றால் ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க வேண்டும். பிரிட்டிஷ்காரன் காலத்தில் தேசீய விடுதலை இயக்கத்திற்காகப் போராடியவர்களை ஒடுக்குவதற்காக 20 ஆண்டு காலம் ஆயுள் தண்டனை போட்டான். அதையே நாம் வைத்துக்கொள்ள வேண்டுமா? கூடாது. அந்த முறையை நாமும் உரியபடி மத்தியஅரசை நிர்ப்பந்தித்து மாற்ற வேண்டிய வடிவங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்கள் பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நான் இதுவரையில் சொன்ன பிரச்சினைகளில் காவலர்கள் பாவம். வேலூர் சிறையில் கூட தடியடி நடந்ததற்கு யார் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள் தெரியுமா? சூத்திரதாரிகள் எல்லாம் தப்பி விட்டார்கள். சுண்டெலிமட்டும் தூக்கில் இடப்பட்டுவிட்டது. அங்கே நடந்தது என்ன, தெரியுமா? ஆப்டர் ஆல் காவலர்கள் மட்டும் சஸ்பண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

ஆனால் இந்தக் காரியத்திற்கு விஷப் புகை ஊதி காரியம் பண்ணிக் கற்றுக் கொடுத்தார் பாருங்கள் அந்த உயர் மட்ட அதிகாரி உட்கார வேண்டிய இடத்தில் இன்னமும் உட்கார்ந்து இருக்கிறார். அப்படிப்பட்ட சலுகை அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த முறை சரிதானா? சரியில்லை. ஆகவே தான் சொல்கிறேன், இந்த முறை மாற்றி பாவப் பட்டிருக்கிற காவலர்களின் டியூட்டி நேரத்தைத்தயவுசெய்து முறையாக மாற்றி



அமையுங்கள், மனைவியோடு, குடும்பத்தோடு ஒரு 5 மணி நேரம் கூட இருக்கமுடியாத ஒரு துயரம் அந்தக் காவலர்களுக்கு இன்னும் இருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும்.

அதுபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து காவலர்கள் குடியிருக்கின்ற அவர்களுடைய இல்லங்களைப்போய்ப் பார்க்க வேண்டும். ஒரு கணவன், மனைவி இருந்தால் பரவாயில்லை. வயதுக்கு வந்த ஒரு பிள்ளை இருந்தால் மிகவும் கஷ்டம். வேறு எந்த விஷயமும் வீட்டில் நடக்க முடியாத ஒரு சங்கடமான நிலைதான் இருக்கிறது. அவ்வளவு கஷ்டமான ஒரு நிலைமை அந்த வீடுகளில் இருக்கிறது. அவ்வாறு இருக்கக்கூடாது. அவைகள் உரிய முறையில் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில அதிகாரிகள் கான்விக்ட் வார்டர்களை பயன்படுத்தி கைதிகளை ஒடுக்குகிற முறைகளைத் தண்டிக்கிற முறைகளை நிச்சயமாகத் தடை செய்யப்பட வேண்டும். அதேபோல் அதிகாரிகள் காவலர்களைத் தன் வீட்டு வேலைக்கு ஆர்டர்லிகளாகப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும். அப்படிப் பணிபுரிய மறுத்ததால் வேலூர் சிறையில் ஸ்டாலின் என்ற ஒரு காவலர் வேறு ஒரு பிரச்சினையில் சிக்கவைத்து நீக்கப்பட்டு இருக்கிறார் என்பதை நினைவுக்கு கொண்டு வந்து இந்த அளவில் நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண்கள் 13, 14 ஆகியவை மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக்கூற விழைகிறேன். மானியக் கோரிக்கை எண் 13 என்ற நீதி நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் மானியத் தொகையும் குறைவாக உள்ளது. அந்த மானியத்தின் மீது பேசுவதற்குக் கொடுத்துள்ள நேரமும் குறைவாக உள்ளது. மானியக் கோரிக்கை எண் 13-க்கு 12 கோடி ருபாய் என்று மிக பால்ட்ரி அமௌண்ட் ஒரு சிறிய தொகையைத் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த மாநிலத்தின் 3-வது அங்கமாக அமைந்துள்ள நீதி நிர்வாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை மிக மிகக் குறைவான தொகை. ஆகவேதான் உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளுக்கு 3,500 ரூபாய் சம்பளமாகக்கொடுக்கப்படுகிறது. ஒரு சாதாரண ஜூனியர் உயர்நீதிமன்றத்தில் பிராக்டிஸ் செய்பவர் கூட மாதம் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும் போது மிக சீனியரான ஒரு நீதிபதிக்கு 3 ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது மிகவும் கொடுமையான ஒன்று ஆகும்.

(மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் தலைமை.)

அதுபோல்தான் சபார்டினேட் ஜுடிஷியரியிலும் நீதிபதிகளுக்கும் அஸிஸ்டென்ட்டு பப்ளிக் ப்ராசிக்யூட்டர் ஆகியோருக்கும் கொடுக்கப்படும் சம்பளம் மிகக்மிக குறைவாக இருக்கிறது. பாங்கில் இருக்கும் ஒரு அடித்தள கடைசி மட்டத் தொழிலாளி வாங்கும் சம்பளத்தைவிடக் குறைவாக ஒரு நீதிபதிக்கு சம்பளம் கொடுப்பதால் அவர்கள் இதிலே வாழ வேண்டும் என்ற காரணத்தால், தற்கால நடப்புக்குத் தகுந்தவாறு, தற்கால மொத்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவர்கள் வாழவேண்டும் என்பதால் அவர்கள் தவறு செய்யத் தூண்டப்படுகிறார்கள். அதற்கு அரசே காரணமாக இருக்கக் கூடாது. மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். திண்டுக்கல்லிலே உள்ள ஒரு நீதிபதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

அதே போல் ** ** ஒரு நீதிபதி வேறு ஒரு மாவட்டத்திலே, வேறு ஒரு இடத்திலே ஒரு வழக்கறிஞரை மிகக் கேவலமாக, செக்ஷன் 75 எம். சி. பி. ஆக்டிலே குறிப்பிடுவார்களே, அதைப் போல் காமக்குரோத வார்த்தைகளை வழக்கறிஞரை நோக்கி உபயோகப்படுத்தி அதனால் வழக்கறிஞர்களால் எதிர்க்கப்பட்டு, வெளியே அனுப்பப்படவேண்டியவர், * நியமிக்கப்பட்டு, இன்று எங்களுக்கெல்லாம் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எப்பொழுது பொங்கி எழப் போகிறோமோ, எப்போது அவர் மீண்டும் மாற்றப்படுவாரோ, தெரியவில்லை.

அதைப் போன்ற அதிகாரிகளைத் தொடர்ந்து வைத்து நீதித் துறைக்கு ஒரு அசிங்கத்தை ஏற்படுத்தக் கூடாது என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு ஒரு சிறிய உதாரணமாக ** ** ** நானும் 11 ஆண்டுகளாக வழக்கறிஞராக இருக்கிறேன். நீதிபதிகள் ஒரு "செக்லூடட் லைப்" என்று சொல்வார்களே, அதைப் போல, பொதுமக்களிடத்திலோ வழக்கறிஞர்களிடமோ கூட நெருங்கிப் பழகாமல் இருக்கிற ஒரு தனிமையான வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். ஆனால் இப்போது சில நீதிபதிகள் தனது கோர்ட்டிலே நிறைய வழக்குகள் உள்ள நபர்களின் வீடுகளுக்கு, கடைகளுக்குச் செல்லுவதும், அவர்கள் கார்களை உபயோகப்படுத்துவதும், வீடியோ பார்ப்பதும், மேலும் சில மகிழ்ச்சிகரமான காரியங்களைச் செய்யக் கூடிய நிலையில் காலம் தள்ளும் மோசமான சூழ்நிலை இருந்து வருகிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இது ** ** ** மட்டுமல்ல, தமிழகத்தில் பல இடங்களில் இருக்கிறது. அதை மாற்றியாக வேண்டும். நீதிபதிகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். அதற்கு நீதித்துறையிலே உள்ள விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட் என்பது முறையாக, திறமையாகச் செயல்பட வேண்டும். அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து இந்த மானியக் கோரிக்கையிலே, காலம் அதிகமாக இல்லாததால், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசியது போல் விளக்கமாக அதிகமாகப் பேச சந்தர்ப்பம் இல்லாததால், கோரிக்கைகளை மட்டும் வரிசையாகச் சொல்லி விடுகிறேன்.

காரணம், எனது தொகுதி மட்டுமின்றி, வேறு பல தொகுதிகளைப் பற்றியும் கோரிக்கைகள் என்னிடம் இருப்பதால், கோரிக்கைகளை படித்து விட அனுமதி கோருகிறேன். அதற்கு இடையில் மணி அடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தற்போதுள்ள புள்ளி விவரங்களின்படி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டபடி வழக்குகள் தேக்கம் என்பது மிகவும் பயங்கரமான அளவுக்கு இருக்கிறது. முன்சீப் கோர்ட்டிலே 1,15,000 வழக்குகள் தேங்கியுள்ளதாக 1984-ம் ஆண்டு புள்ளி விவரம் குறிப்பிட்டு இருக்கிறது. இதற்குக் காரணம் பரவலாக நீதித்துறை சீரமைக்கப்படவில்லை. நீதித் துறையிலே அதிகாரிகள் தேவையான அளவுக்கு நியமிக்கப்படவில்லை. ஜட்ஜ்கள் என்று குறிப்பிடப்படும் நீதிபதிகள் தேவையான அளவுக்கு இல்லை என்பதும் இன்னொரு காரணம். ஒவ்வொரு கோர்ட்டிலும் தற்போது தேங்கியுள்ள கேஸ்களைக் குறைக்க எக்ஸ்-பார்ட்டியில் விடச் சொல்லி, Dismissed for defaults என்று சொல்லி, வழக்கறிஞர்களை வேண்டிக் கொண்டு ரெஸ்டோர் பண்ணாமலும் காலம் தள்ளுகிறார்கள். இன்னும் சில கோர்ட்டுகளில் புதிதாகக் கொடுக்கும் வழக்குகளை 6 மாதம் ஒரு வருஷம் கூட நம்பர் கொடுக்காமல் ரிட்டர்ன் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி 1984 ஆம் ஆண்டு குறிப்பிலே 1,15,000 வழக்குகள் முன்சீப் கோர்ட்டிலே இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா கணக்குகளையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 3 இலட்சம் வழக்குகள் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே அரசு உடனடியாக நிறைய நீதிபதி பதவிகளை உருவாக்க வேண்டும். நீதிபதிகளை நியமிக்க வேண்டும்.

நீதிபதிகளை நியமிப்பதிலே எல்லோரும் கூறிய கருத்தை மீண்டும் நானும் கூற விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேறு டிபார்ட்மென்டிலே ஏற்கனவே வேலையிலுள்ளவர்களை நீதிபதிகளாகப் போடுவதை விட வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்தியவர்களைப் போடுவது தான் நீதித் துறைக்கு சாலச் சிறந்தது. ஏனென்றால், வழக்கறிஞர்கள் மக்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கும், வழக்கை அணுகுவதற்கும் அறிந்தவர்கள். மற்ற ஆபீசுகளிலே உட்கார்ந்து கிளார்க்கா செக்ஷன் ஆபீசர்களாக இருந்தவர்கள், தீர்ப்பு எழுதுவதையும் கூட தன்னுடைய ரொட்டீன் ட்யூட்டியாக நினைக்கிறார்கள்.

சட்டத்தையும், நியாயத்தையும், மனச் சாட்சியையும் பற்றி அவர்களுக்கு சரியாகத் தெரியவில்லை. புரொசீஜர்கள் புரியவில்லை. அந்த நிலை மாற்றப்படவேண்டும். ஆகவே, வழக்கறிஞர்களிலிருந்து நீதிபதிகளாக நியமிக்கும் பழக்கத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேங்கியிருக்கும் வழக்குகளுக்கு ஒரு சிறிய உதாரணம். நான் குறிப்போடு சொல்கிறேன். எங்கள் குடந்தை முன்சீப் கோர்ட் (ரெண்ட் கன்ட்ரோல் கோர்ட்) ஆர்.சி.ஓ.பி. 103/80-வழக்கு 84-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எடுக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டது. 6 மாதம் கழித்து-அதாவது 1985 ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி, தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்த வழக்கை எடுப்பதற்கு 5 வருஷம். எடுத்து விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு 6 மாதம். இதற்கெல்லாம் காரணம், அதிகாரிகளின் சோம்பல் மட்டுமல்ல. அங்கே உள்ள பலவிதமான புரோசீஜர்கள், சி.பி.சி. யிலுள்ள அனைத்து புரவிஷன்களிலேயும் மனுக்கள் போட்டு காலத்தை நீடிக்கலாம் என்ற முறையை அனுசரித்து வழக்குகள் நீட்டிக்கப்படுகின்றன. ஜட்ஜ்கள் நினைத்தாலும் முடிக்க முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. அதற்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், டிஸ்கிரிஷனரி பவர்களைக் குறைப்பது கூட நல்ல வழி என்று தான் நான் கருதுகிறேன்..

(மாலை 4—50)

இன்னும் சொல்லப்போனால், **ஜூடிஷியல் செகண்டு கிளாஸ் மாஜிஸ்திரேட்டு என்ன பாவம் செய்தார் என்று கூற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : **நீதிபதி என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடாது. பொதுவாக நீதிபதி என்று சொல்லவேண்டும். *ஆகவே, **என்று சொன்னதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு கி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தவறாக சொல்லவில்லை. இரவு $7\frac{1}{2}$ மணிவரை அவர் கோர்ட்டு நடத்துகிறார். சி.ஆர்.பி.சி. படி மாலை 5 மணிக்கு மேல் கோர்ட்டை நடத்தக்கூடாது. ஆனால் 5 மணிக்குள் கோர்ட்டை முடித்தால் அவர் பெயரில் கொடுப்பதற்கு 4 நாட்கள் ஆகிவிடும். அந்த அளவிற்கு அந்த மாஜிஸ்டிரேட்டுககு ஓர்க்-லோட் ஜாஸ்தியாக இருக்கிறது. அதனால் தான் அவர் பாவம் செய்தவர் என்று சொல்லுகிறேன். இந்த மாதிரியான இடங்களில், ஓர்க்-லோட் அதிகமாக உள்ள இடங்களில், சில அடிஷனல் கோர்ட்டுகளை ஆரம்பிப்பதிலே தவறு இல்லை. அவ்வாறு ஆரம்பிப்பதினால் ஒரு படித்த வழக்கறிஞருக்கு வேலை கிடைக்கும். தேங்கிக் கிடக்கும் வழக்குகள் பைசலாகும். அதனால் ஒரு நல்ல வழி ஏற்படும்.

தமிழகத்தில் எங்கெங்கு சி. ஜே. எம். கோர்ட் உள்ளதோ, அங்கெல்லாம் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்க வேண்டும் என்பது ஒரு கன்வென்ஷன். இட் இஸ் ஏ கஸ்டம். ஆனால், தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரையில் கும்பகோணத்தில் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட் இல்லாததினால்,—ஒரு குறிப்பிட்ட ஸ்பெஷல் வழக்கிற்காக அதாவது ஜடல் தெப்ட் வழக்கிற்காக போடப்பட்ட ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட், சி. ஜே. எம். இல்லாதபோது, இந்த முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பார்க்கவேண்டிய ஒரு முறை இருக்கிறது. அந்த முறையை மாற்றி ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் அங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் 11 ஆண்டுகளாக வழக்கறிஞராக தொழில் செய்தவன். என்னுடைய கவுன் கோட் ஆகியவைகூட கோர்ட்டிலுள்ள பர்னிச்சர் காரணமாக கிழிந்து விட்டன. அந்த பர்னிச்சரைப் பற்றி கேட்டால், ஜெயில் டிபார்டுமென்டிலே இருந்து பர்னிச்சர் வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த பழைய பர்னிச்சர் உடனடியாக மாற்றப்படும் என்று 11 ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அது இன்னும் மாற்றப்படவில்லை. அங்குள்ள சேர்கள் எல்லாம் என்னைவிட அதிக வயதாகி இருக்கும். எல்லோருடைய உடலையும் கூட பதம்பார்த்து விடுகிறது. அந்த நிலையில் அந்த பர்னிச்சர்கள் இருக்கின்றன. உடனடியாக அந்த பர்னிச்சர்களை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி வாரியம் ஒன்றையும், ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் ஒன்றையும் அமைத்துள்ளது. அதுபோல், ஜூடிஷியல் ஆபீசர்களுக்கும்

டி-2 எ 178—20

ஒரு வீட்டு வசதி வாரியம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வீடு இல்லாததன் காரணமாக, பல ஜூடிஷியல் ஆபிசர்கள் நகரில் பலருடைய தயவில் வாழவேண்டிய நிலையிருக்கிறது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அடுத்து, கடந்த 10 ஆண்டுகளாக வழக்கறிஞர்களுடைய எண்ணிக்கையை பார்க்கின்றபோது மிக அதிகமாகி விட்டது. 1974-ல் இருந்த வழக்கறிஞர்களின் எண்ணிக்கையைவிட, இன்று 1985-ஆம் ஆண்டில் வழக்கறிஞர்களுடைய எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகமாகி உள்ளது. ஆனால், பல இடங்களில்—அட்வகேட் அசோஷியேஷன்ஸ் உள்ள கட்டிடங்கள் நூறாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடங்களாக இருக்கின்றன. அந்தக் காலத்தில் ஐந்து, பத்து வழக்கறிஞர்கள் இருந்த காலத்தில் அவர்களுக்காக இந்தக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், தற்போதுள்ள ஜன நெருக்கத்தையும், வழக்கறிஞர்களுடைய கூடுதல் எண்ணிக்கையையும் பார்க்கும்போது, அவர்களுடைய கூடுதலான தேவைகளை அனுசரித்து வழக்கறிஞர்களுக்கு சங்கக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடந்தையைப் பொறுத்த அளவில், 5 ஆண்டுகளுக்கு முன்பு உயர்நீதி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர் சங்கத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு கொள்கிறேன். அந்த நீண்ட நாளைய கோரிக்கையை எங்கள் ஊரைச்சார்ந்த அமைச்சர் அவர்கள் முயற்சித்தும் கூட நிறைவேற்ற முடியவில்லை. ஆதலால், இந்த ஆண்டிலாவது அதைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வழக்கறிஞர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் நல நிதியைப் பற்றி எல்லோராலும் பேசப்பட்டது. ஆகவே நான் அதைப்பற்றி அதிகமாக பேச விரும்பவில்லை. அதற்கான சட்டத்தை விரைவில் கொண்டுவந்து. வழக்கறிஞர்களுக்கு ஓரளவு பாதுகாப்பு ஏற்படுத்தி கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வழக்கறிஞர்கள் பல ஆண்டுகளாக அந்தத் தொழிலைச் செய்தும், எந்த ஒரு சொத்தும் இல்லாமல் இன்சூரன்ஸ்கூட செய்யாமல் உள்ள நிலையில் இருக்கிறார்கள். உதாரணமாக நானே இன்னும் இன்சூரன்ஸ் செய்துகொள்ளவில்லை. இந்த நிலையில் நாளைக்கு எனக்கே ஒரு விளைவு ஏற்பட்டால், என்னுடைய குடும்பத்திற்கு யார் செய்வார்கள்? ஆகவே, எங்களைப் போன்ற பொதுவாழ்வில் உள்ளவர்கள், வழக்கறிஞர்கள்,—எங்களால் ஒன்றும் செய்ய இயலாது— ஆகவே இதனை கருத்தில் கொண்டு, வழக்கறிஞர்களை



கம்பெல் செய்தாவது ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ வாங்கி அதற்குரிய நல நிதியை விரைவில் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் சொள்கிறேன். அதற்காக அமைச்சர் அவர்களிடம் கேள்வியைக்கூட கேட்டேன். அது சீக்கிரம் வரும் என்றார்கள். ஆகவே, அந்த நல நிதியை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சபார்டினேட் ஜூடிஷியரியில் வழக்கு போடும் ஒரு லிடிகென்ட் பப்ளிக் என்ன பாவம் செய்தாரோ, தெரியவில்லை. அவர் 7½ சதவீதம் கோர்ட் பீ கட்டவேண்டும். ஆனால், உயர்நீதி மன்றத்தில் வழக்கு போடும் ஒரு பெரிய பணக்காரர் ஒரு இலட்சத்திற்கு மேல் கடன் கொடுத்திருந்தாலும், அவருக்கு சலுகை கிடைக்கிறது. ஆனால் அன்றாடம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு ரூபாய் 500, 1,000 என்று சேமித்து வைத்திருந்த பணத்தை கடன் கொடுத்திருந்தால் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்றால் ஒரு வழக்கு போட வேண்டும்.

ஆயிரம் ரூபாய்க்கு 75 ரூபாய் கோர்ட் பீசாக அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்றைய சமுதாய நிலைமைக்கு ஏற்ப, சமுதாய கண்ணோட்டத்தோடு இந்தக் கொடுமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, வழக்கறிஞர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஆனால் புதிதாக இயற்றப்படும் சில சட்டங்கள் சம்பந்தமாக, உதாரணமாக டெட் ரிலீப் ஆக்ட் போன்ற சட்டங்கள் சம்பந்தமாக, வழக்கறிஞர்கள் ஆஜராகக் கூடாது என்று செய்து, வழக்கறிஞர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் செய்கிறார்கள். அப்படிப் பார்த்தால் வழக்கறிஞர்களுடைய பண்டமென்டல் ரைட்ஸையே பாதிக்கின்ற அளவிற்கு இருக்கிறது. வழக்கறிஞர்கள் அவர்களுடைய, சொந்த நலன்களுக்காக ஹைகோர்ட்டிற்கோ, சுப்ரீம் கோர்ட்டிற்கோ போக விரும்பவில்லை. எனவே, சமுதாய நலன் கருதி பல சட்டங்களிலுள்ள தடைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் நீக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பகுதி உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, மதுரையில் உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்ச் ஒன்று அவசியம் தேவைப்படுகிறது. அதைப் போல, சென்னையிலே, தென் மாநிலங்கள் என்று நான் குறிப்பிடவில்லை. சென்னையிலே என்றுதான் குறிப்பிடுகிறேன். உச்ச நீதிமன்றத்தின் பெஞ்ச் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆளுங்கட்சியின் சார்பில் கூறியவர்கள், இது மத்திய அரசு செய்ய வேண்டியது,

மத்திய அரசு செய்ய வேண்டியது என்று கூறினார்கள். நீங்கள் உரிமைக் குரலைக் கொடுங்கள். நாங்கள் உங்களோடு சேர்ந்துக் கொடுக்கிறோம். அதற்கான பலனை எல்லோரும் எதிர்பார்ப்போம்; நாம் நம்முடைய கடமையைச் செய்வோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துணைத் தலைவரவர்கள் கூறியதைப்போல, போர்க் குரல் எழுப்ப வேண்டாம், ஆனால் உரிமைக் குரலைக்கொடுங்கள், நமக்குத் தேவையான உரிமையைக் கேளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டைரக்டரேட் ஆப் ப்ராசிகியூஷன் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தப் போவதாகக் கடந்த மூன்று, நான்கு வருஷங்களாக ஒவ்வொரு வருஷமும் குறிப்பிடப்பட்டு வருவதாக நான் அறிகிறேன். அந்த டைரக்டரேட் ஆப் ப்ராசிகியூஷனை உடனடியாக அமலுக்குக் கொண்டு வருவதுடன், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உள்ள பப்ளிக் ப்ராசிகியூட்டர்கள், அடிஷனல் பப்ளிக் ப்ராசிகியூட்டர்கள் அஸிஸ்டென்ட் பப்ளிக் ப்ராசிகியூட்டர்கள் ஆகியவர்களும் அந்த டைரக்டர் ஆப் ப்ராசிகியூஷனின்மாவட்டப் பிரிவுகளுக்குக் கீழே வரும்படியாக, டிரான்ஸ்பர் முதலியன செய்யும் வசதிகளைச் செய்து, அது டைரக்டரேட் ஆப் ப்ராசிகியூஷனின் கண்ட்ரோலில் இருப்பதைப் போல உடனடியாக இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த டைரக்டரேட் ஆப் ப்ராசிகியூஷன் எப்பொழுது வரும் என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே குறிப்பிட்டால் ஓரளவுக்கு நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

குடந்தையிலே, ஜுடிஷியல் ஆபீசர்களுக்குக் கொடுத்துள்ள குவார்ட்டர்ஸ்களில் டிரெய்னேஜ் தண்ணீர் வெளியே போகவில்லை. வழக்கறிஞர் என்ற முறையிலேயும், பிறகு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலேயும் பல சந்தர்ப்பங்களில்சொல்லியுங்கூட இன்னும் அந்த ஜுடிஷியல் ஆபீசர்கள் அந்த வாசனையைப்பிடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குறைகளை வெளியேசொல்ல இயலாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றியும் நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்திலே கொடுத்துள்ளேன். அதனால் என்னபலன் ஏற்பட்டது என்று தெரியவில்லை. மற்றபடி என்ன கோரிக்கைகள் எப்படியிருந்தாலும் கூட மனிதர்கள் சராசரியாக வாழ்வதற்கு இடையூறாக இருக்கின்ற துர்வாசனையை ஏற்படுத்துகின்ற ட்ரெய்னேஜினால் மனிதனுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை இந்த அரசு உடனடியாக நிவர்த்தி செய்து, ஜுடிஷியல் ஆபீசர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



குடந்தைக்கு ஒரு ஜுடிஷியல் செகன்ட் கிளாஸ், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டையும், ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் தாலுக்கா ஐந்தாண்டுகளுக்கு முன்னால் குடந்தையிலிருந்துபிரிந்தது. ஆனால் இன்று வரையில் அங்கே குற்றவியல் நீதிமன்றமோ, உரிமையியல் நீதிமன்றமோ அமைக்கப்படவில்லை. அதற்கு இந்த அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவிடைமருதூர் தாலுக்காவிலேயிருந்து குடந்தைக்கு தங்களுடைய வழக்குகளுக்காக வருகின்ற முறையைத் தவிர்க்கும் முறையில் இவ்வாறு செய்ய வேண்டுமென்று திருவிடைமருதூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் கிளைச் சிறைச்சாலை பயன்படுத்துவதற்கு இலாயக்கு இல்லாத நிலையில் உள்ளது. அதைப் புதுப்பித்து பயன்படுத்துவதற்கான முறையில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடந்தையில் உள்ள கிளைச் சிறைச்சாலை கிட்டத்தட்ட 80 ஆண்டுகள், 90 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். அந்தக் கால சூழ்நிலைக்கேற்ப அது கட்டப்பட்டிருக்கிறது. அங்கே காற்று வசதியின்றி, போதிய வெளிச்சமின்றி கஷ்டப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதைப் புதிதாகக் கட்டித் தருவதற்கு இந்த அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக் குறிச்சியிலே முதல் வகுப்பு நீதிமன்றம் நிறுவுவதற்கு அரசு ஆய்வு செய்து, உயர் நீதிமன்றமும் அனுமதித்து உள்ளதாகவும் தெரிகிறது. அது குறித்து தற்போது அரசின் முடிவு என்ன என்று தெரியவில்லை.

(மாலை 5—00)

உடனடியாக, கள்ளக் குறிச்சியிலே முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். கல்வராயன் மலை, சின்ன சேலம், மூங்கில்துறைப்பட்டு போன்ற பகுதிகளிலிருந்து உளுந்தூர்பேட்டைக்குச் செல்வது பொது மக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் பயணம் செய்து வழக்குக்காக, உளுந்தூர்பேட்டை செல்ல வேண்டியிருக்கிறது. அந்தச் சிரமத்தை மாற்றிட வேண்டும். உளுந்தூர்பேட்டை உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் வழக்குகள் மூன்றாண்டுகளுக்கு மேல் பைசல் ஆகாமல் இருக்கின்றன. 2,000-க்கு மேற்பட்ட வழக்குகள் கோப்புக்கு எடுக்கப்படாமலே உள்ளதாகவும் தெரிகிறது. அந்த நிலைகள் மாற்றப்

படவேண்டும். கள்ளக் குறிச்சியில் விரைவில் ஒரு முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கள்ளக் குறிச்சியிலே முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு இடவசதி முன்சீப் கோர்ட்டிலேயே இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் தன்னுடைய வேண்டுகோளிலே குறிப்பிட்டுள்ளார். அவருக்காக நான் இந்தக் கோரிக்கையை அமைச்சர் முன்னால் வைக்கிறேன்.

வரிசையாக குறைகளையும் கோரிக்கைகளையும் சொல்லி வரும் நான் இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் மூலம் அரசு எடுத்து வரும் நல்ல காரியங்களைப் பாராட்டுகிறேன். அந்த இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவில் நானும் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டு, ஏழைகளுக்கு, பாதிக்கப்பட்ட நலிந்த பிரிவினருக்கு உதவுகிறேன். அது நல்ல முறையிலே செயல்படுகிறது. அதற்காக ரூ. 37 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அது மிக மிகக் குறைந்த தொகை. ஏழைகளுக்கு இன்னும் அதிக அளவிலே இந்த அரசு உதவலாம். இந்த ரூ. 12 கோடி 'பால்ட்ரி' அமவுன்ட். அடுத்த ஆண்டாவது ரூ. 50 கோடியாக உயர்த்தி, நீதிபதிகள் பெற வேண்டிய சம்பளம், மற்ற வசதிகள் பெறுவதற்கும் வழக்கறிஞர்கள் தொழில் நடத்த உதவுவதற்கும் பொதுமக்கள் தங்களுடைய வழக்குகளைச் சீக்கிரமாக விரைவிலே முடித்து ஒரு தீர்ப்பு—எந்தத் தீர்ப்பாக இருந்தாலும் சரி—பெறுவதற்கு அனுகூலமாக அதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டு, எனக்கு அளித்த சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இங்கே பேசிய ஒவ்வொரு மாமன்ற உறுப்பினரும் எந்த அளவுக்குத் தமிழகத்திலே நிர்வாகம் நடந்து கொண்டு வருகின்றது என்பதைப் பற்றிச் சொன்னார்கள். தென் பகுதிகளிலே நான், கிராமங்களிலே பழகிய சில அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்று வந்த விவரங்களை, முடிந்த வரையில், இன்று ஓரளவு தெரிந்த வரையில், இந்தச் சட்டமன்றத்திலே எடுத்து வைக்கின்றேன். தமிழகத்தில் தற்போது நடைபெற்று வருகின்ற வழக்குகள் அதிக அளவு விசாரிக்கப்படாமல் தேங்கி உள்ளன. அது போன்ற வழக்குகளை உடனடியாக விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.





அதே போன்று, புலன் விசாரணை முடியப்பெற்றுள்ள வழக்குகள் பலவற்றில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு, கிடப்பில் இருக்கிறது. ஆகவே, காலதாமதமாகும் வழக்குகளை உடனே தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும். பல வழக்குகள் விசாரணைகள் செய்யப்படாமலேயே நீண்ட காலம் வரை கிடப்பிலே போட்டு வைக்கப்பட்டுள்ளன. அது போன்ற வழக்குகளை விசாரணை செய்ய, அதிலேயுள்ள குறைகளை நீக்கித் தர வேண்டுகிறேன்.

தமிழகத்தில் பல பகுதிகளில் போலீஸ்காரர்கள் சந்தேகத்தின் பேரில் பிடித்து, லாக்கப்பில் 15 நாள், 20 நாள் போலீஸ் நிலையத்திலே வைத்துக் கொள்கிறார்கள். இதுபோன்றவர்களைக் கோர்ட்டுக்கு கொண்டு செல்வதற்குப் போலீஸ்காரர்கள் இல்லையென்று சொல்லி, அவர்கள் எவ்வித விசாரணையுமின்றி வெறுமனே போலீஸ் ஸ்டேஷனிலே வைக்கப்படுவதால், அவர்களுடைய குடும்பம் இன்று மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது ஆகவே, சந்தேகத்தோடு கொண்டு போலீஸ் நிலையத்தில் வைக்கப்படுபவர்களை உடனே விசாரணை செய்து, விசாரணை முடிக்கப்பட்டவர்களை வெளியே அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை மீண்டும் நான் கொண்டு வர விரும்புகிறேன். கிராமப்புறங்களில் இன்று தமிழ் நாட்டில் நடைபெறுகின்ற வழக்குகளில் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளாக இருந்தால் அவர்களை விசாரணைக்கு அழைப்பது காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள்ளாக இருக்க வேண்டும். இந்த நேரத்தில் மட்டும்தான் அவர்களை விசாரணைக்கு அழைக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தை கட்டாயமாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று சிறைக் கைதிகளாக அடைத்து வைக்கப்படுபவர்கள் தங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்துவிடுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை செம்மை பெறுகிற வகையில் தொழில், விவசாயம் ஆகியவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இன்று ஆயுள் தண்டனை பெற்று அவர்கள் ஆயுள் தண்டனை அனுபவித்து முடிந்தவர்கள் வெளியே செல்ல வேண்டுமென்றால் நம்பர் வர வேண்டுமென்ற அடிப்படையின் காரணமாக 10 ஆண்டுகள் சிறையில் இருந்த பின்னாலும் 3, 4 ஆண்டுகள் அதிகமாக இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்

கிறது. இந்த நிலையைத்தவிர்க்க 10 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்களுடைய நம்பர் போர்டிலே உடனடியாக வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலைக்கு உட்பட்ட அந்தப் பகுதியிலே நிறைய காலி இடங்கள் இருப்பதால் அங்கே தொழில் புரியக் கூடிய கைதிகளுக்கு விவசாயத் தொழில், மின்விசைத் தொழில் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைதிகள் பார்வை நேரங்களில் கைதிகளைப் பார்க்கச் செல்லும்போது மனுக்களைக் கொடுத்துவிட்டு அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு இல்லாமல் மனுக்கள், கொடுத்த உடனுக்குடன் கைதிகளைக் காண்பிக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளம் பகுதியிலே ஒரு கேஸ் நடத்த வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 24 மைல் தூரத்தில் இருக்கிற ஸ்ரீவைகுண்டத்திற்கோ அல்லது 20 மைல் தூரத்தில் இருக்கிற திருச்செந்தூருக்கோ செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு சாத்தான்குளம் ஒரு தாலுகா சென்டராக இருக்கிற காரணத்தால் அங்கே ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையைச் சேர்ந்த காவலர்களுக்கு அவர்கள் குடியிருக்கிற வீடுகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அந்த வீடுகளைப் புதுப்பித்து தருவதோடு அங்கே மற்ற காவலர்களுக்கும் புது வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

அதைப் போன்று அந்தப் பகுதியிலே சிறைச்சாலைக்கு அடுத்து அதிகமான இடங்கள் வெறுமனே இருக்கின்றன. ஏற்கெனவே அங்கே சினிமா காண்பிக்க வேண்டுமென்ற நிலையில் அங்கே சினிமா அரங்கம் கட்டப்படுகிறது. அதற்கு மேல்புறமாக இருக்கக் கூடிய இடங்களில் அந்த காவலர்களுக்கு குடியிருப்பு அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைக் கைதிகள் விடுப்பு வாங்கிக்கொண்டு வெளியே வந்து, பின்னால் இரண்டு பேர் சிறைக்கு செல்லாமல் மெஞ்ஞானபுரத்தில் பெண்கள் நகைகளை கொள்ளையடிக்கும் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இரவு நேரத்தில் இந்தத் திருட்டைச் செய்கிறார்கள். அவர்களை உடனே கண்டுபிடித்து, கைது செய்து, சிறையிலே அடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.





*திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட எல்லா வகையிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு உறுதுணையாக இருந்து வருகிறது. வழக்குகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்றால் தேக்கநிலை போக்கப்பட வேண்டும். அரசு இதிலே தீவிர கவனம் செலுத்தி வருகிறது. நீதிபதிகள், நடுவர்கள் சம்பள விகிதம் உயர்த்தப்பட வேண்டும். அதன் மூலம் அவர்களுடைய பிரச்சினைகள், அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அதற்கு நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

[மாலை 5-10]

இந்த நிலையில் நீதித் துறையைப் பொறுத்தவரையில் லாங் ஸ்டேண்டிங் பர்னிங் ப்ராப்ளம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நீண்ட நாளைய பிரச்சினையாக உருவாகி இருப்பது நீதித்துறையில் நடுவர்கள், முன்சீப்புகள் நியமனமாகும்.

1965 ஆம் ஆண்டு முதல் நீதித்துறை நடுவர்களும், முன்சீப்களும் நிரந்தரமாக இல்லாமல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் வேறுபல துறைகளிலிருந்து நீதித் துறைக்கு நியமிக்கப்படுகிறார்கள். என்றைக்கு தங்களைத் தாய்த் துறைக்குச் செல்வதற்கு அரசு உத்தரவிடுமோ என்று அஞ்சுகின்ற சூழ்நிலையில் தான் அவர்கள் பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கின்றது. அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் வாழ்வதுபோல் நிரந்தரம் இல்லாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஏறத்தாழ 20 ஆண்டுக்காலம் நீதித் துறையில் நடுவர்களாக இருந்துகொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எந்தப் பிரச்சினையையும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைப்பதற்கு இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதில் நமக்குச் சந்தேகம் இல்லை.

அப்படிப்பட்ட இந்த அரசு இந்தப் பிரச்சினையிலும் ஒரு நல்ல தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உயர்நீதிமன்றத்தினுடைய பிரதிநிதி ஒருவரையும், நீதித்துறை நடுவர் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரையும், வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரையும் ஆக இந்த மூன்று பேர்களையும் அழைத்து அதிலே சட்ட அமைச்சர் அவர்களும் பங்கேற்று இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு தீர்வைக் கண்டு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய நடுவர்களின் நிலைக்கு ஒரு முடிவினைக் கொண்டுவரவேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இனிமேல் வருங்காலத்தில் நீதித் துறையில் நியமிக்கப்பட இருக்கின்ற நடுவர்கள் பெரும்பாலும் அதாவது முழுவதுமாக சட்ட வல்லுநர்களாகவே இருக்க வேண்டும்; அவர்கள் வழக்கறிஞர்கள் மத்தியிலே இருந்துதான் நியமிக்கப்படவேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வேறு எந்தத் துறைக்கும் இல்லாத ஒரு சாபம் எந்தத் துறையிலும் இல்லாத புதுமை இந்த நீதித்துறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேறு, வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் நீதித் துறையில் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் இது கலப்படமான துறையாக உருவாகிக்கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் செய்வதற்கு வழக்கறிஞர் மத்தியிலிருந்து மட்டும்தான் நீதித் துறையினுடைய நடுவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களைப்பணிவோடு கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக வழக்குகள் தேக்க நிலை ஏற்படுகின்ற காரணத்தை கருதி, இன்னும் சில நன்மைகளைச் செய்து கொடுத்தால் வழக்குகளை விரைவாகத் தீர்க்கின்ற சூழ்நிலை உருவாகும் என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு நீதித்துறை நடுவர்களும் நீதிமன்றங்களில் சாட்சியங்களைப் பற்றிய குறிப்புகளை அவர்களே தற்போது எழுதிக்கொண்டிருக்கின்ற முறையை மாற்றி ஒவ்வொரு நீதித்துறை நடுவருக்கும் ஒரு ஸ்டெனோ என்று சொல்லக்கூடிய சுருக்கெழுத்து, தட்டெழுத்து பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காலையிலிருந்து, மாலை வரையில் ஒவ்வொரு நடுவரும் தன்னுடைய கைப்பட சாட்சியங்களை எழுதிக் கொண்டிருப்பது என்பது இயலாத காரியமாகும். அதன் காரணமாக பல வழக்குகள் தீர்க்கப்படாமல், சாட்சியங் டாமல் போகின்ற நிலைமை ஏற்படுகின்றது என் ங்சே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்தபடியாக மாவட்ட நீதிமன்றங்களில் சொத்துரிமை வழக்குகளும், குற்றவியல் வழக்குகளும் ஒருசேர விசாரிக்கப்படுகின்ற சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, சொத்துரிமைகளுக்காக தனியாக ஒரு அமர்வு நீதிமன்றமும், குற்றவியலுக்காக ஒரு அமர்வு நீதிமன்றமும் மாவட்ட அளவில் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒவ்வொரு தாலுக்காத் தலைநகரத்திலும் குறைந்த பட்சம் ஒரு இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றம் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக கமுதி நகரம் தாலுக்கா தலைநகரமாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்டதற்குப் பிறகும் இதுவரையில் அங்கே ஒரு இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றம் கூட இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல எல்லா தாலுக்கா தலைநகரங்களிலும் இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டால் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்குரிய வழிவகைகள் ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக இந்தச் சட்டப் பிரச்னைகளிலே நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்கூட 2 ஆண்டுகளுக்கு முன்னாலே மிகத் தெளிவாகச் சொன்னார்கள். விபச்சாரத் தடைச் சட்டம் மிகத் தீவிரமாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். குறிப்பாக ஆண்கள்—விபச்சாரத்திற்கு தூண்டுகோலாக இருப்பவர்கள், விபச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்துபவர்கள், விபச்சாரத்தை வியாபாரமாக்கி பலன் அடைகிற ஆண்களைப் பொறுத்த வரைக்கும் மிகக் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் விபச்சாரத் தடைச் சட்டத்தை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்திட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகரைப் பொறுத்தவரையில், மதுரை மாநகரத்திலே உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்று இங்கே பேசிய எல்லா உறுப்பினர்களும் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களிலே என்னுடைய கருத்தையும் நான் ஒத்ததாக ஆக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே உச்ச நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவு இங்கே, சென்னையிலே அமைக்கப்பட வேண்டும் என்பதிலேயும் அவர்களுடைய கருத்துக்களோடு ஒத்து என் கருத்தையும் இணைத்திட விரும்புகிறேன். அத்தோடு, மதுரை மாநகரத்தில் வழக்கறிஞர்கள் 900-க்கும் அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழக்கறிஞர்களுக்கான

அறைகள் கட்டித் தரப்படக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்துத் தர வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே விழுப்புரத்திலும், தென்னாற்காடு மாவட்டம் திருக்கோயிலூரிலும் வழக்கறிஞர்களுக்கு அறைகள் கட்டுகிற திட்டத்தை அரசு தனது கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறது. அதை வரவேற்கிற அதே நேரத்தில் மதுரையிலே 900-க்கும் அதிகமான வழக்கறிஞர்கள் இருக்கிற காரணத்தாலும், இரண்டாவது தலைநகரமாக சொல்லக்கூடிய அளவில் மதுரை மாநகர் விளங்குகின்ற காரணத்தாலும், அங்கே கட்டாயம் வழக்கறிஞர்களுக்கு அறைகள் கட்டப்பட வேண்டும் என்று நான் பணிவோடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இலவச சட்ட உதவி. இலவச சட்ட உதவியைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இலவச சட்ட உதவி ஏழைகளைச் சென்று அடைகிறது என்பதிலே சந்தேகம் இல்லை. 84 வட்டக் குழுக்களும், 300-க்கும் அதிகமான சட்ட ஆலோசனை நிலையங்களும் இந்த இலவச சட்ட உதவியை மாநிலத்திலே செயல்படுத்திக்கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலம் ஏழைகள் சட்ட உதவியை இலவசமாகப் பெறுகிறார்கள். அது இந்த அரசுக்கு பெருமை சேர்க்கிறது என்றாலும்கூட, இந்தத் துறையில் மிகத் திறமை வாய்ந்த வழக்கறிஞர்களின் சட்ட உதவியை ஏழைகளுக்கு, இந்த துறையின் மூலமாக வழங்குவதற்கான சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. எனவே ஒரு சட்டத்தை உருவாக்கி அல்லது ஒரு நடைமுறையை உருவாக்கி கண்டிப்பாக திறமை வாய்ந்த வழக்கறிஞர்கள் இந்த இலவச சட்ட உதவி மையத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு—ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது—அவர்களின் பணிகளை ஏழை மக்கள் பெறச் செய்வதற்கான நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தற்போது அரசு வழக்கறிஞர்கள் என்ற வகையில், உதவி அரசு வழக்கறிஞர்கள் எனப்படும் அஸிஸ்டென்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படாமல் தற்காலிகமாகவே நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய நியமனத்தை நிரந்தரமாக ஆக்கித் தரவேண்டும் என்று நான் அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் பல வகையான சிறப்புத் திட்டங்களை இந்த அரசு இந்தத் துறையில் உருவாக்கிக் கொடுத்தாலும், சம்பள விகிதத்தைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களில் இந்தத் துறைக்கு





இருப்பதை விட, தமிழக நீதித் துறையில் நீதிபதிகளுக்கும் மற்ற பணியாளர்களுக்கும், அதிகமாகவே சம்பளத்தை இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்றாலும், அவர்கள் சமுதாயத்திலே ஒரு சிறந்த அந்தஸ்து உள்ளவர்களாக வாழ வேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தினாலே இப்போது அவர்களுக்கு தரப்படுகிற சம்பளத்தைக் காட்டிலும் இன்னும் அதிகமாக அவர்களுக்குத் தந்தாக வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்கிற காலத்திலேதான் சில இடங்களில் சொல்கிறார்களே லஞ்ச லாவண்ய ஊழல் குற்றச்சாட்டுகள் என்று, அதுபோன்றவைகளை நீதிபதிகள் தவிர்க்கக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே இன்னும் பல நன்மைகளை தமிழக அரசும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் இந்த நீதித் துறைக்கு செய்ய இருக்கிறார்கள் என்பதை இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பின் மூலமாக உணர்கிறோம். எனவே தமிழக அரசின் ஆட்சியில் நீதித் துறையில் நல்ல நீதி நல்ல முறையிலே நடைபோடுகிறது என்பதைச் சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம். நன்றி.

(மாலை 5–20)

*திரு வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் நிர்வாகம் மானியக் கோரிக்கையில் நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மறைந்த மாபெரும் மேதைகள், மரியாதைக்குரிய காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்கினார்கள். ஆனாலும் சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் ஆகியும் நாம் நமக்கென்று ஒரு சட்டத்தை வகுத்துக் கொள்ள முடியாமல், நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயர்கள் கொடுத்த சட்டத்தின் அடிப்படையில் தான் நம்முடைய நீதித்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதை மாற்றியமைப்பதற்கு நமக்கு நாமே சட்டம் இயற்றிக் கொள்வதற்கு வழிவகைகளை மாநில அரசு மைய அரசோடு இணைந்து முனைப்பாக செயல்பட்டு அதனைக் கொண்டுவர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னொரு சந்தர்ப்பத்தில் பேசிய பெரியவர் மாண்புமிகு சமத் சாகிப் அவர்கள், சொன்னார்கள். சபையின் முன்னவர் பேசிவிட்டால் பின்னவர் பேசுவதற்கு ஒன்றுமிருக்காது என்று

சொன்னார்கள். அந்த அடிப்படையில் சொல்லவேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் எல்லாத் துறைகளைப் பற்றியும் விவரமாகப் பேசி விட்டதால், பின்னவர் எதையும் பேசமுடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லையைப் பொறுத்தவரையில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நீதிமன்றங்கள் இருக்கிற அந்தப் பகுதியிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்தில் இருக்கிறது. அதை மாற்றி நீதிமன்றம் இருக்கிற பகுதியிலே அதுவும் இருக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்னாலே வைத்த நேரத்திலே இளைய வழக்கறிஞர்களுடைய வசதிக்காக அப்படி தூரத்தில் இருந்தால் தான் அவர்களுக்கு வாய்ப்பாக இருக்குமென்று சொன்னார்கள். இந்த நேரத்தில் பொதுமக்களின் வசதியையும் நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலைமையில் நெல்லையைப் பொறுத்தவரையில் நீதிமன்றங்கள் சிறப்பான முறையில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. தயவுசெய்து சட்ட அமைச்சர் அவர்கள் எல்லா நீதி மன்றங்களையும் அந்த வளாகத்திற்குள்ளேயே கொண்டு வர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அலுவலர்களும், அதிகாரிகளும், சில வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்குப் போகிறார்கள். ஆனால் அரசு வழக்கறிஞர்கள் அதை முனைப்பாக நடத்தாமல், அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் ஒரு தண்டனையாக அந்த வழக்கு முடிகிறது. அதைத் தகுந்த காலத்திற்குள்ளாக மேல்முறையீடு செய்ய அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தனியார் ஒருவர் பாதிக்கப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போடுகிறார்கள். அந்த வழக்கின் மூலமாக உயர் நீதிமன்றம் தனியாருக்கு சாதகமாகத் தீர்ப்பைக் கொடுக்கிறது. இருந்தாலும் அதிகாரிகள் அந்தத் தீர்ப்பை ஏற்று நடக்காமல், அதற்கு முரணாக நடக்கிறார்கள். தனியார் மேல்முறையீடு செய்து நீதிபதியிடம் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லும்போது, அதிகாரிகள் அரசு வழக்கறிஞர்களுக்கு தவறான தகவல்களைத் தந்து, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தான் காரியங்கள் நடந்து வருகின்றன என்று உண்மைக்கு மாறான தகவல்களை அரசு வழக்கறிஞர்களுக்கு சொல்லி, அவர்கள் அதை நீதிமன்றத்திலே தெரிவிக்கிறார்கள். அதன்மேல் அந்தத் தனியார், அரசு அதிகாரிகள் கோர்ட் நடவடிக்கைக்கு மீறி போய்விட்டார்கள் என்று





கண்டம்ப்ட் ஆப் கோர்ட் போட்டு, இப்போது வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது. அதற்கான குறிப்புகளைக் கேட்டாலும் நான் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

மேலும் ஒரு பெரிய பொறுப்பை அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுமார் 1,500 ஆண்டுகளாக சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் ஷரியத் என்ற சட்டத்தை ஏற்படுத்தி அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதனைத் தொடர்ந்து கடைப்பிடிக்க எங்களுக்கு உறுதி தரப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மத்தியப்பிரதேசம் இந்தூர் உயர்நீதி மன்றத்தில் விவாகரத்து வழக்கு ஒன்று செல்கிறது. அந்த நிலையில் அது ஷரியத் சட்டத்திற்கு மாறான தீர்ப்பைத் தருகிறது—மாநிலத்தின் பல நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாமல் பல வழக்குகள் தேக்க நிலையில் இருந்து மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். உடனடியாக நீதிபதிகள் நியமிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்—அதன் மேல் முறையீடு உச்ச நீதிமன்றத்திற்கு செல்கிறது. அதிலேயும், ஷரியத்திற்குப் புறம்பான ஒரு தீர்ப்பு அளிக்கப்படுகிறது. நான் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக சட்ட அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் ஒரு வேண்டுகோளாக இதை வைக்க விரும்புகிறேன். இந்தச் சிறுபான்மை சமுதாயத்தின் பேரில் கருணை கூர்ந்து நீங்கள் இம்மாதிரியான ஷரியத் சட்டத்திற்குப் புறம்பான ஒரு சூழ்நிலை ஏற்படாமல் மத்திய அரசோடு தாங்களும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலைகள் எல்லாம் சித்திரவதைச் சாலைகளாக இருக்கக்கூடாது. பல பெரியார்கள் சிறைக்குச் சென்று திரும்பும்போது ஞானிகளாகத் திரும்பியிருக்கிறார்கள். அந்த ஞானிகள் எல்லாம் சிறைகளைத் தவச் சாலைகளாகவும் சில நேரங்களில் ஆக்கிக்கொண்டிருந்தார்கள். அந்த மாதிரியான நிலைமைகளை எல்லாம் மீண்டும் கொண்டு வந்து, சிறைச்சாலைகளை தவச் சாலைகளாக மாற்றி, அதை நிர்வகிக்கவேண்டும் என்றும் அந்த நிர்வாகத்தைக் கொண்டு வரவேண்டும் என்றும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறையில் நடக்கும் பல கொடுமைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த அவையில் விளக்கமாகச் சொன்னார்கள். அந்த விளக்கத்திற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. மேலும் அதிகமான அரசியல் கைதிகளை நாம் சிறைகளில் அடைக்கும்போது அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி கொடுப்பதில்லை, சரியான கழிப்பிட வசதிகள் செய்து தருவதில்லை, பாளையங்கோட்டை, திருச்சி, வேலூர் போன்ற

[திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்] [1985 ஜூன் 25

இப்படிப்பட்ட மத்திய சிறைச்சாலைகளில், இதற்கான வசதிகளை அதிகப்படுத்திக் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பதிதிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பாளையங்கோட்டை மத்திய சிறையைப் பொறுத்தவரைக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஒரு குழு அங்கே இருந்தது. இப்போது அந்தக் குழு செயல்படவில்லை. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் அந்த மாதிரியான குழுவை ஏற்படுத்தி, நல்ல முறையில் செயல்பட உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மத்திய சிறைச்சாலையைப் பொறுத்தவரைக்கும், பல தவறுகள், ஊழல்கள் நடப்பதாக பத்திரிகை வாயிலாகவும் பல செய்திகளின் மூலமாகவும் அறியப்படுகிறது. அதை அரசு முனைப்பாக இருந்து, கவனித்து—அரசுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள், அங்கேயிருந்து களவாடப்பட்டு, வெளியில் செல்லுகிறது என்று ஒரு செய்தி பரவலாகச் சொல்லப்படுகிறது, அதையெல்லாம் அரசு கவனித்து—இந்த மாதிரி சிறைக்குச் சொந்தமான பொருட்கள் திருடு போகாமல் காப்பாற்றவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையான நீதி நிர்வாகம், தமிழ்நாடு சிறைகளில் நிர்வாகம் என்ற தலைப்பில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பேரவையிலே, எங்கள் வீட்டு ரோஜாவிற்கும் மணம் உண்டு என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தப் பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் மிகச் சிரும் சிறப்புமாக அகில இந்திய ரீதியிலே, உலக ரீதியிலே ஒப்பிட்டு, பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முதன் முறையாக நான் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை என் உளமாறத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 ஜூன் 25] [திரு. மு. பாண்டுரங்கன்]

எல்லோருமே, வழக்கறிஞர்கள் பேரவையில் இருந்துதான் மாவட்ட முன்சீப்புகளை, மாஜிஸ்ட்ரேட்டுகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். என்னுடைய கருத்தும் அதுதான் என்றாலும், முக்கியமாக ஜுடிசியல் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகள், பெஞ்ச் கிளார்க்கைக் கொண்டுதான், அவர்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிறார்கள். புதிதாக வருபவர்களுக்கு, வேறு துறைகளிலேயிருந்து வந்தால், அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆகவே பெஞ்ச் கிளார்க்கைக் கேட்டுத்தான் அவர்கள் காரியங்கள் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்களை அதிகமாக வேறு துறையில் இருந்து கொண்டு வராமல், வழக்கறிஞர்களாக இருப்பவர்களிலே இருந்து கொண்டு வந்தால்; சட்டத்துறையிலே இருந்து கொண்டு வந்தால் அவர்களுக்கு நிச்சயமாக சட்டத்திருத்தங்கள் எல்லாம் மிகத் தெள்ளத் தெளிவாகத் தெரியும், அவர்களும் நல்ல முறையில் செயல்படுவார்கள் என்பதை நான்தெரிவித்துக்கொள்கிறேன்

(மாலை 5-30)

மேலும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் மாற்றவேண்டும் என்று நியதி இருந்து கொண்டு இருக்கிறது. 3 ஆண்டுகள் ஒரு ஊரில் ஒரு நடுவர் இருந்துவிட்டால் அந்த ஊரில் உள்ள வழக்கறிஞர்கள் அவருக்கு நெருக்கமாக பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, ஒரு வழக்கறிஞருக்கு நல்லது செய்வதும், இன்னொரு வழக்கறிஞருக்கு கெடுதல் செய்வதும் வாடிக்கை ஆக ஆகிவிடுகிறது. ஆகவே, 3 ஆண்டுகள் ஒரு ஊரில் அவர் இருக்க விடாமல் 2 ஆண்டுகளில் அவர்களை மாற்றி விடுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எக்ஸ்சிக்யூடீவ், ஜுடிஷியரி என்று 2 பிரிவுகளாக ஏற்கனவே பிரிக்கப்பட்டு விட்டது. எக்சிகியூட்டீவ் தனியாகவும், ஜுடிஷியரி தனியாகவும் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அப்படி இருக்கும் போது Debt Relief Act போன்றவைகளில் வழக்கறிஞர்கள் வாதாட முடியாத சூழ்நிலையில் தாசில்தாரிடம் அவைகள் விடப்பட்டு இருக்கின்றன. அந்த சட்டத்திற்கு, ஆக்ட்டிற்கு தாசில்தார்கள் என்ற அந்த பதவிகளை வைத்து இருப்பது சரியல்ல, தாசில்தார்கள்தான் அந்த வழக்குகளை நடத்தவேண்டும் என்று சொல்லுவதைவிட ஜுடிஷியல் அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைத்து விட்டால் அவர்கள் திறம்பட செய்வார்கள் என்பதை இந்த அவையில் இன்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 145, சி. ஆர்.பி.சி. என்று சொல்லப்படுகிற ஆக்ட்டை தாசில்தார்கள் நடத்துகிறார்கள். அதைக் கூட ஜுடிஷியலில் சேர்த்து விட ஆவன செய்யப்படவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள், அவர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று. என்னுடைய கருத்தும் அதுதான். கூடுமான வரை அவர்களுக்கு வேறு வழி இல்லை. குறிப்பாக இந்த சம்பளத்தை நம்பிதான் அவர்கள் வாழ்கிறார்கள். ஆகவே ஜுடிஷியலில் இருப்பவர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுத்துவிட்டால் நிச்சயமாக நீதியை நிலைநாட்ட முனைவார்கள் என்று நாம் எல்லாம் நம்ப வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

மேலும் Justice delayed is justice denied என்று சொல்வார்கள். ஆகவே, ஆர்க்யூமெண்டு முடிந்த ஒருவாரத்திற்குள் ஜட்ஜ்மெண்டு சொல்லவேண்டும் என்று அறிவுறுத்தப்படவேண்டும். காரணம் அப்படி சொல்லாவிட்டால் அவர்கள் நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்டு அதாவது சில தேவையில்லாத சாட்சிகளை விசாரிப்பதற்காக வழக்குகளை ரீ-ஓப்பன் செய்து கொள்கிறார்கள். இல்லை என்றால், அவர்களாகவே ரீ-ஓப்பன் செய்து கொண்டு அந்த நாட்களை அதிகமாக கொடுத்துவிடுகிறார்கள். அவ்வாறு கொடுப்பதால் பல சிக்கல்கள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே, அவ்வாறு நாட்களை கொடுக்காமல் சுருக்கமாக ஆர்க்குயூமெண்டு முடிந்த உடன் ஜட்ஜ்மெண்டு சொல்லவேண்டும் என்று அவர்களை அறிவுறுத்த வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழில் ஜட்ஜ்மெண்டுகள் எழுதப்பட்டு வருகின்றன. குற்ற இயல் நீதிபதிகளும், டிஸ்டிரிக்ட் முனிசீப்புகளும் இப்போது தமிழில் ஜட்ஜ்மெண்டுகளை எழுதுகிறார்கள். ஆனால் வழக்கறிஞர்கள் ஆங்கிலத்தில்தான் இன்னும் வாதாடிக்கொண்டு இருக்கிறார்கள். எல்லா [ கோர்ட்டுகளிலும் ஆங்கிலத்தில் தான் வழக்கறிஞர்கள் வாதாடுகிறார்கள். அப்படி ஆங்கிலத்தில் வாதாடும்போது கட்சிக்காரர்களுக்கு வழக்கறிஞர்கள் என்ன பேசுகிறார்கள் என்று விளங்குவதே இல்லை. ஆகவே, இனி வழக்கு மன்றங்களில் வழக்கறிஞர்கள் வாதாடும்போது தமிழில்தான் வாதாடவேண்டும் என்று சட்டம் இயற்றி அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.



மற்றும் வழக்கறிஞர்களுக்கும், போலீஸ் துறையில் இருப்பவர்களுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டு வருகிறது என்பது இந்த நாடு அறிந்த உண்மை. அவ்வாறு வழக்கறிஞர்களுக்கும் போலீஸ் துறையில் இருப்பவர்களுக்கும் சச்சரவு ஏற்படாமல் இருக்க வழக்கறிஞர்களையும் போலீஸ் துறையில் டி.எஸ்.பி. போன்ற அதிகாரிகளையும் கலந்து ஒரு குழு அமைத்து அந்தக்குழு மாதா மாதம் கூடி கலந்து பேசி ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஒரு குழு கூடினால் அவர்களுக்கு பிரச்சினை எழும்போது அதை சுலபமாக தீர்த்துக் கொள்ள வழிவகைகள் இருக்கும். எப்படியாவது வழக்கறிஞர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்றால் அவர்களை திட்டுவதும், அடிப்பதும் போன்ற நிலைமைகள் இப்போது நாட்டில் உருவாகியிருக்கின்றன. அவைகளை மாற்றி அமைக்க வேண்டுமானால் இந்த மாதிரி குழுக்களை அமைத்தால் தான் அது மிகவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்கள் சப்-ஜட்ஜைப் பற்றிக் கூறினார்கள்.

ஒரு சப்-ஜட்ஜ் இருக்கும்போது, மோட்டார் வண்டி உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றமாக செயல்படுகிறார்.—அவருக்கு 10 ஆண்டுக் காலம் சர்வீஸ் இருக்கலாம், அவர் மாறிவிட்டால்— மற்றொருவர் வரும்போது, 5 ஆண்டு சர்வீஸ் உள்ளவர் வரலாம். அவ்வாறு வரும்போது, அங்கே சில சிக்கல்கள் ஏற்படுகிறது என்று இந்த மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்கள் மிக அழகாகச் சுட்டிக் காட்டினார்கள்.

அவ்வாறு அவர்கள் சொன்னதைப் போன்று, ஏற்கனவே சப்-ஜட்ஜ் நிலைமைக்கு வரக்கூடிய ஒருவர் முனிசீபாக இருந்து ஏறக்குறைய 7 ஆண்டுகள் அவருக்கு அனுபவம் வந்து விடுகிறது. அவ்வாறு அனுபவம் வரும்போது, பார்ட்டிஷன். போன்ற பாக வழக்குகளும், டிக்ளரேஷன் அண்டு இன்ஜங்ஷன் என்ற வழக்குகளும், டிக்ளரேஷன் அண்டு பொசஷன் வழக்குகளும் தான் அவர்கள் நடத்துகிறார்கள். அதையே தான் மறுபடியும் சப்-ஜட்ஜாக வரும்போதும் அவர்கள் நடத்துகிறார்கள்.

இவைகளில் குறிப்பாக, மேலே சொன்ன வழக்குகளைத் தான் நடத்துகிறார்கள். ஆகவே, அனுபவம் ஆன அந்த முனிசீப்கள் சப்-ஜட்ஜ்களாக மாறும் நிலைமை இருக்கிறது. எனவே, சப்-ஜட்ஜாக வந்தால், மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாக செயல்படலாம் என்று அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பழைய கிரிமினல் புரொசீஜர் கோடின் படி, எஸ்.டி.ஜே.எம்.கள் எல்லாம் அப்பீல் உரிமை உள்ளவர்களாக இருப்பார்கள். இப்போது ஜுடிஷியல் எஸ்.டி.ஜே.எம்.களுக்கு அப்பீல் கோர்ட் என்ற ஒரு பதவி இல்லை. அவர்கள் பர்ஸ்ட் கிளாஸ் கோர்ட்டில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைத் தான் செய்கிறார்கள். ஆகவே, எஸ்.டி.ஜே.எம். களுக்கு அப்பீல் பவரைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் பல நீதிமன்றங்களிலே பார்த்திருக்கிறேன். அங்கே எல்லாம் ஜுடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகள் எல்லாம் மதியத்தோடு முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு, அவர்களுக்கு வேலையே கிடையாது. அறையிலே தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், பர்ஸ்ட் கிளாஸ் கோர்ட்டுகளிலே பார்த்தால் சாராயக் கேஸ்கள் கூட அங்கே வந்துவிட்ட நிலைமையில் பர்ஸ்ட் கிளாஸ் கோர்ட்டுகளில் மிக அதிகமாக நெரிசல்கள் காணப்படுகின்றன. ஆகவே, கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருப்பதைப் போன்று, நீதித்துறை—அதாவது பக்கம் 19—நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட்டு பதவிகள் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்திரேடடு பதவிகளாக நிலை உயர்த்தப்படலாம் என்றும், மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் அவற்றை இணைக்கலாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது என்று குறிப்பிட்டு இருக்கிறது.

அவ்வாறு அவர்களுடைய பதவிகளை உயர்த்திவிட்டால் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட்டுகள் எல்லாம், பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட்டுகளாக மாறி நிலுவையிலிருக்கும் வழக்குகளை எல்லாம் குறைக்க வழிவகை செய்ய முடியும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிர, வழக்குகள் அதிகமான அளவிலே குவிந்து கிடக்கின்றன. சாராய வழக்குகள் எல்லாம் பர்ஸ்ட் கிளாஸ் கோர்ட்டிலே நிறைய குவிந்து கிடக்கின்றன. ஆகவே அந்த வழக்குகளை எல்லாம், இந்த ஜூன் மாதம் இறுதி வரை—எந்த சாராய வழக்குகள் எல்லாம் இருக்கின்றதோ, அந்த சாராய வழக்குகளை எல்லாம் அதிலே சிக்கிக் கொண்டவர்கள் எல்லாம் ஏழை எளிய மக்கள் தான். ஆகவே, அந்த சாராய வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உங்கள் மூலமாக கோரிக்கையை வைக்கிறேன்.

அரசுக்கு எதிராக அடிக்கடி தடை ஆணைகளை வழங்குகிறார்கள். அவ்வாறு தடை ஆணைகளை வழங்கிவிட்ட பிறகு, உடனடியாக அந்தத் தடை ஆணைகளை, ஸ்டே நீக்காமல், அந்த வழக்குகள் உடனேயே அந்த இன்ஜன்ஷன் பெட்டிஷன்களை எல்லாம் வைத்துக் கொண்டு நீண்ட நெடு





நாளைக்கு, 2, 3 ஆண்டுகளுக்கு காலதாமதம் செய்து வருகிறார்கள். அவ்வாறு காலதாமதம் செய்யாமல், உடனுக்குடன் அந்த வழக்குகளை எடுத்து பரிசீலனை செய்து, அதை வெக்கேட் செய்து விட வேண்டும் என்றும், மனுக்கள் மூலமாக அந்த தடைகளை நீக்கி விட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

கோர்ட்டுகளை எல்லாம் ' டிசென்டிரலைஸ் ' செய்ய வேண்டும் என்ற ஒரு எண்ணம் இப்போது அகில இந்திய ரீதியிலே இருக்கிறது. ஒவ்வொரு தாலுகாவிலும், நண்பர் அவர்கள் சொன்னதைப் போன்று, மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், மாவட்ட குற்றவியல் நீதிமன்றமும் அமைத்திட வேண்டும்.

ஒவ்வொரு தாலுகா அளவிலேயும் அவ்வாறு நடத்தினால் தான் அங்கே இருக்கிற விவசாயிகள், விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அதிக தூரம் செல்லாமல், அவர்களுக்கு உரிய ஜட்ஜ்மெண்டுகளை வாங்கிக் கொள்ள வசதியாக இருக்கும்.

(மாலை 5-40)

குறிப்பாக எங்கள் தொகுதியிலே, கலசப்பாக்கத்திலே ஒரு கோர்ட்டும் கிடையாது. நாங்கள் திருவண்ணாமலைக்குத்தான் வந்தாகவேண்டும். அவ்வாறு திருவண்ணாமலையிலே ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு கோர்ட் அமைந்திருக்கிறது. அவ்வாறு இல்லாமல் ஒரே காம்பவுண்டுக்குள்ளாக கோர்ட்டுகளை அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே ஹைக்கோர்ட்டால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் கூடிய விரைவில் கட்டித்தருவதற்கு உரிய உத்தரவுகளைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை கோர்ட் காம்பவுண்டுக்குள் 4 லெட்ரின்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் மோசமாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. நல்ல கிணறு இருக்கின்றது. கிணற்றில் பம்பு செட்டுடன் கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே ''பார் ரூம்'' இல்லை. மரத்தடியில் இருந்துகொண்டு இருக்கிறோம். ஒரே ஒரு பார் அறை இருந்துகொண்டு இருந்தது. அதை முன்சீப் கோர்ட்டுக்குக் கொடுத்துவிட்டபடியால் நாங்கள் மரத்தடியிலே நின்றுகொண்டிருக்கிற நிலை இருக்கிறது.

எங்கள் மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்றும் சம்புவரையர் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படவிருக்கிறது என்று கொள்கை ரீதியாக ஒரு முடிவு இருந்துகொண்டிருக்கிறது. சம்புவரையர் மாவட்டம் வருகிறபோது மாவட்ட கோர்ட்டைக் கூட திருவண்ணாமலையில் அமைக்கவேண்டி

வரும். கோர்ட்டுகளை எல்லாம் ஒரே காம்பவுண்டுக்குள் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*THIRU T. R. VENKATARAMANAN: Hon'ble Mr. Deputy Speaker Sir, at the very outset I would like to thank the Hon'ble Speaker for having extended the Session till this evening. I congratulate the Honb'le Members for having taken been interest in the third wing of the system of our Government, namely the Judiciary. Unfortunately, this demand bears a very unlucky number, 13 and the policy note is also printed in red colour. That goes to show how much the Hon'ble Members are concerned and agitated over the functioning of the Judiciary. One is able to understand and appreciate the great interest that not only the Lawyer Members but also the non-Lawyer Members of this House have been showing in the development and the functioning of the Judiciary in the State of Tamil Nadu. There is a famous saying by Prof. Hobbs who compares Government to be Leviathan that "Leviathan has two arms— the arm of war and that of Justice.' So also the function of the Government is two fold—first to protect the citizens from external aggresion and to provide Justice for the citizens inside the country. Considering the importance of functioning of the Judiciary, many of the members including the Hon. Deputy Sepaker have taken part in the discussion on this Demand for the whole day

It is the constitutional obligation of any Government to provide Justice not only at a cheaper rate but also quickly to the citizens. If that obligation is not discharged by the Government, then the citizens will be forced to take the disputes to the streets and thereby only chaos and confusion will prevail in the country. When it is the Constitutional obligation of the Government to provide Justice inside the country unfortunately the citizens are forced to pay for Justice. When the citizens pay a very high price through Court fees for Justice, it is unfortunate that we do not have good quality of Judges and the quality of the Judgesleaves much to be desired, the quality of the Judiciary is also going down.

Regarding the recruitment policy I will like to say that the quality of the recruitment to the Judiciary is unfortunately going down. It has been stated in the policy note that out of 25 posts of Judges in the High Court 7 posts are still remaining vacant. For the last 10 years no recruitment to the Judiciary has been made from the Members of Bar. Similarly for the District Munsif posts recruitment has not been made from the Members of the Bar. I am sorry to point out that Members of the Judiciary have been recruited from sundry departments like Fisheries Department, Forest Department, Co-operative Department and soon. With great respect I would like to say that these officer have been taking the corrupt practices from the respective departments



to Judiciary and that is how corruption should have cropped up. I am aware I have the Constitutional protection when I am speaking within the four walls of this August Assembly, hence dont want to celaborate.

As I have already referred to, the Government have got amoral obligation to look after the health and social welfare of the citizens. It is the contitutional obligation on the part of the Government to provide Justice to citizensquickly. When I refer to the cost of justice I would like to say that the Court fees in Tamil Nadu is generally low except the fee under section 22 of the Act.

It was struck down as unconstitutional by the High Court. Unfortunately the Government of Tamil Nadu hasgone on appealto the Supreme Court on the correct finding of the High Court. The matter is now pending before the Supreme Court. Here I would like to give an example. Let us assume that there is a borrower, who has borrowed a sum of Rs. 1,000 at the rate of 10 per cent per annum. After three years, he has to pay principal and interest of Rs. 1,300. If the matter goes to the Court, he has to pay Rs. 98 as court fee and Vakil fee of Rs. 130 and the total will come to Rs. 1,528, high all round What I am trying to place before this August House is that when a person is not able to pay the original amount of Rs. 1,000, we are burdening the man with these amounts which is nearly half of the original amount. We are actually squeezing that person. We are talking of Debt Relief Legislation and Debt relief, etc. We are not able to distinguish the ordinary man with a person filing a Partition Suit for crores of rupees. In a Partition Suit, the maximum amount one has to pay is Rs. 200 and similarly in Matrimonial Divorce cases, it is Rs. 10. When a person has spent thousands of rupees and celebrated the marriage, the matrimonial diverse can be obtained by Rs. 10. I appeal to the Hon. Law Minister and to this House to look into this point, because a plea was made on the Floor of this House by lawyer members as well as by non-lawyer members. Reference after reference was made about the Court fees. It is not that the Court Fee Act is in fact, there are so many Sections, where the Court fee can be raised. For filing a petition, only 75 paise is charged. It can be increased. For "Vakkalats", it is Rs. 1.50 and it can be raised. In the Criminal Court, for filing Memo for Appearance, they need not pay court fee. All these things can be discussed by a Committee consisting of Hon. Members of this House. We can sit together, discuss the matter and defiinitely we can revise the Court fees atleast in the Money Suits. The Court fee is charged in other Sections also. In any suit for injunction, it is 30 times of the kist and in Suits of Possession, it is 30 times and sometimes it is half of the 30 times.

[Thiru T. R. Venkataramanan] [1985 ஜூன் 25

When we take all these into consideration, the Court fees, in general is not high ; but the Court fee under Section 22 of the Court Fees Act is definitely high.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

I would also like to draw the attention of the House to an anomaly in the Court Fees Act. Section 7(C) is very peculiar to Shencottah Taluk in Tirunelveli District and entire Kanyakumari District. Under the system of Court fees being collected in the State of Kerala, orginally court fees were collected at 10 times of the product or the income of the properties, which is subject matter of litigation. Shencottah Taluk and Kanyakumari District came into Tamil Nadu, which are in other words called the added territories of Tamil Nadu. An amendment had been brought in the Court Fees Act. I do not know how this was suggested. Somebody had thought about it. They have introduced a system of Court Fee as applicable to State of Kerala, when the whole State is paying only 30 times of the kist. In Shencottah Taluk in Tirunelveli District and Kanyakumari District, Section 7(C) mandatorily says that the Court fee should be paid 10 times of the product or income of the properties. I share the views of our Hon. Deputy Speaker, because I practice in the Shencottah Court and I know by a handful of lawyers from Kanyakumari this Section is more obeyed in breach than by obedience, because it is not possible to fix the court fees. There are certain properties for which there is no income at all. A notional value is taken. I have already discussed this matter with our Hon. Law Minister and it is high time that Section 7(C) should be removed from the Statute Book and the Court fee which is applicable to the whole State of Tamil Nadu should be extended to Shencottah Taluk in Tirunelveli District and Kanyakumari District *in toto*.

(மாலை 5-50)

Talking about Court Fees for Writ petition, when it was first introduced was Rs. 2 then it was increased to rupees, 25 now it is Rs. 100, except for Quowarranto Petitions. Now I learnt that there is a thinking that the Court Fees should be raised to Rs. 200 and oppose it at the very outset, because the State Government should not profit on human litigation. Nobody should make money on human fueds. on the grounds of morality as well as on the grounds of economy. It is only a fee and not a tax. Even in the Policy Note it has ben made clear that the income earned by Judiciary by way of stamps is Rs. 25 crores when the total expenditure is only Rs. 12 crores. This did not include the income from the Judiciary by way of fines collected by the Civil and Criminal Courts. So, it is the obligation of the Government of Tamil Nadu to provide justice to the citizens and it cannot profit by the human feuds.



1985 ஜூன் 25] [Thiru T. R. Venkataramanan]

Coming back to the system of Judiciary in our State, I would, like to make a few observations. The Government makes hugs profit on the court fees and on the fines collected and also from the Civil Deposits, The civil deposits held by the Government, which comes under Public Debt under the Miscellaneous Budget run to crores of rupees and no interest is paid on the civil deposits. Money deposited in the Court attracts no interest. The Government should now bring suitable amendment by way of G. Os. to pay interest to Civil Deposits lying with the Courts.

The conditions of Judicial Officers in the State leave much to be desired. Their salary is very poor; their conditions of service are very poor; they work round the clock. Those who are very close with Judicial Officers cannot ignore this aspect. I am going to criticise the Judicial Officers shortly,-the way in which they behave, particularly in places like Tenkasi and all that I will be discussing. But that does not mean that I should close my eyes to the realities and at the very outset I want to say that the conditions of the Subordinate Judicial Officers are very poor. Many of them working in places like Tenkasi, where the house rents are sky rocketing, have no house accommodation. When the Government is making profit out of Judiciary, when the Government is making money cut of human fueds. why should not Government provide the Judicial Officers with proper accommodation.

It is a good thing that the Government is providing transport arrangements in the City of Madras for Judicial Officers to attend their offices. But in the mofussil, even to day except the District Judge and a few Judges who are placed with the self financing facility others do not have a two wheeler or a car. Many Judicial Officers are foreed to travel, due to high cost of living, in the bus like any other ordinary client or ordinary person. When many of the clients come to the Court in car, the Judicial Officers are forced to come by a public transport. I would like to stress that making the Judicial Officers to mingle with the public is not in the best interest of Judiciary. The Government should evolve a system by which it should not only provide accommodation for Judicial Officers in all places, but also make sufficient arrangements to provide them with suitable loans—if necessary interest free loans-to enable them to buy a Two Wheeler or a Four Wheeler, according to their status. This will help the Judicial Officers to keep their social status high.

Then coming to court buildings, I would like to state that the court buildings in many places in the State are in a dilapidated state. In Tenkasi the court is now run in the former Sub-Jail building. When the Sub-Court in Tenkasi was inaugurated in the year 1979 the furniture for the Tenkasi Sub-Court were bought from the Jail Department. I cannot

understand the attitude of the Jail Department which supplies the furniture. The furniture supplied to the Tenkasi, Sub-Court were in such a poor condition and of poor finish, that within a year or so the whole furniture supplied to the Sub-Court, Tenkasi had to be destroyed.

Almost the Sub-Court, Tenkasi is run with the furniture supplied some 75 years ago. I want to bring to the notice of the Hon'ble Minister for Law that there is an order of Government that furniture manufactured by the Sub-Jails throughout the State have to be bought by all the departments. But, no other department is forced to buy furniture produced by the Sub-Jails. Only the Judicial department is forced to buy second and third rate furniture from the Jail Department and this should be stopped. When money is spent for purchasing furniture at a high price, the furniture should be in a good shape and of good quality. I appeal to the Hon'ble Minister for Law to see that the furniture in the Sub-Court, Tenkasi should immediately be replaced.

Then about the Court buildings, Kamaraj District has been inaugurated almost a year ago and it has come to the status of a District with a District Collector. Revenue buildings for the Kamaraj Districr have also been inaugurated. But the District Court buildings are yet to come and the foundation stone for the District Court building is yet to be laid. Further, coming to the buildings that have been constructed for the District Court in Tirunelveli it is like a pigeon hole. The buildings have been constructed without consulting the judicial department or the judicial officers or the members of the Bar. They have been constructed in such a way that it is fit enough to be used as a jail, and for a solitary confinement.

You cannot run a court in the new building at Tirunelveli. Further the new Court building in Tirunelveli does not have a Bar Room, does not have a Library, does have a Record Room. With all these deficiencies the building has deen constructed at a cost of Rs. 20 lakhs. I would like appeal to the Hon'ble Law Minister to immediatly look into this problem and also make an immediate spot visit to see the nature and the condition of the building and to remedy the mistakes in consultation with the Bar in Tirunelveli.

I would appeal to the Hon'ble Law Minister to immediately construct a combined Court building for the District Munsif Court. Sub-Court, First Class and Second Class Judicial Magistrate Court in Tenkasi. A site also has been selected by the Bar Association in Tenkasi two years ago and Hon'ble Judges have also visited the site more than once. They have already approved the site. The site is very close to Courtallam a health resort and it it is very idea



location, which is away from the city congestion and noise. The Government should immediately come forward with a proposal for the construction of a combined Court building in Tenkasi.

Now I would like to refer to the problem of house for judicial officers. If you do not provide houses to judicial officers, this would become the beginning of corruption by the judicial officers otherwise, some of the Landlords would immediately come forward to give houses to judicial officer, taking advantage of their position. This is what had happened in Tenkasi. The Landlord of the house, after giving house to the judicial officer becomes his immediate friend and also become the Agent of the Judicial officer. The Bar Association had to name the Judicial officers and has the Hon'ble Deputy Speaker had referred to this problem earliar, the judicial officers were only transferred from Tenkasi. On transfer they took all the ills with them to Dindigul also. The Dindigul Bar Association also had to fight against the judicil officers and at last judicial officers were reverted to their old posts.

(மாலை 6-00)

I understand that there is a move the Government to provide telephones to judicial officers at the level of District Munsifs and Sub-Judges. While I have talked about the necessity for giving increased facilities to the judicial officers, it is my duty to warn the Government that such an attempt to provide telephone to judicial officers would lead to further corruption. The Judicial officer should be necessarily secluded and they should be away from the society. Instead of providing a telephone, I would suggest that a sum of Rs. 200 may be paid as ex-gratia payment. Already the incidence of corruption is going up and corruption is going on. Telephone facilities to Judicial officers at subordinate level is not necessary because he has no police duty like Chief Judicial Magistrate or District Judge. The District Judges have social status. Absolutely there is no need to give telephone facilities to the Sub-Judge and District Munsifs. On the contrary, the amount to be spent on installing telephone for the judicial officer can be given by way of exgratia payment to them.

Talking about the judicial delay, much has been talked about the Justice delayed is justice denied.' Now I do not want to repeat all of them. But I want to pin point a particular area which is causing delays. I am referring to 'Copy Section.' There is great delay in getting judgement copies. I would like to give a classical example of what had happened in a case. This is with regard to eviction of a tenant. To get a certified copy of the judgement, it took nearly 1½ years. The landlord filed an eviction petition against

the tenant for eviction. The tenant as a respondent filed a transfer petition in the Court. The case was dismissed *in limini* by the Sub-Court. The Tenant appealed to the High Court against the proceedings of the Rent Controller and got a stay and the Land Lord appeared and filed a counter and the matter was dissussed and dismissed in a matter of three months. But when a copy of application was filed for getting a copy of the judgement—in Madras. I personally went to the copy section and got a copy—here was inordinate delay in the High Court. When I asksd them, they say that if there is stay, it is an urgent matter and if it is dismissed it is not an urgent matter. Being a local M.L.A., I got the application answered and a copy was furnished to me. The Land Lord could not do so. By the time it will lapse. I do not want to go into further details because the matter is pending and the judgement would be prejudiced. I would like to bring to the notice of the Hon. Minister and to this Hon. House, We had a copy section for about 16 judges in an undivided Madras and the same section is there when we have 25 judges. We also have Specal Original Jurisdiction for Write Petitions and other matters like Election Petitions and all. The Copy Section is not a Gratis section. When you file a petition for copies, you affix stamp duty and we pay for every 140 words, 70 paise. The Cout is collecting. (The Hon. Speaker sounded the gong)

I am making my conclusión speech. The copy section should not be small. It should be expanded immediately with modern technical facilities like 'photo-copier' and copies should be supplied by collecting a small extra cost.

Then I want to say something about the Proces Department. Court Summons and Court orders have been served through Registered Post. Registered Post charges have become very high. It is a policy matter of the Government and it has come into effect that we have got a District Munsif Court in almost every Taluk Headquarters. When a District Munsif Court wants to serve summons on the Defendants it is normally sent by Registered Post. This costs about Rs. 5. My humble suggestion is that considering the unlimited unemployed personnel in this country we can recruit process servers. The money collected by way of process Fees con be well utilised to pay these Process Servers.

In the Policy Note a reference is made about the 'Director of Prosecution'. I would like to suggest to the Government that a Director of Motor Accident Claims' should be set up. The Directorate can



help to settle the accident claim cases very quickly. In many of the accidents which are happening in the roads, only Government vehicles are involved. Particularly the State Transport Vehicles are responsible for major accidents in the State. So, if a Motor Accident Claims Directorate is set up, many of the cases can be settled easily by this Directorate without the help of Courts.

Then coming to the point of 'Free Legal Aid', much has been said about it. Government of Tamil Nadu received pats for the 'Free Legal Aid Service'. But I have my own opinion about it. The Subordinate staff recruited by the Legal Aid Board is nothing but an opportunity for the retired employees of the judiciary to get re-employment. They lack the initiative, they lack the social innovations that are embodied in the system of Legal Aid. I request the Government that you should recruit youngsters, because you are paying them. You should recruit social wokers for the legal aid profession.

The Jurisdiction of District Munsif Courts were raised to Rs. 15,000 very recently. My humble suggestion is that it should be brought down Rs. 10,000. Much has been said about the ousting of jurisdiction courts. I am very happy that Members from the Treasury Benches were also equally concerned about ousting of the Jurisdiction of Civil Courts in many cases. In fact, Hon. Deputy Speaker himself made a references about the situation which prevents Civil Courts from interfering in the matter relating to Tenancy Laws. I also interferred in the speech of the Hon. Deputy Speaker and requested him to openly suggest that Section 16 (A) of the Tamil Nadu Record of Tenancy Rights Act should be removed from the statute because we as Lawyers—some of the Judges have got away from Section 16, that is a different matter—feel it is not good for the litigants. Section 16 (A) is contrary to Section 30 of the Advocates Act. In fact a Member of the Ruling Party referred to an amendment to be made on Section 30.

As the time is ringing out I am not reading it. Section 30 of the Advocates' Act says 'right of the Advocates to practice, Subject to the provisions of this Act every Advocate whose name is entered in the list shall be entitled to practice throughout the territories to which this Act extends'. . So, the Advocates Act Section 30 very clearly states that it is the right of the—mandatory right of the—Lawyers to represent a client in all forums, whether it is Judicial or Revenue. You cannot cut away the right of a client to have him represented by a qualified lawyer in any forum. In fact I have also made an earlier reference to two decisions of the Punjab-Haryana High Court and the Delhi High Court, which says that such kind of Sections which are against Section 30 of the Advocates' Act are not valid.

[Thiru T. R. Venkataramanan] [1985 ஜூன் 25

I want to say something about the Judicial function. We have got a system of norms to the Judicial Officers. It says that a Munsif should write so many Judgments in a month a Sub-Judge should write so many judgments in the Civil Cases and so many judgments in the criminal cases.

My understanding of such a Government Order or an Order from the High Court is that it should be the minimum expectation of a Judge. It does not mean that a Judge is empowered to get away from his Judicial obligation by writing a minimum number of judgments as per the norms.

(மாலை 6-10)

Then coming to the workload for Judicial Officers, I would like to say that there is a norm. The norm says that a particular Sub-Judge should write so many Judgments in Civil Cases and so many Judgments in Criminal cases. It does not mean that Judicial Officers should get away with the judicial obligations by writing the minimum number of judgments. It is a very painful thing to note that because they have complied with the norm, they are beyond the scrutiny of the High Court. If the High Court scrutinises their judgments involving banks it would find that they have written the judgement like "Plaintiff examined and the Defendant examined. The suit claim is proved and so, a decree is passed regarding bank advances". So, the minimum should not be taken as a norm and it is a very easy job. They do not bother about many cases involving properties, many cases involving matrimonial rights, or Motor Accidents Claims cases. These cases are kept pending for years together. They are very serious matters and I am sorry to say that they are not attended to quickly by the Judicial Officers.

Then talking about the welfare of the Lawyers much has been said about it already by many members of the House.

Coming to court buildings the Hon. Members from my Party have requested to represent to the Hon. Law Minister through you Mr. Speaker Sir, that a new court building has to be established in Kallakurichi in South Arcot district, District Munsiff's Court in Kattumannarkoil, a new court is long overdue in Sathiamangalam and a new building for the Court is long overdue in Kallakurichi. The court in Vridhachalam is being run in a rented building and so, a new building has to be constructed for Vridhachalam Court also.



1985 ஜூன் 25] [Thiru T. R. Venkataramanan]

Then about the summary proceedings. Summary proceedings are now applicable in the City of Madras and they are not applicable to the Sub-Courts, District Munsiff's Courts with the result that many of the cases involving money suits are pending in the State of Tamil Nadu. So, I request that summary proceedings should be extended to the Civil Courts because the cases could be disposed off very quickly.

Then about the integration of judiciary at the lower level like the Munisiff's Court. I would like to say that integration at the lower level is a death knell on Judiciary because in a Civil Court it is a theory of probability while in a Criminal Court it is proving the guilty beyond doubt. My submission is, that there should not be an integration at the lower level and integration should come only in a higher level.

Then I would like to draw the attention of this House to a classical case which I have referred to day before yesterday, about the great harm and injustice done to a woman and through the process of Court also, where the widow after re-marriage was ousted from services. Such kind of injustice to the woman should be avoided. Constitutional protection has to be given to women.

Then talking about the judicial delays, I find that there are some reasons for the delay. They are, better awareness of the legal rights by the citizens with the result that there is heavy filing of civil suits. We have taken the judiciary to the doors of the litigants so much so the citizen have more and easy access to the judiciary and in spite of that, more courts have to be created. Still there is inadequacy of courts with the result that large number of cases are pending for a long time. Some of the Judicial Officers are highly inefficient and they are the real cause for such delay in courts.

Then taking about the Motor Vehicles Claims Cases being given to the Subordinate Judges, much has been said already by the members of this House. I want to add one more point. Under the present system a citizen has to file a Motor Vehicles Claim Petition before the District Court. But the District Judge transfers such petitions to the Sub-Judge. This sort of dual system of functioning between them has to be abolished.

Then Hon. Member Thiru Pandurangan referred to the re-opening of the reserved judgments by the Judges. This has become an unlawful practice adopted by the Judges. I am using very strong words because as many as 10 re-opening cases are filed on the advice of the Judges but not on the advice of Lawyers. Re-opening Petitions are filed

[Thiru T. R. Venkataramanan] [1985 ஜூன் 25

when the judgement is reserved and the very peculiar circumstance is that when the lawyers feel that certain points have not been recorded, the Judges who find it lazy to write the judgments, are compelling the Lawyers to go on filing the re-opening Petitions. I therefore want the High Court to give a direction that not more than two re-opening petitions should be allowed in any cases so that the Judges will be compelled to write the judgments. (Mr. Speaker sounded the gong). Thanks.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகையில் பல்வேறு கருத்துக்களை எடுத்து இயம்பியிருக்கிறார்கள். சிறைத் துறையைப் பொறுத்தவரைக்கும் ஆங்கு கைதிகளுக்கு சில இடங்களில் இன்னல்கள், இடர்ப்பாடுகள் ஏற்படுவதாகவும், அவைகள் தடுக்கப்படவேண்டும் என்றும், அதற்குத் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும் என்பதனை வலியுறுத்திச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரைக்கும், அரசு ஏற்கனவே கடுமையான நடவடிக்கைகளை, தவறு செய்கின்ற அதிகாரிகள்மீது எடுத்து வருகிறது என்பதை நான் முதற்கண் கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

உதாரணமாக தற்போது பல அதிகாரிகள்மீது, பல விதமான குற்றங்களுக்காக, புகார்ப் பெட்டிகளில் இருந்து புகார் வருவதில்லை என்பதல்ல, வருகிறது. அதுமட்டுமின்றி எந்த முறையில் அரசுக்குத் தகவல் வந்தாலும், அது வந்து சேர்ந்தவுடன் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, பல காலகட்டங்களில் துறையின் விசாரணை மட்டுமே போதாது என்று, மாறாக துறைக்கு அப்பாற்பட்டு, டைரக்டரேட் ஆப் விஜிலன்ஸ் அன்ட் ஆண்டி கரப்ஷன் என்கிற அந்தத் துறைக்கும் அனுப்பி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, உண்மைகளை வெளிக் கொணரக்கூடிய வகையில் ஆணைகள் இடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 24 சிறைத் துறை அதிகாரிகள், பணியாளர்கள்மீது, அரசுக்கு அவர்கள் தவறு செய்கிறார்கள் என்ற தகவல் வந்தவுடன், நடவடிக்கைக்கு ஆணையிடப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.



1985 ஜூன் 25] [திரு. சி. பொன்னையன்]

இன்னும் குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, சிறையை சீர்திருத்தம் செய்ய, அதனுடைய நோக்கங்கள் ஈடேற, தக்க விரைவு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். கடந்த காலத்தில் இல்லாத அளவிற்கு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான் பிரிசனல் மேனுவல் பெரிதும் திருத்தப்பட்டு, அதற்கு அப்பாற்பட்டு, சிறைக் கைதிகளுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்றும், அவர்கள் குற்றவாளிகள் என்ற உணர்வோடு சிறையில் இல்லாமல், திரும்பி வரும் போது மறுவாழ்வு பெறுவதற்கான நல்ல சூழ்நிலைகளை உருவாக்கி, அவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கும், உரிய பல நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது ஆணைகளின் மூலமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. அந்த அடிப்படையில் 1–1–1982-ல் உணவு முறையில் கூட கூடுதல் செலவிலே சத்தான உணவாக 'பி' கிளாசிலே இருப்பவர்களுக்கு 5½ ரூபாய்க்கும், 'ஏ' கிளாசில் இருப்பவர்களுக்கு 10 ரூபாய் 40 பைசாவுக்கும் தரவேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. சிறையில் இருப்பவர்களுக்கு படிக்க வாய்ப்புத் தரவேண்டும் என்றும் கருதி, அவர்களுக்கு அந்த வாய்ப்பு தருவதற்கும் அரசு அந்தச் செலவை ஏற்கவேண்டும் என்ற முறையில் நடவடிக்கைகள் எடுத்து, பல பேர்கள், பட்டப் படிப்புகளைப் படிக்கிறார்கள் இன்னும் சொல்லப்போனால், ஒருவர் மருத்துவப் படிப்பு படிப்பதற்கும் அரசு வேண்டிய வசதிகளைச் செய்து தர உத்தரவிட்டு இருக்கிறது.

(மாலை 6–20)

பத்திரிகைகள் வழங்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்களது கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

அதைப்போலவே சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கு பொழுது போக்கு வசதிகளுக்காக அவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் ஏற்படுத்தி, விளையாடுகின்ற வாய்ப்புகள் கிட்டத்தட்ட எல்லாச் சிறைகளிலும் அதிகமான சலுகைகள் தற்போது உருவாக்கித்தரப்பட்டு இருக்கின்றன.

உதகமண்டலம், கூனூர், கடலூர், கொடைக்கானல், ஒசூர் போன்ற பகுதிகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கு அவர்களுக்கு அந்த இட சூழலுக்கு ஏற்ப பல பொருட்கள், உடைகள் தர அரசு ஆணையிட்டு நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

அதைப்போலவே, சென்னை, சேலம், கோவை, மதுரை போன்ற சிறைகளில் முதல் முறையாக சிற்றுண்டி சாலை வசதிகளை அரசு செய்திருக்கிறது. சினிமா புரஜெக்டர்

களை சிறைச் சாலைகளுக்குத் தந்து கைதிகள் மனம் மாறக் கூடிய நல்ல படங்களை எல்லாம் அங்கே திரையிட வேண்டும் என்ற ஆணை இட்டு அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

They prefer to go for self employment scheme. Wage earning scheme.

என்று சொல்லக்கூடிய ஊதியம் ஈட்டும் திட்டத்தை கிட்டத் தட்ட அனைத்து சிறைகளிலும் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. கடந்த காலத்தில் ஒரு சிறைவாசி அந்தப் பணி யில் ஈடுபடுகிற போது 10 பைசா மட்டுமே ஊதியம் என்ற நிலையை மாற்றி அவர்களுக்கு ஒரு ரூபாய் அளவுக்கு ஊதியம் தரவும், கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியும் வழி செய்யப்பட்டு இருக்கிறது.

சிறை நிர்வாக சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளில் 81 பரிந்துரைகளை அரசு ஏற்று ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஏனைய பரிந்துரைகளுக்கு விரைவில் அரசு ஆணை இட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

சிறையிலிருந்து விடுதலை ஆன கைதிகளுக்கு அவர்கள் தங்களை மறுவாழ்வில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு They prefer to go for self-employment அந்த நிலையில் அவர்களுக்கு சிறு தொழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறு தொழில் பயிற்சி கொடுப்பதில் அவர்கள் விடுதலை ஆன பிறகு 2 ஆண்டு காலத்திற்கு மாதம் 60 ரூபாய் அவர்களுக்கு உதவிப் பண மாகத் தந்து இலவசமாக உடை, உணவும் தந்து அவர் களுக்கு பயிற்சியும் தரப்படுகிறது. அந்தப் பயிற்சிக்குப் பிறகு அவர் கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபட முன் வருகிறபோது நாட்டு டைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி பெற ஏற்பாடு செய்து அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட் டம் உருவாக்கித் தரப்படுகிறது.

பெரோலைப் பற்றிச் சொன்னார்கள். பெரோலைப்பொறுத்த வரையில் அரசு அதில் மிகவும் தாராளமாக இருநது கைதி களுக்கு பெரோல் தருகிறது. பல நேரங்களில் தவறான சில தகவல்களை தந்து அதற்கு பெரோல் வேண்டும் என்று கேட்கிறபோது பெரோல் மறுக்கப்படுகிறது. ஆனால் கிட்டத் தட்ட விதியில் இருக்கின்ற முறைக்குமேல் முதல் 5 ஆண்டுக் காலம் சிறை வாசம் முடிந்த பின்பு ஒரு மாத காலம் பெரோல் தரப்பட்டு இருக்கிறது. முதல் 5 ஆண்டு காலத்திற்கு அவர் களுக்கு பெரோல் இல்லை என்ற நியதி இருக்கிறது. அடுத்து ஒவ்வொரு 2 ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாத காலம், தண்டனை



யின் கடைசி 3 ஆண்டுகளுக்கு ஒரு மாதம் என்றும் இருக்கிறது. ஆனால் பெரோல் பிரச்சினையில் கைதிகளுக்கு சலுகை காட்ட வேண்டும் என்ற முறையில் அதை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. Premature release of prisioners ஐ— பொறுத்த வரையில், ஒரு குறிப்பிட்ட நியதி கடைப்பிடிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகிறபோது சொன் னார்கள். Premature release of prisoners-ஐ பொறுத்தவரையில் ஏற்கனவே இது நீதிமன்றம் வரை சென்று நீதி மன்றங்கள் விரிவான ஒரு very broad proper guide-lines to the State Government they have issued அந்த அடிப் படையிலே, தான் பிரிசினர்ஸ்சை பொறுத்தவரைக்கும் பிரிமெச்சூர் ரிலீஸ் அவர்களுக்குத் தரப்படுகிறது. அதிலே The gravity of the offence—whether there is subsisting provo- cation, though not technically correct போன்ற பலவற்றை கருத்தில் கொண்டு அந்த அடிப்படை யிலே அவர்கள் பிரிமெச்சூர் ரிலீஸ் செய்யப்படுகிறார்கள். ஒரே ஒரு சிறைக்கைதியை தவிர வேறு யாரும் 10 ஆண்டுக்காலம் முடியாத எவருக்கும் முன் விடுதலை இது காறும் கொடுக்க வில்லை என்பதை நான் அவைக்கு தெளிவுப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே சிறையிலிருந்து பரோலில் மிகவும் தாராளமாக விட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கள் சிலர் பேசுகிறபோது சொன்னார்கள். அப்படி தாராள மாக விடுகிறபோது சில இன்னல்கள் ஏற்படுகின்றன. 103 சிறைக் கைதிகள் இவ்வாறு பரோலில் வெளியே சென்று அவர்கள் சிறைக்கு திரும்பாத சூழ்நிலையில் அவர்களைத் தேடினாலும் கிட்டாத நிலையும் இருக்கிறது.

வெளியே சென்ற 25 பேர் பல குற்றங்களைப் புரிந்து அந்தச் சூழலுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற நிலை இருக்கின்ற காரணத்தால் 'பரோல்' பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் சற்று எச்சரிக்கை யோடு இருக்க வேண்டிய நிலை இருக்கிறது.

அதைப் போலவே, திருச்சி மத்திய சிறையினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரைக்கும், ஏற்கனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்து, அதிலே தெளிவாக இங்கே விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

17 ஆம் தேதி அந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. தஞ்சைப் பகுதியிலே இருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே சிறையில் இருக்கின்றவர்கள், 13, 14 ஆம் தேதி வாக்கில் அவர்களது இயக்கத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்படுவாரானால்,

கட்டாயம் பந்தலுக்கு தீ வைக்கப்படும் என்று சொல்கிறார்கள்; அதை 15 ஆம் தேதியே அந்தச் சிறையிலிருந்த அதிகாரி டிஸ்டிரிக்ட் பயர் ஆபீசருக்கு எழுத்து மூலமாக எழுதி இப்படி ஒரு சூழல் இருக்கிறது, பாதுகாப்பு வேண்டும் என்று தீ விபத்தைத் தடுக்க முன் எச்சரிக்கை நடவடிக்கை, 2 தினங்களுக்கு முன்னமேயே எடுத்து இருக்கிறார்கள். இது ரிக்கார்டில், டிஸ்டிரிக்ட் பயர் ஆபிசர் அலுவலகத்தில் இருப்பதை முன்பே எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே இருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஏற்கனவே தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டால் பந்தலுக்குத் தீ வைப்போம் என்று செய்தி கிடைத்தது, அதை 15 ஆம் தேதி அன்று நாங்கள் தகவல் கொடுத்து இருக்கிறோம். என்று அதிகாரிகள் சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால், அந்தத்தொடர்பு உடையவர்களை அப்புறப்படுத்தி உடனடியாக அந்தத் தேதியிலேயே சிறையிலே ஏதாவது நடவடிக்கை எடுத்ததற்கான குறிப்பு இன்றையதினம் அமைச்சர் அவர்களிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலே இருந்தவர்களுடைய ஒட்டு மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட, அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு வந்தவர்கள் மட்டும் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள். அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அப்படி ஒரு தகவல் அவர்களுக்குக் கிடைத்தவுடன் தீ வைப்புச் சம்பவம் 17-ம் தேதி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

கலைஞர் அவர்களைக் கைது செய்வதற்கு முன்னாலேயே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி முன்கூட்டியே டிஸ்ட்ரிக்ட் பயர் ஆபீசருக்கு எழுதி இருக்கிறார்கள். பயர் இன்ஜின் எல்லாம் கூட வந்திருந்த நிலையையும், நடைமுறையில் என்ன ஏற்பட்டதோ அதையும் தான் சுட்டிக் காட்டினேன்.

---

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் பேசுகின்றபோது வேலூர் சிறையிலே நடந்த சம்பவம் குறித்துச் சொன்னார்கள்.

வேலூர் சிறையைப் பொறுத்தவரைக்கும், அங்கு சில பிரச்சினைகள் உள்ளதாக உச்ச நீதிமன்றத்திலே ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு அதனுடைய உண்மை என்ன என்பதை மாவட்ட அமர்வு



நீதிபதி விசாரித்து அறிக்கை தரவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டு, அந்த அடிப்படையில் அமர்வு நீதிபதி ஒரு அறிக்கையை உச்சநீதிமன்றத்திற்குத் தந்து இருக்கிறார்.

அந்த உச்ச நீதிமன்றமும் அவரது அறிக்கையை ஏற்று அந்த அடிப்படையில் , அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும், சுமுகமான தீர்வு காணவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இதிலே அந்த அமர்வு நீதிபதி உச்சநீதிமன்றத்திற்குத் தந்த அறிக்கையில் கூட, 24 காவலர்கள் சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டார்கள் என்றும், அதைப் போலவே 70 சிறைவாசிகள் மருத்துவமனையிலே சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்கள் என்றும், ஆனால் மருத்துவச் சான்றிதழிலே அவர்களுக்குக் காயம் எதுவுமில்லை, ஏற்படவில்லை, காவலர்களுக்குத்தான் காயம் ஏற்பட்டது என்றும் அந்த அமர்வு நீதிபதியினுடைய அறிக்கை, உச்சநீதிமன்றத்திற்குத் தரப்பட்டிருக்கிறது.

இப்படி ஒரு முடிவு இருக்கின்ற காரணத்தாலே, சிறையிலே எல்லாமே நல்லதாக நடந்திருக்கிறது அந்த நாளில் என்று நான் சொல்லவில்லை. குறை ஏதும் இருக்குமானால், அதை நிவர்த்திக்க வேண்டியது அரசினுடைய கடமை என்ற முறையில் அதற்கேற்ப தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

(மாலை 6—30)

அதைப்போலவே, நீதித்துறை நிர்வாகத்தில் பலவிதமானகருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நீதித் துறை தன்னிச்சையாக இயங்கிட, தலையீடற்ற முறையிலே அது செயல்பட இந்த அரசு மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வருவதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் This Government has never interfered hitherto even for adjournment rights from the District Munsif Court upto High Court என்ற நிலைமையில் அந்த அளவிற்கு நீதித்துறையிலே எள்ளளவும் தலையிடாமல் நீதி பரிபாலனம் செம்மையாக நடைபெறுவதற்கு என்னென்ன ஆக்கப்பணிகளை, உதவிகளை உறுதுணையாக இருந்து ஆற்ற வேண்டுமோ அவற்றை ஆற்றுவதில் இந்த அரசு, புரட்சித் தலைவரவர்களின் அரசு அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரைத்த 28 சிவில் நீதிமன்றங்களில் 27 சிவில்நீதி மன்றங்களை ஏற்கனவே ஏற்படுத்தியிருப்பதையும், 27 குற்றவியல் நீதிமன்றங்களில் 19 குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வழக்குகளின் தேக்கம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசுகின்ற பொழுது மிகவும் கவலையுடன் தங்கள் கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். அதில் இந்த அரசு ஒன்று படுகிறது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் களைவதற்கு ஆக்க நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மைய அரசு கூட, முல்லா கமிஷன் அமைத்த பிறகு பல ஆலோசனைகளைப் பெற்று, எப்படி மைய மாநில சட்டங்கள், அதையொட்டிய விதிகள் ஆகியவைகளை நடைமுறைப்படுத்து கின்ற பொழுது நீதிமன்றங்களில் தாமதம், பொதுமக்களுக்கு இன்னல் ஆகியவற்றைத் தருகிறது என்பதைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குச் சில பரிந் துறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதை மைய, மாநில அரசுகள் மேற்கொண்டு இருக்கின்றன.

அடிப்படையில் கூடுதல் நீதிபதிகள் வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கனவே இருந்து வருகிற கோரிக்கை. சென்னை உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையிலேயும் காலியாக இருக்கின்ற இடங்களுக்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்ற முறையில் மைய அரசுக்கு மாநில அரசு அதனுடைய பரிந்துரையை அனுப்பி யிருக்கிறது. அதில் விரைவில் மைய அரசு முடிவெடுக்க இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், நீதிமன்றங்களினுடைய எண்ணிக்கை பெரிதும் அதிகமாக்கப்பட்டதை நான் சொல்ல விரும்புகிறேன். District Courts and other Special Courts in the Cadre of District Judge என்ற முறையில் முன்பு—1977-க்கு முன்பு—31 ஆக இருந்தது; தற்போது 59 ஆக உயர்த்தியிருக்கிறோம். Sub-Courts and other Court in the cadre of Sub-Judge என்ற நிலையில் 67 என்று இருந்த நிலையை மாற்றி 94 நீதிமன்றங்களாக தற்போது உயர்த்தியிருக்கிறோம். District Munsif Courts-ஐப் பொறுத்த வரையில் 93 ஆக இருந்ததை 142 நீதிமன்றங்களாக உயர்த்தி யிருக்கிறோம். Chief Judicial Magistrate Court-ஐப் பொறுத்த வரையில் 16 ஆக இருந்ததை 20 ஆகவும், Sub-Divisional Judicial Magistrate Court-ஐப் பொறுத்தவரையில் 15ஆக இருந்ததை





29 ஆகவும், Judicial First Class Magistrate Courts 21ஆக இருந்ததை 57 ஆகவும், Judicial Second Class Magistrate Courts 133 என்பதை 155 ஆகவும், Metropolitan Magistrates Courts from 20 to 23 என்ற நிலையில் 396 நீதிமன்றங்கள் மட்டும் 1977-ல் இருந்த நிலைமை மாறி தற்போது 175 கூடுதல் நீதிமன்றங்களைப் பல பகுதிகளில் அமைத்து, ஒட்டுமொத்த மாகச் சொல்ல வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 575 ஆக உயர்வு பெற்றிருப்பது, மக்களை எளிதில் நீதி சென்றடைய வேண்டும், அவர்கள் இருக்கின்ற இடத்திற்கே நீதி சென்றடைய வேண்டும் என்பதிலே, Decentralisation of Judiciary என்ற concept இல் அரசு அக்கறையோடு செயல்படுகிறது என்பதற்கு உதாரண மாகத்தான் இதை நான் சொல்கிறேன்.

அதைப் போலவே, Protection of Civil Rights Act-ஐப் பொறுத்தவரையில் ஏற்கனவே மதுரை, திருச்சி, திருநெல்வேலி கும்பகோணம் ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்ற நீதிமன்றங்கள் மட்டுமல்லாமல், பண்ருட்டி, நாகப்பட்டினம், கோவை, செங்கை ஆகிய பகுதிகளில் புதிதாக நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அதைப் போலவே, Essential Committees Act என்ற அடிப்படை யில் நீதிமன்றங்களை கோவை, மதுரை, புதுக்கோட்டை, சேலம், தஞ்சை, சென்னை ஆகிய பகுதிகளில் நடைபெறுவதற்கு அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், புதிய மாவட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். புதிய மாவட்டங்களுக்கு நீதிமன்றங்களை விரைவில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக் கிறார்கள். புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தென் மாவட்டங்கள், திண்டுக்கல்லை தலைநகரமாகக் கொண்ட அண்ணா மாவட்டம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு எந்த இடத்தில் நீதிமன்றம் வேண் டும் என்பதில் அந்தந்தப் பகுதிகளிலே உள்ள வழக்கறிஞர் களுக்குள்ளே மாறுபட்ட கருத்துக்கள், மக்கள் பிரதிநிதிகளுக் குள்ளே மாறுபட்ட கருத்துக்கள் ஆகியவை இந்த நீதிமன்றங்களை விரைவில் துவக்குவதற்கு தடைக் கல்லாக இருக்கின்றது. ஆனாலும்கூட, மிக விரைவில் அந்தப் பகுதிகளில் நீதிமன்றங்களை துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

அதைப் போலவே, பென்டன்சி ஆப் தி கேசஸ், அரசு வழக்குரைஞர்கள் குறைவாக இருக்கிற காரணத்தாலும் ஏற்படுகின்ற நடைமுறை உண்மையை அறிந்த காரணத்தாலும் தற்போது அரசு வழக்குரைஞர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டிருக்கிறது. 1977 வாக்கில் கிட்டத்தட்ட 106 பல்துறைகளைச் சேர்ந்த அரசு வழக்குரைஞர்கள் மட்டுமே இருந்த நிலைமை மாறி 173 கூடுதல் அரசு வழக்குரைஞர்கள் பதவிகளை ஏற்படுத்தி, ஒட்டு மொத்தமாக அது 179 என்ற நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே, உயர்நீதிமன்றத்திலும்கூட, பென்டன்சியைக் குறைப்பதற்குக் கூடுதல் அரசு வழக்குரைஞர்கள் வேண்டுமென்ற முறையில் பல புதிய பதவிகளை அரசு ஏற்படுத்தி, பென்டன்சியை உயர்நீதிமன்ற அளவிலே குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நீதிமன்றக் கட்டிடங்களுக்கு நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதை நானும் கூட உணர்கிறேன். நீதிமன்றக் கட்டிடங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதாதுதான். இந்த நிதியை அதிகமாக ஒதுக்க வேண்டுமென்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அடுத்த ஆண்டுக்கு நடவடிக்கை எடுக்க இசைவு தெரிவித்து இருக்கிறார்கள். ஆனாலுங்கூட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டிலிருந்து 1975ஆம் ஆண்டு வரை—ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—5 ஆண்டுகளில் நீதிமன்றக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 76.78 இலட்சம். ஆனால், 1980-லிருந்து 1985 வரை நீதிமன்றக் கட்டிடங்களுக்காக நாம் ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 4.95 கோடி. இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த அரசு நீதிபதிகளுக்கு, நீதித் துறைக்கு, வழக்குரைஞர்களுக்குத் தேவையான குறைந்தபட்ச இன்றியமையாத தேவைகளை விரைவில் அவர்களுக்கு ஈடேற்றித் தரவேண்டுமென்பதில் அக்கறையோடு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான்.

தொலைபேசி, டேப்ரெக்கார்டர் போன்றவைகளை அரசு கொடுக்கவில்லையென்ற கருத்துப்பட மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எடுத்துச் சொன்னார். இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகுதான்—தொலைபேசி தேவையா, இல்லையா என்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் ஒரு பிரச்னையை எடுத்துச் சொன்னார்கள்—தொலைபேசி நீதிமன்றத்திற்குத்தான் தர வேண்டும், வீட்டுக்கு அல்ல என்ற முடிவுக்கு வந்தது. ஆனால் தற்போது நீதிபதிகள் நீதிமன்றத்



திற்கு வேண்டாம், வீட்டுக்குத் தாருங்கள் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால், தொலைபேசி அவர்களுக்கு, நீதிமன்றத்திற்குத் தரவேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது.

ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், சென்னையைப் போன்ற பகுதிகளில், பேருந்துகளை வழி நடத்துகிறவர்கள் அல்லது வழக்கு தொடர்புடைய பொது மக்களோடு சேர்ந்து பேருந்துகளில் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு நீதிபதிகள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்நிலையிலிருந்து விடுதலை தரவேண்டுமென்ற நோக்கோடு மினி பஸ்களை ஏற்பாடு செய்து அவரவர் இல்லத்திலிருந்து நீதிமன்றத்திற்கு அவர்களை அழைத்துவரவும், நீதிமன்றம் முடிந்தபிறகு இல்லத்திற்கு அவர்களைத் திருப்பிக் கொண்டு சென்று விடுவதும் என்ற முறையை தற்போது புரட்சித் தலைவர் ஆட்சியில் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு அந்தச் சலுகைகளை நீட்டிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் வைத்திருக்கிறார்கள். அது குறித்தும் அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே, வழக்குரைஞர்களுக்காக ஒரு நல நிதித் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்ற பொழுது சொன்னார்கள். ஏற்கனவே, அவைக்கு இதை நான் சொல்லியிருக்கிறேன். கேரள மாநிலத்தில் நடைமுறையில் இருக்கிற வழக்குரைஞர்கள் நல நிதித் திட்டத்திற்கு ஒப்ப ஒரு திட்டத்தை இங்கே கொண்டு வருவதற்கு அரசு ஏற்கனவே கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. வழக்குரைஞர்கள் எந்த அளவிற்கு இதிலே தங்களது பங்கினைச் செலுத்த வேண்டும், அரசு எந்த அளவிற்குப் பங்கினைச் செலுத்த வேண்டும், முத்திரைத்தாள் மூலமாக, இந்த வருமானத்தை, அவர்களுக்கு வரக்கூடிய ஒரு தொகையை, கணிசமான அளவுக்கு எவ்வாறு பிரிக்க வேண்டும் என்பது குறித்து வழக்குரைஞர் மாநிலச் சங்கத்திடமும், பார் கவுன்சிலிடமும், அதைப் போலவே தலைமை வழக்குரைஞர்களிடமும், அரசு விவாதித்து வருகிறது. மிக விரைவிலே நல நிதி ஒன்றை அரசு நடைமுறைக்குக் கொண்டு வரும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

மதுரைக்கு ஹைகோர்ட் பெஞ்ச் வேண்டுமென்ற கோரிக்கை குறித்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அது குறித்து மைய அரசை நாம் பெரிதும் வற்புறுத்தி வருகிறோம். அதுவும்

குறிப்பாக, "If a Circuit Bench of the High Court should be situated at Madurai the Judges should be provided with accommodation and other facilities" என்ற முறையில் மைய அரசு மாநில அரசைக் கேட்டது.

(மாலை 6-40)

இதற்கு நாம் இசைவு அளிக்கின்ற வகையில், கட்டிடம், நீதிபதிகள் தங்க இருப்பிடம், அலுவலர்கள் தங்க இருப்பிடம் எல்லாம் வழக்கமாக மத்திய அரசு செலவில் செய்யப்பட வேண்டியிருந்தாலும் மாநில அரசே இவற்றிற்குப் பொறுப் பேற்கும் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இதிலே சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை மைய அரசுக்கு இன்னும் கிட்டவில்லை. அவர்கள் இதிலே மாறுபாடான கருத்தைக் கொண்டிருப்பதால் 'ஹைகோர்ட் பெஞ்ச் அட் மதுரை' இன்னும் வரவில்லை. இருந்தாலும் தற்போதுள்ள மைய சட்ட அமைச்சர் அவர்கள் இது குறித்து விரைவில் நல்ல முடிவு எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

அதைப்போன்றே 'சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் அட் மெட்ராஸ்' வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. பல வட மாநிலங்களில் இருக்கிற இந்த நிலைமை தமிழ்நாட்டிற்கும் வேண்டுமென்று கோரிக்கை வைத் திருக்கிறோம். பல காரணங்களால் அதை தள்ளித் தள்ளி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போது மத்திய சட்ட அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி தமிழக முதலமைச்சர் அவர் கள் எழுதியிருக்கிறார்கள். விரைவில் பரிசீலனை செய்து, முடிவு தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் இங்கே தெரிவித்தார்கள். இப்போது இருக்கிற சட்டங்களில் உள்ள சந்து பொந்துகளை போக்க வேண்டும்; காலத்திற்கு ஒவ்வாத சட்டங்கள் பல இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன் னார்கள். உண்மையிலேயே அரசுக்கு மிகவும் உறுதுணையாக பல நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பல சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும்; தற் போதைய நடைமுறைக்கு ஏற்ப மக்களுக்கு நன்மை அளிக்கின்ற சட்டங்கள் வரவேண்டும், அந்த வகையில் பல மாற்றங்கள் தேவை என்றெல்லாம் பல அரிய கருத்துக்களை பலர் கூறி னார்கள். அதை எல்லாம் பரிசீலனைச் செய்து விரைவிலே மாநில அரசினுடைய சட்டங்கள், அதை ஒட்டிய விதிகள், மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டிய சட்டம் போன்றவற்றை எல்லாம் தீர ஆராய்ந்து புதிய சட்டங்கள்



கொண்டுவர 'ஸ்டேட் லா கமிஷன்' ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமைக்க இருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'ஃப்ரீ லீகல் எய்டு'-க்கு 37 இலட்சம் ரூபாய் அளிக்கப் பட்டிருக்கிறது என்றும் இது போதாது என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். பாரத துணைக் கண்டத்திலேயே ஃப்ரீ லீகல் எய்டைப் பொறுத்தவரையில் அதிகமாக நிதி ஒதுக்கியிருக்கிற மாநிலம் தமிழ்நாடுதான். அவர்கள் எந்த அளவுக்கு, தேவைக்கேற்ப பணம் கேட்டாலும் அரசு கொடுத்துவருகிறது. ஃப்ரீ லீகல் எய்டு போர்டு ஃபங்ஷனில் அரசு தலையிடுவதில்லை. தட் அப்சலூட் இன்டிப்பென்டன்ட் ஃபங்ஷன். முன்னாள் நீதிபதி மாண்புமிகு கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், முன்னாள் நீதிபதி மாண்புமிகு இராமகிருஷ்ணன் அவர்களும் ஃப்ரீ லீகல் எய்டு போர்டில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மிகுந்த திறனோடு செயல்படுகிற திரு. இராஜா அவர்கள் ஃப்ரீ லீகல் எய்டு போர்டை நடத்தி வருகிறார்கள். அந்த போர்டிலே வழக்குரைஞர் யாரை நியமிப்பது என்பதுபற்றி கூட அரசு தலையிடவில்லை. மத்திய அரசு இந்த மாநில அரசின் நட வடிக்கையைப் பாராட்டியிருக்கிறது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியும் பாராட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் சிறந்த முறையில் மக்கள் நலன்கருதி விரைந்து, துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப்போல இந்த போர்டுக்கு சீனியர் அட்வகேட்ஸ் வரவில்லை என்ற குறை இருக்கிறது. அதைப் போக்க அரசும் ஃப்ரீ லீகல் எய்டு போர்டும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியும் இணைந்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோர்ட் ஃபீஸ்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். வேங் கடரமணன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 7½ சதவீதம் அட்வலரம் இருக்கிறது என்றும் அதை மாற்றியமைக்க வேண்டு மென்றும் சென்னை மாநகரில் இருக்கிற மக்களுக்குக் கிடைக்கிற வசதி மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை என்றும் நீதி மன்றத் திற்குச் செலுத்த வேண்டிய கோர்ட் ஃபீ அதிகமாக இருக்கிறது என்றும், அதை குறைக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள். தற்போது இருக்கிற 7½ சதவீதம் அட்வலரம் என்பது 10,000 ரூபாய் வரையில் இருக்கும். 10,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரையில் 6 சதவீதமும், 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரையில் 5 சதவீதமும், 50,000 ரூபாயிலிருந்து 75,000 ரூபாய் வரையில் 4 சதவீதமும்,

75,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரையில் 2½ சதவீதமும், ஒரு இலட்சத்திற்கு மேல் போனால் ஒரு சதவீதமும் என்ற வகையில் அது இருக்கும்.

அது மட்டுமல்ல, ஃப்ரீ லீகல் எய்டு போர்டுக்குச் செல்கிற வழக்குகளுக்கு கோர்ட் ஃபீ இல்லை என்றும் அதைப்போன்று பெண்களுக்கு மேட்ரிமோனியல் போன்ற வழக்குகளாக இருந்தால் கோர்ட் ஃபீ இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போன்று எக்கனாமிக்கலி வீக்கர் செக்ஷன் என்றால், இத்தனை ஏக்கர் நிலம் அல்லது இவ்வளவு ரூபாய் வருமானம் என்று நிர்ணயித்து, அதற்கு மேற்படாமல் இருந்தால் கோர்ட் ஃபீ இல்லை என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

இதைப் பாரதம் பூராவுக்கும் நடைமுறைப்படுத்த வேண்டுமென மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. விரைவில் தமிழக அரசு நடைமுறைக்குக் கொண்டு வரும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகின்றபோது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ட்ரிபியூனல் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். நீதி மன்றங்களில் வழக்குகள் பல நிலுவையில் இருக்கின்ற நிலைமையில் உயர் நீதிமன்றத்திலிருந்து பல வழக்குகளை ட்ரிபியூனலுக்கு மாற்றுகின்றபோது வேலைப்பளு குறையும் என்ற முறையில் ஆலோசனை தரப்பட்டது. அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவ்வாறு அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபியூனல் போன்று அரசு விரைவில் சேல்ஸ் டாக்ஸ்க்கும் ஒரு டிரிபியூனல், லேன்ட் ரிஃபார்ம்ஸ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபுனல் ஆகியவற்றைக் கொண்டு வர இருக்கின்றது. அப்படி வருகின்றபோது சர்வீஸ் மேட்டர்ஸ்க்கும் மத்திய அரசு அந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் அது மைய அரசின் ஜூரிஸ்டிக்ஷனுக்கு உட்பட்ட ஒன்றாக இருப்பதன் காரணத்தால் மைய அரசு மாநில அரசுக்கு வேண்டிய அட்மினிஸ்ட்ரேடிவ் டிரிபியூனலைப் போட வேண்டியிருக்கின்றது. மைய அரசை மாநில அரசு அணுக இருக்கின்றது. விரைவில் சர்வீஸ் மேட்டர்ஸ்க்கு அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபியூனல் வந்துவிடும். அந்த வகையில் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் எல்லாம் ஆங்கு மாற்றப்படும். Land Ceiling Act and other connected Acts pertaining to Agrarian reforms அதற்கும் உரிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகின்றது.



மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். ரெவின்யூ கோர்ட்டைப் பொறுத்த வரையில் வழக்கறிஞர்கள் அங்கு வழக்குகளை நடத்துவதற்குத் தடை இருக்கின்றது என்றும் அதை நீக்க வேண்டும் என்றும் பல உறுப்பினர்கள் பேசுகின்றபோது எடுத்துச் சொன்னார்கள். அட்வகேட்ஸ் ஆக்டினுடைய 30-வது பிரிவில் இது தெளிவாக இருக்கின்றது.

"... Every Advocate whose name is entered in the State roll shall be entitled as of rights to practice throughout the territories to which this Act extends..

(ii) before any tribunal or person legally authorised to take evidence and ;

(iii) before any other authority or person before whom such advocate is by or under any law for the time being in force entitled to practice."

என தெளிவாக இருக்கின்றது. இந்தப் பிரிவு இவ்வளவு தெளிவாக இருப்பதன் காரணத்தால் தான் பஞ்சாப் நீதிமன்றம்கூட இதைச் செல்லும் என்று தீர்ப்பளித்திருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே இதிலே எந்த விதமான பிரச்சினையும் இல்லை.

ரெவின்யூ கோர்ட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு கல்டிவேட்டிவ் டெனன்ட்ஸ் ஆக்ட் 1955-லே வந்தது. அதிலே விதி 9 என்ற ஒரு விதி இருக்கின்றது. அந்த விதியை நாம் மாற்றவேண்டி இருக்கின்றது. சட்டப்படி கூட அந்த விதி செல்லாததாக இருக்கின்றது. காரணம் The Advocate Act was passed by Parliament and it would supersede any rule in force now. அந்த முறையில் தக்க மாற்றத்தை அதற்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஸ்மால் காஸஸ் கோர்ட்டைப் பொறுத்த வரையில் Pecuniary jurisdiction of small cause court should be enhanced as it was done in the case of District Munsif Court என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்களும், மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களும் மற்றும் சிலரும் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு அரசு விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1985 ஜூன் 25

அடுத்து பெண்களின் நலனுக்காகப் பல்வேறு ஆலோசனைகளை சட்ட ரீதியாக அவர்களுடைய பாதுகாப்புக்காகக் கொண்டு வர வேண்டும் என்பதை விரிவாக எடுத்துச் சொன்னார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள். அது அரசினுடைய ஆழ்ந்த பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மாநில அரசு எடுக்க வேண்டிய தக்க நடவடிக்கையை எடுப்பதோடு மைய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். Family Courts Act of 1984 has already been passed by the Parliament. அதை ஒவ்வொரு மாநிலமும் நடை முறைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டப் பகுதியிலும் பெண்களுக்காக ஃபேமிலி கோர்ட் நடை முறைக்குக் கொண்டு வந்து பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளாக இருந்தாலும்—பல்வேறு பிரிவுகள் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 6 பிரிவுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குள் திருமணம் சம்பந்தப்பட்ட வழக்குகளாக இருந்தாலும் சரி, அல்லது வேறு வழக்குகளாக இருந்தாலும் சரி, சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளாக இருந்தாலும் சரி, இது போன்ற பல வழக்குகளை அந்த ஃபேமிலி கோர்ட் தான் நடத்த வேண்டும் என்று அந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பெண்களின் நலன் குறித்து அந்த ஃபேமிலி கோர்ட்ஸ் நியமிக்க தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 6-50)

தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் பணிகளை வரை முறை செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். அதைப் பொறுத்த வரைக்கும் நான் ஏற்கெனவே பல முறை இந்த அவையிலே சொல்லியிருப்பதைப் போல 1964–65 ஆம் ஆண்டுக் காலத்தில் இருந்தே தற்காலிகமாக இந்த செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட் நியமனம் நடை முறையில் இருந்து வந்திருக்கிறது. அதை அரசு நியமித்ததா என்றால் அதுவும் கூட இல்லை. உயர்நீதி மன்றத்திற்கு தனி அதிகாரம் தரப்பட்டு உயர்நீதி மன்றத்தினுடைய 2 நீதிபதிகள் அடங்கிய குழு, அந்தப் பணியை மேற்கொண்டு, நீதிபதிகளை-செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகளை நியமித்து வந்திருக்கிறது. வழக்கறிஞர்களிடத்திலிருந்து அந்த நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செய்யத தவறி விட்டார்கள். என்ன காரணம் என்று புரியவில்லை.



1985 ஜூன் 25] [திரு. சி, பொன்னையன்]

இது பல ஆண்டுக் காலமாக நடை முறையில் இருந்து வந்து, தற்போதுதான் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகு, நாங்கள் உத்தரவு இட்டோம். அந்த நிலை இருக்கக் கூடாது, வழக்கறிஞர்களிடத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவர்களை நீதிபதிகளாக கொண்டு வர வேண்டும். அவர்களுக்கு முன் உரிமைத் தர வேண்டும் என்று சொன்னோம். ஏற்கெனவே இருந்த நடை முறைப்படி 11:9 என்று இருந்தது. அது சரியல்ல 5:1 என்ற வீதத்தில் அது மாற்றப்பட வேண்டும். 5 பேர்களை வழக்குரைஞர்களாக நியமிக்கிற போது, ஒருவரை நிர்வாகத் துறையிலிருந்து எடுக்கலாம், அந்த ஒருவர் கூட சட்டத் துறையிலிருந்தோ, நீதித் துறையிலிருந்தோ எடுக்க வேண்டும். அவர்கள் சட்டம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமே தவிர, மற்ற நிர்வாகத் துறையைச் சார்ந்தவர்களாக இருக்கக் கூடாது என்று, அவைகளை மாற்றி அரசு நடவடிக்கையை மேற்கொண்டது.

ஆனால், அதற்குள் 1965 லிருந்து நீதித் துறையிலே பணியாற்றிய 100-க்கும் மேற்பட்ட தற்காலிக-டெம்பரரி-ஜூடிஷியல் எனப்படும் செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்கள், தங்கள் பதவிகளை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கை விட்டார்கள். கிட்டத்தட்ட 15, 20 வருஷங்களாகக் கூட அவர்கள் தற்காலிகமாகவே பணியாற்றி இருக்கிறார்கள். They cannot be referied back to the parent Department. அதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. காரணம் பேரண்ட் டிபார்ட்மென்ட்டில் அவர்கள் சேர்ந்தபோது, அந்த இடத்திலே ஜூனியர் அஸிஸ்டென்ட்டாக பணியாற்றியிருப்பார்கள். அவர்கள் தொடர்ந்து அங்கேயே இருந்திருந்தால், By this time, they ought to have been promoted to the post of Deputy Secretary or Joint Secretary in the parent Department. ஆனால் அந்த அளவிற்கு 100க்கும் மேற்பட்டவர்களை திரும்ப தாய்த் துறைக்கு எடுப்பது என்றால், அவர்களுக்கு அங்கே வேலை உருவாக்கிக் கொடுக்கக் கூடிய நிலையில் இல்லை.

அதை விட தற்காலிகமாக அந்த நீதிபதிகளைத் தேர்ந்து எடுத்ததே உயர் நீதிமன்றம் தான் என்பதையும் நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். whether they can be made permanent. என்று சொல்லி விடலாமா என்றால், அந்த நிலை கூட இல்லை. உயர்நீதி மன்றத்தினுடைய 2 நீதிபதிகளைக் கொண்ட குழு நேரிடை இண்டர்வியூ செய்து, இந்தப் பதவிகளை கிட்டத்தட்ட 15, 20 வருஷ காலமாக நியமித்து வந்து இருப்பதால், அந்த அளவிலே அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள், 15, 20 வருஷங்களாக அனுபவம் பெற்றிருக்கிற நாங்கள், ஏன் மீண்டும் தாய்த் துறைக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதனால், அதைப்

பரிவோடு பரிசீலித்து, அவர்களை எல்லாம் பர்மனெண்ட் செய்து விடலாம், எதிர் காலத்தில் ஏற்படுகிற பதவிகளைப் பொறுத்த வரையில் 5:1 என்ற விகிதத்தில், 5 பேர்கள் வழக்கறிஞர்கள் இருந்தால் ஒருவரை நிர்வாக பகுதியில் சட்டம் அல்லது நீதி துறையிலே இருந்து தேர்ந்தெடுத்து, அதுவும் சட்டம் தெரிந்தவர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து, அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே தடை ஆணை பெறப்பட்டது. உயர்நீதி மன்றம் கூட தற்போது ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கிறது.

அரசுக்கு அத்தகைய நியமனம் செய்வதற்கான அதிகாரத்தைப் பற்றி It has been made clear by His Lordship Justice Ramanujam. நான் அதை தெளிவாக்க விரும்புகிறேன். காரணம், The power of the Government to invoke Rule 28 is not contrary to any other rule. ஜஸ்டீஸ் இராமானுஜம் அவர்களால் அது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. That means the Government has got the power to regularise not withstanding any other rule to the contrary provided her exercise the power in a case which is just and equitable that is in a case where the non-exercise of the power will be unjust and unequaitble.

However, while acting under rule 38, the Governor has to naturally keep in mind Art. 234 and 235 of the Constitution and the interests of not only the individuals concerned but also the interests of the judicial administration as well and also the interests of the other feeder categories whose rights are likely to be affected by exercising the power of realxation. என அவர்கள் நியமனம் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆனாலும் கூட, Rule 38 is subject to Art. 234 and 235 which contemplates consultations with the State Public Service Commission and the High Court. என நீதிபதி இராமானுஜம் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி, "........the interests of the judicial administration as well and also the interests of the other feeder categories whose rights are likely to be affected by exercising the power of relaxation. Rule 38 is subject to Art. 234 and 235 which contemplates consultations with the State Public Service commission and the High Court. என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிற காரணத்தால், அதை உயர்நீதிமன்றத்தோடு சர்வீஸ் கமிஷனிடமும் கலந்து கிட்டதட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாக தீராப் பிரச்சினையாக இருக்கிற அந்தப் பிரச்சினைக்கு, புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, விரைவிலே ஒரு தீர்வை காண நடவடிக்கை எடுத்து வருகிறது. உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள் இந்த முறையில் நடவடிக்கை எடுத்து விரைவிலே முடிவை தெரிவிக்க



இசைவை தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தீர்ந்தவுடன் தற்போது பல இடங்களில் நீதிபதிகள் இல்லை இல்லை என்று சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டும் நீங்கப்படக் கூடிய அளவுக்கு, அவ்வளவு நல்ல முடிவினைத் தரும். டிஸ்ட்ரிக் முன்சீப் கோர்ட்டுகளைப் பொறுத்த வரையில் தற்போது சர்வீஸ் கமிஷன் மூலமாக அவற்றை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு ரவீந்திரன் பேசுகிற போது ஒன்றைச் சொன்னார்கள். 1967-க்கு பின்னாலே வந்த நோயோ என்னவோ தெரியவில்லை. அரசு வழக்கறிஞர்கள் நியமனம் என்பதில் அரசியல் கண்ணோட்டத்தோடு நடத்தப்படுகிறது என்று சொன்னார்கள். இது தவறு என்று நான் சொல்ல விரும்புகிறேன். உயர்நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதியிலிருந்து, அரசு வழக்கறிஞரிலிருந்து யாருமே ஆளும் கட்சிக்கு தொடர்பானவர்களை நாங்கள் போடவில்லை என்பதே இன்றைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். ஆனால் 1967-க்கு முன்னாலே இருந்த நிலை அப்படியில்லை என்பதை அவையில் இருக்கிற உறுப்பினர்கள் அறிவார்கள் என்பதற்காக அதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பில்டிங் அமௌண்ட். அரசு ஒதுக்கிய பணத்தை நெல்லைப் பகுதியிலும், ஈரோடு பகுதியிலும் சரண்டர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதை தவறு என்று நான் கருதவில்லை. காரணம் பணம் ஒதுக்கப்படுகிறது. பி.டபிள்யூ.டி.யில் பணி ஒப்படைக்கப்படுகிறது. பல காரணங்களால், ஒரு வேளை நல்ல முறையில் டெண்டர் அரசுக்கு நஷ்டமில்லாத அளவிற்கு வராத நிலையில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். அல்லது மற்ற காரணங்களால் தாமதப்பட்டிருக்கலாம். அப்படி தாமதம் ஏற்படுகிற போது அந்தப் பணம் சரண்டர் தான் செய்யப்படும். அந்தப் பணம் சரண்டர் செய்வதால் எங்கோ சென்றுவிடாது. அது அரசுக்குத்தான் வருகிறது. மீண்டும் அந்தப் பணி தொடங்கப்படுகிற போது அந்தப் பணம் தரப்படும் என்பதற்காக இதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, நீதிபதிகளுடைய ஊதிய உயர்வைப் பற்றி சொன்னார்கள். அடுத்த மாத வாக்கில் பாரதப் பிரதமர் அவர்கள் முதலமைச்சர்கள், தலைமை நீதிபதிகள், சட்ட அமைச்சர்கள் அடங்கிய ஒரு மாநாட்டைக் கூட்டுகிறார்கள். நீதித் துறையில் உள்ள குறைபாடுகள் என்ன ? நீதித் துறை எந்த அளவிற்கு மக்களுக்கு நல்ல பலனை அளிக்க மாற்றங்களை பெற்றாக வேண்டும். நீதிபதிகள் மீது வருகிற குற்றச்சாட்டுக்களை எல்லாம் எப்படி வராத அளவிற்கு இந்தத் துறையில் Administrative Parity in Judicially எப்படி கொண்டு வருவது ? அதைப் போலவே, இண்டிபெண்டன்சி ஆப்

ஜுடிஷியரி மேலும் வலுப்படுத்தப்படுவது எப்படி என்பதையெல்லாம் ஆராய அந்த மாநாட்டை கூட்டியிருக்கிறார்கள். அது அந்த வகையில் பலனுள்ளதாக இருக்குமென்று நம்புகிறேன். அதிலே நீதிபதிகள் ஊதிய உயர்வை, பெர்குசிட்ஸ் அண்ட் அலவன்சஸ் என்று சொல்லக்கூடிய உயர்வு குறித்தெல்லாம் ஆலோசனை சொல்லப்படவிருக்கிறது. மத்திய அரசு நீதிபதிகளுக்கு, தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்திலிருந்து, கீழே இருக்கிற ஜுடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் வரையில் ஊதிய உயர்வு, பெர்குசிட்ஸ் அண்ட் அலவன்சஸ் அதிகரிப்பு மற்றும் அவர்களுக்கு இருப்பிட வசதி, வாகன வசதி, போன்றவைகளை நிர்வாகத் துறையில் உள்ளவர்களோடு ஒப்பிடாமல், அவர்கள் நல்ல முறையில் பராமரிக்கிற போது தான் நீதிபரிபாலனம் செவ்வனே நடக்க ஏதுவாகஇருக்கும். The Democracy itself can be Preserved and protected என்ற முறையில் பிரச்னையை அணுக வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது. மாநில அரசும் அந்த உணர்வோடு ஒன்றுகிறது. விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து கோடை விடுமுறையை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கொள்கை அளவிலே கோடை விடுமுறையை சபார்டினேட் சிவில் ஜுடிசியரிக்கு எடுக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்தது. ஆனால் உயர் நீதிமன்றம் அதற்கு இன்னும் இசைவு தெரிவிக்காமல் இருக்கிறது. சிட்டி சிவில் கோர்ட் சட்டத்திற்கு தக்க திருத்தத்தைக் கொண்டு வந்து அதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். உயர்நீதிமன்றத்தைக் கலந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமென்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, Directorate of Prosecutions is a necessity. என்பதை எடுத்துச் சொன்னார்கள். அரசினுடைய வழக்கறிஞர்கள் ஒருங்கிணைந்து செயல்பட, அந்த நிர்வாகம் செவ்வனே நடைபெற The lapses then and there should be checked. For that the Directorate of Prosecutions is inevitable. That is my feeling. விரைவிலே அரசு நடவடிக்கை எடுத்து,. The Directorate of Prosecutions would be brought into force என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

விபச்சாரத்தைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அதற்கு ஏற்கனவே இருக்கிற ,குண்டாஸ் ஆக்ட்' Preventive Detention Act, I.P.C. Cr.P. C. மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே





இருக்கிற ஐ.பி.சி. மற்றும் கிரிமினல் புரசிஜர் கோடில் நடவடிக்கைகள் போதிய அளவிற்கு எஃபக்ட்டிவாக இல்லாத காரணத்தால் இந்தப் பெரிய தீங்கு குறிப்பாக தாய்க்குலத்திற்கு பெரிய பங்கமாக, தமிழகத்தில் மட்டுமல்லாமல் பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகிறது.

(இரவு 7-00)

இந்தியத் துணைக் கண்டத்திலே முதன் முறையாக 'பிரிவன்டிவ் டிடென்சன் ஆக்டைக் கொண்டு வந்து, பெண்களுக்கு ஏற்படுகிற அந்த இழிவை, பெண்கள் கடத்தப்பட்டு, இதுபோன்ற நிலைக்கு தள்ளப்படுவதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க போதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறோம். இந்தச் சட்டத்தை மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி, பெண்கள் கட்டாயமாக அந்த விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற கொடுமையிலிருந்து. பெண்கள் கடத்தப்பட்டு, விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற அந்தக் கொடுமையிலிருந்து காக்க, மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க அண்மையில் கூட புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்டரஸ்ட் ஆன் சிவில் டெபாசிட்டைப் பொறுத்த வரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் சொன்னார்கள். அதை உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களோடு கலந்து என்ன தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை எடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

அதைப் போலவே, செக்சன் 7-சியை மாற்ற வேண்டும் என்பதற்காக Shengottah Taluk and the entire Kanyakumari District hav been discriminated and it is an anomaly என்று எடுத்துச் சொன்னார்கள். அதை மாற்ற அரசு கட்டாய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் பல கோரிக்கைகளை அவ்வப்போது சொல்லியிருக்கிறார்கள். அனைவருக்கும் பதில் சொல்வதற்கு நேரமில்லாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்ற உத்தரவாதத்தை தந்து, இத்தோடு என்னுடைய விளக்கத்தை முடிக்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு ஒரு விவரத்தைத் தருவதோடு, அதற்கான விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். பரோல் விடுமுறையில் பாரபட்சம் இல்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு குறிப்பாக ஒரு விஷயத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட

விரும்புகிறேன். திருஞானம், கைதி எண் 5322 என்பவர் 25—3—1985 அன்று தன்னுடைய தாயார் இறந்துவிட்டார்கள் என்று சொல்லி, தந்தி வந்திருக்கிறது, வேலூர் மத்தியச் சிறையில். ஆனாலும் அவருக்கு பரோல் விடுமுறை மறுக்கப்பட்டிருக்கிறது—அதற்கான ஒரே காரணம்—2—4—1985-லே சிறையில் நடைபெற்ற தடியடியை எதிர்த்து ஹைகோர்ட்டிலே ரிட் மனு தாக்கல் செய்தவர்களில் அவரும் ஒருவர் என்ற ஒரே காரணத்தால், அது மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதை கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்வதோடு சிறையில் நடைபெற்று இருக்கிற, ஊழல் முறைகேடுகள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாரிபிகேசன் தான் கேட்க வேண்டும். மீண்டும் மானியத்திலே பேசுவது போல் பேசக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கைதிக்கு பரோல் மறுக்கப்பட்டிருந்தால், அதை விசாரித்து, கண்டிப்பாக அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுப் போராட்டங்களுக்குப் பிறகு, இந்த அரசு முத்திரைக் கட்டணம், அதாவது கோர்ட் பீஸ்-லே ஒரு குறைவு ஏற்படுத்தும், என்று நல்லதொரு செய்தியை அறிவித்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் கூட, அறிவித்த இந்தக் கட்டணங்களிலே 7½ சதவீதத்திலேயிருந்து தொடங்கி, 1 சதவீதம் வரைக்கும் என்று அந்த வழக்குகளினுடைய தொகை கூடக்கூடத்தான் இது குறைந்து கொண்டு வருகிறது. இதிலே அதிகமாக பாதிக்கப்படுபவர்கள், என்னுடைய முதல் பேச்சிலே சொல்லியபடி ஏழை எளியவர்கள் தான். ஆகவே முதல் 50 ஆயிரம் வரை 5 சதவீதம் என்று அரசு இப்போது கொண்டு வருமா ? அல்லது இதுபோன்று கொண்டு வருவதற்கு முன்னாலே, செலக்ட் கமிட்டி ஆப் தி ஹவுஸ், அல்லது இந்த மன்றத்தினுடைய முக்கியமான சட்ட உறுப்பினர்களை அழைத்து, இந்த அரசு விவாதித்து, ஒரு முடிவு எடுக்குமா, என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே சொன்னார்கள். The Court Fee is not to be construed as a tax. It is a levy. It should be in consonance with the services rendered. என்ற முறையில்தான் அது விதிக்கப்பட வேண்டும் என்று அரசு இதைக் கொண்டு வந்திருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய் இருப்பவர்களுக்கு 7½ சதவீதம் என்று சொல்கிறபோது It is just to meet





cut the expenditure thereto" என்ற முறையில் மத்திய அரசினுடைய சட்ட அமைச்சராக இருந்த ஜகன்னாத் கௌஷல் அவர்கள் கூறிய ஆலோசனைதான். காங்கிரஸ் ஆளுகின்ற எந்த மாநிலமும் - உண்மையைச் சொல்லுகிறேன்—அதை ஏற்கவில்லை ஆனால் தமிழகம் மட்டும் தான் இந்த கோர்ட் பீஸ் ரேசனலைஸேஷன் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு கூறிய பரிந்துரையை ஏற்று, அதைவிட சற்று அதிகமான சலுகைகளைத் தருவதற்குகூட கொண்டு வந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத் தொடரில் உறுப்பினர்கள் காட்டிய அதிக ஆர்வத்தின் காரணமாக முதன் முதலாக மாலை நேரத்திலே சட்டமன்றத் தொடரை வைத்து, உறுப்பினர்கள் அதை அலுப்பாகக் கொள்ளாமல் இருப்பதற்காக தேநீரும் ஏற்பாடு செய்த, உங்களுக்கு நன்றி தெரிவித்து, இன்னும் சிறிது நேரம் நீண்டால், விருந்துக்கும் ஏற்பாடு செய்வீர்கள் என்ற நம்பிக்கையை வைத்து, அமைச்சர் அவர்களிடத்திலே மூன்றே மூன்று விஷயங்களுக்கு விளக்கங்கள் கேட்க விரும்புகிறேன்.

முதலாவதாக நம்முடைய மாநிலத்திலேயே இந்த மாநிலத்தினுடைய வரலாறு, பண்பாடு, வாழ்க்கை முறை எல்லாம் நன்கு தெரிந்த நீதித் துறையில் உயர் பொறுப்புக்கு வந்தவர்கள், அவர்களுடைய உத்தியோகத்தினுடைய இறுதி கட்டத்தில் அவர்களுடைய ஆர்வமும், அனுபவமும் அவர்கள் உணர்ந்த பண்பாடும் இந்த மாநிலத்திற்குப் பயன்படுத்தப்படாமல் இன்னொரு மாநிலத்திற்கு அனுப்பப்படக்கூடிய தன்மையை மத்திய அரசு பின்பற்றி வருவதை இந்த மாநில அரசு தன்னுடைய கொள்கையாக ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்தி வருகிறதா அல்லது அதிலே வேறு ஒரு கருத்து கொண்டு அந்த கருத்தை வலியுறுத்தக்கூடிய முறையில் இந்த சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப விரும்புகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் குவிந்து இருக்கக்கூடிய வழக்குகளுடைய எண்ணிக்கையைப் பற்றி குறிப்பிட்டுக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தனை நீதிபதிகள் நியமனம் செய்ய வேண்டும் என்பதையும் சொல்லிக் காட்டினார்கள். இதிலே இத்தனை காலம் வரையில் மெத்தன போக்கு கடைப்பிடிக்கப்பட்டதற்குக் காரணம் என்ன என்பதை நான் கேட்பதற்கு முன்னால் அது விரைவில் அவர்களை நியமனம் செய்யப்படும் என்று தெரிவித்து இருக்கக்கூடிய காரணத்தால் இப்படிப்பட்ட நீதிபதிகளை அந்த பொறுப்புகளில் போடும்போது, 2 ஆண்டுகளுக்கு மூன்பு உயர்நீதி மன்ற நீதிபதியாக பணியாற்றிய பெருமைக்குரிய திரு பக்கீர் மூகமது அவர்கள் ஹஜ்க்கு சென்ற இடத்தில் இறந்து விட்ட 2 ஆண்டுகளுக்கு பிறகும் கூட

அந்தப் பொறுப்பு நிறைவேற்றப்படாமல் இருக்கக்கூடிய இந்த நிலையையும் நீதித் துறையில் முஸ்லீம் சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டிய நியாயமான பிரதிநிதித்துவம் காலப்போக்கில் குறைந்து வரக்கூடிய இந்த குறைப்பாட்டை நீக்கக்கூடிய முறையில் நியமிக்கக்கூடிய உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒரு முஸ்லீமை நியமிப்பதற்கு இந்த அரசு பரிந்துரைக்குமா என்பதையும் அறிய விரும்புவதோடு, சிறைச் சாலைகள் எல்லாம் சித்தரவதை சாலைகளாக இல்லாமல் சீர்திருத்தச் சாலைகளாக மாற்ற வேண்டும் என்ற விழுமிய எண்ணத்தோடு இன்றைய மத்திய சிறைச் சாலையை வேறு இடத்திற்கு திறந்தவெளிச் சாலையாக மாற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டு வரக்கூடிய அந்த கருத்துக்கு வடிவம் தரத்தக்க முறையில் விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதையும் அறிய விரும்புவதோடு, கடைசியாக மாவட்ட நீதிபதிகளுக்கு தொலைபேசி வசதி செய்து தருகிறோம் என்ற வாக்குறுதியை தந்த அரசு அது விஷயத்தில் கவனம் செலுத்தும் என்று அவர்கள் கோடிட்டுக் காட்டி இருந்தாலும் அவர்களுடைய தீர்ப்புகளை எல்லாம் அவர்கள் பதிவு செய்வதற்காக டேப் ரெக்கார்டர்கள் தருவதைப் பற்றி என்ன முடிவு எடுக்க இருக்கிறீர்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பெரியவர் அவர்கள் கேட்ட விளக்கங்களில் முதலாவதாக உயர்நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி பொறுப்பைப் பற்றி சொன்னார்கள். இதிலே மாநில அரசு மிகத் தெளிவான கொள்கையை கடைப்பிடித்து வருகிறது. ஏற்கனவே, அவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அது குறித்து தெரிவித்து இருக்கிறார்கள். மத்திய அரசுக்கு இது பற்றித் தெளிவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் தான் தமிழகத்தினுடைய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்பதை முன்னாள் பிரதமருக்கும், பின்னரும் வலியுறுத்தி நாம் எழுதியிருக்கிறோம். தொடர்ந்து இந்தக் கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

அடுத்து, இன்னும் கூட ஒரு நிலை ஏற்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாரத துணைக் கண்டத்தில் எங்கேயும் தலைமை நீதிபதி பதவி இல்லாத நிலை வந்து விடுமோ என்ற நிலை கூட ஏற்பட்டது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக மத்திய அரசுக்கு அவர் எழுதிய பிறகு தான் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் பாரதத்தினுடைய ஏதோ ஒரு பகுதிக்காவது தலைமை நீதிபதியாக வரக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.



உயர்நீதிமன்றத்தினுடைய காலி இடங்களைப் பொறுத்த வரையில் நிரப்பப்படுவதில் மெத்தனம் இல்லை. நாங்கள் சற்று அதி வேகமாக செயல்பட்ட காரணத்தால் தான் தாமதம் ஏற்பட்டுவிட்டது என்று கூட நான் கருதுகிறேன். மாண்புமிகு பெரியவர் அவர்கள் சொன்னது போல ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு நீதித்துறையில்—மாண்புமிகு மறைந்த பக்கிரி முகமது அவர்கள் இடத்தை காலி செய்கின்ற போது உங்களுடைய கோரிக்கையை கவனிக்க வேண்டும் என்று சொன்னீர்கள்.—ஈக்விடபில் டிஸ்டிரிபியூஷன் என்ற முறையில் சட்டரீதியான நடைமுறைக்கு நீதிபதிகள் நியமிப்பதில் கொண்டு வர முடியாது என்றாலும் கூட ஓரளவுக்கு பாரதத்தில் எல்லா மாநிலங்களில் கடைப்பிடிக்கின்ற நிலைமை தமிழகத்திலும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை மத்திய அரசிடத்திலே நாம் சொல்லி வருகிறோம்.

(இரவு 7–10)

தலைமை நீதிபதி அவர்களிடமும் சொல்லி வருகிறோம். அதிலே தான் சில பிரச்சினைகள் எழுந்தன. தற்போது பெயர்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

அதைப் போலவே, சிறைச்சாலையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு பெரியவர் அவர்கள் சொல்கின்றபோது, சொன்னார்கள். புழல் பகுதிக்கு மாற்றப்படுகின்ற சிறைச்சாலைப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. விரைவிலே அந்தப் பகுதிக்கு சென்னை மத்திய சிறைச்சாலை மாற்றப்படும் என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன்.

டேப் ரிக்கார்டர்கள். மாவட்ட நீதிபதிகளுக்கு மட்டுமல்ல. நீதிமன்றங்களினுடைய பல்வேறு கட்டடங்களிலே இருக்கின்ற நீதிபதிகளுக்கும்—மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் கூட பேசும்போது சொன்னார்கள். Tape Recorder will solve a lot of problems என்பதை அரசு உணர்கிறது—பல கட்டடங்களில் தந்து இருக்கிறோம். எல்லாக் கட்டடங்களிலும் அதைத் தருவதற்கு அரசு ஆய்ந்து தக்க நடவடிக்கையை விரைவில் எடுக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைச் சிறைச்சாலையிலே நடந்த சில சூழல்கள் சம்பந்தமாக, அது ஏற்கனவே பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது—அரசினுடைய கவனத்திற்கு அது வந்ததா? அதன் மீது விசாரணை நடத்தப்பட்டதா? குற்றவாளிகள்....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்தது எதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள், என்று எனக்குப் புரியவில்லை. ஒரு பத்திரிகையைக் கூடச் சுட்டிக் காட்டினார்கள். அந்தப் பத்திரிகையிலே எழுதி இருக்கின்ற அந்த, 'கான்விக்டை'ப் பொறுத்த வரைக்கும், பரோலில் வெளியில் சென்று, ஓராண்டுக் காலம் தலைமறைவு ஆகிவிட்டார். காவல்துறை கஷ்டப்பட்டு அவரைக் கண்டுபிடித்தது. அது வேறு, ஆனால் அங்கு நடப்பதாகக் கூறிய முறைகேடுகளைப் பொறுத்தவரைக்கும், பத்திரிகையிலே வந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுத்த காரணத்தால், அதற்குப் பிறகு அது வெளியே தெரிந்த பிறகு தான், அந்தப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. சிறைத் துறை அதிகாரிகளிடம் கூட பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் அண்டு ஆண்டி-கரப்ஷன் என்ற டி.வி.எஸ். இடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு சம்பந்தப் பட்டுள்ள அந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவைர்களால் இந்த மாமன்றத்தில் ஒரு வாக்குறுதி அளிக்கப்படுமேயானால், (Assurance given by the Minister in the Assembly) அதை நாங்கள் மனப்பூர்வமாக, மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, அது நடக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கக்கூடிய எங்களுக்கு கடந்த மூன்று முறையாக நிலக்கோட்டையில் ஒரு ஜில்லா முன்சீப் கோர்ட் சாங்ஷன் செய்யப் பட்டது. அது நடந்து விடும், அதை மறுபடியும் ஹை-கோர்ட்டோடு கலந்து ஆரம்பிக்கிறோம் என்று எல்லாம் சொல்லப் பட்டு, இதுவரைக்கும் நடக்கவில்லையே, தயவுசெய்து, இந்த 1985-வது ஆண்டிலேயாவது, அது ஆரம்பிக்கப்படுமா என்பதையும், இங்கே நீதிபதியாக இருந்த மாண்புமிகு வரதராஜன் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று விட்டார்கள். அந்த இடத்திலே ஒரு அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவரைப் போட வேண்டும் என்று படித்தவர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதித்துறையிலே சமுதாயம் வேண்டாம். மூளை வேண்டும். மெரிட் வேண்டும். எனவே, நீதித்துறையிலே கம்யூனிட்டி-யைக் கொண்டுவரவேண்டாம். காரணம், இது ஒருவருடைய லைஃப் அண்டு டெத் பிராப்ளம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திற்கு யார் யாரை எந்த அடிப்படையில் நீதிபதியாக நியமிக்க வேண்டும் என்பதில் மத்திய





அரசு முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள இயக்கம் தான் மத்திய அரசை ஆள்கிற காரணத்தால், அவர்களது அந்தக் கோரிக்கையை மத்திய அரசு பரிவோடு ஏற்கும் என்று நான் நம்புகிறேன். நிலக்கோட்டையைப் பொறுத்தவரைக்கும், ஏற்கனவே நான் சொல்லி இருக்கிறேன். வரவேண்டும்தான். Each Taluk should be provided with a Court என்ற முறையில் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். integration of judiciary என்ற ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து, District-Munsif-cum-Judicial Magistrate என்ற அந்த அமைப்பை மாற்றி ஒவ்வொரு வட்டத்திலும், இப்போது நீதிமன்றம் வரவேண்டும்.

Both Civil and Criminal matters should be attended to under one roof என்ற முறையிலே அதை நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் உங்களது கோரிக்கையை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்க விரைவில் ஆணை இடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்

திருவாளர்கள் டி. ஆர். வெங்கடரமணன், எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,80,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, கு. சுப்பராயன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ், ரூ. 7,96,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (26—6—1985) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை இரவு 7-15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

227. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

126. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985-86 (தமிழ். ஆங்கிலம்).

127. கோரிக்கை எண் 14—தமிழ்நாடு சிறைகளின் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

128. 1977 முதல் 1984 வரை தமிழ்நாட்டில் தொழிலாளர் நல நிர்வாகம் குறித்த புத்தகம் (தமிழ்).



## இணைப்பு I.

(..472-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### மானியக் கோரிக்கை எண். 13.

### நீதி நிர்வாகம் 1985-86.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிர்வகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் பிரிவினின்றும் இது தனித்துச் செயல்படுகின்றது. புதிதாகவும் கூடுதலாகவும் நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி உயர்நீதிமன்றம் பரிந்துரைப்பதின் பேரில் காலந்தாழ்த்தாது அரசு ஒப்புதல் வழங்குவதோடு நீதிமன்றங்களுக்குத் தேவையான இடவசதி உட்பட அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வதன் வாயிலாக தனது பணிகளை ஆற்றுகிறது.

2. நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் பின்வருமாறு :—

13 ஆம் எண் கோரிக்கையும், 'நீதி நிர்வாகம்' தொடர்பான மானியங்களும் இதன்கீழ் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும் :—

(1) உயர்நீதிமன்றம், சென்னை.

(2) நொடித்தவர், சொத்தாட்சியர் உயர்நீதிமன்றம், சென்னை.

(3) சிவில் செசன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட).

(4) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை.

(5) மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.

(6) சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள் (நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு. இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்டிரேட்கள்).

(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

(8) அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

(9) சென்னை, மதுரை. கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் படி செய்து கொள்ளப்படும் மேல் முறையீட்டுகளைக் கவனிக்கும் மேல்முறையீட்டு அதிகார மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள், அந்தந்தத் துறையின் நிதிக்கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு தொடர்புடைய துறைக் கணக்குகளில் பற்று எழுதப்படுகிறது.

3. நீதிமன்றங்கள், அலுவலகங்களிடையே பின்வருவனவற்றைப் பற்றிய செலவு "சாட்டிய செலவினம்" என்றும், "அனுமதிக்கப்பட்ட செலவினம்" என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளது :—

| சாட்டியவை. (1) | அனுமதிக்கப்பட்டவை. (2) |
|---|---|
| 1. உயர் நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர், மூல வழக்குகள் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் பணியாளர் அமைப்பு. மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை, சட்டத் துறை அறிவிப்பாளர்கள் மற்றும் பணியாளரமைப்பு, உதவிப் பதிவாளர், புதுச்சேரி, புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, ஷெரீப், உயர்நீதி மன்றம், சென்னை பணியாளர்கள்). | 1. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செசன்ஸ் நீதிமன்றங்கள். |
| | 2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை. |
| | 3. மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், சென்னை. |
| | 4. குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள். |
| | 5. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை. |
| | 6 அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள். |



| சாட்டியவை. (1) | அனுமதிக்கப்பட்டவை, (2) |
|---|---|
| | 7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம். |
| 2. நொடித்தவர், சொத்தாட்சியரும் அவரது பணியாளரமைப்பும். | 8. முதன்மை பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு, சென்னை. |

4. சென்னை உயர்நீதிமன்றம்.—இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

5. உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள் சொத்தின் மதிப்பு ரூ. 1,00,000-க்கு மேற்பட்டுள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர்நீதி மன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி ஏனைய நீதிபதிகளுக்குப் பணிகளைப் பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி மற்றும் ஒரு தனி நீதிபதி உட்பட 18 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்கள் ஒன்றுக்கு தலைமை நீதிபதி ரூ. 4,000-மும், ஏனைய நீதிபதிகள் ஒவ்வொருவரும் ரூபாய் 3,500மும் ஊதியமாகப் பெறுகின்றனர். நீதிபதிகளின் ஊதியம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக பல அதிகாரிகள் அதாவது, கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப் படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர்.

உயர் நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை நிருவாகத்துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல்முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல்முறையீடுகள் பரிசீலனையாளர் பிரிவு, நேர்முக உதவியாளர் பிரிவு, மொழி பெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, வரவு-செலவுத் திட்டப் பிரிவு மற்றும் ஆவணப் பிரிவு ஆகியவையாகும். புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின்) தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆகியோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக்கொண்டு, பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகையைத் திரும்பப் பெறுகிறது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித் துறையின் நிருவாகத்திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள்.—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப்பட்டுள்ள வழக்குரைஞர் குறித்த செலவுகளையும் வழக்கு தாக்கல் செலவுகள் உட்பட அரசு வழக்குரைஞரால் செய்யப்படுகிற செலவுகளையும் ஏற்க இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகின்றது. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் ஒருவரும், அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் ஒருவரும் உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் ( Goyernment pleader ) தவிர அரசு கூடுதல் வழக்குரைஞர்கள் அறுவரும் ( Additional Gove.nm nt pl adcrs) எட்டு அரசு வழக்கறிஞர்களும் (சிவில்) ஏழு வழக்கறிஞர்களின் (வரைவு) உதவியுடன் எதிர் உறுதிமொழிப் பத்திரம் தயாரிக்க ஒரு சிறப்பு அரசு வழக்கறிஞரும் உள்ளனர். வனத் துறை வழக்குகளுக்காக அரசு வழக்கறிஞர் ஒருவர் உள்ளார்.

தற்போது உள்ள எட்டு அரசு வழக்கறிஞர் பணியிடங்களில் (சிவில்) இரு பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. வரி குறித்த வழக்குகளை கவனிக்க இரு அரசு வழக்கறிஞர்கள் (சிவில்) பதவியிடங்களுக்கு அரசு இசைவு அளித்துள்ளது. இந்த இரு பதவியிடங்களும் இன்னும் நிரப்பப்படவில்லை.

குற்றவியல் வழக்குகளுக்காக குற்றவியல் வழக்கு நடத்துநர் ஒருவரும், ஒரு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர் மற்றும் மூன்று அரசுத் தரப்பு வழக்கறிஞர்களும் (குற்றவியல்



வழக்கு) உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். இவர்கள தவிர, மாநகர அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் ஒருவர் மற்றும் மாநகர அரசு கூடுதல் உரிமையியல் வழக்கு நடத்துநர் இருவர் மாநகர அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர் மற்றும் மாநகர அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர் இருவர் ஆகியோர் மாநகரிலுள்ள சட்டஅதிகாரிகளாவார். அண்மையில் அரசு நான்கு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர் பதவிகளுக்கு அனுமதியளித்துள்ளது. இப்பதவிகள் இன்னும் நிரப்பப்படவில்லை.

வெளியூர்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்கள் அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் மற்றும் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றி வருகின்றனர்.

மாநகரிலும், பிற இடங்களிலும் உள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் (நிலை I, II) மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். இவர்கள் குற்றவியல் நடைமுறை கோவை 25ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழு நேர அரசுப் பணியாளர்களாவர்.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பள வீதம் வருமாறு :—

1. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் நிலை I—ரூபாய் 1,000—60—1,300—70—1,650.

2. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துனர் நிலை II—ரூ. 750—50—1350.

மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் தற்போது துறைத் தலைவர் யாருமில்லை. நிருவாக வசதிக்காக வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டின் கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் சென்னை, காவல் துறை கமிஷனரின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர். குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கான இயக்ககத்தை ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வந்தது. இம்மாநிலத்தில் குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களுக்கான இயக்ககத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பை கொள்கையளவில் அரசு ஏற்றுகொண்டுள்ளது. இந்த இயக்ககம் அமைப்பதற்கான செயற்குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது.

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை II) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் அரசுப் பணி ஆற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக்கபடுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணி பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குரைஞர் தொடர்புரிமைக் கட்டணம் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று வைக்கப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவினம் தற்போது "214-A. நீதி நிர்வாகம்—AH. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்—A.C. அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர்-04. அலுவலக செலவுகள்" என்பதன்கீழ் தற்போது பற்று வைக்கப்பட்டு வருகிறது.

9. 1985–86ஆம் ஆண்டில் "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவுத் தொகை ரூ. 1,05,14,000 என்று மதிப்பிடப்படுகிறது. மேற்சொன்ன செலவில் வெளி யூரிலுள்ள I, II ஆம் நிலை பதவித்தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பளமும், படியும் பணியாளர் களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின்கீழுள்ள சட்ட அதிகாரிகள் (வெளி யூர்) அதாவது I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் செலவு, 1981–82ஆம் ஆண்டு முதல் "AH. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்" என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

10. அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத் தாட்சியர்) சென்னை.—சென்னை, அரசு பொறுப்பு சொத்தாட்சி யர் (பொறுப்பு சொத்தாட்சியர்), மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஒரு அதிகாரியாவார். அவருக்கு உதவியாக, துணை அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) ஒருவர் உள்ளார். அவருடைய சம்பள விகிதம்





ரூ. 750—50—1,350 ஆகும். இவ்விரு அதிகாரிகளும் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், மரணமடைந்தவர்களின் எஸ்டேட்டுகள் ஆகியவற்றை கவனித்து வருகின்றனர். அவர்கள் அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதிமுறைகளுக்கு இணங்கஅவர்களிடம் ஒப்படைக்கப்படும்கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்குத் தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 600—30—750—35—890—40—1,050 என்ற சம்பள விகிதத்தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்று உள்ளது. பட்டயக் கணக்குக் கல்வித் தகுதியுடைய சிறப்பு கணக்கர் பதவி ஒன்றும் இவ்வலுவலகத்தில் உள்ளது.

1985–86ஆம் ஆண்டிற்கு இத் தலைப்பின்கீழ் ரூ. 4,75,000 செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

11. பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.—இம் மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், பெருநகர் தலைமை கூடுதல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட, 25 பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இரு மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இரண்டு நடமாடும் நீதிமன்றங்களின் மாஜிஸ்டிரேட்டுகளாகப் பணியாற்றுகின்றனர், பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்)) இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். பெருநகர் தலைமைக் கூடுதல் மாஜிஸ்டிரேட் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவர். பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்நில் இரண்டு கூடுதல் தலைமைப் பெருநகர மாஜிஸ்டிரேட் பதவிகள் உள்ளன.

இரண்டாம், மூன்றாம், நான்காம், பத்தாம், பதினொன்றாம் பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும், சார்நிலை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவராவர். ஏனைய அனைத்து பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்தோராவர். பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகள் சென்னை மாநகரிலுள்ள காவல் நிலையங்களையொட்டி அதிகாரவரம்பைச் செலுத்துகின்றனர்.

1985–86ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களின் செலவினம் ரூ. 42,34,000 ஆகியிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக எழும்பூர் இரயில்வே நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு

இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இது குறித்து ஏற்படும் செலவு முதற்கண் மாநில அரசால் ஏற்கப் படுகிறது. பின்னர் இச்செலவுத் தொகை இரயில்வே துறையிட மிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

12. மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை.—சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் 29 நீதித்துறை அதிகாரிகள் (10 மாவட்ட நீதிபதிகள், 19 சார்நிலை நீதிபதிகள்) மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் பதிவாளர் ஒருவர் உள்ளனர். மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகர் முழுவதுமாகும், ரூபாய் 1,00,000 வரை பணஞ்சார்ந்த அதிகார வரம்பையும், ரூபாய் 30,000 வரை மேல் முறையீட்டு அதிகார வரம்பையும், சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் கொண்டதாயுள்ளது. சென்னை செசன்சு கோட்டத்தின் ( Division ) செசன்ஸ் நீதிமன்றமாகவும் இந்த மாநகர சிவில் நீதிமன்றம் செயல்படு கின்றது. குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின்கீழ் வழக்கு களை ( Calendar Cases ) விசாரிக்கும் தனி நீதிபதி களுக்கான அதிகாரம், சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகர சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில், 1985–86 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 43, 23,000 ரூபாய் செலவு ஆகு மென்று மதிப்பிடப்படுகிறது.

13. மாவட்டங்களிலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.—மாநிலத் தில் மொத்தம் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம் புத்தூர், தென் ஆற்காடு, இராமநாதபுரம், வட ஆற்காடு, மதுரை (தெற்கு), பெரியார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன் றிலும் கூடுதல் மாவட்ட செசன்ஸ் நீதிமன்றங்கள் அமைந் துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதி மன்றங்கள் இரண்டு உள்ளன. அந்தந்த கோட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செசன்ஸ் நீதிபதிகளாகச் செயல் படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற தனி சட்டங்களின்கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் இந்த நீதி பதிகள் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டத்தில் சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும், தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப் பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள் பக்கத்திலுள்ள மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரணை



செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். இந்த நீதிபதிகள் ரூ. 30,000 வரையிலும் மேல்முறையீட்டு சிவில் அதிகார வரம்பு கொண்டவர்களா யுள்ளனர்.

மேலும், இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட செசன்ஸ் நீதி பதி பதவித் தரத்தில் ஆறு கூடுதல் நீதிமன்றங்களை சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுமதி வழங்கியது. இது தொடர்பான "செலவினம் "214ஏ நீதி நிருவாகம்" என்ற தலைப்பின்கீழ் "AE. குற்ற வியல் நீதி மன்றங்கள்" என்பதன்கீழ் பற்று வைக்கப்படுகிறது.

14. சார்நிலை நீதிமன்றங்கள்.—இம் மாநிலத்தில் 65 சார் நிலை நீதிமன்றங்கள் (Sub-courts) உள்ளன. இவற்றில் கோயம் புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனைவரி மேல் முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும். சார்நிலை நீதிபதிகள் அசல் தரப்பு வழக்குகளில் வரம்பு ஏதுமின்றி பணம் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரமுடையவ ராவார். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதி மன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர் 15,000 ரூபாய் மதிப்புடைய பண வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள மாவட்ட முன்சீப்கள் வழங்கும் தீர்ப்புகளுக் கெதிராக செய்யப்படும் மேல்முறையீடுகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவார். சார்நிலை நீதி பதிகளே செசன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர். மேலும், தற்போது சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 10 ஆண்டுகள் நீதித் துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார்நிலை நீதிபதிகள் மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாகச் செயல்படுகின்றனர் என்பதோடு இந்நடுவர் மன்றங்களின் நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர்.

15. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்.—இம் மாநிலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 132 உள்ளன. அத்துடன், மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட நீதித் துறை மாஜிஸ்டி ரேட்டு நீதிமன்றங்கள் 6-ம் மாவட்ட முன்சீப் மற்றும் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 2-ம் உள்ளன. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து ரூ. 15,000 வரையிலும் பணஞ்சார்ந்த வழக்குகளை விசாரித் துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை மாவட்ட முன்சீப்கள்

பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட முன்சீப் நீதிமன்றமும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பை கொண்டுள்ளன. இவர்கள் ரூபாய் 500 வரையிலுள்ள சிறு வழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றனர். மேலும் இந்த நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய்வோர் ஆகிய பணியாளர்கள் அமைப்பு உட்பட, வெளியூர்களிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக 1984–85 ஆம் ஆண்டில் 6,75,97,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது. இச் செலவில், அதிகாரிகளின் சம்பளம், படிகள், அரசுப் பணி அஞ்சல் வில்லைகள் வீதங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறிப்பிட்ட காலமுறை வெளியீடுகள், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், அறைக் கலங்கள் போன்றவை, உணவுக் கட்டணம், செஷன்ஸ் நீதிமன்றங்கள் முதலியவற்றிற்கும், சாட்சியம் அளிக்க வரும் சாட்சிகளுக்கு வழங்கத்தக்க போக்குவரத்துக் கட்டணம் போன்ற சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

16. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் :—சென்னையில் நான்கு தொழிலாளர் நல நீதிமன்றங்களும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றங்கள் ஆகியவற்றில் நீதிபதிகள், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அரசு அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும், தரப்பினர் தாக்கல் செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும், தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும், முகாம் நீதிமன்றங்களை அமைத்து, அவரவரது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும், கோரிக்கை மனுக்களையும் தீர்த்து வைக்கின்றனர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொடர்பாக ஏற்படும் செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் '' 287. ஏ. தொழிலாளர் நல—வேலைவாய்ப்பு '' தொழிலாளர் நீதிமன்றங்கள் குறித்த செலவினத்தைக் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்



கீழ் பற்றுவைக்கப்படுகிறது. '' 287. ஏ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு—ஏ. தொழிலாளர் ஏபி.—தொழில் உறவு—1. திட்டம் சாராதது—ஏபி.—தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் '' என்ற தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படுகிறது.

சென்னை, தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் தொடர்பாக 1985–86 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 12,52,000 செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

17. சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த தலைமை நீதிபதியே இந்த நீதிமன்றத்தின் நீதிபதியாவார். சார்நிலை நீதிபதி (Sub Judge) பதவித் தரத்தைச் சேர்ந்த 6 நீதிபதிகளும், மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும் உள்ளனர். மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த பதிவாளர் ஒருவர் உள்ளார். இவரே நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். குறிப்பிட்ட சில நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதித்துறை அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்றார். மாநகர சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைத் தலைமை நீதிபதியும், பிற நீதிபதிகளும் செலுத்துகின்றனர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே நடுவர் மன்றமாக V ஆம் நீதிபதி பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை—வாடகை கட்டுப்பாட்டு) சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக VI மற்றும் VII ஆம் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். VIII-லிருந்து XIV-வரையிலான நீதிபதிகள் சென்னை மாநகரத்தின் வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதியும், II, III, IV நீதிபதிகள், மற்றும் VI, VII ஆம் நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாட்டு மேல்முறையீடுகளை விசாரணை செய்வதற்குரிய அதிகாரம் உடையவராவர். சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பாக 1985–86 ஆம் ஆண்டில் ரூபாய் 27,83,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள்—இனாம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு பகிர்ந்தளிக்கும் பணிக்காக திருச்சிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்திலும் உள்ள நடுவர் மன்றம் தொடர்பாக இந்த உள்—சிறு தலைப்பின்கீழான 39,000 ரூபாய் செலவுத் தொகையும் மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

18. மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள்—(i) நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்—இம்மாநிலத்தில் நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன் பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நீதித் துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் தருமபுரி மாவட்டத்தில் கூடுதல், தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகள் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். இந் நீதிபதிகள் தங்களுக்குரிய சம்பளத்தோடு திங்கள் ஒன்றுக்கு 50 ரூபாயை சிறப்பு ஊதியமாகப் பெறுகின்றனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் விதித்துறைகளின்கீழ் மாவட்ட செசன்ஸ் நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள் அந்நீதிமன்றங்களால் மேற்கூறிய நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் போது அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக் கோவையின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்கள்.—நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 20 உள்ளன. இந்த நீதிமன்றங்களில் நீதிபதிகள் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அவர்கள் முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டுக்குரிய அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராக செய்யப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை.

(iii) நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள்.—மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 21, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 3 ஆகியவைகள் உட்பட மொத்தம் 57 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இந்த நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு விசாரிப்பதற்குரிய வழக்குகளை முடிவு செய்வதில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வர்.





(iv) நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள்.—நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 145 உள்ளன. இந்த நீதிமன்றங்களிலுள்ள மாஜிஸ்டிரேட்டுகள், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து முடிவு செய்கின்றனர்.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1985–86 ஆம் ஆண்டில் ரூபாய் 3,62,49,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இவை தவிர, பயணச் சீட்டு இன்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்ய, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்களுக்குரிய செலவு, தொடக்கத்தில், மாநில அரசால் செய்யப்படுகிறது. பின்னர் சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் மூலமாக இரயில்வேத் துறையிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

20. தமிழில் சட்ட இதழ்கள்.—'' தீர்ப்புத் திரட்டு '' என்னும் தமிழ் சட்டத் திங்கள் இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை-2 பதவித் தரத்தில், தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் கூட்டுப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்பாசிரியர்கள். சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், படிதிருத்துபவர், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது, தமிழ் சட்ட இதழ் தலைமைப் பதிப்பாசிரியர், அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள் குறித்த செலவு '' 214A. நீதி நிர்வாகம்—JA. ஏனைய செலவு—AG. சட்ட இதழ் வெளியிடுதல் '' என்னும் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 3,95,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மாதாந்திர

சட்ட இதழ் (தீர்ப்புத் திரட்டு) வழக்குரைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் ஓர் இதழ் ரூ. 5 என்ற மலிவு விலையில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

21. நீதிமன்றக் கட்டிடங்கள்.—உயர்நீதிமன்றக் கட்டிடங்களையும் உயர்நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங்களையும் பராமரிப்பதற்குரிய செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையில் "259. பொதுப் பணிகள்", என்கிற கணக்குத் தலைப்பின்கீழ் காட்டப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ள செலவு ரூ. 8,70,000 ஆகும்.

22. அரசு 1984–85 ஆம் ஆண்டில் பின்வருவனவற்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது :—

(i) தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூரிலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்திற்கு ரூபாய் 0.50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் வழக்குரைஞர் அறைகள் கட்டுதல்.

(ii) விழுப்புரத்திலுள்ள நீதித் துறை சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தில் ரூ. 0.52 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் வழக்குரைஞர் அறைகள் கட்டுதல்.

(iii) நாகப்பட்டினம் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றக் கட்டிடங்களில், ரூ. 1.42 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், அதிக அளவிலான பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்வதுடன் குடிநீர் வழங்கல்.

(iv) ரூ. 32,000 மதிப்பீட்டுச் செலவில், கிருஷ்ணகிரி, தருமபுரியில் மாவட்ட நீதிபதி மாளிகையில் கூடுதலாகக் கார் நிறுத்தும் ஷெட் கட்டுதலும், கிருஷ்ணகிரியிலுள்ள நீதிமன்றக் கட்டிடங்களில் உள்ள கார் நிறுத்தும் ஷெட்களுக்கு சுருள் கதவுகள் அமைத்தலும்.

23. மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல்.—மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்து 1972-ம் ஆண்டிலேயே பரிசீலிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ஆம் பிரிவின்படி உயர்நீதிமன்றத்தினை அமைக்கும் அதிகாரம் மத்திய நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே, இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள வழக்குத் தொடுக்கும் பொதுமக்களின் தேவையினை நிறைவு செய்யும் வகையில், உயர்நீதிமன்றத்தின் ஆயம் அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 93 71ம்





ஆண்டிலேயே மைய அரசுக்கு இம்மாநில அரசு கடிதம் எழுதியது. ஏற்கனவே மைய அரசு மாநகர தலைநகரங்கள் தவிர ஏனைய இடங்களில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்த, அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த் சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றினை நியமித்தது. தமிழக அரசின் மேற்படி கோரிக்கையை மைய அரசு இக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளது. திரு. ஜஸ்வந்த் சிங் தலைமையிலான குழு, 1984 சனவரியில் சென்னை மாநகரத்துக்கு வருகை தந்து இம்மாநில அரசின் பிரதிநிதிகளுடனும், உயர்நீதிமன்றத்தின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியது. இக்குழு, 1984 ஜூனில் தமிழ்நாட்டிற்கு மீண்டும் ஆய்வுப் பயணம் செய்து, கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் வழக்காடு மக்கள், இதில் ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்தது. இக்குழு, 1984 நவம்பரில் மூன்றாவது முறையாகச சென்னை மாநகர் வந்து, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடனும், தமிழக அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் விவாதித்தது. இக்குழுவின் அறிக்கையின்பேரில் மத்திய அரசு இது குறித்து முடிவெடுக்கும்.

24. சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல். (Settingup of a bench of the Supreme Court at Madras).—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின்படி உச்ச நீதி மன்றத்தினை நிறுவுதல், அமைத்தல், அதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை மத்திய நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின்படி, இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்திய தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக் கூடியவாறு டில்லியில் அல்லது வேறு இடம் அல்லது இடங்களில் உச்ச நீதிமன்றம் கூடும். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவதற்கு மைய அரசின் இசைவினைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு மைய அரசைக் கேட்டுக் கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்ச நீதிமன்றத்தின் ஆயம், நீதிபதிகளின் குடியிருப்பு ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் போன்ற தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும் இம்மாநில அரசு, மைய அரசுக்குத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாகச் செயற்குறிப்பு இந்திய தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மைய அரசு 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இம்மாநில அரசுக்குத் தெரிவித்தது. இந்திய தலைமை நீதிபதியின் பரிந்துரை கிடைத்தவுடன் இச் செயற்குறிப்பின் மீது மைய அரசு முடிவு எடுக்கும்.

25. பொது.—தற்போது சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதி மன்றங்கள் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இதுபோன்றே மாநகர் சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாநில சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழும் வரையறுக்கப்பட்டுள்ளது. மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. சார் நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றத்துக்கு நீட்டிக்கப்படுகிறது. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் அதிகார வரம்பு கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் வருவாய் மாவட்டம் முழுவதற்குமாக நீட்டிக்கப்படுகிறது.

குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. நீதித் துறை, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களின் அதிகார வரம்பு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், நீதித் துறை சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பு பல நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், தங்களுடைய வழக்குகளுக்காக தலைமை இடங்களுக்குச் செல்வது கடினமாக இருக்கிறது என்பதால் வழக்குத் தொடுக்கும் பொதுமக்களுக்குத் தகுந்த உதவி அளிப்பதற்காகவும் தலைமை இடங்களில் உள்ள நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று அரசும், உயர் நீதிமன்றமும் கருதுகின்றன. சிவில், குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பை மாநிலம் முழுவதும் ஆய்வு செய்வதற்காக 1970 ஆம் ஆண்டில் அரசால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் குழு, 1973 ஆம் ஆண்டில் தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியது. மேற்சொன்ன குழு புதிதாக 28 சிவில் நீதிமன்றங்களையும், 27 குற்றவியல் நீதிமன்றங்களையும் அமைக்கப் பரிந்துரைத்தது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்து ஆய்வு செய்த இக்குழுவின் பரிந்துரையை, அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு (1975), ஐந்து ஆண்டுகால அளவில், படிப்படியாக அப்பரிந்துரைகளை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொருட்டு, உயர்நீதிமன்றம், சிவில், குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளது.





நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்து குழு பரிந்துரைத்த 28 சிவில் நீதிமன்றங்களில் கீழ்க்காணும் 27 சிவில் நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது :—

1. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

2. சார்நிலை நீதிமன்றம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

3. சார்நிலை நீதிமன்றம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

4. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.

5. சார்நிலை நீதிமன்றம். திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்.

6. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், செஞ்சி, தென்னாற்காடு மாவட்டம்.

7. சார்நிலை நீதிமன்றம், திருவள்ளூர், செங்கற்பட்டு மாவட்டம்.

8. சார்நிலை நீதிமன்றம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

9. சார்நிலை நீதிமன்றம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

10. சார்நிலை நீதிமன்றம், விருத்தாச்சலம், தென்னாற்காடு மாவட்டம்.

11. சார்நிலை நீதிமன்றம், பெரியகுளம், மதுரை மாவட்டம்.

12. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பொன்னேரி, செங்கற்பட்டு மாவட்டம்.

13. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.

14. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், மேட்டூர், சேலம் மாவட்டம்.

15. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

16. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

17. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

18. சார்நிலை நீதிமன்றம், அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

19. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

20. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஜெயங்கொண்டான், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

21. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம், மதுரை (வடக்கு), திண்டுக்கல்.

22. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், போளூர், வடாற்காடு மாவட்டம்.

23. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், பவானி, பெரியார் மாவட்டம்.

24. சார்நிலை நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

25. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்.

26. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நன்னிலம், தஞ்சாவூர் மாவட்டம்.

27. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

26. வள்ளியூரில் மாவட்ட முன்சிப் மற்றும் சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் (நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரையில் எஞ்சிய நீதிமன்றம்) அமைப்பதை பொறுத்தவரையில் ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசு வழங்கிய நிதியுதவியைக் கொண்டு, திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் சப்-டிவிஷனல் நீதித்துறை





மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம் அமைக்க ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில் சிவில் வழக்குகளையும் குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்கும் முறை தற்போது வெற்றிகரமாகச் செயற்படவில்லையென்று தெரிய வந்துள்ளதாக அதிகார வரம்பு குறித்த குழு தெரிவித்ததன் பேரில், சிவில் வழக்குகளை (வள்ளியூர் மாவட்ட முன்சீப் சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றமாக) விசாரணை செய்ய, வள்ளியூர் சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு சிவில் அதிகாரங்களைக் கொடுக்க உயர் நீதிமன்றம் விரும்பவில்லை. வள்ளியூரில் தனியே மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கான செயற் குறிப்பையும் சேரன்மாதேவியில் நீதித துறை சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பையும் உயர் நீதிமன்றம் அனுப்பியுள்ளது. இச் செயற்குறிப்புகளை அரசு தனியே பரிசீலித்து வருகிறது. வள்ளியூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கப்பட்டு விட்டால், சிவில் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில், நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றியதாகிவிடும்.

27. நீதிமன்ற அதிகார வரம்பு குறித்த குழு பரிந்துரைத்த 27 குற்றவியல் நீதிமன்றங்களில், கீழ்க்காணும் 19 குற்றவியல் நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது :—

1. சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திருவண்ணாமலை.

2. சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், பொன்னேரி.

3. சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், பொள்ளாச்சி.

4. சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், கோபிசெட்டிப்பாளையம்.

5. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், சிதம்பரம்.

6. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திருவள்ளூர்.

7. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நிதிமன்றம், கோயம்புத்தூர்.

8. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், குளித்தலை.

9. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திருக்கழுக்குன்றம்.

10. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், பாலக்கோடு.

11. நீதித் துறை கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், குழித்துறை.

12. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், திண்டுக்கல்.

13. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டரேட்டு நீதிமன்றம், உசிலம்பட்டி.

14. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

15. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், இராமநாதபுரம்.

16. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், மேட்டூர்.

17. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், துறையூர்.

18. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், விளாத்திகுளம்.

19. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், அம்பத்தூர்.

28. இராஜபாளையத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் நீதிமன்ற ஆயங்களை அமைப்பதைப் பொறுத்தமட்டில், (நீதிமன்ற அதிகாரம் குறித்த குழு பரிந்துரைத்தபடி இரண்டு குற்றவியல் நீதிமன்றங்கள்), அவ்வாறு நீதிமன்ற ஆயங்களை அமைக்க, 1973 ஆம் ஆண்டு புதிய குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையில் விதித்துறை ஏதுமில்லை. இதன் காரணமாக, ஸ்ரீவில்லிபுத்தூரிலும், இராஜபாளையத்திலும் நீதிமன்ற ஆயங்களை அமைக்க, நீதிமன்ற அதிகாரம் குறித்த குழு கொடுத்த பரிந்துரையைச் செயலாக்க இயலவில்லை. எஞ்சியுள்ள ஆறு குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றத்திடமிருந்து செயற் குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



1. சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், உத்தமபாளையம்.

2. சப்-டிவிஷனல் நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம், தருமபுரி.

3. இளங்குற்றவாளிகள் நீதிமன்றம், கோயம்புத்தூர்.

4. இளங்குற்றவாளிகள் நீதிமன்றம், கன்னியாகுமரி.

5. இளங்குற்றவாளிகள் நீதிமன்றம், திண்டுக்கல்.

6. முகாம் நீதிமன்றம், அரூர்.

29. 1984-85 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் சிவில், நீதிமன்றங்களை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

1. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம், உதகமண்டலம்.

2. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், உதகமண்டலம்.

3. சார்நிலை நீதிமன்றம், பூந்தமல்லி.

4 கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கரூர்.

5. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சேலம்.

30. நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு பதவிகள் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்படலாமென்றும், மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் அவற்றை இணைக்கலாமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்டுகள் சிவில் நீதிபதிகள் ஆகிய இரு வகையினரும், மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாக பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித் துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை அறிந்திருக்க வேண்டியும் மாஜிஸ்ட்ரேட்டுகள் சிவில் வழக்குகள் விசாரணை பற்றி அனுபவம் பெறவும் வகை செய்வதே இதன் நோக்கமாகும். இதனைச் செயல்படுத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. விரைவில் இத் திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

31. உயர் நீதிமன்றம், அசல் தரப்பு, மேல்முறையீட்டு வழக்குகளின் மூலமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களும் '' நீதி நிர்வாகம் '' என்ற தலைப்பின்கீழ் வருவாய் பெறுவது முக்கியமானதொரு தொடர்பான கூறு ஆகும்.

'' 065ஏ, நீதி, நிருவாகம் மற்றும் 030 பி. நீதித் துறை முத்திரைத் தாள்கள் (முத்திரைத் தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதிமன்ற கட்டணங்கள்) '' என்ற தலைப்பின்கீழ் கிடைத்த வருவாய் வரவு, ''214ஏ. நீதி, நிருவாகம்,''

என்பதன்கீழ் 1980-81, 1981-82, 1982-83, 1983-84, 1984-85, 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான செலவு ஆகியவை பின்வரும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1980–81 ஆம் ஆண்டு கணக்குகள். | 1981–82 ஆம் ஆண்டு கணக்குகள். | 1982–83 ஆம் ஆண்டு கணக்குகள். | 1983–84 ஆம் ஆண்டு கணக்குகள். | 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். | 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட திருத்தப்பட்ட மதிப்பீடுகள். | 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| வரவுகள்— | | | | | | | |
| 065ஏ. நீதி நிர்வாகம். | 1,97.58 | 1,95.37 | 2,53.15 | 2,76.94 | 2,70.72 | 3,37.25 | 3,18.68 |
| 030பி. நீதித்துறை மூத்திரைத் தாள்கள். | 5,90.31 | 6,52.26 | 7,74.46 | 7,81.06 | 8,03.00 | 8,28.00 | 8,78.00 |
| மொத்த வரவு. | 7,87.89 | 8,47.63 | 10,27.61 | 10,58.00 | 10,73.72 | 11,65.25 | 11,96.68 |
| செலவு— | | | | | | | |
| 214ஏ. நீதி நிர்வாகம். | 7,58.87 | 8,67.20 | 11,03.91 | 12,66.00 | 13,47.74 | 14,00.74 | 14,27.51 |

32. ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39ஏ பிரிவின்படி, ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும்பொருட்டு, 1977 ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு, உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகளின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக் குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட



ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 18 மாவட்டக் குழுக்களும், 84 வட்டக் குழுக்களும், 314 சட்ட ஆலோசனை நிலையங்களும் உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

33. இக்குழு, ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும், சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக்குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதி மன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவி செய்வதும், மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கை செலவுப் படியைப் பெற்றுத்தர உதவி செய்வதும் இக்குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

34. அரசு அதிகாரிகளும், ஏனையோரும் உள்ள ஒரு நிருவாகக் குழு, சட்ட ஆலோசனை உதவிக் குழுவின் பணிகளை நிருவகிக்கின்றது. மேற்கூறிய குழுவின் செலவிற்காக 1984-85 ஆம் ஆண்டில் மானியமாக ரூ. 37 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு கூடுதல் உதவித் தொகைக்காக அரசை அணுகும்பொழுதெல்லாம் அத்தொகையை அரசு வழங்கும்.

35. நடமாடும் நீதிமன்றங்கள் :—நடமாடும் நீதிமன்றம் ஒன்று 1976 ஆம் ஆண்டிலிருந்து மதுரையில் இயங்கி வருகிறது. பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரிக்க நீதித்துறை 2 ஆம் வகுப்பு மாஜிஸ்டிரேட் தலைமையில் இந்த நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. பெருகி வரும் குற்றங்களைத் தடுக்கவும், குற்றங்களைச் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அரசு மீண்டும் நடமாடும் நீதிமன்றங்களை சென்னை மாநகரில் (இந் நீதிமன்றங்கள் 1977 ஆம் ஆண்டில் செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது) செயலுக்கு கொண்டு வந்துள்ளது. சென்னை மாநகரில் பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்வதற்கு மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக இரண்டு நடமாடும் நீதிமன்றங்களை தேவையான பணியாளர்களுடன் அமைப்பதற்கு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. நடமாடும் நீதிமன்றங்கள் 31–3–1983 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. கோயம்புத்தூரில் உள்ள நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி

மன்றம் (எண் 4) நடமாடும் போக்குவரத்து நீதிமன்றமாக மாற்ற 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

36. உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்குதல் :

உயர்நீதிமன்றத்தின் கீழுள்ள நடுவர் மன்றங்கள், வாடகை குறித்த நீதிமன்றங்கள், வருவாய் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் நீதிமன்றங்களில் 1–2–1982 ஆம் நாளிலிருந்து தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

37. 1984-85 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்.

(1) செங்கல்பட்டில் மாவட்ட நீதிமன்ற நூலகம் அமைத்தல்.

(2) தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டம், நாகப்பட்டினத்தில் மாவட்ட நீதிமன்ற நூலகம் அமைத்தல்.

(3) தமிழ்நாடு தொழில் நடுவர் மன்றம் பயன்படுத்துவதற்கென ரூ. 1·02 இலட்சம் செலவில் ஓட்டுநர் பதவி ஒன்று உட்பட அம்பாசிடர் கார் (குறியீடு 4) ஒன்று வாங்க அனுமதி.

(4) மாவட்டங்களில் அரசு உதவி வழக்குரைஞர் (பதவித் தரம் 1) அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும், ஒரு உதவியாளர் வீதம் 17 உதவியாளர்கள் பதவிகளுக்கு அனுமதி.

(5) திருச்சிராப்பள்ளி, மாவட்ட நீதிமன்ற சுற்றுவளவில் ரூ. 0.37 இலட்சம் செலவில் வெளிப்புறத்தில் மின் விளக்குகள் அமைக்க நிதி ஒதுக்குதல்.

(6) பெரு நகர் குடிநீர் வழங்கல் முக்கியக் குழாயிலிருந்து உயர்நீதிமன்ற சுற்று வளவுக்கு ரூ. 0.45 இலட்சம் செலவில் தனிப்பட்ட குடிநீர்க் குழாயைத் தனியாக அமைக்க வகை செய்தல்.

(7) நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் ஊதிய வீதத்தை ரூ. 600—30—750—35—890—40—1,050-லிருந்து ரூ. 750—50—1,350 ஆகத் திருத்தியமைத்தல்.

(8) சென்னை உயர்நீதி மன்ற நூலகத்திற்கு ரூ. 750—50—1,350 என்ற ஊதிய வீதத்தில் நூலகர் பதவி ஒன்றுக்கும், ரூ. 525—25—675—30—885—35—925 என்ற ஊதிய வீதத்தில் தொழில் நுட்ப உதவியாளர்கள் பதவிக்கும் அனுமதி வழங்குதல்.



(9) சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் XII-லிருந்து XIX வரையுள்ள உதவி நீதிபதிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு அலுவலக உதவியாளர் வீதம் ஏழு அலுவலக உதவியாளர்கள் பதவிகளுக்கு அனுமதி வழங்குதல்.

(10) சென்னை மாநகரிலுள்ள நீதித் துறை அதிகாரிகள் தாங்கள் குடியிருக்குமிடங்களிலிருந்து அலுவலகத்திற்குச் சென்று திரும்ப பயன்படுத்துவதற்காக, ரூ. 6 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு சிறு பேருந்துகள் மூன்று (Telco 807 நான்கு சிலிண்டர்கள் கொண்டது) வாங்குதல், இந்தச் சிறு பேருந்துகளில் பயணம் செய்யும் நீதித் துறை அதிகாரிகளிடமிருந்து வரையறுக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

38. சென்னை உயர்நீதிமன்றத்திலும், சபார்டினேட் நீதிமன்றங்களிலும் உரிமையியல் மற்றும் குற்றவியல் ஆகிய இரு நீதிமன்றங்களிலும் கடந்த மூன்றாண்டுகளாக (1982, 1983, 1984 ஆம் ஆண்டுகளில்), தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், முடிவுற்ற வழக்குகள், முடிவுறாத வழக்குகள் ஆகிய வழக்குகளின் புள்ளி விவரங்கள் குறித்த அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

1982, 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம் சார்நிலை நீதி மன்றங்கள் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட, முடிவு செய்யப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| வழக்குகளின் தன்மை. | 1982 | | | | 1983 | | | | 1984 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர்நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 696 | 2,263 | 378 | 1,884 | 708 | 2,592 | 583 | 2,009 | 918 | 2,927 | 352 | 2,575 |
| 2 உயில் தொடர்பான அசல்தரப்பு வழக்குகள். | 34 | 72 | 20 | 52 | 20 | 72 | 23 | 49 | 20 | 69 | 8 | 61 |
| 3 இல்வாழ்க்கை தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 32 | 83 | 30 | 53 | 45 | 98 | 40 | 58 | 41 | 99 | 37 | 62 |
| 4 நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு. | 29 | 90 | 20 | 70 | 38 | 108 | 3 | 105 | 62 | 167 | 39 | 128 |
| 5 இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் மனு. | 242 | 309 | 248 | 61 | 297 | 350 | 217 | 141 | 243 | 384 | 242 | 142 |
| 6 ஏனைய அசல் தரப்பு மனுக்கள் | 89 | 209 | 74 | 135 | 107 | 242 | 46 | 196 | 107 | 303 | 114 | 189 |
| 7 நிறுவனங்கள்-சங்கங்கள் கலைப்பு தொடர்பான வழக்குகள். | 70 | 212 | 44 | 168 | 63 | 231 | 79 | 152 | 81 | 239 | 50 | 183 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள். | .. | 20 | .. | 20 | .. | 20 | .. | 20 | 42 | 62 | 17 | 45 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. | | 12 | .. | 12 | .. | 12 | 6 | 6 | 12 | 18 | 6 | 13 |
| 10 நொடிப்புநிலை தொடர்பான மனுக்கள். | 47 | 87 | 60 | 27 | 59 | 86 | 50 | 36 | 74 | 110 | 51 | 59 |
| 11 நிறைவேற்று மனுக்கள் .. | 118 | 134 | 93 | 41 | 124 | 165 | 111 | 54 | 121 | 175 | 148 | 27 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள். | 618 | 1,520 | 942 | 586 | 673 | 1,259 | 802 | 457 | 836 | 1,293 | 613 | 680 |
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள்.. | 140 | 227 | 117 | 110 | 120 | 230 | 54 | 184 | 206 | 390 | 166 | 224 |
| 14 பல்வகை விண்ணப்பங்கள்— | | | | | | | | | | | | |
| நொடிப்புநிலை மனுக்கள் தொடர்பான கோப்புகள். | 492 | 651 | 542 | 109 | 408 | 517 | 354 | 163 | 395 | 558 | 446 | 112 |
| 15 முதலாம் மேல் முறையீடுகள் .. | 948 | 4,509 | 522 | 3,987 | 834 | 4,821 | 579 | 4,242 | 872 | 5,114 | 354 | 4,760 |
| 16 அசல் தரப்பு மேல் முறையீடுகள் | 228 | 549 | 128 | 421 | 207 | 628 | 114 | 514 | 219 | 733 | 109 | 624 |
| 17 முத்திரைப்பத்திரம் தொடர்பான மேல் முறையீடுகள். | 120 | 340 | 71 | 269 | 148 | 417 | 99 | 318 | 110 | 284 | 132 | 296 |

| வழக்குகளின் தன்மை. | 1982 | | | | 1983 | | | | 1984 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 18 ரிட் மேல்முறையீடுகள் .. .. | 799 | 2,151 | 618 | 1,533 | 1,281 | 2,814 | 616 | 2,198 | 1,218 | 3,416 | 1,432 | 1,984 |
| 19 இரண்டாம் மேல் முறையீடுகள் | 2,061 | 7,409 | 1,137 | 6,352 | 2,337 | 8,689 | 1,320 | 7,369 | 2,089 | 9,458 | 1,073 | 8,385 |
| 20 ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள். | 864 | 1,999 | 433 | 1,566 | 889 | 2,455 | 249 | 2,206 | 782 | 2,925 | 192 | 2,796 |
| 21 மேல்முறையீட்டு ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள். | 62 | 123 | 17 | 106 | 72 | 178 | 18 | 160 | 78 | 238 | 15 | 223 |
| 22 சிவில்மறுவிசாரணை மனுக்கள் .. | 5,205 | 8,266 | 4,546 | 3,720 | 5,621 | 9,341 | 3,877 | 5,464 | 4,934 | 10,398 | 3,961 | 6,437 |
| 23 வரி வழக்குகள் .. .. | 1,497 | 6,193 | 971 | 5,222 | 1,164 | 6,386 | 713 | 5,673 | 2,200 | 7,873 | 566 | 7,307 |
| 24 வரி வழக்கு மனுக்கள் .. .. | 583 | 845 | 281 | 564 | 564 | 1,128 | 713 | 415 | 502 | 917 | 401 | 516 |
| 25 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படுகிற வழக்குகள். | 3 | 18 | 4 | 14 | 8 | 22 | .. | 22 | 12 | 34 | .. | 34 |
| 26 இல்வாழ்க்கை தொடர்பான வழக்குகள். | 13 | 38 | 9 | 29 | 22 | 51 | .. | 51 | 25 | 76 | 20 | 56 |
| 27 ரிட் மனுக்கள் ... .. | 11,052 | 23,357 | 4,388 | 18,969 | 12,469 | 31,438 | 6,479 | 24,959 | 12,943 | 37,902 | 7,873 | 30,029 |
| 28 உச்ச நீதிமன்ற (இசைவு) மனுக்கள். | 111 | 368 | 195 | 173 | 187 | 360 | 210 | 150 | 144 | 294 | 168 | 126 |
| 29 தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள். | 52 | 602 | 109 | 493 | 53 | 546 | 4 | 542 | 68 | 610 | .. | 610 |
| 30 அவதூறு தொடர்பான மேல் முறையீடுகள். | 5 | 14 | 2 | 12 | 8 | 18 | 4 | 14 | 3 | 17 | 9 | 3 |
| 31 வணிகக்குறி தொடர்பான மேல் முறையீடுகள். | 4 | 14 | 1 | 13 | 2 | 15 | .. | 15 | 11 | 26 | .. | 26 |
| 32 வணிகத்தொடர்பானஇரண்டாம் மேல் முறையீடுகள். | 1 | 3 | 1 | 2 | 1 | 3 | .. | 3 | .. | 3 | .. | 3 |
| 33 பல்வகை வழக்குகள் .. .. | 33,813 | 63,117 | 29,487 | 33,630 | 38,264 | 71,894 | 31,877 | 40,017 | 39,057 | 79,074 | 29,664 | 49,410 |
| மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 12,490 | 30,455 | 13,653 | 16,802 | 10,462 | 27,264 | 12.246 | 15,018 | 10,780 | 25,798 | 11,296 | 14,502 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 23,664 | 45,497 | 24,424 | 21,073 | 25,535 | 46,608 | 24,906 | 21,702 | 24,556 | 46,258 | 26,409 | 19,840 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 555 | 826 | 401 | 425 | 507 | 932 | 536 | 396 | 734 | 1,130 | 580 | 550 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள். | 243 | 422 | 239 | 183 | 274 | 457 | 279 | 178 | 361 | 539 | 311 | 229 |
| 5 நிறைவேற்று நடைமுறைகள் .. | 3,067 | 5,230 | 2,450 | 2,774 | 2,552 | 5,326 | 2,507 | 2,819 | 2,876 | 5,695 | 2,894 | 2,601 |

| வழக்குகளின் வகை. | 1982 | | | | 1983 | | | | 1984 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவுறாமல் இறுதியில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை. | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. | 4,163 | 7,637 | 5,224 | 2,412 | 4,916 | 7,329 | 4,602 | 2,727 | 5,026 | 7,753 | 4,611 | 3,142 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 20,626 | 24,192 | 19,727 | 4,465 | 19,555 | 24,020 | 19,155 | 4,865 | 18,344 | 23,209 | 17,740 | 5,469 |
| 3 ஆணை நிறைவேற்று நடைமுறைகள். | 2,819 | 3,382 | 2,222 | 1,160 | 2,235 | 3,395 | 1,937 | 1,458 | 883 | 2,341 | 1,362 | 979 |
| மாவட்ட நீதிமன்றங்கள். | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 916 | 1,007 | 902 | 105 | 904 | 1,009 | 926 | 83 | 1,660 | 1,751 | 1,515 | 236 |
| 2 சிவில் மேல் முறையீடுகள் .. | 3,961 | 5,876 | 3,891 | 1,985 | 3,906 | 5,891 | 4.042 | 1.849 | 4,072 | 5.921 | 3.869 | 2,052 |
| 3 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் | 1,663 | 2,507 | 1,475 | 1,032 | 1,238 | 2,270 | 1,396 | 880 | 1,766 | 2,646 | 1,706 | 840 |
| 4 சிவில் பல்வகை வழக்குகள் .. | 30,498 | 34.558 | 29,730 | 48.20 | 29,071 | 33,891 | 28,602 | 5,289 | 36,727 | 42,016 | 35,397 | 6,619 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள் | 177 | 293 | 149 | 144 | 202 | 346 | 264 | 82 | 324 | 406 | 286 | 120 |
| தொழில் நிலை தொடர்பான மனுக்கள். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 3 | 3 | 2 | 1 |
| துணை நீதிமன்றங்கள். | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 14,907 | 23,321 | 11,173 | 12,148 | 15,613 | 27,761 | 13,025 | 14,736 | 19,137 | 33,873 | 14,866 | 19,007 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 96,171 | 1,12,806 | 88,545 | 24,261 | 97,881 | 1,22,092 | 94,562 | 27,530 | 1,17,812 | 1,45,342 | 1,09,060 | 36,282 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 5,705 | 9,865 | 5,409 | 4,456 | 5,694 | 10,150 | 5,135 | 5,015 | 5,182 | 10,197 | 5,011 | 5,186 |
| 4 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் | 2,648 | 5,696 | 3,106 | 2,590 | 2,703 | 5,293 | 2,716 | 2,577 | 2,668 | 5,245 | 2,281 | 2,964 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள். | 5,308 | 9,271 | 4,972 | 4,299 | 5,794 | 10,930 | 5,272 | 4,821 | 6,198 | 11,019 | 5,583 | 5,436 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 601 | 1,094 | 533 | 561 | 657 | 1,218 | 560 | 658 | 629 | 1,287 | 610 | 677 |
| மாவட்ட முன்சீப் நீதிமன்றம். | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 1,08,965 | 2,25,035 | 1,11,071 | 1,13,964 | 893,62 | 2,06,592 | 1,00,765 | 1,05,827 | 96,981 | 2,02,808 | 86,954 | 1,15,854 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 3,49,898 | 4,03,673 | 3,04,089 | 99,584 | 30,20,[illegible] | 4,01,660 | 3,00,315 | 1,01,345 | 3,18,408 | 4,19,753 | 3,05,395 | 1,14,358 |
| 3 நிறைவேற்று மனுக்கள் .. | 49,676 | 90,307 | 40,602 | 40,705 | 148,1690 | 88,819 | 48,033 | 40,786 | 47,942 | 88,720 | 45,734 | 42,995 |
| 4 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 195 | 315 | 162 | 1 | 173 | 326 | 180 | 146 | 122 | 269 | 166 | 1022 |

சென்னை உயர்நீதி மன்றத்திலும் (குற்றவியல்) சார் நிலை நீதிமன்றங்களிலும், 1982,
ள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரம்

| வழக்குகளின் தன்மை. | 1982 | | | |
|---|---|---|---|---|
| | இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இந்த ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இந்த ஆண்டு முடிவில் முடிவாகாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| உயர்நீதிமன்றம், சென்னை.— | | | | |
| 1 பிறநீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 6 | 9 | 4 | 5 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 748 | 2,893 | 886 | 2,007 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள். | 876 | 2,240 | 610 | 1,630 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | 12 | 20 | 7 | 13 |
| 5 பல்வகை வழக்குகள் .. .. | 7,268 | 9,929 | 5,796 | 4,133 |
| செசன்ஸ் நீதிமன்றங்கள். | | | | |
| 1 செசன்ஸ் வழக்குகள் .. .. | 2,602 | 4,295 | 2,692 | 1,603 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 4,410 | 6,764 | 4,258 | 2,506 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 1,212 | 1,590 | 951 | 639 |
| பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் நீதி மன்றம். | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் | 2,06,360 | 2,27,771 | 2,07,041 | 20,730 |
| நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள். | | | | |
| 1 மேல் முறையீடுகள் .. .. | 603 | 892 | 782 | 110 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் .. | 4,51,038 | 5,76,596 | 4,72,577 | 1,04,019 |
| 3 இந்திய தண்டனை சட்ட கோவையின் கீழ்வரும் வழக்குகள். | 1,05,121 | 1,58,485 | 97,624 | 60,861 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 5,130 | 6,512 | 4,921 | 1,591 |





1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட முடிவு செய்யப்பட்ட
விசாரணையிலுள்ள

| வழக்குகளின் தன்மை. | 1983 | | | | 1984 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகள். | இந்த ஆண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இந்த ஆண்டு முடிவில் முடிவாகாமலிருந்த வழக்குகள். | இந்த ஆண்டில் தொடங்கப்பட்ட வழக்குகள். | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இந்த ஆண்டு முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இந்த ஆண்டு முடிவில் முடிவாகாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர்நீதிமன்றம், சென்னை.— | | | | | | | | |
| 1 பிறநீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 12 | 17 | 7 | 10 | 11 | 21 | 14 | 7 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 901 | 2,908 | 451 | 2,457 | 888 | 3,345 | 558 | 2,787 |
| 3 குற்றவியல் மறுவிசாரணை மனுக்கள். | 920 | 2,550 | 468 | 2,082 | 934 | 3,016 | 672 | 2,344 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | 14 | 27 | 7 | 20 | 4 | 24 | 8 | 16 |
| 5 பல்வகை வழக்குகள் .. .. | 8,930 | 13,063 | 8,978 | 4,085 | 9,251 | 13,336 | 8,217 | 5,119 |
| செசன்ஸ் நீதிமன்றங்கள். | | | | | | | | |
| 1 செசன்ஸ் வழக்குகள் .. .. | 3,321 | 4,924 | 3,155 | 1,769 | 3,220 | 4,989 | 3,029 | 1,960 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 5,377 | 7,883 | 5,315 | 2,568 | 5,061 | 7,629 | 4,909 | 2,720 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 1,257 | 1,896 | 1,184 | 712 | 1,230 | 1,942 | 1,274 | 668 |
| பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் நீதி மன்றம். | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் | 2,24,997 | 2,45,727 | 2,24,001 | 21,726 | 2,28,578 | 2,50,304 | 2,30,595 | 19,709 |
| நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள். | | | | | | | | |
| 1 மேல் முறையீடுகள் .. .. | 772 | 882 | 634 | 248 | 862 | 1,110 | 823 | 287 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள் .. | 4,60,350 | 5,64,369 | 4,40,313 | 1,24,056 | 4,17,652 | 5,41,708 | 4,67,102 | 574,606 |
| 3 இந்திய தண்டனை சட்ட கோவையின் கீழ்வரும் வழக்குகள். | 1,15,588 | 1,76,449 | 1,13,655 | 62,794 | 1,10,658 | 1,73,452 | 1,08,80 | 6464,647 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 26,468 | 28,059 | 25,654 | 2,405 | 31,981 | 34,386 | 31,887 | 2,499 |

## இணைப்பு II.

472ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு சிறைகள் நிருவாகம்.

### 14 ஆம் எண் மானியக் கோரிக்கை குறித்த கொள்கைக் குறிப்பு.

### 1985–86.

இம்மாநிலத்திலுள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக்கோட்டையில் உள்ள சிறுவர் சீர்திருத்தப்பள்ளி, சென்னை அருகிலுள்ள புழலில் உள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூரிலுள்ள மகளிர் சிறை, சேலம் (ஆடவர்), திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்த வெளிச் சிறை, சேலம் மத்திய சிறையோடு இணைக்கப்பட்டுள்ள பண்ணைச் சிறை, இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றை சிறைத் துறை கவனிக்கிறது. குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவும், இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து நன்கு செயற்படவும் உரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்தி அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். மருத்துவப் பணிகள் குடும்பநலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்த 10 அரசு மறு வாழ்வு இல்லங்களும், சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்த மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமும் சிறைத் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற்குக் கடந்த 1-12-1984 முதல் கொண்டு வரப்பட்டுள்ளன.

1. *சிறைகளின் வகைப்பாடு :*

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள்.

(2) தனிவகைச் சிறை (மாநில மகளிர் சிறை, வேலூர்).

(3) திறந்த வெளிச் சிறைகள்.

(4) தனிக் கிளைச் சிறைகள்.

(5) கிளைச் சிறைகள்.





பொதுவாக, ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்குக் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள், இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். அது போல ஆண் கைதிகளும், பெண் கைதிகளும் தனித் தனியே பிரித்து சிறை வைக்கப்படுகின்றனர். வழக்கமாகக் குற்றம் செய்யும் கைதிகள் (Habitual Prisoners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்தியச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கு மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையில் வைக்கப்படுகின்றனர். இச்சிறை, பெண்களுக்கே உரிய சிறையாகும். பெரும்பாலும் பெண்களே இங்கு அதிகாரிகளாக இருந்து இச்சிறையை நிருவகிக்கின்றனர். இளங் கைதிகளை காவலில் வைத்திருப்பதற்காக, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி இயங்குகிறது. மனநோய்க் கைதிகள் சென்னை அரசினர் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழு நோய் கைதிகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்க தனிச் சிறைக் கூடங்கள் வேலூர் மத்தியச் சிறையில் உள்ளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| (1) மத்திய சிறைகள் .. .. .. | 8 |
| (2) மாநில மகளிர் சிறை .. .. | 1 |
| (3) சீர்திருத்தப்பள்ளி .. .. | 1 |
| (4) தனிக் கிளைச் சிறைகள் .. | 3 |
| (5) கிளைச் சிறைகள் .. .. . | 119 |
| (6) திறந்த வெளிச் சிறை .. .. .. | 1 |
| (7) பண்ணைச் சிறை .. .. .. | 1 |
| (8) ஆடவர் பிற்காப்பு இல்லம் .. | 1 |
| (9) அரசு மறுவாழ்வு இல்லங்கள் .. .. | 10 |
| (10) அரசு காப்பு முகாம் .. .. .. | 1 |

கிளைச் சிறைகள் மற்றும் மத்திய ச்சிறைகளில் மொத்தம் 15,741 பேருக்கு இடவசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேருக்கு (4,000 பெரியவர்கள், 250 சிறுவர்கள் ஆகும்) இட வசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமில்

950 பேருக்கு (ஆண்கள் 770, பெண்கள் 180) இடவசதியளிக்க அனுமதி வழங்கப்பட்டது. சிறைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளநிறுவனங்கள் குறித்த பட்டியலொன்று இணைப்பு IV-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

II: நிருவாகம் :

சிறைத் துறையின் நிருவாக அமைப்பைக் காட்டும் விளக்கப் படம் இணைப்பு I-இல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு II-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

1974–75 முதல் 1983–84 வரையிலான ஆண்டுகளில் சிறைத் துறையின் செலவினங்கள், 1984–85 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1985–86 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1974–75 முதல் 1983–84 ஆம் ஆண்டு வரை சிறைத் துறையின் வரவினங்கள், 1984–85 ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1985–86 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு III-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

'' அ '' வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிளைச் சிறைகளை படிப்படியாக சிறைத்துறையின் நிருவாகத்தில் எடுத்துக் கொள்ளுதல்.

இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகள் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தன. 1977 ஆம் ஆண்டு டிசம்பரில் 10 கிளைச் சிறைகள் சிறைத் துறையின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1–10–1981 ஆம் நாளிலிருந்து, பெரியார், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள 16 கிளைச் சிறைகள் இத்துறையின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள 55 கிளைச் சிறைகள் 20–4–1983 ஆம் நாளிலிருந்து சிறைத் துறையின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் எஞ்சியுள்ள 38 கிளைச் சிறைகள் 19–10–1983 ஆம் நாளிலிருந்து சிறைத்துறையின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு, நிருவாகத்தை மாற்றும் இத் திட்டம், ஏழாம் நிதிக் குழு பரிந்துரைக்கிணங்க செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.



(ஆ) சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி :

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 48 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்குச் சீர்திருத்த முறைகள், சிறை நிருவாகம், உடற் பயிற்சி, ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 6 திங்களாகும். மேலும், 6 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும், 6 முதன்மைத் தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30,15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி சிறைக் கைதிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கிளைச் சிறைகள் அனைத்தையும் சிறைத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொண்டதையடுத்து ஒரே நேரத்தில் அதிகப்படியான காவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக கூறிய பயிற்சிப் பள்ளியில் பயிற்ச்சி அளிக்கப்படுவோரின் எண்ணிக்கையை 100 ஆக உயர்த்துவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) (குற்றவாளிகள்) சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப் பள்ளி :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப் பள்ளி, வேலூரில் 1–10–1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவு, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள், இத்துடன் இணைந்த மற்ற சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள அலுவலர்களுக்கு குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைச் சீர்திருத்தவும், குற்றவாளிகளை சிறந்த முறையில் நடத்தி காலத்திற்கேற்ற மறுவாழ்வு அளிக்கவும், தக்க நடைமுறை நுணுக்கங்கள், வழி முறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதே இப்பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். இப்பயிற்சி அளிக்கப்படும் அதிகாரிகளில் மத்திய சிறைகளில் உதவிச் சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களும் ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள அதற்கு நிகரான பதவித்தர அலுவலர்களும் அடங்குவர். குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளங்குற்றவாளிகள், நன்னடத்தை, சமூக நலப்பணி, சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இம்மாநிலத்தைச் சார்ந்த 78 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இலச் செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும், சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது

## III. திறந்த வெளிச் சிறைகள் :

இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்த வெளிச்சிறை, தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இட வசதி உள்ளது. இதைத் தவிர, சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூரில் திறந்த வெளிச்சிறை அமைந்திருந்த நிலத்தைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்ததைத் தொடர்ந்து, அத் திறந்த வெளிச் சிறை மூடப்பட்டுள்ளது.

திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன.

(அ) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(ஆ) சிறைவாசிகளின் எதிர்காலப் புதுவாழ்விற்காக, அவர்களுக்குச் சரியான முறையில் வேளாண்மையில் பயிற்சியளித்தல்.

(இ) உணவுப் பொருள்கள் உற்பத்தியில் சிறைகள் தன்னிறைவு அடைதல்.

(ஈ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்.

(உ) கைதிகள் குறைந்த அளவே அடைத்து வைக்கப்பட வேண்டும் ; சிறைகளில் அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும் ; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டுவருதல்.

## IV. கைதிகளின் வகைப்பாடும், சிறப்புரிமைகளும் :

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக '' ஏ '', '' பி '' என்ற இரு பிரிவுகள் உள்ளன. கைதிகளின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை, முன்வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு மேற்கண்ட வகுப்புகளைத் தண்டனை வழங்கும் நீதிமன்றங்கள் நிர்ணயிக்கின்றன. சமூகக் தகுதி, கல்வி, பழக்க வழக்கம் ஆகியவற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் கைதிகள் '' ஏ '' வகுப்புப் பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரீகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்ட குற்றத்தை செய்ததற்காக தண்டிக்கப்பட்ட எவருக்கும் '' ஏ '' வகுப்பு அளிக்கப்படமாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும், சிறையில் '' ஏ '' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். '' ஏ '' வகுப்பைச் சேராத இதர சிறைவாசிகள் '' பி '' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.



## V. (அ) (1) உணவு—சாதாரண உணவு முறை :

'' ஏ '' வகுப்புக் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு பின்வரும் நான்கு வகைகளாப் பிரிக்கப்பட்டுள்ளன :—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் :

(2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் :

(3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் :

(4) அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் :

'' ஏ '' வகுப்புக் கைதிகள் தங்களது சொந்த செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். '' பி '' வகுப்புக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர் கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக, பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய், பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

### (2) திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு.

இம்மாநிலத்தில் மத்தியச் சிறைகளில் '' பி '' வகுப்புக் கைதிகளுக்கு 1—9—1982 ஆம் நாளுக்கு முன்னர் பின்வரும் இரு வகை உணவுகள் வழங்கப்பட்டன :

(1) சத்துணவு.

(2) ஓரளவு சத்துணவு.

கைதிகளுக்கான உணவில், கலோரி அளவை அதிகம் அளிப்பதற்கு வகை செய்யும் சத்துணவுத் திட்டம் முதலில் சென்னை மத்திய சிறையில் 1971 ஆம் ஆண்டு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் பின்னர், மதுரை, கோயம்புத்தூர் மத்திய சிறைகளிலும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டது. சத்துணவுத் திட்டத்தின்படி காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், நான்கு நாட்களுக்குப் பிட்டும் அளிக்கப்பட்டு வந்தன. கைதிகளுக்கு மாலையில் தரப்படும் கடலைச் சுண்டலுக்குப் பதிலாக, வேர்கடலைப் பருப்பு வழங்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள மத்தியச் சிறைகளிலும், வேலூரிலுள்ள மகளிர்க்கான மாநிலச் சிறையிலும், ஓரளவு சத்துணவுத்

திட்டம் நடைமுறையில் இருந்தது. இத்திட்டத்தின்கீழ் 'பி' வகுப்புக் கைதிகளுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்லியும், பிட்டும் வழங்குவதைக் கைதிகள் விரும்பாததால், வாரத்தில் நான்கு நாட்களுக்குக் கஞ்சி அல்லது இட்லியும் வழங்கப்பட்டது. மாலையில் கடலைச் சுண்டல் வழங்கப்பட்டது.

'பி' வகுப்புக் கைதிகளுக்கும், சாதாரண ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளவர்களுக்கும், விசாரணைக் கைதிகளுக்கும், தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், ஏழாம் நிதிக் குழு ஒதுக்கீடு செய்த நிதியுதவியைக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவை வழங்க 1982 செப்டம்பரில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 'பி' வகுப்புக் கைதிகள் சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்குத் தற்போது புளிச்சாதம், தயிர் சாதம், தேங்காய் சாதம் போன்ற பல்வேறு உணவு வகைகள் பொருத்தமான கூட்டுக் கறியுடன் வழங்கப்படுகின்றன. இவ்வாறு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மத்தியச் சிறைகளில் நடைமுறையில் இருந்த சத்துணவுத் திட்டத்தை விடச் சிறந்ததோர் உணவுத் திட்டம் அனைத்து மத்தியச் சிறைகளிலும், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநில சிறையிலும், சேலம், கொக்கிரகுளம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மூன்று தனிக் கிளைச் சிறைகளிலும் கோயம்புத்தூர் மாவட்டம் சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச் சிறையிலும் 1-9-1982-லிருந்து செயற்படுத்தப்பட்டிருக்கிறது. சோளத்திற்குப் பதிலாக மில் அரிசி வழங்குவதற்கும் அரசு ஆணை பிறப்பித்தது.

### (3) உணவுக்கான செலவு.

(அ) பல்வேறு வகைக் கைதிகளுக்கு, அனுமதிக்கத்தக்க பல்வேறு அளவு உணவுக்கு கைதி ஒருவருக்கு, நாளொன்றுக்கு ஆகும் தோராயமான செலவு குறித்த விவரம் வருமாறு:—

(1) 'ஏ' வகுப்பு கைதிகள் :

| | ரூ. பை. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதி ஒருவருக்கு .. .. .. .. | 10.40 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதி ஒருவருக்கு .. .. .. .. | 9.70 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதி ஒருவருக்கு .. .. .. | 10.15 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதி ஒருவருக்கு .. .. .. | 9.70 |



(2) 'பி' வகுப்புக் கைதிகள், சாதாரண ரிமாண்டில் வைக்கப்பட்டவர்கள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்குத் திருத்தியமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு' வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு:—

| | அரிசி உணவு. | கோதுமை உணவு. |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர் .. .. .. | 5.40 | 4.75 |

சிறப்புணவு.—பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. மேற்காணும் சிறப்பு நாட்களில் பெண் கைதிகளின் குழந்தைகளுக்கு ரூ. 1 கூடுதல் செலவில் சிறப்புணவு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### (ஆ) உடையும் படுக்கையும்.

"ஏ" வகுப்புக் கைதிகள் சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும், வேலை நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். "ஏ" வகுப்புக் கைதிகள் அவர்களின் உறவினர்களைக் காணும் போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். 'பி' வகுப்புக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். அனைத்து மத்தியச் சிறைகள், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறை, தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச் சிறை ஆகியவற்றில் வைக்கப்பட்டுள்ள 'பி' வகுப்புக் கைதிகளுக்கும்; புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும், உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அரசு அனுமதித்துள்ளது.

### (இ) சோப்பு முதலியன.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் திங்களுக்கொருமுறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு சிகைக்காய்த் தூளும் (Soapnut Powder) சலவை சோப்பும் வழங்கப்படுகிது. கோயம்புத் தூர் மத்தியச் சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது.

நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக் கப்படுகிறார்கள்.

(ஈ) நேர்க்காணலும் கடிதங்களும்.

" ஏ " வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு சமயத்தில் மூவருடன் அரைமணி நேரம் கலந்துரையாட வும் அனுமதிக்கப்படுகிறார்கள். ' பி ' வகுப்புக் கைதிகள் மாதத்திற்கு இரு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

(உ) செய்தித் தாள்களும், இதழ்களும்.

அரசுச் செலவில் ' பி ' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

(1) தினமணி

(2) சுதேசமித்திரன்

(3) அண்ணா

(4) தினத்தந்தி

(5) தினமலர்

(6) இந்து

" ஏ " வகுப்புக் கைதிகள் தங்களது சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக் கொள்வ தற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புக் கைதி களும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்தி ரிகைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, கைதிகளின் பயனுக்காக நல்ல கல்வித் தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்கு நரைக் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியல் ஒன்று அவசியமேற்பட்டால் அவற்றை வாங்குவதற்குச் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பப் படுகிறது.



(ஊ) இதர சலுகைகள் :

" ஏ " வகுப்புக் கைதிகள் மேசை, நாற்காலி, கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும் அருந்து வதற்கும் தேவைப்படும் கலன்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும், அனுமதிக்கப்படு கிறார்கள். இதற்கு முன் சிறைத்தண்டனை அடையாத, வழக்கமாகக் குற்றம் செய்யாத சிறை மருத்துவ மனையில் இருக்கும் கைதிகள் மருத்துவ ஆலோசனையின்பேரில், சிறை மருத்துவ மனையில் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க சிறைக் கண்காணிப்பாளரின் விருப்பத்தின் பேரில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் கைதிகள் அவர் களுடைய நன்னடத்தையைப் பொருத்தும், அவர்கள் அனு பவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவுக் காவற்காரர்கள் (Convict Night Watchmen ) மேற்பார்வை யாளர் (Convict Overseers) காவலர்கள் (Convict Wardens) என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

(எ) பொழுது போக்கு வசதிகள் :

ஞாயிற்றுக்கிழமைகள், சிறை விடுமுறை நாட்களில் மத்தி யச் சிறைகளிலுள்ள எல்லாக் கைதிகளும், கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூரி லுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைவாசிகள் வளைபந்து (Tenniket) விளையாடவும், அனுமதிக்கப்படு கின்றனர். ஆழ் நிலை தியானமுறை: அனைத்து மத்திய சிறைச் சாலைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக் கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. சென்னை யிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தவும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சென்னை மத்தியச் சிறையி லுள்ள கைதிகள் இத்திட்டத்திற்கு அளிக்கும் வரவேற்பினைப் பொறுத்து இதனை இதர சிறைகளுக்கும் விரிவு படுத்தப்படும்.

VI கைதிகளுக்கான செய்தொழிலும், சிறைகளில் தொழிற்சாலை களும் :—

கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகள் சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். கைதிகள் விடுதலை யடைந்த பின்பு அவர்களுக்கு புது வாழ்வு கிடைக்க வகை செய் வதே அதன் நோக்கமாகும். எனவே, பயனில்லா வேலை உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க் கப்படுகின்றன. சிறைவேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளாக பிரிக்கப்

பட்டுள்ளன. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப்பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல், மற்றும் பினைல் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. கைதிகள் தங்களது விடுதலைக்குப்பின் தங்களை சொந்த தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் நவீன வேளாண்மை முறைகள், பால்பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்தியச் சிறையில் நெசவுப் பிரிவு, சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. இத்தொழிற்சாலைப் பிரிவுகள் 1977—79-ல் மத்திய அரசின் உதவி பெற்று நவீனப்படுத்தப்பட்டுள்ளன. மத்தியச் சிறைகள், வேலூர் மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி, புழலிலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் வாழ்க்கைத் தொழில்களின் பட்டியல் இணைப்பு V-ல் குறிக்கப்பட்டுள்ளது.

எளிய சிறு தொழில்கள் : —தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரைக்கிணங்க மத்திய அரசு வழங்கிய நிதி உதவியிலிருந்து எட்டு மத்தியச் சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் பின்வரும் எளிய சிறு தொழில்களைத் தொடங்கவும், அவற்றில் சிறைக் கைதிகளுக்கு பயிற்சி அளிக்கவும், அரசு ஏற்பளித்துள்ளது :—

(1) செங்கல் உற்பத்தித் தொழில் :

(2) குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல் ;

(3) எளிய மின் இணைப்புப் பயிற்சி ;

(4) வண்ணம் பூசுதல் (பெயர்ப்பலகை எழுதுதல் உட்பட);

(5) சைக்கிள் பழுது பார்த்தல்.

இதுவரை இத்தொழில்கள் கோவை மத்தியச் சிறையைத் தவிர்த்து, இதர மத்தியச் சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளியிலும், தொடங்கப்பட்டிருக்கின்றன. கோவை மத்தியச் சிறையிலும், இத்தொழில்கள், விரைவில் தொடங்கப்படும். இங்கு உள்ளூர் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் தகுதியுள்ள தொழில் நுட்பப் பணியாளர் கிடைக்கப்பெறாததால் இப்பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாநிலத்திலுள்ள இதர வேலை வாய்ப்பு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.



சிறைகளில் தொடங்கப்பட்டுள்ள எளிய சிறு தொழில்களைக் காட்டும் பட்டியல் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொழில்களில் பயிற்சி பெற்ற சிறைவாசிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் செய்யலாம். சிறைவாசிகள் கீழ்க்காணும் வீதங்களில் பணிக்கொடை பெறத் தகுதியுள்ளவர்களாவார்கள்.—

| (1) | | பணிக்கொடையின் வீதம் (ஒரு திங்களுக்கு). (2) |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 1. சிறைவாசி இரவுக் காவலர்கள் | .. | 0.50 |
| 2. சிறைவாசிகள் மேற்பார்வையாளர்கள் | | 1.00 |
| 3. சிறைவாசிகள் காவலர் | .. | 2.00 |

அனைத்து மத்தியச் சிறைச் சாலைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், தற்போது கைதிகள், ஊதியம் ஈட்டும் திட்டம் செயலிலுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய வீதங்கள் வருமாறு :—

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. தேர்ச்சி பெற்ற வேலையாள் | .. | 1.00 |
| 2. ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள் | .. | 0.50 |
| 3. தேர்ச்சி பெறாத வேலையாள் | .. | 0.25 |

VII. மருத்துவ, துப்புரவு வசதிகள் :

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும் மருத்துவமனை உள்ளது. அதில் ஒரு பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தின் மாவட்ட மருத்துவ

அதிகாரி அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்தால், உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியிலுள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையிலுள்ள மருத்துவ அலுவலர்) ஒரு செவிலியரும், ஒன்று அல்லது அதற்கு மேம்பட்ட உதவி மருத்துவரும், ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், 2 அல்லது 3 செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர். புழல் ஆடவர் பிற்காப்பு இல்லத்தில் பகுதி நேர மருத்துவர் ஒருவரையும், முழு நேர மருந்தாக்குநர் ஒருவரையும் கொண்ட மருந்தகம் ஒன்று உள்ளது. கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசின் செலவில், தேவைப்படுகின்ற கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும் சிறையைப் பார்வையிடும் பல் உதவி மருத்துவரால் கைதிகளுக்குப் பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழு நோய்க் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உள் நோய் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் சென்னை மன நல நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும், மற்றும் அநேகமாக எல்லா கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள எல்லாச்சிறைகளிலும் இம்மாதிரியான வசதியை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும். எஞ்சியுள்ள கிளைச் சிறைகளிலும் இத்தகைய வசதிகளைச் செய்து தரும் பணி படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இதற்கான செயற்குறிப்புகள், 7ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன.

## VIII. கைதிகளுக்குக் கல்வி வசதி அளித்தல் :

கல்வியின் மூலம் பயனடையக் கூடிய, தகுதியுள்ள கைதிகளுக்கு சிறையில் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு, சிறைகளில் புதிய முறையில் முதியோருக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும், வரவழைத்துச் சிறை



விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் அஞ்சல் வழிக் கல்வி மூலம் முதுகலைப் பட்டப்படிப்புத் தேர்வும், பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்., எம்.எட். முதலிய தொழிற்கல்வித் தேர்வுகளையும் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக்கட்டணம் குறித்த செலவு இதர செலவு ஆகிய செலவுகளை அரசு ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறுமுறையும் அரசுச் செலவில் தேர்வு எழுதலாம். இதுபோல், மொத்தம் மூன்று தடவை தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். கைதிகள் தேர்வு எழுதச் செல்லும்போது, அவர்களது சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போல் அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் காவலர்களும், சாதாரண உடை அணிந்து செல்கின்றனர். நீதி அல்லது சமயம் சம்பந்தமான உரைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்பதோடு, விரிவுரையாற்றுவோர், எம்மதத்தைச் சார்ந்தவராக உள்ளாரோ, அம்மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளிடம் மட்டுமே உரையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் சிறையில், சமயம், நீதி நெறி வகையான விரிவுரைகளும், போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

## IX. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.

இப்பள்ளியில், 18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங் குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது:—

(அ) தச்சு வேலை

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) வேளாண்மை.

(ஊ) கட்டுமான வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) பாண்டு இசைக் கருவி பயிற்சி.

(ஐ) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள் அங்கிருந்து அனுப்பப்பட்ட பின்னர் வேலை தேடிக்கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள துயிற் கூடம் ஒன்று இளங் குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு, அங்கு 24–25 வயதுத் தொகுதியைச் சேர்ந்த இளங் குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இவர்கள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற்கூடம், 1894 ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் கீழ் சிறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தப்பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புது வாழ்வுக்காக எந்திரங்கள், பசு மாடுகள் அல்லது எருமை மாடுகள் வாங்க நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக, அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணையில் வசூலிக்கப்படுகிறது.

## X. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல் :

சீர்திருத்தப் பள்ளிகளிலிருந்தும், சீர்திருத்தப்பள்ளி சேராத பிற நிறுவனங்களிலிருந்தும் வெளி வருபவர்கள் ஆதாயம் தரத்தக்க சொந்த தொழில் புரிந்து, நல்ல முறையில் வாழ்வை அமைத்துக்கொள்ள இயலும் வகையில், இரண்டு ஆண்டுகளுக்கு தச்சு வேலை, உலோக வேலை மற்றும் தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக, புழலில் ஆடவர் பிற்காப்பு இல்லம் அமைக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு, முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 1–50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2–00 வீதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்களுக்கு, தொழில் பயிற்சி நிலையங்களில் நடை முறையில் உள்ள பாடத் திட்டத்தின்படி, ஆனால் பிற்காப்பு இல்லத்தின் நிலமைக்கும் தேவைக்கும் ஏற்றாற் போல் மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. உரிய வயது வந்த ஆடவர் மட்டுமே இந்த இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். மத்திய சிறைகளில் உள்ள '' பி '' வகுப்புச் சிறைவாசிகள், சாதாரண காவல் கைதிகள், விசாரணைக் கைதிகள் ஆகியோருக்கு வழங்கப்படும் சிறந்த உணவு, இப்பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இதுகாறும், பல்லாவரத்தில், தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த இவ்வில்லம், புழல் கிராமத்தில் புழலேரிக்கு அருகே அரசுக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு 1–11–1983 முதல் செயல்பட்டு வருகிறது.





## XI. சிறைப் பார்வையாளர்கள் :

மாஜிஸ்டிரேட்டுகளையும், நீதிபதிகளையும், மருத்துவம், துப்புரவு, நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள் ஆகிய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களையும் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உள நோய் மருத்துவ வல்லுநர்கள், உள நூல் வல்லுநர்கள் மற்றும் தமிழ்நாடு சிறைவாசிகள் நலக்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் ஒவ்வொரு சிறையிலும் அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் உதவிச் சங்கத்தில் உறுப்பினர்களாகவும் கைதிகள் நலத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அக்கறை கொண்டுள்ளவர்களாகவும் உள்ளவர்களே அவ்வாறு அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்துவது, சிறைகளை நிர்வகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதி ஆகியன சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தாம் தெரிந்து கொள்வதும், சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள சிறைவாசிகளைப் பார்வையிடுவதும், சிறைவாசிகள் எவரேனும் அவரிடம் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும்,) பார்வையாரின் கடமை ஆகும். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## XII. சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் :

சிறைவாசிகள், தங்களது குடும்பத் தேவைகளை கவனிப்பதற்காக அவர்களுக்கு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்று பிறகு அரசால் விடுப்பு அளிக்கப்படுகிறது. அதிகார வரம்புடைய சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர், சிறைவாசிகளின் முதல் விடுப்புக் கோரிக்கை சம்பந்தப்பட்ட எல்லா இனங்களிலும், உள்ளூர் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரைக் கலந்தாலோசித்து தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக அனுப்புகிறார். அதன் பிறகு அனுமதிக்கப்படும் விடுப்பிற்கான கோரிக்கைகளின் மீதான தனது அறிக்கையை குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு அலுவலர், உள்ளூர் காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரைக் கலந்து ஆலோசிக்காமலேயே அரசுக்கு அனுப்புகிறார். ஐந்து ஆண்டு சிறைவாசம் அனுபவித்துள்ளவரும், இதுவரையில் விடுப்பில் செல்லாதவருமான சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, இதற்கு முன்னர் கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பிறகு

மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டு காலம் மட்டுமே சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு, அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில், அவர்களுக்கு விடுப்பு அளிக்கப் படுகிறது.

இவற்றோடு சிறைவாசிகளுக்கு அவர்கள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி, சொந்த மகன்/சொந்த மகள் மற்றும் சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந் தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும் மற்றும் நெருங்கிய உறவினர்களான சொந்த மகள்/சொந்த மகன் மற்றும் சொந்த சகோதரன்/சொந்த சகோ தரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும், அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் 4 தவணைகளில், அதாவது முதல் தவணையில் 6 நாட்களும், எஞ்சியுள்ள 3 தவணைகளில் ஒரு தவணைக்கு 3 நாட்கள் வீதமும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தண்டனை பெற்ற அல்லது ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கு சிறையில் அவர்களின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.

XIII. தண்டனைக் குறைப்பு.

சிறைவாசிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப் படுகின்றன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக, ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதாரண வகைத் தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும், ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும், சமையற்காரர்களாகவும், துப்புரவு செய் வோராகவும் பணிபுரிய வேண்டிய சிறைவாசிகளுக்கு இவ்விதி களின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப் போடு, மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக்குறைப்பு வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதிகளாக இருந்து பின்னர் சிறைக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத் திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளின் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணி வரும் சிறை வாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக்



குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக் காக சிறப்புத் தண்டனைக் குறைப்பாக சிறைத் துறை தலைவரால் ( Inspector General of Prisons ) ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகின்றன. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுகாலச் சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு நேரத்தில் 15 நாட் கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற் கண்ட தண்டனைக் குறைப்பு களைத் தவிர, மூன்றாண்டு களுக்கு மேல் தண்டனையடைந்த சிறைவாசிகளை அக்கால அளவிற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து ஆலோ சனைக் குழு பரிசீலனை செய்கிறது. இதற்காக அந்த சிறை வாசியின் கடந்த கால நன்னடத்தைப் பற்றிய குறிப்புகளையும், உள்ளூர் அதிகாரிகளின், அதாவது மாவட்ட ஆட்சியர், குற்ற வாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து அச் சிறைவாசியை, அவருக்கு அளிக்கப்பட்ட சிறைக் தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க அரசின் பரிசீலனைக் காக இக்குழு தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

மத்திய அரசு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவை அமைக்கும் முன்னர், ஆயுள் தண்டனைச் சிறைவாசிகளை, அவர்களுடைய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக ஆலோசனைக் குழு வின் முன் வைக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் சிறையில் நன் முறையில் நடந்திருக்க வேண்டும் என்பதோடு 10 ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்திருக்கவும் வேண்டும். இந்த 10 ஆண்டில் அவர்கள் இரு வகைகளின் கீழ் ஈட்டிய தண்டனைக் குறைப்புக் காலமும் அடங்கும். ஆனால் குற்றவியல் நடை முறைச் சட்டக் கோவையின் 433-ஏ என்னும் புதிய பிரிவின் படி, ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசிகள் அவர்கள் ஈட்டிய

தண்டனைக் குறைப்பு நீங்கலாக 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பின்னரே, அவர்களுக்குரிய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் முழுவின் பரிசீலனைக்கு வைக்க வேண்டும். இப்புதிய பிரிவின் செயல்திறன் சரியே என்று ஏற்கையில், இப்புதிய பிரிவு நடைமுறைக்கு வந்த நாளுக்கு முன்னர், அதாவது 18–12–1978-க்கு முன்னர், விசாரணை நீதிமன்றத்தால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு பொருந்தாது என்றும், 18–12–1978 ஆம் நாளோ அதற்குப் பின்னரோ குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், இந்திய உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் மேற்சொன்ன கருத்தினையொட்டி குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவு செயலுக்கு வருவதற்கு முன்னர் ஆலோசனைக் குழு திட்டத்தின் கீழ் செயலிலிருந்த நடைமுறை, விசாரணை நீதி மன்றத்தால் 18–12–1978-க்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைவாசிகள் குறித்து பரிசீலனை செய்வதற்காகப் பின்பற்றப்படும் என்று அரசு, உள் துறையின் 6–1–1981 நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் சிறைவாசிகளும், 55 வயதிற்கு மேற்பட்ட பெண் சிறைவாசிகளும் முதன் முறையாகத் தண்டனை அளிக்கப்பட்டிருந்து, அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு உட்பட $2\frac{1}{2}$ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து இருந்தால், '' வ்யது மூப்புத் திட்டத்தின் '' கீழ் அவர்களை விடுதலை செய்ய, ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யத் தகுதி உடையவர்களாவர். மாநிலச் சிறைகள் நடைமுறை நூல் விதிகளில் குறிப்பிட்டவாறு, சிறை மருத்துவ அதிகாரி சான்றிதழ் வழங்குவதன் பேரில், நோயுற்ற ஆயுள் தண்டனைச் சிறைவாசிகள், அவர்களது தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யப் பரிசீலனை செய்யப்படுகிறது.



புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில் தண்டனைக் காலம் முடியுமுன் விடுதலை செய்யும் முறை செயலில் உள்ளது. ஆனால், இது குறித்துப் பின்பற்றப் படுகிற நடைமுறை வேறாகும். இம்முறை '' நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல் '' என்று அழைக்கப்படுகிறது, 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சார்ந்த (1) உட்பிரிவின் படி நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விபரங்களையும், உரிய விசாரணைகளைச் செய்து, பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில் அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர், வெளியூர்களிலுள்ள அந்தந்த மாவட்ட குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர்களுக்கும், சென்னை மாநகரில் குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு தலைமைக் கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப்பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள சிறைவாசிகள் பற்றிச் சிறைத் துறைத் தலைவர் பரிசீலித்து, பின்னர் ஆணை பிறப்பிக்கிறார்.

1925ஆம் ஆண்டு சீர்திருத்தப்பள்ளிகள் சட்டத்தின் 10Aஆம் பிரிவின்கீழ், ஏனைய மத்திய சிறைகளிலிருந்து மாற்றப்பட்டு சீர்திருத்தப் பள்ளியில் உள்ள (ஆயுள் தண்டனை) சிறைவாசிகள் 23 வயது முடிவடைவதற்கு முன்னர் அவர்களின் தண்டனைக் காலத்தில், 3 மாதம் குறைப்பது பற்றி அரசு பரிசீலிக்கிறது. 10ஏ ஆம் பிரிவின் கீழ், சீர்திருத்தப் பள்ளிக்கு, அரசால் மாற்றப்பட்டுள்ள ஆயுள் தண்டனை பெற்ற இளங்குற்றவாளிகள், 23 வயது அடையும்போது விடுதலை செய்யப்பட வேண்டும் என்று, இந்திய உச்ச நீதி மன்றம் 981/84 ஆம் எண் ரிட் மனுவில் (வேலூர் மத்தியச் சிறையிலிருந்து சி. ஏழுமலைக்கும் (கைதி எண் 5782 தமிழ்நாடு அரசுக்கும் இடையேயான வழக்கு) ஆணை பிறப்பித்துள்ளது.

XIV. சிறைவாசிகளின் நலன்.

தற்போது, சிறைவாசிகள் நல அலுவலர் பதவிகள் மொத்தம் 10 உள்ளன. அதாவது, மத்தியச் சிறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பதவி வீதம் எட்டு மத்தியச் சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் மாநில மகளிர் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியில் ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர், சிறையின் விதிமுறைக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார். மேலும், தனிப்பட்ட முறையில் மேல் முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசிகளுக்கு மேல் முறையீடு செய்யவும் உதவி செய்கிறார்.

பெண் சிறைக் கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தை காப்பிடமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன், சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர இடங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால், மதுரை காந்தி கிராமத்திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறைக் கைதிகளின் பயனுக்காக ஒவ்வொரு மத்தியச் சிறையிலும் கலாச்சாரக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலாச்சாரக்குழு, சிறைக் கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திரைப்படம் காட்டுதல் போன்ற பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

மத்தியச் சிறைகள் அனைத்திலும், சிறைக் கைதிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைக் கைதிகளும், பணிக்கொடை ஈட்டும் சிறைக் கைதிகளும், இந்தச் சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இந்திய குடியரசுத் தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைக் கைதிகளின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/கணவன்/மகள்/மகன் சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகியோர் 5 நபர்களுக்கு மேற்படாமல், அச்சிறைக் கைதி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்ப்பதற்கு வசதியாக தமிழ்நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம் குறைந்த



பட்ச வகுப்பில் புகைவண்டி அல்லது சாலை வழிப்பயணத்திற்கான போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க எல்லா மத்தியச் சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி, மற்றும் வேலூர், மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

பஞ்சாயத்து முறை.—சிறைகளில் ஒழுங்கமைதியைப் பராமரிக்கும் நோக்குடன் சிறை நிருவாகத்தில் கைதிகள் பங்கேற்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் பஞ்சாயத்து முறை திரும்பத் திரும்ப குற்றம் செய்து சிறைக்கு வரும் கைதிகளுக்காகவென்றே உள்ள சேலம் மத்தியச் சிறை, கடலூர் மத்தியச் சிறை ஆகியவை நீங்கலாக, இதர மத்தியச் சிறைகள் அனைத்திலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும் நடைமுறையில் இருந்து வருகிறது.

XV. சிறைக் கைதிகளுக்குச் சட்ட உதவி :

விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கும் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு, சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும், கைதிகளின் பிரச்சினையை ஆராய்ந்து, அவர்களுக்கு உதவி செய்ய, மத்தியச் சிறைகளிலும், தனிக் கிளைச் சிறைகளிலும், கிளைச் சிறைகளிலும் வழக்குரைஞர்களை அமர்த்தும் திட்டத்தை இக்குழு கொண்டு வந்துள்ளது.

XVI. சிறைகளில் புகார்ப் பெட்டிகள் வைத்தல் :

அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி எட்டு மத்தியச் சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும், கைதிகள் புகார் மனுக்களை தாக்கல் செய்ய, முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. கைதிகள், தங்கள் புகார்களை எழுதி அப்பெட்டிகளில் இட, எழுது பொருட்கள் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. புகார்/குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள் ஒவ்வொரு மாதத்தின் முதல் பணிநாளில், சிறை அதிகாரிகளால், மாவட்ட செசன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டுவரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து அம்மனுக்களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றின் பகுதி நகல்களை சிறைத் துறைத் தலைவருக்கு அனுப்புவர். கைதிகள் கொடுக்கும் புகார்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[1985 ஜூன் 25

ஒவ்வொரு சிறையில் இருக்கும் புகார்ப் பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | சிறையின் பெயர். | பெட்டிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | சென்னை மத்தியச் சிறை .. .. | 3 |
| 2 | வேலூர் மத்தியச் சிறை .. .. .. | 3 |
| 3 | கடலூர் மத்தியச் சிறை .. .. | 3 |
| 4 | திருச்சிராப்பள்ளி மத்தியச் சிறை .. .. | 3 |
| 5 | சேலம் மத்தியச் சிறை .. .. .. | 3 |
| 6 | கோயம்புத்தூர் மத்தியச் சிறை .. .. | 3 |
| 7 | மதுரை மத்தியச் சிறை .. .. .. | 3 |
| 8 | பாளையங்கோட்டை மத்தியச் சிறை.. .. | 3 |
| 9 | புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளி .. .. | 3 |
| 10 | வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை .. | 2 |

## XVII. நன்னடத்தைக் கண்காணிப்புப் பணி:

நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியானது குற்றவாளிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலை, அவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றியும், பிணையப் பத்திரத்தின் பேரில் உரிய காலத்திற்கு முன் கூட்டியே நன்னடத்தை ஜாமின் பேரில் விடுதலையாகும் குற்றவாளிகள், பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும் சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும்/ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும், விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆகியோர் குறித்தும், விசாரிப்பது, கண்காணிப்பது அவர்களைப் பற்றி நீதிமன்றங்களுக்கு தகவல் கொடுப்பது முதலியன ஆகும். சிறைத் துறைத் தலைவரின் முழுக்கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவு, நன்னடத்தைத தலைமை கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. நன்னடத்தை வட்டார அலுவலர் ஒருவரைக் கொண்ட நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவும் இப்பிரிவில் உள்ளது.



1985 ஜூன் 25]

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டத்திற்குப் பதிலாக, 1958ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புச் சட்டம் எனப்படும் மத்தியச் சட்டம் ஒன்று (மத்தியச் சட்டம் 20/1958) கொண்டுவரப்பட்டது. இம்மத்தியச் சட்டம் சென்னை மாநகரத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் 1—12—1962-லிருந்தும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டதோடு தமிழ்நாடு முழுவதற்கும் 1—5—1964-லிருந்தும் நீட்டிக்கப்பட்டது. குற்றவாளிகள் புரியும் குற்றமானது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராதத் தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகள் விதிக்கக் கூடிய குற்றமாக இருந்தாலும், முந்தைய குற்றம் எதுவும் குற்றமிழைத்தவருக்கு எதிராக நிரூபிக்கப்படாமலிருந்தாலும், நன்னடத்தை கண்காணிப்பின் பேரில் உரிய எச்சரிக்கையுடன் விடுதலை செய்ய இச்சட்டம் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மத்தியச் சட்டத்தின் விதித்துறைகள், சீர்திருத்த நிருவாகத்தின் தற்காலப் போக்கிற்கேற்ப உள்ளது.

## XVIII. தமிழ்நாடு விடுதலையடைந்த கைதிகள் உதவிச் சங்கம் :

தமிழ்நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921-ல் அமைக்கப்பட்டது. தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங்குற்றவாளிகளும், கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன், கைதிகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், அவர்களுக்குத் தேவைப்படும் பலவித உதவிகள் செய்து கொடுத்தல், அவர்களின் நலனுக்காக, சட்டங்களை இயற்றுதல், ஏற்கனவே இருக்கும் சட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி புதிய சட்டங்களை இயற்றுதல் ஆகியவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறு தொழில்களை மேற்கொண்டு நடத்த, கருவிகள், தேநீர்க் கெட்டில், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் உதவித் தொகை கொடுக்கிறது. மேலும், புகைவண்டி அல்லது பேருந்து கட்டணத்திற்கான உதவித் தொகையையும் தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும் வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளவும், வழக்காட சட்ட உதவி பெறுவதற்கும், வயது முதிர்ந்தோர் ஒய்வூதியம் பெறுவதற்கும், உதவித் தொகை அளிப்பதோடு ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவற்றையும் வழங்குகிறது.

அரசு இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு 12,000 ரூபாய் உதவித் தொகையை கொடுத்து வந்தது ; அந்த உதவித் தொகையானது 1980–81ஆம் ஆண்டிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

XIX. சென்னை மாநகரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலும் உள்ள தண்டனைச் சிறைவாசிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையைப் புழலில் (செங்குன்றம்) கட்டுதல் :—

புழல் கிராமத்தில் தற்போது சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

கீழ்க்காணும் பணிகளை நிறைவேற்றிட ரூ. 50 இலட்சத்திற்கு முதல் கட்டமாக அரசு 1981 ஜூலையில் அனுமதி அளித்துள்ளது:—

(1) சுற்றுச் சுவர்.

(2) நிர்வாகக் கட்டிடத் தொகுதி.

(3) 200 சிறைக் கைதிகளுக்கு இடவசதி அளிக்க கட்டிடத் தொகுதி ஒன்று.

(4) புறநோயாளிச் சிகிச்சைக்காக மட்டும் மருத்துவக் கட்டிடம்.

(5) தொடக்கத்தில் தேவையான தண்ணீர் வசதி அளித்தல்.

மேற்காணும் பணிகள் பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் புழலில் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக 1981 அக்டோபரில் அரசு ரூ. 10 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியது:

(1) மேல் நிலை நீர்த்தொட்டி கட்டுதல்.

(2) கழிவு நீரின் நச்சுத் தன்மை நீக்கும் இயந்திரத் தொகுதி.

இப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இரண்டாவது கட்டமாக புழலில் புதிதாகக் கட்டப்படுகின்ற மத்திய சிறையில் கூடுதல் தொகுதிகள், மருத்துவமனை, சமையல் அறை, உணவருந்தும் கூடம், தனியிருப்புத் தொகுதி, மகளிர் வெளிமுற்றம் முதலியவற்றை ரூபாய் 143.01 இலட்சம் செலவில் கட்டுவதற்காக, அரசு 1983 ஏப்ரலில் அனுமதி வழங்கியது. இப்பணிகளும் முடிவடையும் நிலையில் உள்ளன. தற்போது கட்டப்பட்டு வருகின்ற கட்டிடங்களில் ரூ. 44.85 லட்சம் செலவில் வசதிகள் செய்து கொடுப்பதற்காக அனுமதியும் அரசால் வழங்கப்பட்டுள்ளன. இப்பணியை நிறைவேற்றி முடிக்கும் பொறுப்பினை பொதுப்பணித் துறை ஏற்றுக்கொண்டுள்ளது. புழல் மத்தியச் சிறைக்கு குடிநீர் வசதியும், கழிவு நீரகற்றும் வசதியும் ரூ. 40.52 லட்சம் செலவில் செய்து கொடுக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணியை நிறைவேற்றும் பொறுப்பினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது. புழலில் புதிதாகக் கட்டப்படும் மத்தியச் சிறை சம்பந்தப்பட்ட பெரும்பாலான பணிகள் முடிவு அடையும் தருவாயில் உள்ளன. இத்திட்டத்திற்காகும் செலவு ஏழாவது நிதிக் குழு ஒதுக்கும் தொகையிலிருந்து செய்யப்படுகிறது.



XX சிறை சீர்திருத்தக் குழு :

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பிறகு சமுதாயத்தில் கண்ணியமாகவும், நேர்மையுடனும் வாழ்க்கை நடத்தும் வகையில், அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதும், சமூகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும் இம்மாநிலத்தின் சிறைச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறாக நல்ல குடிமக்களாக வாழ அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. இம்மாநிலச் சிறைகள் நிருவாகத்தில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் குறித்துப் பரிசீலித்து தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி, 1978 பிப்ரவரியில் சிறை சீர்திருத்தக் குழுவை அரசு நியமித்தது. பாட்னா உயர் நீதி மன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர்.எல். நரசிம்மன், ஐ.சி.எஸ். அவர்கள் இக்குழுத் தலைவர் ஆவார். முன்னாள் சிறைத் துறைத் தலைவர் திரு. எஸ். எம். டயஸ் அவர்களும், பேராசிரியர் டாக்டர் வெங்கோபராவ் (உளவியல் மருத்துவப் பேராசிரியர் மற்றும் உளவியல் துறைத் தலைவர்) அவர்களும் இதன் உறுப்பினர்களாவர். சிறைகள், கைதிகள் தொடர்பாக பல பரிந்துரைகளை இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை முழுவதும் மொத்தம் 223 பரிந்துரைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 81 பரிந்துரைகள் குறித்து அரசு இதுவரையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. 29 பரிந்துரைகளின் மீது ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் நிதி ஆதாரத்தைக் கருத்தில் கொண்டு, நிதிச் செலவு சம்பந்தப்பட்ட இக்குழுவின் ஏனைய பரிந்துரைகளுக்கும், சிறைச் சட்டங்களில் திருத்தம் செய்வதற்கும், அரசு கவனம் செலுத்தி வருகிறது.

**XXI.** சிறை சீர்திருத்த அனைத்திந்தியக் குழுவின் அறிக்கை (நீதிபதி திரு. ஏ.என். முல்லா இதன் தலைவர் ஆவார்):

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலுள்ள சிறைகள் நிருவாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரிசீலித்து, தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்கும் பொருட்டு, நீதிபதி திரு. ஏ. என். முல்லா தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்துள்ளது. மத்திய அரசிடமிருந்து வந்த அறிக்கையில் 656 பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன. முல்லா குழு செய்த பரிந்துரைகள் சிறைத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இவ்வரசின் கருத்து, நாளடைவில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும்.

**XXII.** மாநிலச் சிறை நடைமுறை நூலைத் திருத்தியமைத்தல்:

மத்திய அரசின் மாதிரிச் சிறை நடைமுறை நூலில் அடங்கியுள்ள விதித்துறைகளையும், 1978–79 ஆம் ஆண்டு சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு தமிழ்நாடு, சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலின் தொகுதி 2 பாகம் 1-ல் உள்ள சட்டப்படியான விதிகளைத் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இந்த நூல் தொகுதி II, III ஆக அச்சிடப்பட்டு அதன் நகல்கள் அரசுக்குக் கிடைத்துள்ளன.

**XXIII.** அரசினர் மறுவாழ்வு இல்லங்கள், மேல்பாக்கம் காப்பு முகாம், சென்னையில் உள்ள தயாசதன், தமிழ்நாட்டில் உள்ள பிச்சைக்காரர் இல்லங்கள் ஆகியவற்றை சென்னையில் உள்ள சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல் (இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல்)

சென்னை, மருத்துவப் பணிகள்—குடும்ப நலத்துறை இயக்குநர் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 10 அரசினர் மறுவாழ்வு இல்லங்களையும், சென்னை சமூக நலத்துறை இயக்குநர் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்ற மேல்பாக்கம் காப்பு முகாமையும், பணியாளர்களுடனும், ஏனைய





பொறுப்புகளுடனும், திருச்சி, சிதம்பரம் நகராட்சிகளால் நடத்தப்பட்டு வருகின்ற பிச்சைக்கார இல்லங்கள் இரண்டினையும் சென்னை, தமிழ்நாடு, சிறைகள் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும் வேண்டி, உள் (சிறை VI) துறையின் 13—8—1984 ஆம் நாளிட்ட 1780 ஆம் எண் அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது. மதுரை கோயம்புத்தூர் மாநகராட்சிகள், சீர்காழி நகராட்சி ஆகியவை நடத்தி வருகின்ற பிச்சைக்காரர்கள் இல்லங்களை சிறைத்துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான ஆணைகளைப் பிறப்பிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

காவல் துறை ஆணையர் மானியமாக நிதியுதவி அளித்து வந்த தயாசதன் தொண்டு நிறுவனத்தை சிறைத்துறைத் தலைவர் மேற்கொள்வது குறித்து உயர்நீதி மன்றத்தில் மறுப்பு ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்காதிருக்கும் வண்ணம் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. தயாசதன் செயலாளர் இந்த நிறுவனத்தை மேற்கொள்வதற்கு மறுப்பு தெரிவித்து அரசுக்கு மனு ஒன்றைக் கொடுத்துள்ளார். தீவிர பரிசீலனைக்குப் பின்னர், 13–8–1984 தேதியிட்ட அரசு பல்வகை ஆணை எண் 1780-ல் சிறைத்துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொள்ள ஆணையிடப்பட்ட மறுவாழ்வு இல்லங்களின் பட்டியலிலிருந்து தயாசதன் மறுவாழ்வு இல்லத்தை நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. அம் முடிவிற்கிணங்க உரிய ஆணையும் 18–3–1985-ல் வெளியிடப்பட்டது. சிதம்பரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் இல்லம் செயல்படவில்லை.

அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் 10, மேல்பாக்கத்தில் உள்ள காப்பு முகாம் ஆகியவற்றையும் அவற்றில் பணிபுரியும் பணியாளர்களையும் அவற்றிலுள்ள இருப்புகள், பொறுப்புகளையும் 1–12–1984 நாளிலிருந்து சென்னையில் உள்ள சிறைத்துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன.

[1985 ஜூன் 25

XXIV. 1985–86 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உத்தேசித்துள்ள சிறை நிருவாக மேம்பாட்டுத் திட்டங்கள் :

| திட்டத்தின் பெயர். | செலவு. | |
|---|---|---|
| 1. சிறைகள்—பாளையங்கோட்டையில் உள்ள மத்தியச் சிறைக்குக் கூடுதல் கண்காணிப்பாளர் பதவி ஒன்றுக்கு அனுமதி | ரூ. | 24,000 |
| 2. திருச்சிராப்பள்ளியில் உள்ள மத்திய சிறையில் மூன்று காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல். | ரூ. | 2,11,000 |
| 3. கிளைச் சிறைச்சாலைகள்—இரண்டாம் கட்டமாக சிறைத் துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொணரப்பட்ட 55 கிளைச் சிறைகளுக்கு மரச்சாமான்கள் வாங்குதல். | ரூ. | 1,50,000 |
| 4. கிளைச் சிறை சிவகங்கை—கிளைச் சிறையைச் சுற்றி மதிற்சுவர் கட்டுதல். | ரூ. | 83,000 |
| 5. கிளைச் சிறை துறையூர்—மதிற்சுவர் கட்டுதல். | ரூ. | 2,86,000 |
| 6. சிறைத்துறை—கடலூர் மற்றும் பாளையங்கோட்டை மத்தியச் சிறைகளிலும் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் தற்போதுள்ள இரண்டாம் நிலை அலுவலக மேலாளர் பதவிகளை முதல் நிலையாக மேம்படுத்துதல். | ரூ. | 5,000 |

XXV. ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரை :

அனைத்து மாநிலங்களிலுள்ள சிறைகள் நிருவாகத் தரத்தை மேம்படுத்த ஏழாவது நிதிக்குழு வலியுறுத்தியது. கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு 6 ரூபாய் செலவிடப்பட வேண்டுமென்றும், தற்போதுள்ள சிறைகளை விரிவுபடுத்துவதின் மூலமும், புதிய சிறைகளைக் கட்டுவதன் மூலமும், சிறைகளில் அதிக எண்ணிக்கையில் கைதிகளை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், இக்குழு வலியுறுத்தியுள்ளது. அதன்படி 1979–80 முதல் 1983–84 வரையிலுள்ள காலத்திற்கு வருவாய் செலவு வகையில் ரூ. 631 இலட்சமும், மூலதனச் செலவு வகையில் ரூ. 862 இலட்சமும் ஒதுக்கீடு செய்யும்படி இக்குழு பரிந்துரைத்தது.



1985 ஜூன் 25]

மூலதனச் செலவு

மூலதனச் செலவு வகையின்கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 862 இலட்சத்தில், மத்திய அரசு 1985 ஜனவரி திங்கள் வரை கீழ்க்காணும் செலவினங்களை ஒப்பளித்துள்ளது.

| திட்டம். | ஒப்பளித்த வருடம். | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 1979–8 ஆம் ஆண்டில் கூடுதல் இடவசதி ஏற்படுத்த குடியிருப்புகள் கட்ட. | ஜூன் 1980 | 200.00 |
| | பிப்ரவரி 1981 | 100.00 |
| 2 தற்போதுள்ள சிறைகளில்கூடுதல் இட வசதியைப் பெருக்க மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க. | பிப்ரவரி 1982 | 118.82 |
| 3 சிறைகளில் கூடுதல் இடவசதியைப் பெருக்கவும் அடிப்படை வசதிகளைச் செய்யவும். | செப்டம்பர் 1982 | 111.72 |
| | மொத்தம் .. | 530.54 |

[illegible]த்தொகையைப் பயன்படுத்துவதன் மூலம், மூலதனச் செலவின்கீழ் மாநில அரசு கீழ்க்காணும் திட்டங்களுக்கு அனுமதி அளித்தது.

| திட்டத்தின் பெயர். | செலவுத் தொகை. | அரசு ஆணை எண், நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூபாய். | |
| 1 பாளையங்கோட்டை, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம் ஆகிய மத்திய சிறைகளில், கூடுதல் இடவசதி செய்து கொடுத்தல், குடியிருப்புகள் கட்டுதல். | | |
| 2 நீரடிக் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி முதலிய வசதிகளை ஏற்படுத்துதல். | 2,96,73,215 | 487, உள்துறை, நாள் 22–2–1980 |
| 3 கடலூர், செங்கற்பட்டு கிளைச் சிறைகளை தனிக் கிளைச் சிறைகளாக மாற்றுதல். | | |
| 4 புழலில் புதிதாக மத்திய சிறை கட்டுதல் (முதற் கட்ட கட்டிடப் பணிகள்). | 78,00,000 | 1726, உள்துறை, நாள் 23–7–1981, 649, உள்துறை, நாள் 23–3–1984. |
| 5 புழலில் மேல்நிலை நீர்த் தொட்டிகள், நீர் சேமிப்புத் தொட்டிகள் கட்டுதல். | 14,61,000 | 2555, உள்துறை, நாள் 31–10–1981, 490, உள்துறை நாள் 2–3–1984. |



| | | |
|---|---|---|
| 6 திருச்சிராப்பள்ளி, கோவை, கடலூர், மத்திய சிறை, மற்றும் செங்கை, கோவை, பெரியார் மாவட்டங்களில் உள்ள கிளைச் சிறைச்சாலைகளில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட வசதிகள் செய்து கொடுக்க. | 1,44,75,000 | 747, உள்துறை, நாள் 8–4–1983. |
| 7 புழலில் உருவாகிக் கொண்டிருக்கும் மத்திய சிறைக்கான இரண்டாவது கட்ட கட்டிடப் பணிகள். | 1,43,01,000 | 749, உள்துறை, நாள் 9–4–1983. |
| 8 கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க. | 67,87,000 | 714, உள்துறை, நாள் 6–4–1983. |
| 9 புழலில் உருவாகிவரும் மத்திய சிறைக் கட்டிடங்களில் சாலைகள், சிறிய பாலங்கள் மற்றும் கழிவு நீர்க் குழாய் இணைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல். | 44,85,000 | 650, உள்துறை, நாள் 23–3–1984. |
| 10 புழல் மத்திய சிறைக்கு குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் குழாய் வசதி செய்து கொடுத்தல். | | |
| 11 வேலூரிலுள்ள மத்திய சிறை, வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை மற்றும் வேலூரில் உள்ள வட்டார சீர்திருத்த அலுவலர்களுக்கான பயிற்சிப் பள்ளிக்கு குடிநீர் வசதி செய்து கொடுத்தல். | 1,50,00,000 | 672, உள்துறை, நாள் 23–3–1984. |
| காவேரி ஆற்றுப் படுகையிலிருந்து திருச்சி மத்திய சிறைக்கு குடிநீர் கொண்டு வருதல். | | |
| 13 சிறுவாணி ஆற்றிலிருந்து கோவை மத்திய சிறைக்கு குடிநீர் கொண்டு வருதல். | 6,35,000 | 651, உள்துறை, நாள் 23–3–1984. |
| 14 நாங்குநேரி கிளைச் சிறையில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதல் மற்றும் கைப்பம்பு நிறுவுதல். | 21,000 | 668, உள்துறை, நாள் 26–3–1984. |

**வருவாயினச் செலவு.**

வருவாயினச் செலவு வகையில் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ரூ. 681 இலட்சத்தில் மத்திய அரசு 1985 ஜனவரித் திங்கள் வரை கீழ்க்கண்டவாறு ரூ. 272 இலட்சத்திற்கு அனுமதித்துள்ளது.

| திட்டத்தின் பெயர். | ஒப்பளித்த வருடம் | செலவுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. சிறைவாசிகளுக்கு சத்துணவு சாப்பிடுவதற்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள் வழங்குதல். | ஜுன் 1980 | 40 |
| 2. சிறைகளில் கைதிகளைக் கூடுதலாக வைப்பதால் கண்காணிப்பு மற்றும் கணக்குப் பிரிவுகளில் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்கள் குறித்த செலவு. | ஜுன் 1981 | 52 |
| 3. கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிருவாகத்திலிருந்து சிறைத்துறை நிருவாகத்திற்குக் கொண்டு வருதல். | ஜுன் 1981 | 18 |
| 4. கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவு படுத்தல் மற்றும் சிறைக்குள் சிற்றுண்டி வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல். | ஜுன் 1981 | 22 |



| | | |
|---|---|---|
| 5. சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தல் .. | செப்டம்பர் 1982 | 29 |
| (அ) கிளைச் சிறைகளை வருவாய்த்துறை நிருவாகத்திலிருந்து சிறைத்துறை நிருவாகத்திற்குக் கொண்டு வருதல். | செப்டம்பர் 1982 | 74 |
| (ஆ) சிறைவாசிகளுக்கு கூடுதல் படுக்கை மற்றும் பாத்திரங்கள் வழங்குதல். | செப்டம்பர் 1982 | 6 |
| (இ) கைதிகளுக்கு ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவு படுத்த, கைதிகளுக்கு சிறு தொழில்களில் பயிற்சி அளிக்க, சிறைக்குள் சிற்றுண்டிச்சாலையை ஏற்படுத்த. | செப்டம்பர் 1982 | 27 |
| | மொத்தம் .. | 272 |

வருவாய்னச் செலவு வகையில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு மாநில அரசு அனுமதி அளித்துள்ளது.

| திட்டத்தின் பெயர். | அரசு ஆணை எண். நாள். |
|---|---|
| (1) | (2) |
| 1. சிறைக் கைதிகளுக்குச் சத்துணவு வழங்க. | 487, உள்துறை, நாள் 22—2—1980. |
| 2. மத்தியச் சிறைகளிலுள்ள கைதிகளுக்குப் பாத்திரங்கள், உறையோடு கூடிய தலையணை வழங்குதல். | 487, உள்துறை, நாள் 22—2—1980. |
| 3. (அ) பெரியார், கோவை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைகளை சிறைத் துறையின்கீழ் எடுத்துக் கொள்ளுதல். | 1840, உள்துறை, நாள் 5—8—1981. |
| (ஆ) வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைகளை சிறைத் துறை எடுத்துக் கொள்ளுதல். | 675, உள்துறை, நாள் 30—3—1983. |
| (இ) தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள கிளைச் சிறைகளை சிறைத் துறை எடுத்துக் கொள்ளுதல். | 1976, உள்துறை, நாள் 22—9—1983. |
| 4. சிறைக் கைதிகளுக்கு சிற்றுண்டிச் சாலை திறப்பது. | 144, உள்துறை, நாள் 23—1—1982. |
| 5. கைதிகளின் ஊதியம் ஈட்டும் திட்டத்தை நிறைவேற்றுதல். | 1815, உள்துறை, நாள் 17—7—1982. |



| திட்டத்முன் பெயர் | அரசு ஆணை எண். நாள். |
|---|---|
| (1) | (2) |
| 6. சிறைச் சாலைகளில் கைத்தொழிலையும், தொழில்களையும் அறிமுகப்படுத்துதல். | 1326, உள்துறை, நாள் 28—5—1982. |
| 7. திருத்தியமைக்கப்பட்ட அதிகரிக்கப்பட்ட உணவு வழங்க. | 2366, உள்துறை, நாள் 14—9—1982. |
| 8. மேற்பார்வை கணக்குப் பிரிவுகள் உட்பட காவல் பணியாளர்களை வேலைக்கமர்த்தல்— | |
| (1) வேலூர் கிளைச் சிறை .. | 840, உள்துறை, நாள் 28—4—1983. |
| (2) மதுரை மத்திய சிறை .. | 2566, உள்துறை, நாள் 8—12—1983. |
| (3) பாளையங்கோட்டை மத்திய சிறை. | 2568, உள்துறை, நாள் 8—12—1983. |
| (4) கடலூர் கிளைச் சிறை .. | 2569, உள்துறை, நாள் 8—12—1983. |
| (5) செங்கற்பட்டு தனிக் கிளைச் சிறை. | 2570, உள்துறை, நாள் 8—12—1983. |
| (6) சேலம் மத்திய சிறை .. | 2571, உள்துறை, நாள் 8—12—1983. |

இம்மாநிலத்திலுள்ள கிளைச் சிறைகள் அனைத்தும் வருவாய்த்துறை கட்டுப்பாட்டிலிருந்து சிறைத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்கு இதற்கு முன் அங்கு பணியாற்றிய காவல் துறை அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்குப் பதிலாக சிறைத்துறை பணியாளர்களை நியமிப்பதன் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டது; ஏழாவது நிதி உதவிக் குழு பரிந்துரையின் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஏழாவது நிதிக் குழுவின் ஒதுக்கீட்டின்கீழ் தொகையைப் பயன்படுத்துவது குறித்த தற்போதைய நிலை, இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1985 பிப்ரவரித் திங்களில், எஞ்சியுள்ள ஒதுக்கீட்டுத் தொகையில் மூலதனம் மற்றும் வருவாய் இன வகையில் ரூ. 508.88 இலட்சத்தை மத்திய அரசு ஒப்பளித்தது. 1985 ஏப்ரல் திங்களில், மொத்த ஒதுக்கீட்டுத் தொகையான 1493 இலட்சத்தில், எஞ்சியுள்ள மானியத்தொகையான ரூ. 181.58 இலட்சத்தையும் மத்திய அரசு ஒப்பளித்துள்ளது.

[1985 ஜூன் 25

## XXVI ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்.

மூலதனச் செலவு வகையில் ரூ. 1,491.50 இலட்சம், வருவாய் செலவு வகையில், ரூ. 26.60 இலட்சம் செலவிற்கான செயற் குறிப்புகள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவது குறித்து திட்டக்குழு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

1985 ஜூன் 25]

## இணைப்பு II.

(II-ம் எண், இனத்தைக் காண்க).

### சிறைத் துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் அறிக்கை.

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 சிறைத் துறைத் தலைவர் .. .. | 1 |
| 2 சிறைத் துறைத் துணைத் தலைவர் .. | 1 |
| 3 கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4 உதவிக் கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 5 சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6 சிறைக் கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) | 7 |
| 7 கண்காணிப்பாளர், மாநில மகளிர் சிறை, வேலூர். | 1 |
| 8 சிறைக் கண்காணிப்பாளர் .. .. | 2 |
| 9 சிறைக் கூடுதல் கண்காணிப்பாளர் .. .. | 6 |
| 10 துணைக் கண்காணிப்பாளர்கள், மாநில மகளிர்ச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி. | 2 |
| 11 சிறை அலுவலர்கள் .. .. .. | 9 |
| 12 அரசு உதவி மருத்துவர்கள் (தேர்வு நிலை) .. | 1 |
| 13 அரசு உதவி மருத்துவர்கள் .. .. | 17 |
| 14 தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர். | 1 |
| 15 துணைத் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர். | 1 |
| 16 வட்டார நன்னடத்தை அலுவலர்கள் .. | 12 |
| 17 கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல். | 1 |

#### பணியாளர் அமைப்பு.

##### 1. பொதுவான வகையினர்.

| | |
|---|---|
| 18 அலுவலகத் தேர்வுநிலை கண்காணிப்பாளர் | 4 |
| 19 அலுவலகக் கண்காணிப்பாளர் .. .. | 5 |
| 20 உதவியாளர்கள் (தேர்வுநிலை) .. .. | 25 |
| 21 உதவியாளர்கள் .. .. .. .. | 72 |

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 22 இளநிலை உதவியாளர்கள் .. .. | 80 |
| 23 இளநிலை உதவியாளர்கள் (தேர்வு நிலை) | 6 |
| 24 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் .. .. | 3 |
| 25 தட்டச்சர்கள் .. .. .. .. | 44 |
| 26 பதிவுரு எழுத்தர்கள் .. .. .. | 30 |
| 27 பதிவுரு எழுத்தர்கள் (தேர்வு நிலை) .. | 7 |
| 28 தபேதார் (தேர்வு நிலை) .. .. .. | 1 |
| 29 அலுவலக உதவியாளர்கள் .. .. | 35 |
| 30 அலுவலக உதவியாளர்கள் (தேர்வு நிலை) .. | 59 |
| **2. சிறப்பு வகையினர்.** | |
| 31 காப்பாளர் .. .. .. .. | 4 |
| 32 துணைச் சிறை அலுவலர்கள் .. .. | 18 |
| 33 உதவிக் கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 34 துணை உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 35 கண்காணிப்பாளர்கள்— தனிக்கிளைச் சிறைகள் | 3 |
| 36 கிளைச் சிறை அலுவலர்கள் (நிலை1 மற்றும்2) | 9 |
| 37 உளவியல் வல்லுநர்கள் .. .. .. | 3 |
| 38 சமூகப் பணியாளர்கள் .. .. .. | 3 |
| 39 உதவிச் சிறை அலுவலர்கள் .. .. | 131 |
| 40 தொழிற்சாலை மேலாளர் .. .. | 1 |
| 41 செவிலியர் (தேர்வு நிலை) .. .. | 2 |
| 42 செவிலியர் .. .. .. .. | 8 |
| 43 மருந்தாக்குநர்கள் .. .. .. | 13 |
| 44 மருந்தாக்குநர் (தேர்வு நிலை) .. .. | 5 |
| 45 செவிலியர் உதவியாளர்கள் (ஆண்) .. | 30 |
| 46 முதன்மைத் தலைமைச் சிறைக் காவலர்/வாயிற்காவலர்கள். | 36 |
| 47 முதன்மைத் தலைமைச் சிறைக் காவலர்/வாயிற்காவலர்கள் (தேர்வு நிலை). | 1 |
| 48 சிறைக் காவலர்/சிற்றலுவலர் (நிலை 1) (தேர்வு நிலை). | 3 |
| 49 சிறைக் காவலர்/சிற்றலுவலர் (நிலை 1). .. | 362 |
| 50 சிறைக் காவலர்/சிற்றலுவலர் (நிலை 2) .. | 2,251 |
| 51 அலுவலக மேலாளர்கள் (நிலை 1) .. .. | 7 |
| 52 அலுவலக மேலாளர்கள் (நிலை 2) .. .. | 3 |
| 53 சிப்ப எழுத்தர்கள் .. .. .. | 7 |
| 54 சிப்ப எழுத்தர் (தேர்வு நிலை) .. .. | 3 |
| 55 இடைநிலை ஆசிரியர்கள் .. .. .. | 21 |
| 56 இடைநிலை ஆசிரியர்கள் (தேர்வு நிலை) .. | 12 |
| 57 தொடக்க நிலை ஆசிரியர்கள் .. .. | 5 |
| 58 உடற்பயிற்சி ஆசிரியர் .. .. .. | 1 |
| 59 தச்சுத் தொழில் பயிற்றுநர்கள் (நிலை 1) மற்றும் நிலை 2). | 16 |





| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 60 நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 5 |
| 61 நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வு நிலை). | 1 |
| 62 புத்தகம் கட்டும் மேஸ்திரிகள் (தேர்வு நிலை) | 2 |
| 63 தையல் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 9 |
| 64 தையல் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வு நிலை) | 3 |
| 65 கருமார் தொழில் பயிற்றுநர்கள் (தேர்வுநிலை) | 3 |
| 66 தச்சுத் தொழில் முதலாள் .. .. | 2 |
| 67 தச்சுத் தொழில் முதலாள் (தேர்வு நிலை) .. | 1 |
| 68 மின் கம்பியாட்கள் .. .. .. | 9 |
| 69 மின் கம்பியாட்கள் (தேர்வு நிலை) .. | 3 |
| 70 நன்னடத்தை அலுவலர்கள் .. .. | 96 |
| 71 நல அலுவலர்கள் .. .. .. | 10 |
| 72 லாரி ஓட்டுநர்கள் .. .. .. | 8 |
| 73 பிரம்புத் தொழில் பயிற்றுநர் .. .. | 1 |
| 74 தச்சுத் தொழில் கம்மியர் (தேர்வு நிலை) .. | 1 |
| 75 லாரி ஆள் .. .. .. .. | 1 |
| 76 காலணி தயாரிப்பு பணி மேற்பார்வையாளர் | 1 |
| 77 மிதியடிப் பணி கம்மியர் (தேர்வு நிலை) .. | 1 |
| 78 மிதியடிப் பணி மேஸ்திரிகள் (தேர்வு நிலை) | 3 |
| 79 அலுமினியப் பட்டறை முதலாள் (தேர்வு நிலை) | 1 |
| 80 வண்டிக்காரர்கள் .. .. .. | 6 |
| 81 வண்டிக்காரர்கள் (தேர்வு நிலை) .. .. | 2 |
| 82 நூற்பு ஆசிரியர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 83 நெசவு ஆசிரியர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 84 சாய வேலை ஆசிரியர் (தேர்வு நிலை) .. | 1 |
| 85 பாவு ஆசிரியர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 86 இசைக் குழு ஆசிரியர் .. .. .. | 1 |
| 87 பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் (நிலை 2 மற்றும் 3). | 5 |
| 88 கூடார உதவி மேஸ்திரி .. .. .. | 1 |
| 89 பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாளர் (தேர்வு நிலை). | 1 |
| 90 கொதிகலன் சிற்றாள் (தேர்வு நிலை) .. | 1 |
| 91 பொருத்துத் தச்சர் (தேர்வு நிலை) .. | 1 |
| 92 நெசவுப் பணியாளர் (நிலை 1) .. .. | 1 |
| 93 நெசவுப் பணியாளர்கள் (நிலை 2) .. .. | 2 |
| 94 நெசவுப் பணியாளர் (நிலை 3) .. .. | 1 |
| 95 கட்டு கட்டும் பணியாள் .. .. .. | 1 |
| 96 பொருத்துபவர் நீரேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிப்பவர் (தேர்வு நிலை). | 1 |

[1985 ஜூன் 25

| தொடர் எண்ணும், பதவிகளின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 97 கொதிகலன் எரியூட்டுபவர் (தேர்வு நிலை) | 1 |
| 98 குழாய் பொருத்துநர் (தேர்வு நிலை) .. | 1 |
| 99 உருளை மூடுபவர் (தேர்வு நிலை) .. .. | 1 |
| 100 மோட்டார் பணியாட்கள் (தேர்வு நிலை) .. | 2 |
| 101 நூற்புத் தலைமைப் பணியாள் (தேர்வு நிலை) | 1 |
| 102 உதவி நூற்புப் பணியாளர் (தேர்வு நிலை).. | |
| 103 நூற்பு ஆசிரியை .. .. .. | 1 |
| 104 செய்முறை விளக்குநர்கள் .. .. | 1 |
| 105 எந்திரம் இயக்குபவர் (நிலை 1) .. | 1 |
| 106 உற்பத்தி உதவியாளர் .. .. .. | 1 |
| 107 தச்சர்கள் .. .. .. .. | 4 |
| 108 கால்நடை உதவியாளர்கள் .. .. | 5 |
| 109 பற்ற வைப்பவர்கள் .. .. .. | 2 |
| 110 தலைமை ஆயா .. .. .. .. | 1 |
| 111 ஆயாக்கள் .. .. .. .. | 8 |
| 112 மின்சார மோட்டார் பணியாட்கள் .. | 3 |
| 113 மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள் | 6 |
| **கையால் தயாரிக்கப்படும் காகிதத் தொழில்.** | |
| 114 மின்துறை மேற்பார்வையாளர் (தேர்வு நிலை) | 1 |
| 115 சவுக்கார வேதியல் பணியாளர் (தேர்வு நிலை) | 1 |
| 116 இயந்திரம் ஓட்டுநர் .. .. .. | 1 |
| 117 மெருகிடும் உதவியாளர் .. .. | 1 |
| 118 காகிதக்கூழ் செய்யும் உதவியாளர்கள் .. | 5 |
| 119 காவலாள் .. .. .. .. | 11 |
| 120 இயல் மருத்துவத் தொழில் நுட்பப் பணியாளர் (தேர்வு நிலை). | 1 |
| 121 கால்நடை மேய்ப்பவர் .. .. .. | 1 |
| 122 எந்திரக் கலப்பை (டிராக்டர்) ஓட்டுநர்கள். | 2 |
| 123 பெருக்குவோர் .. .. .. | 8 |
| 124 சமையற்காரர்கள் .. .. .. | 17 |
| 125 சமையற்காரர் (தேர்வு நிலை) .. | 3 |
| 126 தோட்டக்காரர் .. .. .. .. | 2 |
| 127 எந்திரக் கலப்பை சுத்தம் செய்பவர் .. | 1 |
| 128 துப்புரவாளர்கள் .. .. .. | 2 |
| 129 பினாயில் உதவியாளர் .. .. .. | 1 |
| 130 பால்காரர் .. .. .. .. | 1 |
| 131 சுகாதாரப் பணியாளர் .. .. .. | 5 |
| 132 கைத்தொழில் பயிற்றுநர்கள் .. .. | 9 |



1985 ஜூன் 25]

**அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் காப்பு முகாம் தலைமையிடத்து பணியாளர்கள்**

| | |
|---|---|
| 133 உதவி இயக்குநர், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலம் .. .. .. | 1 |
| 134 உதவி சிறப்பு அலுவலர் .. .. .. | 1 |
| 135 உதவிக் கணக்கு அலுவலர் .. .. | 1 |
| 136 அலுவலகக் கண்காணிப்பாளர் .. .. | 2 |
| 137 முதன்மை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி வல்லுநர் .. .. .. .. | 1 |
| 138 உதவியாளர்கள் .. .. .. .. | 5 |
| 139 இளநிலை உதவியாளர்கள் .. .. | 1 |
| 140 தட்டச்சர் .. .. .. .. | 1 |
| 141 அலுவலக உதவியாளர்கள் .. .. | 4 |
| 142 ஊர்தி ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர். | 1 |
| 143 சுருக்கெழுத்துத் தட்டச்சர் .. .. | 1 |
| **அரசு மறுவாழ்வு இல்லங்கள்.** | |
| 144 நிருவாக அலுவலர் .. .. .. | 10 |
| 145 உதவி மருத்துவர்கள் .. .. .. | 20 |
| 146 செவிலியர் .. .. .. .. | 20 |
| 147 மகப்பேறு துணைச் செவிலியர் .. .. | 10 |
| 148 தொழுநோய் இயற்கை முறை மருத்துவ வல்லுநர். | 10 |
| 149 ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர் | 10 |
| 150 மருந்தாக்குநர் .. .. .. .. | 10 |
| 151 செவிலிப்பணி உதவியாளர் (மகளிர்) .. | 10 |
| 152 செவிலிப்பணி உதவியாளர் (ஆடவர்) .. | 10 |
| 153 துப்புரவு பணியாளர்கள் .. .. | 20 |
| 154 பெண் சமையற்காரர் .. .. .. | 20 |
| 155 அலுவலக உதவியாளர் .. .. .. | 10 |
| 156 சமையற்காரர் .. .. .. .. | 10 |
| 157 அலுவலகக் கண்காணிப்பாளர் .. .. | 10 |
| 158 உதவியாளர்கள் .. .. .. .. | 10 |
| 159 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர். | 10 |
| 160 ஊர்தி ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர். | 10 |
| 161 வாழ்க்கைத் தொழில் பயிற்சி வல்லுநர் .. | 3 |
| 162 தலைமைக் காவலர் .. .. .. | 20 |
| 163 பெண் காவலர் .. .. .. .. | 20 |
| 164 ஆண் காவலர் .. .. .. .. | 60 |
| 165 மின் கம்பியாள் (நிலை-2) .. .. | 10 |
| 166 விசைத்தறி பயிற்றுநர் .. .. .. | 1 |
| 167 இளநிலை முதலாள் .. .. .. | 1 |
| 168 இளநிலை புத்தகம் கட்டுபவர் .. .. | 1 |

[1985 ஜூன் 25

அரசு காப்பு முகாம், மேல்பாக்கம்

| | | |
|---|---|---|
| 169 | நிருவாக அலுவலர் .. .. .. | 1 |
| 170 | துணை நிருவாக அலுவலர் .. .. | 1 |
| 171 | மருத்துவ அலுவலர் .. .. .. | 1 |
| 172 | அலுவலக கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 173 | உதவியாளர்கள் .. .. .. .. | 2 |
| 174 | இளநிலை உதவியாளர்கள் .. .. | 2 |
| 175 | தட்டச்சர் .. .. .. .. | 1 |
| 176 | சுருக்கெழுத்துத் தட்டச்சர் .. .. | 1 |
| 177 | சமூகப் பணியாளர் .. .. .. | 1 |
| 178 | பயிற்றுநர்கள் .. .. .. .. | 5 |
| 179 | அலுவலக உதவியாளர்கள் .. .. | 2 |
| 180 | முதன்மைக் காப்பாளர் .. .. .. | 1 |
| 181 | காப்பாளர்கள் .. .. .. .. | 11 |
| 182 | வாயிலாள் .. .. .. .. | 2 |
| 183 | முதன்மைக் காவலர் .. .. .. | 1 |
| 184 | காவலர்கள் .. .. .. .. | 9 |
| 185 | துப்புறவு பணியாளர்கள் .. .. .. | 4 |
| 186 | சலவை செய்பவர் .. .. .. | 3 |
| 187 | சமையற்காரர் .. .. .. .. | 3 |
| 188 | முடிவெட்டுபவர் .. .. .. | 2 |
| 189 | மருந்தாக்குநர் .. .. .. .. | 2 |
| 190 | செவிலியர் .. .. .. .. | 2 |
| 191 | பெண் செவிலி உதவியாளர் .. .. | 2 |
| 192 | ஆண் செவிலி உதவியாளர் .. .. | 2 |



1985 ஜூன் 25]

## இணைப்பு III

(II ஆம் இனத்தைக் காண்க)

1974-75 முதல் 1983-84 ஆம் ஆண்டு வரை சிறைத் துறை தொடர்பான செலவு, வருவாய் குறித்த விவரங்களையும், 1984-85 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டையும், 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டையும் காட்டும் விவர அறிக்கை.

### 1. செலவு

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 1974-75 | .. .. .. .. .. | 3,76,34 |
| 1975-76 | .. .. .. .. .. | 4,78,26 |
| 1976-77 | .. .. .. .. .. | 4,56,44 |
| 1977-78 | .. .. .. .. .. | 4,27,02 |
| 1978-79 | .. .. .. .. .. | 4,53,23 |
| 1979-80 | .. .. .. .. .. | 5,32,94 |
| 1980-81 | .. .. .. .. .. | 5,61,44 |
| 1981-82 | .. .. .. .. .. | 6,30,72 |
| 1982-83 | .. .. .. .. .. | 6,38,62 |
| 1983-84 | .. .. .. .. .. | 6,87:96 |
| 1984-85 | திருத்த மதிப்பீடு .. .. | 7,68,78 |
| 1985-86 | வரவு-செலவு திட்ட மதிப்பீடு .. | 7,83,47 |

### 2. வருவாய் வரவுகள்

| | | |
|---|---|---|
| 1974-75 | .. .. .. .. .. | 1,00,61 |
| 1975-76 | .. .. .. .. .. | 99.82 |
| 1976-77 | .. .. .. .. .. | 1,18,61 |
| 1977-78 | .. .. .. .. .. | 1,24,99 |
| 1978-79 | .. .. .. .. .. | 1,14,02 |
| 1979-80 | .. .. .. .. .. | 80,43 |
| 1980-81 | .. .. .. .. .. | 1,41,20 |
| 1981-82 | .. .. .. .. .. | 1,60,13 |
| 1982-83 | .. .. .. .. .. | 1,53,57 |
| 1983-84 | .. .. .. .. .. | 1,34,06 |
| 1984-85 | திருத்த மதிப்பீடு .. .. | 1,32,95 |
| 1985-86 | வரவு-செலவு திட்ட மதிப்பீடு .. | 1,30,85 |

## இணைப்பு IV

(I-ம் இனத்தைக் காண்க)

### சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்கள்

1. மத்திய சிறை, சென்னை.
2. மத்திய சிறை, வேலூர்.
3. மத்திய சிறை, கடலூர்.
4. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி.
5. மத்திய சிறை, சேலம்.
6. மத்திய சிறை, கோயம்புத்தூர்.
7. மத்திய சிறை, மதுரை.
8. மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9. மாநில மகளிர் சிறை, வேலூர்.
10. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.
11. தனிக் கிளைச் சிறை (ஆண்கள்), சேலம்.
12. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
13. தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி.
14. திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூர்.

(1) செங்கற்பட்டு மாவட்டம்.

15. கிளைச் சிறை (நிலை-1), சைதாப்பேட்டை.
16. கிளைச் சிறை (நிலை-2), செங்கற்பட்டு.
17. கிளைச் சிறை (நிலை-2), மதுராந்தகம்.
18. கிளைச் சிறை (நிலை-2), பூவிருந்தவல்லி.
19. கிளைச் சிறை (நிலை-2), திருவள்ளூர்.
20. கிளைச் சிறை (நிலை-2), திருத்தணி.
21. கிளைச் சிறை(நிலை-2), பொன்னேரி
22. கிளைச் சிறை (நிலை-2), காஞ்சிபுரம்.

(2) கோயம்புத்தூர் மாவட்டம்.

23. கிளைச் சிறை, அவினாசி.
24. கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.
25. கிளைச் சிறை, திருப்பூர்.
26. கிளைச் சிறை, உடுமலைப்பேட்டை.
27. கிளைச் சிறை, பொள்ளாச்சி.
28. கிளைச் சிறை, பல்லடம்.



(3) பெரியார் மாவட்டம்.

29. கிளைச் சிறை, தாராபுரம்.
30. கிளைச் சிறை, பவானி.
31. கிளைச் சிறை, ஈரோடு.
32. கிளைச் சிறை, கோபிசெட்டிப்பாளையம்.
33. கிளைச் சிறை, காங்கேயம்.
34. கிளைச் சிறை, சத்தியமங்கலம்.
35. கிளைச் சிறை, பெருந்துறை.

(4) நீலகிரி மாவட்டம்.

36. கிளைச் சிறை, உதகமண்டலம்.
37. கிளைச் சிறை, குன்னூர்.
38. கிளைச் சிறை, கூடலூர்.

(5) வடார்க்காடு மாவட்டம்.

39. கிளைச் சிறை, அரக்கோணம்.
40. கிளைச் சிறை, ஆம்பூர்.
41. கிளைச் சிறை, செய்யார்.
42. கிளைச் சிறை, ஆரணி.
43. கிளைச் சிறை, செங்கம்.
44. கிளைச் சிறை, குடியாத்தம்.
45. கிளைச் சிறை, போளூர்.
46. கிளைச் சிறை, திருப்பத்தூர்.
47. கிளைச் சிறை, திருவண்ணாமலை.
48. கிளைச் சிறை, வாணியம்பாடி.
49. கிளைச் சிறை, வாலாஜாப்பேட்டை.
50. கிளைச் சிறை, வந்தவாசி.

(6) தென்னார்க்காடு மாவட்டம்.

51. கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.
52. கிளைச் சிறை, சிதம்பரம்.
53. கிளைச் சிறை, கடலூர்.
54. கிளைச் சிறை, செஞ்சி.
55. கிளைச் சிறை, காட்டுமன்னார்கோயில்.
56. கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.
57. கிளைச் சிறை, திண்டிவனம்.
58. கிளைச் சிறை, திருக்கோவிலூர்.
59. கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை.
60. கிளைச் சிறை, விழுப்புரம்.
61. கிளைச் சிறை, விருத்தாச்சலம்.
62. கிளைச் சிறை, பண்ருட்டி.

(7) சேலம் மாவட்டம்—

63. கிளைச் சிறை, ஆத்தூர்.
64. கிளைச் சிறை, நாமக்கல்.
65. கிளைச் சிறை, ஓமலூர்.
66. கிளைச் சிறை, பரமத்தி.
67. கிளைச் சிறை, இராசிபுரம்.
68. கிளைச் சிறை, சங்ககிரி.
69. கிளைச் சிறை, திருச்செங்கோடு.
70. கிளைச் சிறை (மகளிர்), சேலம்.

(8) மதுரை மாவட்டம்—

71. கிளைச் சிறை, திண்டுக்கல்.
72. கிளைச் சிறை, கொடைக்கானல்.
73. கிளைச் சிறை, நிலக்கோட்டை.
74. கிளைச் சிறை, பழனி.
75. கிளைச் சிறை, பெரியகுளம்.
76. கிளைச் சிறை, திருமங்கலம்.
77. கிளைச் சிறை, உசிலம்பட்டி.
78. கிளைச் சிறை, உத்தமபாளையம்.
79. கிளைச் சிறை, வேடசந்தூர்.
80. கிளைச் சிறை, மேலூர்.

(9) கன்னியாகுமரி மாவட்டம்—

81. கிளைச் சிறை, தக்கலை.
82. கிளைச் சிறை, குழித்துறை.
83. கிளைச் சிறை, நாகர்கோவில்.

(10) இராமநாதபுரம் மாவட்டம்—

84. கிளைச் சிறை, திருவாடானை.
85. கிளைச் சிறை, பரமக்குடி.
86. கிளைச் சிறை, முதுகுளத்தூர்.
87. கிளைச் சிறை, இராமநாதபுரம்.

(11) காமராசர் மாவட்டம்—

88. கிளைச் சிறை, திருவில்லிபுத்தூர்.
89. கிளைச் சிறை, சாத்தூர்.
90. கிளைச் சிறை, அருப்புக்கோட்டை.
91. கிளைச் சிறை, விருதுநகர்.





(12) பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம்.

92. கிளைச் சிறை, சிவகங்கை.
93. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

(13) திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

94. கிளைச் சிறை, அரியலூர்.
95. கிளைச் சிறை, செயங்கொண்டான்.
96. கிளைச் சிறை, குளித்தலை.
97. கிளைச் சிறை, லால்குடி.
98. கிளைச் சிறை, மணப்பாறை.
99. கிளைச் சிறை, முசிறி.
100. கிளைச் சிறை, பெரம்பலூர்.
101. கிளைச் சிறை, துறையூர்.
102. கிளைச் சிறை, கரூர்.

(14) புதுக்கோட்டை மாவட்டம்—

103. கிளைச் சிறை, புதுக்கோட்டை.
104. கிளைச் சிறை, அறந்தாங்கி.
105. கிளைச் சிறை, கீரனூர்.
106. கிளைச் சிறை, திருமயம்.

(15) திருநெல்வேலி மாவட்டம்—

107. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்.
108. கிளைச் சிறை, சோவில்பட்டி.
109. கிளைச் சிறை, சங்கரன்கோவில்.
110. கிளைச் சிறை, தூத்துக்குடி.
111. கிளைச் சிறை, ஸ்ரீவைகுண்டம்.
112. கிளைச் சிறை, தென்காசி.
113. கிளைச் சிறை, திருச்செந்தூர்.
114. கிளைச் சிறை, நாங்குநேரி.

(16) தஞ்சாவூர் மாவட்டம்—

115. கிளைச் சிறை, கும்பகோணம்.
116. கிளைச் சிறை, மயிலாடுதுறை.
117. கிளைச் சிறை, மன்னார்குடி.
118. கிளைச் சிறை, நாகப்பட்டினம்.
119. கிளைச் சிறை, நன்னிலம்.
120. கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.
121. கிளைச் சிறை, பாபநாசம்.

(16) தஞ்சாவூர் மாவட்டம் தொடர்ச்சி—

122. கிளைச் சிறை, சீர்காழி.
123. கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
124. கிளைச் சிறை, திருவையாறு.
125. கிளைச் சிறை, திருவாரூர்.
126. கிளைச் சிறை, தரங்கம்பாடி.
127. கிளைச் சிறை, திருவிடைமருதூர்.
128. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

(17) தருமபுரி மாவட்டம்—

129. கிளைச் சிறை, ஓசூர்.
130. கிளைச் சிறை, அரூர்.
131. கிளைச் சிறை, தருமபுரி.
132. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
133. கிளைச் சிறை, ஊத்தங்கரை.

அரசு மறுவாழ்வு இல்லங்கள்—

134. அரசு மறுவாழ்வு இல்லம், பரனூர், செங்கை மாவட்டம்.
135. அரசு மறுவாழ்வு இல்லம், உளுந்தூர்பேட்டை, தென்னார்க்காடு மாவட்டம்.
136. அரசு மறுவாழ்வு இல்லம், பர்கூர், தருமபுரி மாவட்டம்.
137. அரசு மறுவாழ்வு இல்லம், விண்ணம்பள்ளி, பெரியார் மாவட்டம்.
138. அரசு மறுவாழ்வு இல்லம், புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
139. அரசு மறுவாழ்வு இல்லம், மனையேறிப்பட்டி, தஞ்சை மாவட்டம்.
140. அரசு மறுவாழ்வு இல்லம், ஒய். புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
141. அரசு மறுவாழ்வு இல்லம், மல்லவாடி, வட ஆர்க்காடு மாவட்டம்.
142. அரசு மறுவாழ்வு இல்லம், தேவியாகுறிச்சி, சேலம் மாவட்டம்.
143. அரசு மறுவாழ்வு இல்லம், செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.

அரசு காப்பு முகாம்—

144. அரசு காப்பு முகாம், மேல்பாக்கம், சென்னை.



## இணைப்பு V.

(VI ஆம் இனத்தைக் காண்க.)

மத்திய சிறைகள், வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, புழலிலுள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்கள்-வாழ்க்கைத் தொழில் குறித்த பட்டியல்.

| தொடர் எண் மற்றும் நிறுவனம். | தொழில்கள். |
|---|---|
| 1. மத்திய சிறை, சென்னை. | தச்சு, தையல், பின்னயல் உற்பத்தி, கூர் நாடா உற்பத்தி, புத்தகம் கட்டுதல், முத்திரை அரக்கு, காகித உற்பத்தி. |
| 2. மத்திய சிறை, வேலூர். | நெசவு, தையல், புத்தகம் கட்டுதல், தச்சு, காலணி தயாரித்தல், பல்வகை |
| 3. மத்திய சிறை, சேலம். | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சு, நெசவு, காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தையல். |
| 4. மத்திய சிறை, கோவை. | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் தயாரித்தல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், சோப்பு தயாரித்தல், தச்சு. |
| 5. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | தச்சு, நெசவு, பாய் முடைதல், தையல், புத்தகம் கட்டுதல், சோப்பு தயாரித்தல். |
| 6. மத்திய சிறை, மதுரை. | நெசவு, தையல், காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு. |
| 7. மத்திய சிறை, பாளையங்கோட்டை. | தச்சு, நெசவு, தையல், கைமுறை, காகித உற்பத்தி மற்றும் புத்தகம் கட்டுதல். |
| 8. மத்திய சிறை, கடலூர். | நெசவு, தையல், தச்சு. |
| 9. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை. | தச்சு, தையல், உலோக வேலை. |
| 10. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சு, தையல், புத்தகம் கட்டுதல், கருமார் பட்டறை. |
| 11. மாநில மகளிர் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல் மற்றும் நெசவு. |

[1985 ஜூன் 25

## இணைப்பு VI.

(சிறு தொழில்கள்)

சில சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளவையும், சில சிறைகளில் அறிமுகப்படுத்தக் கருதியுள்ளவையுமான எளிய சிறு தொழில்கள் குறித்த பட்டியல்.

ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளவை :

| | |
|---|---|
| 1. மத்திய சிறை, மதுரை .. | குழாய் வேலை. |
| 2. மத்திய சிறை, சென்னை | சாதாரண மின்கம்பி பொருத்தும் பணி. |
| 3. மத்திய சிறை, பாளையங்கோட்டை. | குழாய் வேலை. |
| 4. மத்திய சிறை, வேலூர் .. | கொல்லத்து வேலை. |
| 5. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | குழாய் வேலை. |
| 6. மத்திய சிறை, சேலம் .. | குழாய் வேலை. |
| 7. மத்திய சிறை, கடலூர் .. | சாதாரண மின்கம்பி பொருத்தும் பணி. |
| 8. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | சாதாரண மின்கம்பி பொருத்தும் பணி. |

அறிமுகப்படுத்தப்பட உள்ளவை :

| | |
|---|---|
| மத்திய சிறை கோவை .. | குழாய் வேலை. |



1985 ஜூன் 25]

## இணைப்பு VII.

தமிழ்நாடு சிறைத்துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர ஆணையிடப்பட்டுள்ள அரசு மறுவாழ்வு இல்லங்கள், பிச்சைக்காரர் இல்லங்களின் பட்டியல்.

| வரிசை எண்ணும், இல்லங்களின் பெயரும். (1) | இல்லங்களின் எண்ணிக்கை. (2) | முன்னாள் நிருவாக அதிகாரி. (3) |
|---|---|---|
| 1. அரசு மறுவாழ்வு இல்லம், பரனூர், செங்கை மாவட்டம். | 1 | இயக்குநர், மருத்துவப் பணிகள், மற்றும் குடும்ப நலம், சென்னை. |
| 2. அரசு மறுவாழ்வு இல்லம், உளுந்தூர்பேட்டை, தென்னார்க்காடு மாவட்டம். | 1 | .. |
| 3. அரசு மறுவாழ்வு இல்லம், பர்கூர், தருமபுரி மாவட்டம். | 1 | .. |
| 4. அரசு மறுவாழ்வு இல்லம், விண்ணம்பள்ளி, பெரியார் மாவட்டம். | 1 | .. |
| 5. அரசு மறுவாழ்வு இல்லம், புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம். | 1 | .. |
| 6. அரசு மறுவாழ்வு இல்லம், மனையேறிப்பட்டி, தஞ்சை மாவட்டம். | 1 | .. |
| 7. அரசு மறுவாழ்வு இல்லம், ஓய். புதுப்பட்டி, மதுரை மாவட்டம். | 1 | .. |
| 8. அரசு மறுவாழ்வு இல்லம், மல்லவாடி, வட ஆர்க்காடு மாவட்டம் | 1 | .. |
| 9 அரசு மறுவாழ்வு இல்லம், தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம். | 1 | .. |

| வரிசை எண்ணும் இல்லங்களின் பெயரும். (1) | இல்லங்களின் எண்ணிக்கை. (2) | முன்னாள் நிர்வாக அதிகாரி. (3) |
|---|---|---|
| 10. அரசு மறுவாழ்வு இல்லம், செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம். | 1 | இயக்குநர், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலம், சென்னை |
| 11. அரசு காப்பு முகாம், மேல்பாக்கம், சென்னை. | 1 | இயக்குநர், சமூகநலத் துறை, சென்னை |
| 12. மதுரை மாநகராட்சியால் நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லம். | 1 | ஆணையர், மதுரை மாநகராட்சி. |
| 13. கோவை மாநகராட்சியால் நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லம். | 1 | ஆணையர், கோவை மாநகராட்சி. |
| 14. திருச்சி நகராட்சியால் நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லம். | 1 | இயக்குநர், நகராட்சி நிருவாகத்துறை சென்னை. |
| 15. சிதம்பரம் நகராட்சியால் நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லம். | 1 | |
| 16. சீர்காழி நகராட்சியால் நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லம். | 1 | |

V2:11,31 N85
N85.9.3

குறிப்பு.—எண்கள் 12, 13, 16-க்கெதிரே குறிக்கப்பட்டுள்ள பிச்சைக்கார இல்லங்களை சிறைத் துறையின் நிருவாகத்திற்கு மாற்றுவதற்கான ஆணை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து தீர்மானங்கள் வரப்பெற்று பிறகு பிறப்பிக்கப்படும். வரிசை எண்கள் 14 மற்றும் 15-க்கு எதிரே குறிக்கப்பட்ட பிச்சைக்கார இல்லங்கள் இன்னமும் சிறைத் துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்படவில்லை.

136388